Approved by the Text-Book Committee (F. S. G. 12-4-32).

உ

சிவமயம்.

கோவலன்.

இஃது

துறையூர்

T. M. பாலசுந்தரம்

எழுதியது.

நித்தியானந்தா பிரஸ்,

துறையூர்.

1931

இதன் விலை (காப்பி ரைட்) அணா 12

உ

சிவமயம்.

கோவலன்

இஃது

துறையூர் T. M. பாலசுந்தரம்

எழுதியது.

இதன் விலை அணா 12

நித்தியானந்தா பிரஸ்,

துறையூர்.

1931

முன்னுரை.

‘சங்க மருவிய ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாகிய “சிலப்பதிகாரம்” என்னும் நூலை இயன்றவரை அதன் பொருள்நயம் குன்றாத வாறு எளிய வசன நடையில் எழுதி வெளியிட வேண்டும் என்ற ஓர் எண்ணம் என்னைத் தூண்டிற்று. அதன் வழிநின்று நம் செந்தமிழ்க் கல்வி பயிலும் மாணாக்கர்கட்கும் தமிழ் ஆர்வ முடையார்க்கும் பயன்படுமாறு ‘சிலப்பதிகார’த்தில் உள்ள சில சொன்னயமுள்ள அடிகளை இடையிடையே வைத்து அவைகட்குக் குறிப்புரையும் இறுதியிற்சேர்த்து வெளியிடப் பட்டது. கசடறக் கற்றுணர்ந்த பெரியார்கள் இதனுள் யாதேனும் குற்றங் காணின் மன்னித்து, அதனை எடுத்துக் காட்டுவார்களாயின் 2ம் பதிப்புக்குப் பேருபகாரமாவதேயன்றி என்றும் எனது எழுமையும் கடப்பாடுடையனாவேன்.

1–10–31, *துறையூர்.* T. M. B. S.

மதிப்புரை.

எனது உழுவலன்பிற் கெழுதகை நண்பர் திலகர் துறையூர் T. M. பாலசுந்தரம் ஐயர் அவர்கள் இயற்றிய "**கோவலன்**" என்னும் உரை (வசன) நூலை முற்றும் கவனத்துடன் படித்தேன். தமிழின் ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரத்தினை அரும்பதவுரை, அடியார்க்கு நல்லா ருரைகளோடு பலகாற் பயின்று தேர்ந்த தெளிவே இந்நூலாக உருப் பெற்றது. தொல்காப்பியம் முதலிய பேரிலக்கண நூற்களையும் ஏனைச் சங்க விலக்கியங்களையும் கற்றபின் கைதொட்டுக் கற்குந் தகுதியுற்ற ஓரிய காப்பியத்தை மிகவும் எளிதாக அதன் சுவை குன்றாமல் சாமானியமாகத் தமிழ்கற்ற மாணாக்கர்க்கும் விளங்க வழங்கிய திருவாளர் ஐயரவர்கட்குத் தமிழுலகம் மிகவும் நன்றி செலுத்துங் கடப்பாடுடையதே. இந்நூல் அழகிய இனிய உயரிய செந்தமிழ் நடையில் இலக்கண நெறிவழாது சுருங்க விளங்கக் கதையுரைத்துச் செல்லும் வன்மையால் எனது கண்ணையும் கருத்தையும் ஈர்த்துக்கொண்டு சென்று தன்னை முழுவதும் படித்து முடித்த பின்பே விடுதலை செய்தது. கதைத் தொடர்பில் வரும் பாத்திரங்கள், இடம் முதலியவற்றை விளக்கி, இடைக்கிடை மூலபாடத்தை இன்றியமையாத இடங்களில் அருமை தோன்ற எடுத்துக்காட்டி அவற்றிற்கு இறுதியில் விளக்கவுரை வரைந்து வைத்தது மிகப் பொருத்தமுடையதே. இக்காலத்தே செய்யுள் நூற்களைப் பார்க்கினும் உரைநடை நூற்களே விரும்பப் படுவனவாய்ப் பயன்றரக் காண்டுமாகலின், காலந்தேர்ந்து கடமைசெய்த ஐயரவர்களின் நூலொடு விராய நுண்மதித் திட்பம் பாராட்டற் பாலதே. இதன் முன்பு "மணிமேகலை" என்னும்

காப்பியத்தையும் இவர்கள் இங்ஙனம் உரைநடையில் வெளியிட்டுள்ளார்கள். ஆதலின் நாம் அரிதென மதிக்கும் இச்செயல் அவர்கள் திறமைக்கு மிக எளிதாயதில் வியப்பின்று. இந்நூலைக் கல்லூரிகளிற் பயிலும் மாணுக்கர்கட்குப் பாடபுத்தகமாக அமைக்கின் இலக்கண இலக்கியப் பயிற்சி மிகத் தமிழ் நூற்களின் அருமை பெருமைகளைப் பண்டை வரலாற்றோடு நன்குணர்ந்து செந்தமிழிற் சீரிய கட்டுரைகளை எழுதவும் சொற்பொழி வாற்றவும் வல்லுநர்களாகிப் பிற்காலத்தில் நம் நாட்டுக்குப் பயன்பட வாழ்வார்களென மதிக்கின்றேன்.

தமது வாழ்நாளிற் பெரும் பகுதிகளை அரும் பெரும் தமிழ் நூற்களைக் கற்று ஆராய்வதிலும் நன்குற நூலியற்றுவதிலும் செலவிட்டு முயலும் கலைப்புலவர்கட்கு ஊக்கமூட்டாவிடின் நம் தமிழ் நாட்டு மக்கள் மொழிப் பற்றுடையரென முன்னேற்ற மடைதல் இயலுமா? அவ்வத் தேயமொழிகள் பெருகி வளர்வதற் கேற்பவே அவ்வத் தேயங்களும் சீர்பெற்றுத் திகழ்வதாகும் என்பது அறிஞர் உடன்பட்டதொன்று.

நம் "கோவலன்" ஆசிரியராகிய பாவலர் இங்ஙனமே மற்றுந் தமிழிலுள்ள அரிய பெரிய நூற்களின் சாரங்களைத் திரட்டி எளிதில் யாரும் பெறவழங்கி (இந்திரனுலகத்திருந்த பாரிஜாதத்தை மண்மிசைக் காட்டிய மாலைபோல) நீண்ட ஆயுள், ஆற்றல், ஊக்கம் மற்றும் பலநலன்கள் யாவும் எய்தி வாழ்வுறக் கடைக்கணிக்க வேண்டுமெனக் குவளைக்கண்ணி கூறனர் குரைகழற் சேவடியிணையைக் கைதொழூஉப் பரவுவோமாக.

ஆசிரியர் அ. வரதநஞ்சையப்பிள்ளை,

1-10-31. ஜலகண்டபுரம்.

நண்பர் திருமிகு. T. M. பாலசுந்தரம் அவர்கள் எழுதிய "**கோவலன்**" என்னும் உரைநடை நூல் ஓர் சிறந்த நூல். இதுபோன்ற நூல்கள் தற்காலத்துக்கு இன்றி யமையாதன. பெருங் காப்பியங்களைக் கற்கப் புகுவார்க்கு அவற்றின் சுருக்கமாகிய இவை ஒரு தலையாக வேண்டற் பாலன. பிற மொழிகளிலும் இவ்வாறே பெருநூல்களுக்கு ஏணிப்படியாகப் பலநூல்கள் வெளிவந்துள்ளன.

இவை யெளிதிற் கற்கப்பட்டு அவ்வறிவு கருவியாக அப்பெரு நூல்களைக் கற்றற்குப் பெரிதும் உபகாரப்படுகின் றன. இந்நூல்களை யடிப்படையாகக் கற்றார்க்கே "கொழுச் சென்றவழித் துன்னூசி யினிது செல்லுமாறு போல" அப் பெருநூல்கள் முட்டின்றி இனிது செல்வனவாகும்.

ஆதலின், சிலப்பதிகாரம் என்னும் வளப்பெருங் கடலின் அளப்பரும் பல்வகை வளங்களையும் கண்டு கண்டின் புறுதற்குக் கோவலன் என்னும் இந்நூல் ஓர் தகுதிவாய்ந்த நாவாயே ஆகின்றது.

இந்நூல், கண்ணகி சுவர்க்கம் புகுதல் வரையுள்ள கதையினை, மங்கல வாழ்த்துமுதல் 20 பிரிவுகளாக வகுத்துக் கொண்டு எடுத்து மொழிகின்றது; இஃது, இழுமென்னும் செவ்விய நடையில் இயல்வது; இடையிடையே யின்றமிழ்ப் பாடல்கள் பயில்வது; முதனூலொடு முரணாத பொருள்வள மும் பெற்றுத்திகழ்வது; கற்பார்க்குக் கருத்துவிளங்கி நவின் றோர்க் கினிமை பயக்கும் நன்மொழி புணர்ந்த சொல்வள முற்று நிகழ்வது; நூலாசிரியராகிய திருமிகு பாலசுந்தரம் அவர்களின் நுண்மா ணுழைபுலனைத் தெருட்டுவது.

இத்தகு சீரிய, கூரியநூல், மாந்தரி னியல்புகளைப் புலப் படுத்தலானும், அக்காலத்து பழக்கவழக்கங்களை யுணர்த்துத லானும், பல்வகை நல்லறங்களையும், நன்னெறிகளையும் புகட்ட லானும், ஆண், பெண்பாலராகிய அனைவரும் கற்றற்குறியது. அன்றியும், இந்நூல் அவசியம் பாடசாலை பாடபுத்தகமாக்கத் தக்கது. வாய்க்கு வழங்காத பொருளில் வறும் பதர்களாகிய —பலதுணைப் பாடப்புத்தகங்களைக் கற்பிக்க, கற்க விதியுடை யேமாய்ப் புண்பட்டு வருந்தும் எம்போலிய ஆசிரியர்கட்கும். மற்றும் நன் மாணுக்கர்கட்கும் இந்நூல் பாடமாக்கப்படின் தலைக்குத்துற்ற சாத்தனார் திருக்குறள் கேட்ட மகிழ்ச்சியை யுடையவர்களாவோம் என்று நான் துணிந்து கூறுகின்றேன்.

இங்ஙனம்,

பண்டித அ. கந்தசாமிப்பிள்ளை,

7—6—1931.

தமிழ் விரிவுரையாளன்,

கும்பகோணம்,

கவர்ன்மெண்டு காலேஜ்.

இளங்கோவடிகள் வரலாறு.

இற்றைக்கு ஏறக்குறைய 18 நூற்றாண்டுகளுக்கு முன் கடைச்சங்கம் இருந்த காலத்து, சேர சோழ பாண்டியர் என்னும் முடிகெழு மூவேந்தர்களே செந்தமிழ் நாட்டைச் சீர் பெறச் செங்கோல் செலுத்தி வந்தனர். இவர்களுள் "சேரலாதன்" என்னுஞ் சேரர்பெருமான், சேரநாட்டின்கண் உள்ள 'வஞ்சி' நகரத்தையே தனது அரசிருக்கையாகக் கொண்டு அரசு கட்டிலேறி அனைவரும் பரச, மும்முரசம் முழங்க நல்லரசு புரிந்தனன். இச் 'சேரலாதன்' தானும் ஒருசமயம் தன் வீரவேலால் வெற்றி கொண்டு குமரி முதல் இமயம் வரையில் தன் ஆணை செல்ல இடையில் உள்ள மன்னர் எல்லாம் தன்னடி போற்றப் பங்கமில்லாச் செங்கோல் செலுத்தினன். இவன் 'சோழன்' மகளாகிய 'நற்சோணை' என்பாளை நன்மணம் புரிந்து இன்புற்றிருந்து பொன் போன்ற இரு பெரும் புதல்வரைப் பெற்றனன். அப்புதல்வரில் முன்னோனுக்குச் 'செங்குட்டுவன்' எனவும் பின்னோனுக்கு 'இளங்கோ' எனவும் பெயரிட்டு வளர்க்க, அவர்களும் கலைவளர் திங்களேபோல் வளர்ந்தனர். வளர்ந்து அரசர்க் குரிய கல்வி கேள்விகளில் சிறந்தாராய் வாழ்ந்து வந்தனர். இங்ஙனம் இருக்க ஒருநாள், 'சேரலாதன்' வஞ்சி மூதூர் மணி மண்டபத்தில் சிங்கஞ்சுமந்த பொங்கணையின் மீது கடலின் அலைகளைப்போல இருபுறமும் கவரிவீசத், தன் புதல்வர்கள் இருவர்களோடும் வீற்றிருந்தனன். அதுபோது ஒரு நிமித்திகன் வந்தனன். வந்த நிமித்திகன் அரசனைப் பார்த்து, "நீ விரைவில் பூதவுடலை இம்மண்ணுலகில் இட்டுப் புகழுடலைப் பெற்றுப் பொன்னுலகம் சேர்வாய்!" எனக் கூறியவன் அருகில் இருந்த 'இளங்கோ'வை அடிமுதல் முடி வரையிலும் நெடிது நோக்கி, "இவ்விளவற்கே அந்தம்இல் இன்பத்து அரசாளும் உரிமை உண்டு" என்றுரைத்தனன். இவ்வுரையினைக் கேட்ட 'இளங்கோ' சினங்கொண்டு எழுந்து

"என் தமயனாகிய 'செங்குட்டுவன்' இருக்க எனக்கு அரசுரிமை எங்ஙனம் உண்டாகும்? எவ்வாறு கூறினாய்?" எனக் கேட்டுவிட்டு, உடனே இராச்சியத்தை விட்டுநீங்கித் துறவைக் கைக்கொண்டு வெளியில் வந்து, அவ்வஞ்சி நகரத்தின் கீழ்த் திசையில் உள்ள 'திருக்குணவாயில்' என்னும் ஊரில் தங்கினன். அனைவரும் 'இளங்கோவடிகள்' எனப் பெயரிட்டுக் கடவுளாகக் கொண்டு வணங்கினர். பின்பு 'சேரலாதன்' தன் முதல் மகன் 'செங்குட்டுவன்' தோளின்மீது தன் அரச ஆணையை இருத்தி மண்ணுலகம் நீத்து விண்ணுலகம் புகுந்தனன். 'செங்குட்டுவனும்' அரசு கட்டில் ஏறி, இரவலர் போற்றும் புரவலனாகி, மாற்றலர் நடுங்கும் வேற்படை கொண்டு, தன் ஆணை உலகெங்கும் ஓங்கச் செங்கோல் செலுத்தி வந்தனன். 'இளங்கோவடிகளும்' தன் தமயனுக்கு உலக பாரம் சுமத்தலினால் ஒரு துன்பமும் அடையாதபடி பார்த்துக்கொண்டும், தானும் மோட்சமாகிய இராச்சியத்தை ஆளுகின்ற வேந்தனாகவும் நோற்றிருந்தனர். இவர் பெரும் பான்மையும் சைவ மதத்தையே தழுவிக் கொண்டிருந்தனர் என்பது வெளிப்படையாகும். ஆயினும் ஒரு சாரார் சைன மதத்தர் எனக் கூறுவர். இவர்கள் இங்ஙனமாக, 'கண்ணகி' தன் கணவனொடு விமானத்தின்மீதேறிச் சுவர்க்கம் புகுவதை அம்மலையின் இடத்துள்ள குறவர்கள் கண்டு அச்சங் கொண்டு திகைத்து ஓடோடியும் வந்து 'சேரன் செங்குட்டுவனை' அணுகித் தாம் கண்டதை உள்ளது உள்ளவாறே உணர்த்தினர். அதோடு நில்லாது அக்குறவர்கள், 'திருக்குணவாயிலில்' அரசபோகத்தைத் துறந்து தவவுருத் தாங்கியிருந்த 'இளங்கோவடிகள்'பால் சென்று, "அடிகளே! எமதூர் மலைப்பக்கத்தே பொன்போலும் பூவினையுடைய வேங்கை மரத்தின் நிழலில் ஒரு பத்தினி ஒரு தனம் இழந்து வந்து நின்றாள்; அவள் பொருட்டு இந்திரன் முதலிய எண்ணிறந்த தேவரெல்லாம்

ஒருங்கு கூடி வந்து அவளை அவள் கொழுநனொடு கட்டி எங்கள் கண்முன் நாங்கள் அறிய விண்புகுந்தது ஆச்சரியமாயிருந்தது. இதனைத் தாங்கள் அறிந்தருள்வீராக!" எனக் கூறினர். அந்தச் சமயத்தில் பரிசில்பெறும் காரணமாகச் 'செங்குட்டுவன்'பால் சென்று, மீண்டும் 'இளங்கோவடிகள்' பால் மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் என்னும் புலவர் திலகர் சென்றனர். 'இளங்கோவடிகள்' குறவர்களது அறவுரைகளைக் கேட்டவுடன் தன்பாற் போந்த சாத்தனாரை இனிது நோக்கச், சாத்தனாரும் அந்நோக்கத்தினைக் குறிப்பால் உணர்ந்து, "அடிகளே! இக்கண்ணகி பட்ட விடயங்கள் அனைத்தையும் யான் உணர்வல். உள்ளவாறே உரைக்கின்றேன் கேண்மின்!" எனப் பட்டது பட்டபடியே பகர்ந்தனர். பகர்வதைக் கேட்ட 'அடிகள்', "அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்று என்பதூஉம், பத்தினிப் பெண்டிர் பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்பதூஉம், ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதூஉம் இக்கதை யிடத்துத் தோன்றுதலின், இக் கதையினை யாம் ஒரு செய்யுளாகச் செய்குவம்" என்று கூற, அதனைக் கேட்ட 'சாத்தனார்', இக்கதை "முடிகெழு மூவேந்தர் நாட்டினும் நிகழ்ந்தமையானும், மூவேந்தரது இயல்பும் வேத்தியலும் பொதுவியலும் நீரே உணர்ந்து இருக்கின்றமையானும், நீரே அருள் செய்ய வேண்டும்" என்று கூறினர். 'இளங்கோவடிகளும்' அக்கதையை முப்பது வகையாகப் பகுத்துக் கொண்டு 'சிலப்பதிகாரம்' என்னும் பெயரால் செய்து 'சாத்தனார்' இடத்தில் கூறினர். பின்பு 'மாதவி'யின் மகளாகிய 'மணிமேகலை'யின் சரித்திரத்தைச் 'சாத்தனார்' ஒரு நூலாகச் செய்தருளினர். இதனால்தான் 'இளங்கோவடிக'ளும் தமது 'சிலப்பதிகார'த்தின் இறுதியில் "மணிமேகலைமேல் உரைப்பொருள் முற்றிய சிலப்பதிகாரம் முற்றும்" எனக் கூறி முடித்தனர்.

1. அழகர்மலை:—இது பாண்டி நாட்டில் இருக்கின்றது; இம்மலையில் திருமால் நின்ற கோலத்துடன் இருக்கின்றார்.
2. இருநிதிக் கிழவன்:—கோவலனுடைய தந்தையின் சிறப்புப் பெயர்; கோவலன் இறந்த பிறகு துறவு பூண்டவன்.
3. இளஞ்செழியன்:—கொற்கை நகரத்திலிருந்த வெற்றி பொருந்திய வேலையுடைய செழியன்.
4. உருப்பசி:—தேவ கன்னியரில் ஒருவள்; அகத்திய முனிவருடைய சாபத்தால் மாதவியாகப் பிறந்தவள். இம்மாதவி வம்சத்தில் பிறந்தவள்தான் கோவலன் கொண்ட மாதவி.
5. உறந்தை:—உறையூர், சோழர்களின் இராசதானியில் ஒன்று; இது இப்பொழுதும் உறையூர் என்றே வழங்கப்படுகிறது.
6. ஐயை:—மதுரையில் ஆயர்பாடியில் இடையர் குலத்தாளாகிய மாதரியின் மகள்; கண்ணகிக்கு மதுரையில் தோழியாகவும் அன்புடையவளாகவும் இருந்தவள்.
7. கண்ணகி:—கதாநாயகி, கோவலன் மனைவி; இவள்மறக் கற்புடையவள்; இவளுக்கு வீர பத்தினி, பத்தினிக் கடவுள், மங்கல மடந்தை என்னும் பெயர்களுண்டு.
8. கரிகால் வளவன்:—காவிரிப்பூம் பட்டினத்தில் இருந்து அரசாண்ட ஒரு சோழன்; இவன் இமயமலை வரையில் சென்று இடையிலுள்ள அரசர்களை வென்று அரசு புரிந்தவன்; இவன் காலத்தில்தான் இக்கதையும் நடந்தது.
9. கவுந்தியடிகள்:—சைன மதத்தினள். தவத்தையுடையவள்; கோவலனும், கண்ணகியும் மதுரைக்குச் செல்லும்போது அவர்களுக்குத் துணையாகச் சென்று, இடையில் அவர்களை அவமதித்துப் பேசிய இருவர்களை நரியாகச் சபித்து, மதுரையை அடைந்தபின், கண்ணகியை மாதரியிடம் அடைக்கலம் ஆக்கினவள்.

10. கார்த்திகை :—வார்த்திகன் என்னும் அந்தணனின் மனைவி ; தக்கிணாமூர்த்தியின் தாய்.
11. கீரந்தை :—மதுரையில் இருந்த ஒருவன் பெயர்.
12. குடமலை :—மேற்கில் உள்ள மலை ; காவிரி உற்பத்தியாகும் மலை ; இதனை இப்பொழுது குடகுமலை யென்றும் கூறுவர்.
13. குணவாயில் :—திருக் குணவாயில் என்பது ஓர் ஊர். வஞ்சி நகரத்திற்குக் கிழக்கே உள்ளது ; இளங்கோ அடிகள் துறவு பூண்டு இருந்த இடம்.
14. குமரி :—தெற்கே உள்ள ஆறு ; இது முன் காலத்தில் கடலால் கொள்ளப்பட்டு விட்டது.
15. குமரிக்கோடு :—தெற்கே உள்ள ஒரு மலை.
16. கூனி :—மாதவிக்குத் தோழி ; இவளுக்கு வசந்தமாலை யென்றும் பெயர்.
17. கொற்கை :—பாண்டியர்களின் பழய இராசதானி ; இக் கதை நிகழ்ந்த பொழுது இந்நகரத்தில் இருந்தவன் 'வெற்றிவேற் செழியன்'; இது இப்பொழுது சிறிய ஊராக இருக்கிறது.
18. கோப்பெருந்தேவி :—பாண்டியன் 'நெடுஞ் செழியன்' மனைவி ; தன் கணவன் கண்ணகி வழக்கில் தோற்று இறக்கத் தானும் இறந்தவள் ; இவளை 'அறக் கற்புடையாள்' என்பர்.
19. கோவலன் :—கதாநாயகன், வணிகன்.
20. கௌசிகன் :—மாதவிக்கு நண்பன் ; காவிரிப்பூம் பட்டினத்துள்ள ஓர் அந்தணன் ; கோசிகன் என்னும் பெயரினன் ; மதுரையில் கோவலனைக் கண்டு மாதவி ஓலையைக் கொடுத்தவன்.
21. சங்கமன் :—நீலியின் கணவன், வணிகன்.
22. சாத்தன் :—தொண்ணூற்றாறு வகைச் சமய சாத்திரங்களைக் கற்று, மகாசாத்திரன் என்று பெயர் பெற்ற ஒரு தெய்வம்,
23. சாயலன் :—காவிரிப்பூம் பட்டினத்திலுள்ள ஒரு வணிகன். எட்டிப்பூ பட்டம் பெற்றவன் (எட்டிப்பூ என்

பது இக்காலத்து அரசரால் கொடுக்கப்படும் பட்டம் போன்றது).

24. சாலினி :—வேட்டுவ மகள், தேவராட்டி:

25. சித்திராபதி :—மாதவியின் தாய்.

26. சிறுமலை :—பாண்டி நாட்டுள்ள மலை ; இப்பெயர் இப்பொழுதும் வழங்கி வருகின்றது.

27. சூரியகுண்டம் :—காவிரியின் சங்கமுகத்துக்குப் பக்கத்தில் உள்ள ஒரு தடாகம்.

28. செங்குட்டுவன் :—'இளங்கோ' அடிகளுக்கு மூத்தவன். கண்ணகிக்குக் கோவில் கட்டித் திருவிழா நடத்தியவன் ; சேர நாட்டு அரசன்.

29. செங்கோடு —'திருச்செங்கோடு' என்னும் மலை; முருகக் கடவுட்கு இருப்பிடம்.

30, சேரலாதன் :—இளங்கோ அடிகளுக்கும் செங்குட்டுவனுக்கும் தந்தை.

31. சோணை :—சேரலாதன் மனைவி ; சோழன் மகள்.

32. சோமகுண்டம் :—காவிரியின் சங்கமுகத்துக்குப் பக்கத்தில் உள்ள ஒரு தடாகம்.

33. திருத்தங்காலூர் :—பாண்டி நாட்டிலுள்ள ஊர்; சீவில்லிபுத்தூருக்குப் பக்கத்திலே உள்ளது ; இப்பொழுது 'திருத்தண்கால்' எனக் கூறுகின்றனர். இதனைத் தான் பாண்டியன் வார்த்திகனுக்குக் கொடுத்தது.

34 துவரை :—கண்ணன் பசு மேய்த்து விளையாடிய ஊர். துவாரகாபுரி எனவும் கூறுவர்.

35. தேவந்தி :—கண்ணகியின் பார்ப்பனத் தோழி; மானிட வடிவம் கொண்ட சாத்தன் என்னும் தெய்வத்தின் மனைவி ; கண்ணகி தீக்கனவு கண்ட பொழுது தேற்றியவள்.

36. நெடியோன் குன்றம் :—திருவேங்கடமலை ; தமிழ் வழங்கும் நிலத்திற்கு வடவெல்லை.

37. நெடுஞ் செழியன் .—மதுரையில் இருந்த பாண்டியன் ; கோப்பெருந் தேவியின் கணவன். கோவலனைக்

கொலை புரிவித்தவன். கண்ணகியின்பால் வழக்கில் தோற்று உயிரை விட்டவன்.

38. பட்டினப்பாக்கம் :—காவிரிப்பூம்பட்டினத்தின் உள்நகர்.

39. பத்தினிக் கடவுள் :—கண்ணகி ; கோவலனோடு சுவர்க்கம் புகுந்தபிறகு இப்பெயர் பெற்றாள் ; இலங்கையில் உள்ள சிங்களவர் கண்ணகிக் கோயிலைப் 'பத்தினிக் கோயில்' என்று வழங்குகின்றனர் போலும்.

40. பரதன் ;—கோவலனுடைய முற்பிறப்பின் பெயர் ; சங்கமன் என்னும் வணிகனைப் பொய்கூறிக் கொன்றவன்.

41. பராசரன் :—சோழ நாட்டிலுள்ள ஓர் அந்தணன் ; திருத்தங்காலூரிலிருந்த தக்கிணாமூர்த்தி என்னும் அந்தணச் சிறுவனைப் பரீக்ஷித்துக் கொடை யளித்தவன்.

42. பஃறுளி :—குமரி ஆற்றிற்குத் தெற்கே உள்ள ஆறு ; இதுவும் கடலால் கொள்ளப்பட்டது.

43. பூதசதுக்கம் :—காவிரிப்பூம் பட்டினத்துள்ள மன்றம் ; இது பாவிகளைக் கொன்றுதின்னும் பூதம் வாழுமிடம்

44. பெருமகள் :—கோவலன் தாயார் ; பெருமனைக் கிழத்தியென்றும் பெயர். கோவலன் இறந்ததைக் கேட்டு உயிரை விட்டவள்.

45. பொதியில் :—பாண்டி நாட்டில் உள்ள மலை ; அகத்தியர் வாழும் மலை.

46. பொருனை :—தாம்பிரபன்னி ஆறு ; இது பாண்டி நாட்டில் திருநெல்வேலிக்குப் பக்கத்தில் உள்ளது.

47. மணிமேகலை ;—கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்தவள் ; நிர்வாணத் துறவு பூண்டவள் ; ஒரு தெய்வத்துக்கும் பெயர் ; அது மணிமேகலா தெய்வம்.

48. மணிவண்ணன் :—காவிரிப்பூம்பட்டினத்திற்கு மேற்கே கோயில் கொண்ட திருமாலின் பெயர்.

49. மதுராபதி தெய்வம் :—மதுரையின் ஆதி தேவதை ; கண்ணகிக்குக் கோவலனுடைய முற்பிறவியை உரைத்த தெய்வம்.

50. மருவூர்ப்பாக்கம் :—காவிரிப்பூம் பட்டினத்தின் புறநகர்.

51. மாங்காடு :—இது குடமலைப் பக்கத்து உள்ளது; இக்காலத்து 'மாங்கர்' என்று வழங்கப்படுகின்றது.
52. மாசாத்துவான்:—கோவலன் தந்தை; கோவலன் இறந்த பிறகு பொருளையெல்லாம் தானஞ் செய்துவிட்டுத் துறவு பூண்டவன்.
53. மாடலன் :—தலைச்செங்கானத்தில் உள்ள அந்தணன்; கோவலனுடைய நண்பன்.
54. மாதரி :—மதுரையில் ஆயர்பாடியிலுள்ள இடையர் குல ஆய்ச்சியர் தலைவி; கண்ணகியைக் கவுந்தியடிகளிடத்தில் அடைக்கலமாகப் பெற்றவள்; கோவலன் இறந்ததையும் கண்ணகி துன்பத்தையும் கேட்டுத் தீயில் விழுந்து இறந்தவள்.
55. மாதவி :—அகத்தியர் சாபத்தால் பூமியில் மாதவியாகப் பிறந்த உருப்பசியின் வம்சத்தில் பிறந்தவள்; கோவலன் காமக்கிழத்தி; கோவலன் இறந்த பிறகு துறவு பூண்டவள்.
56. மாநாயகன் :—கண்ணகியின் தந்தை.
57. மாலதி :—காவிரிப்பூம் பட்டினத்துள்ள ஒரு பார்ப்பனி
58. முசுகுந்தன் :—சூரிய மரபிற் பிறந்த அரசன்; காவிரிப் பூம் பட்டினத்தை முன்னம் ஆண்டவன்.
59. வசந்தமாலை :—மாதவியின் தோழி; கூனி என்று பெயர்.
60. வஞ்சி:—சேரன் இராசதானி; கொடுங்கோளூர் என்றும், திருவஞ்சைக்களம் என்றும், கரூர் என்றும் பலவாறு கூறுவர்.
61. வயலூர் :—பாண்டி நாட்டிலுள்ள ஊர்; வார்த்திகனுக்குப் பாண்டியனால் கொடுக்கப்பட்டது; திருத்தங்காலூர்க்குக் கிழக்கே உள்ளது.
62. வார்த்திகன் :—தக்கிணாமூர்த்தியின் தந்தை.
63. வாரணவாசி :—மத்திம தேசத்தில் உள்ள ஒரு ஊர்.
64. வீரபத்தினி :—கண்ணகி.

சேந்தமிழ் வாழ்க! புலவர் வாழ்க! புரவலர் வாழ்க!

"கோவலன்."

* மங்கலவாழ்த்து.

(கோவலன் திருமணம்)

திங்களை வணங்குவோமாக! மகரந்தம் நிறைந்த மாலையினையுடைய கரிகாற்சோழனது குளிர்ச்சி தரும் வெண்கொற்றக் குடைபோன்று, விண்ணினின்று இவ்வுலகிற்குத் தண்ணொளிவீசி இன்னருள் செய்தலால் திங்களைப் போற்றுவோமாக!

சூரியனைப் போற்றுவோமாக! காவிரி நாட்டையுடைய சோழன் கரிகாலனது ஆணைச்சக்கரம் ஒப்ப, பொலிவுபெற்ற நெடுமுடியினையுடைய மேருமலையை வலமாகச் சுற்றிவருதலினால் சூரியனைப் போற்றுவோமாக!

மழையைப் போற்றுவோமாக! கடல் புடைசூழும் இந்நிலவுலகத்திற்கு அச்சோழன் கருணை செய்யுமாறு போல, விண்ணின்று என்றும் மாறாது மழை பெய்து வளத்தைச் செய்தலால் மழையைப் போற்றுவோமாக!

† புகாரைப் போற்றுவோமாக! நீர்வேலியினையுடைய இவ்வுலகத்தின்கண் அச்சோழனது குலத்தைப் புகழ்வார் இதனையும் சேர்த்துப் புகழ்வார் ஆதலால் புகாரைப் போற்றுவோமாக!

---

* திருமணக்காலத்துப் பெண்கள் வாழ்த்துதல்.

† புகார் - காவிரிப்பூம்பட்டினம்.

எந்நாட்டினும் நன்னாடாம் சோணாட்டின்கண் காவிரிநதி கடலொடு கலக்குஞ் சங்கமுகம் என்னுந் துறையையுடையதும், சோழர்கள் அரசுகட்டிலேறிச் செங்கோலோச்சுவதற்கு இடனாய்நின்றதும், அறிவிற்சிறந்த பெரியோர்களால் பலபடப் பாராட்டப் பெற்றதும், பொதியம், இமயம் ஆகிய இவற்றினோடு ஒரு தன்மையவாகக் கருதப்பட்டதும், பதியெழு வறியாப் பழங்குடி தழுவியதும், ஆதியில் தோன்றிச் சலிப்பின்றி நிலைபெற்றதெனக் கூறப் பெறுவதும் ஆகிய காவிரிப்பூம்பட்டினத்தில் 'கரிகாற் சோழன்' என்பான் அரசு செலுத்திவந்தனன். சுவர்க்கம், புவனம் என்னும் இவ்வுலகங்கட்குரிய புகழும் போகமும் பொருந்திய அக்காவிரிப்பூம்பட்டினத்தில், "மாசாத்துவான்" என்னும் வணிகன், இப்பர், கவிப்பர், பெருங்குடியர் என்னும் மூவகை வணிகருள் பெருங்குடியர் மரபினனாய், அந்நிலத்தைத் தனியேயாளும் இனிமைவாய்ந்த கரிகாலனை முதற்குடியாக வைத்து எண்ணப்படும் செல்வக் குடிகளில் ஒருவனாய், ஒல்காக் கல்விச் செல்வம் மல்கியவனாய், தன் வான்பொருளை வறியார்க்கே வழங்கும் வண்மையுடையனாய் வாழ்ந்துவந்தனன். இப்பெரு வணிகனுக்கு 'கோவலன்' என்பான் மகனாய்ப் பிறந்து வளர்ந்து கல்வி பல பயின்று பதினாறு ஆண்டுப் பருவமுடையவன் ஆயினன். இவனும் மண்ணுலகத்தைச் சிறிதாகச் செய்யும் புகழும் பெற்றனன். பண்ணைப் பழித்த மொழியினரும் மதியைப் பழித்த முகத்தினரும் இவனைக்கண்டு "இவன் *செவ்வேளோ" என எண்ணித் தம் காதலால் பாராட்டும் பண்புடையவனும் ஆனான். இவ்வகைச் சீருஞ் சிறப்பும் வாய்ந்த "கோவலனுக்கு";

அந்நகரின்கண் மழைபோல் வழங்கும் வண்மையையுடைய 'மாநாய்கன்' என்னும் வணிகன் மகளும், கொம்புக்

---

* செவ்வேள் - முருகக்கடவுள்.

கொடியும் போல்பவளும், "போதிற் பொருந்திட்ட திருமகள் வடிவு இவள் வடிவை யொக்கும்; வடமீன் வடிவாகவுள்ள அருந்ததியின் கற்பு இவளது கற்பை யொக்கும்;" எனப்பல மாதர்களும் வணங்கியேத்தும் குணம் பொருந்தியவளும், பன்னீராண்டுப் பருவமுடையவளும் ஆகிய 'கண்ணகி' யென்னும் பெண் ணுகணியை;

மணம்புரிந்து, இருபெருங்குரவரும் ஒரு பெருநாளில் மணவணிகாண விரும்பினர். அதுபோழ்து, யானையினது பிடரியின்கண் அணியிழையுடைய பெண்களை யலங்கரித்து அமரச் செய்து அம்மாநகரின்கண் உள்ள மக்களுக்கு இவ்விருவர்தந் திருமணத்தை யறிவித்தனர். அக்காலை * முரசு முதலிய இயம்பின; முருடு முதலிய அதிர்ந்தன; சங்கம் முதலிய முழங்கின; வெண்குடைகள் முதலிய எழுந்து பரந்தன; மங்கல அணி எங்கும் பொங்கின; இவ்வாறுகப் பற்பல இன்னிசை வாத்தியங்கள் கடல் முழக்கெனை ஒலித்தன.

பின்பு, மாலைகள் தாழ்ந்த உச்சியையுடைய வயிரமணித் தூண்கள் வரிசை வரிசையாய் அமைந்த மண்டபத்தில், நீலப் பட்டின் மேற்கட்டியின் கீழ் அழகிய முத்துப்பந்தரில் மதியம் உரோகிணியை யணைந்த நன்னாளில் சோதிட நூலில் வணிகர்க்குக் கூறிய நெறியின்கண் வழுவாது திருமணம் புரிந்து § பிதாமகன் வழிகாட்டிச் செலுத்த கோவலன், கண்ணகியாருடன் தீவலஞ்செய்தனன்.

ஒளி விளங்கும் மேனியையுடைய பெண்கள் பலர், கலவைச் சாந்தினைக் கைக்கொண்டவர்களாய் மலர்களை யேந்தினவர்களாய் புகழ்பவர்களாய் வாழ்த்துப் பாடியவர்களாய் ஒதுங்கிப்பார்த்த பார்வையையுடையவர்களாயும்;

---

* முரசு - முரடு, சங்கம் முதலியன.

§ பிதாமகன் - புரோகிதன்.

ஏந்தின முலையினர் சிலர், சந்தனக்குழம்பையுடையவர்களாய் நல்ல வாசனைப் புகையினை யுடையவர்களாய் மாலையராய் இடித்த சுண்ணத்தினர்களாயும்;

புன்னகையையுடைய பெண்கள் சிலர், விளக்கினராய் ஆபரணங்களை ஏந்தினராய் முளைப்பாலிகையுடையவர்களாய் பூரண கும்பங்களை யேந்தினவர்களாயும்;

வரிசை வரிசையாகக்கூடி, "மணங்கமழுங் கூந்தலையுடைய பொற் கொடியை யொத்த மணமகளாகிய கண்ணகியார், தமது கணவனைக் கண்ணினும் மனத்தினும் பிரியாமல் புணர்வாராக! மணமகனாகிய கோவலனாரும், இவரையகத்திட்டகை நெகிழாமல் புணர்வாராக! இருவரன்பும் ஓரன்பாக!" எனத் தம்தம் வழிபடு கடவுளை நினைந்து வணங்கி மலரைத்தூவி வாழ்த்தி "போரில் மேம்பட்ட வெற்றியினையும் வேலினையும் உடைய சோழன் காரிகாலன், ஒப்பில்லாத தனது ஆணைச்சக்கரத்தை வெற்றியுடன் என்றும் எவ்விடத்தும் நடத்துவானாக!" என அரசனையும் வாழ்த்தி அருந்ததியன்ன பெருந்திருவுடைய 'கண்ணகி'யை நன் மணத்திற்குரிய நல்ல படுக்கையின்கண் ஏற்றினர்.

2. *மனையறம் படுத்தல்.

முற்கூறியுள்ள புகழும் பொறுப்பும், சீரும் சிறப்பும் பொருந்தி, அரசர் விரும்பும் பெருமைசால் செல்வ மல்கிய நகரத்தின்கண், கலத்தாலும் காலாலும் ஈட்டுதலினால் பெறுதற்கரிய பெரும்பொருள் மருவும் புதுமையினையுடைய பல தேயங்கள் ஒருங்கே கூடியிருந்தாற்போலப் பல்வகை பண்டங்கள் ஈண்டியிருந்தன. அன்றியும் கடல்சூழ்ந்த உலகமுழுவதுங் கூடிவரினும் வழங்க வழங்கத் தொலையாத வளத்தையுடையதாயும் அந்நகர் பொருந்தியிருந்தது. அறத்தாறீட்டிய அரும்பொருள் முழுவதும் உத்தமதானமாக உவந்து செய்தோர் அடையும் ஆதியரி வஞ்சம், நல்லரி வஞ்சம், ஏமத வஞ்சம், இரண வஞ்சம், தேவ குருவம், உத்தர குருவம் எனப்பட்ட அறுவகைப் போகபூமியை யொக்கும்படி, குலத்திற்குன்றாத செல்வர்களாகிய மாநாயகனுக்கும் மாசாத்துவானுக்கும் மக்களாய்த் தோன்றிய மலர் போலும் கண்களையுடைய கண்ணகியும், அவளால் காதலிக்கப்பட்ட கணவனாகிய கோவலனும் தம்முள் ஒத்த அன்புடையராய் மருவி வாழ்வாராயினர். இங்ஙனம் வாழ்கின்ற காலத்தில் ஓர்நாள், தெய்வ தச்சனால் நிருமிக்கப்பட்டதைப் போன்ற எழுநிலை மாடத்தின் இடைநில மாடமாகிய நாலாம் மாடத்தின்கண் மாணிக்கங்களால் புனையப்பெற்ற கால்களையுடைய படுக்கையின்மீது அன்பு ஒருமித்து அமர்ந்திருந்தனர். அதுபோது, தென்றல் காற்றானது குவளை, வண்டுகள் முரலக்கட்டவிழ்ந்த கழுநீர், ஆம்பல், தாமரை முதலிய நீர்ப்பூக்களின் நறுமணத்தைக்கலந்துண்டு, கோட்டுப்பூவாகிய தாழையினது வெள்ளிய

* இல்வாழ்க்கையில் பொருந்துவித்தல்.

இதழ்களையும், சண்பகச் சோலையி னிடத்துள்ள மாதவிப் பூவின் தாதினையும் நெருங்கிக் கலந்து, ஒளி பொருந்திய முகத்தையுடைய மாதரது கூந்தலில் உண்டாகிய கலவை மணத்தை யுண்ணுதற்கு ஏக்கமுற்று உள்ளே நுழைவதற்கு வழிகாணமல் சுழன்றுகொண் டிருக்கின்ற வண்டுகளோடு மணித்தாமத்தாலே வரிசையாய் வகுத்து வைத்திருக்கின்ற சாளரத்தின் வழியாகச் சமயம் பார்த்து உள் நுழைந்தது. இவ்வாறு பலவகை மன்றலோடு கலந்து வருகின்ற தென்றலைக்கண்டு மகிழ்ச்சியடைந்து புணர்ச்சியை விரும்பினவர்களாய் அவ்விடைநில மாடத்தினின்றும் மலர் வாளியோடு மன்மதன் வீற்றிருக்கும் நிலா முற்றத்தின்மேல் ஏறினர். அங்கு வண்டுகள் உண்ணத் தொகுத்து வைத்திருப்பதைப் போன்றுள்ள நறுமலர்கள் நிறைந்த பூப்படுக்கையின்கண் உலகத்தை விளங்கச்செய்யும் இளஞ்சூரியனும் இளஞ்சந்திரனும் ஒருசேரவிருந்த காட்சியைப் போலிருந்து, கரும்பையும் காமவல்லியையும் கண்ணகியார் தோளில் எழுதி, முலைமேல் சந்தனக்கோலத்தை வரைந்து களிப்பெய்தி மல்லிகை மாலையும் கழுநீர் மாலையும் நிலைகுலைந்தலைய, மார்பிற் கிடந்த இவ்விருவகை மாலைகளும் மயங்க, இருவரும் செயலற்று இரண்டுடல் ஒன்ருய்க் கரைந்து கண்படாத புணர்ச்சியின் மகிழ்ந்தனர்.

இவ்வாறு புணர்ச்சியின் மகிழ்ந்த கோவலன், கடைசியில் திருமகளைப் போன்ற தன் மனைவி கண்ணகியின் முகத்தைப் புன்சிரிப்புடன் நோக்கித், தான் முன்பு கருதாத 'நலம் பாராட்டல்' என்னும் பொருள் நிறைந்த புகழ்ச்சி மொழிகளைக் கூறுவானுயினன்.

அரும்பெறற் பாவாய்! எல்லாம்வல்ல இறைவன் தேவர்கள் எல்லாம் வணங்கத் தன் முடியில் அணிந்த பிறைச் சந்திரனை நீயடைவது அருமையாயினும் திருமகளாகிய

உன்னோடு பாற்கடலில் உடன் பிறந்தவனாகையால், அப் பிறையை அவ்விறைவன் நின் நெற்றியாகக் கடவதெனத் தருவானாக!

பொன்னாரணங்கே! தம் பகைவராது போரின்கண்ணே அவ்வேந்தரை அழிப்பவர்க்கு படைக்கலம் முதலியவைகளைக் கொடுத்தல் அரசர்கட்கு வழக்கமாதல் போல, உருவிலாளனான மன்மதன் தன்னால் வெல்ல மாட்டாதாரை நின்னைக் கொண்டு வெல்லத் தான்கொண்ட கரும்புவில்லை இருபெருங் கரிய புருவமாகத் திருத்தித் தரக்கடவானாக!

ஆருயிர்ப் பாவாய்! தேவர்கட்கு மரணம் இன்மையைக் கொடுக்கும் அமுதம் பிறத்தற்கு முன்பு நீ தோன்றினாயாதலால், அத்தேவர்களுக்குத் தலைவனாகிய இந்திரனும், அசுரரை யழித்து அமரரைக் காப்பதற்கு எடுத்த வச்சிராயுதத்தை, அதன் இடை நினக்கு இடையாகவெனத் திருத்தித் தரக் கடவானாக!

பொன்னேரனையாய்! யான் இறந்துபடும் முறைமையைக் காணும்பொருட்டுக், குன்றமெறிந்த குமரவேள், தன் அழகிய கையிற்கொண்ட ஒளிதங்கிய நீண்ட வேலொன்றையும் நின் ஒளிபொருந்திய முகத்து மழைக்கண் இரண்டாகுமாறு நிருமித்துத் தந்தருளினான்கொல்!

நன்னுதால்! ஒளிபொருந்திய பீலியையுடைய அழகிய மயில்கள் எல்லாம் நின் சாயற்குத் தோற்றுக் காட்டையடைகின்றன. நன்னயம் வாய்ந்த அன்னப் பறவையினத்தும் நின் மென்னடைக்குத் தோற்று. நன்னீர்ப் பண்ணையின்கண் உள்ள நறுமண மலரை நண்ணுகின்றன, கிளிப் பிள்ளைகள், குழலிசையையும் யாழிசையையும் அமுதத்தையும் கலந்து குழைத்தால் ஒத்த நினது மழலைச் சொற்களைக் கற்கும்பொருட்டு நின் திருக்கரத்தினின்று நீங்காவாய்

நின்பால் வெறுப்புங் கொள்ளாவாய்ப் பிரியாவாய் நின்னோடு உடன் வாழ்தலையும் பெற்றன.

நறுமலர்க்கோதாய்! நின் அழகைப் புகழ்ந்து பாராட்டி நினக்கு அணிகள்பூட்டும் மகளிர், குற்றமற்ற நினது இயற்கை யழகையன்றியும் வேறுசில அணிகளையும் அணிவதனால் அவர்கள் பெற்ற பேறுதான் என்னே! பெண்பாவாய்! நின் கூந்தலில் சில அழகிய மலரைச் சூட்டுதலே போதுமாக, அதன் மேலும் மாலையைச் சூட்டுவதற்கு அம்மாலையோடு அம்மகளிர் என்ன உறவுடையார்களோ! நின் கூந்தலின் கண் நெய்யையுடைய நல்ல அகிற்புகையை யூட்டியும், அது தானும் பொருது அதன் மேலும் கத்தூரியையும் அணிவதற்குத் தமக்குள்ள கண்ணோட்டந்தான் யாதோ? நினது அழகிய முலைத்தடத்துக் கலவைச்சாந்தினால் எழுதிய தொய்யில் மேலும் தனிமையான முத்துவடத்தை யினிமையாகப் பூட்டுதற்கு அப்பெண்கட் குண்டாகிய நட்புரிமைதான் என்னே! இவ்வாறாக மங்கலவணியும், மலரும், அகிற்புகையும், தொய்யிலுமே பாரமாய் வருத்த, நின் ஒளி பொருந்திய முகம் குளிர்ந்த நீர்முத்துக்களை யரும்பவும், சிற்றிடை வருந்தவும், இவ்விடத்து இவைதாம் பொருந்தும் எனக் கண்டு வைத்தும், இம்மக்கள் வேறாக அணியும், மாலையும், சாந்தும், முத்தும் அணிந்தார்கள் ஆதலால், பேயினால் பீடிக்கப்பட்டனர்போலும்! இவர்களுடைய அறிவுடைமைதான் என்னே!

(1) மாசறு பொன்னே! வலம்புரி முத்தே!
காசறு விரையே! கரும்பே! தேனே!
அரும்பெறற் பாவாய்! ஆருயிர் மருந்தே!
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே!

மலையிடைப் பிறவா மணியே என்கோ!
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ!
யாழிடைப் பிறவா இசையே என்கோ!
தாழிருங் கூந்தல் தையால்!

எனச் சொல்லி முடியாத நலம்பாராட்டல் என்னும் பொருள் பொருந்திய உரையால் பலபடப் பாராட்டினன். இங்ஙனம் பெண்ணுக் கரசியாங் கண்ணகியோடு நண்ணி வாழ்கின்ற பொழுதில் ஒருநாள், கோவலன் தாயாகிய 'பெருமனைக் கிழத்தி' என்பாள், தன் மகனும் கண்ணகியும் உடனுடன் இருந்து அருளுடைமை, அன்புடைமை, இனியவை கூறல் என்னும் இல்லறப் பகுதிகளால் அறவோர்க் களித்தல், அந்தணரோம்பல், துறவோர்க் கெதிர்தல், விருந்தெதிர் கொள்ளுதல் ஆகிய இல்லற தருமங்களை யினிமையாக நடாத்துந் திறத்தினைக் காணவேண்டி, அடிமைப் பெண்களோடு மிடியைப்போக்கும் செல்வப் பொருள் பலவும் மல்க அவ்விருவரையும் வேறாகத் தனிமையில் கூட்டிவைத்தனள். இவ்வாறு இல்லறமாகிய நல்லறத்தின் வழியே கண்ணகிக்கும் கோவலனுக்கும் சில ஆண்டுகள் கழிந்தன.

3. மாதவி யரங்கேறுதல்.

முன் ஒருகாலத்தில் இந்திரனுடைய சபையில் பாடலும் ஆடலும் பண்புறக் காட்டிய *உருப்பசி யென்பாள், தன்மேற் காதல்கொண்டு நோக்கிய இந்திர குமாரனாகிய சயந்தனைத் தானும் நோக்கினாள். அதனால் அவ்வாடலும் பாடலும் பிறழ்ந்துவிட்டது. இதனை அகத்திய முனிவர் கண்டு கோபித்து உருப்பசியைக் கணிகை மாதாக மண்ணுலகில் பிறக்குமாறும், சயந்தனை மூங்கிலாகுமாறும் சபித்தனர். பின்பு அம்முனிவரை யிருவரும் வேண்ட, கூத்தியர் தலைக்கோல் தானத்தில் நீங்கும் என்று அருளிச்செய்தனர். அச்சாபத்தைப்பெற்று நாடகத் தொழிலொடு ஊர்வசி யென்பவள் மண்ணுலகத்தில் வந்து மாதவியென்னும் பெயரொடு பிறந்து பின் சாபங்கழியப் பெற்றுப் பெயர்ந்து விட்டனள். இங்ஙனம் பெயர்ந்த உருப்பசியாகிய மாதவியின் மரபில்வந்து இம் மாதவி யென்னும் பெயரையுடையாள் பிறந்தனள். இவள் பிறப்பினால் குறைவில்லாதவள்; பெருந் தோளினை யுடையாள்; மலர்கள் பொருந்திய இருண்டு சுருண்ட கூந்தலையுடையாள். இத்தகைய இம் மாதவியினை "ஆடல், பாடல், அழகு என்னும் மூன்றினில் ஒன்றுங் குறைவுபடாமல் ஐந்தாண்டினில் தண்டியம் பிடிப்பித்து, ஏழாண்டு கூத்துக் கற்பித்துப் பன்னீராண்டில் அரசன் அவைக்களத்தில் அரங்கேற்றுதல்" என்ற முறைப்படி வீரக்கழலையணிந்த 'கரிகாற்சோழன்' முன் அரங்கேற்றிக் காட்டலை விரும்பினர். இங்ஙனம் விரும்பிய அவளது உறவினர்,

---

* உருப்பசி - ஊர்வசி, தேவ அரம்பையர்களில் ஒருவள்.

(ஆடலாசிரியன் இலக்கணம்)

சாந்தி, விநோதம் என்னும் இருவகை யகக்கூத்தினையும் அவற்றின் இலக்கணங்களையும் உணர்ந்து, பல்வகைப்பட்ட வென்றி, வசை, விநோதம் முதலாகிய புறக் கூத்தினையும், வேந்துவிலக்கு, படைவிலக்கு, ஊர்விலக்கு என்று சொல்லப் பட்டவைகட்கு உறுப்பானவற்றுடனே பொருந்தச் சேர்க்கவும் வல்லவனாகி, அல்லியம், கொட்டி, குடை, குடம், பாண்டரங்கம், மல், துடி, கடையம், பேடு, மரக்கால், பாவை என்னும் பதினொரு ஆடலும் அவற்றிற்குரிய பாடலும் அவற்றின் விகற்பங்களுக் குரிய வாத்தியக் கூறுகளும், நூலில் விதித்த முறையே சந்தேகமறத் தெரிந்து, முற்கூறிய அகக்கூத்திலும் புறக்கூத்திலுமுள்ள ஆடலும், இன்பம், தெளிவு, நிறை, ஒளி, வன்சொல், இறுதி, மந்தம், உச்சம் என்னும் எண்வகைப் பயனையுடைய பாடலும், வடிவு 1 மாத்திரை ½ அளவுள்ள கொட்டு, வடிவு 7 மாத்திரை 1 அளவுள்ள அசை, வடிவு 2 மாத்திரை 2 அளவுள்ள தூக்கு, வடிவு ௦ மாத்திரை 3 அளவுள்ள அளவும் * இவற்றின் தொழிலும் அமைந்துள்ள தாளங்களும், இத்தாளங்களின் வழியேவரும் செந்தூக்கு, மதலைத்தூக்கு, துணிபுத்தூக்கு, கோயிற்றூக்கு, நிவப்புத் தூக்கு, கழாற்றூக்கு, நெடுந்தூக்கு எனப்பட்ட எழுவகைத் தூக்குகளும் பொருந்திய வழியினைக்கொண்டு ஆட்டுவிக்குமிடத்து, சுட்டு விரல், பேடி விரல், அநாமிகை, சிறு விரல் இவைகள் முடங்க அவற்றின்மேல் குறுக்கிடப் பெருவிரல் கட்டி, விரல்வழி முறையாய் 'ஒற்றல்' தொழிலைச் செய்கின்ற ஒற்றைக் கையும், அஞ்சலி, புட்பாஞ்சலி, பதுமாஞ்சலி,

* தொழிலாவன :—கொட்டு - அமுக்குதல் ; அசை - தாக்கியெழுதல் ; தூக்கு - தாக்கித்தூக்குதல் ; அளவு - தாக்கின ஓசை நேரே 3 மாத்திரை பெறுமளவும் வருதல்.

கபோதகம், கற்கடகம், சுவத்திகம், கடகாவருத்தம், நிடதம், தோரம், உற்சங்கம், புட்படுடம், மகரம், சயந்தம், அபயாத் தம், வருத்தம் என்னும் பதினைந்து வகைப்பட்ட இரட்டைக் கையும் அழகுபெறக் காட்டுங்கையும் தொழில்பெறக் காட் டுங் கையும் பொருள் பெறக் காட்டுங் கையும், இன்னவை யகக்கூத்திற் கென்றும் இன்னவை புறக்கூத்திற் கென்றும் தெரிந்து, கூத்துக்கள் நடத்துங்காலத்து அகக்கூத்தாடுங்கால் ஒற்றையிற்செய்த கைத்தொழில் இரட்டையில் புகாமலும், இரட்டையிற் செய்த கைத்தொழில் ஒற்றையிற் புகாமலும் நீக்கி, ஆடல் நிகழும் இடத்து அவிநயம் நிகழாமலும் அவி நயம் நிகழும் இடத்து ஆடல் நிகழாமலும் பிரித்து, குரவைக் கூத்திற்குரிய கால்களும் வரிக்கூத்திற்குரிய கால்களும் தம முள் கலவாதபடிக் கூத்தை நடித்துத் தான் ஆடவும் பிறரை ஆட்டவும் வல்ல ஆடல் ஆசிரியனும்;

(இசையாசிரியன் இலக்கணம்)

இருபத்தொரு நரம்புகளையுடைய பேரியாழ் பதினேழு நரம்புகளை யுடைய மகரயாழ் பதினாறு நரம்புகளை யுடைய சகோடயாழ் ஏழுநரம்புகளையுடைய செங்கோட்டியாழ் என் னும் நால்வகைப்பட்ட யாழ்ப்பாடலும், மூங்கில், சந்தனம், வெண்கலம், செங்காலி, கருங்காலி என்னும் ஐவகைக்குள் ஒன்றைக் கொள்ளுங்கால் உயர்ந்த ஒத்த நிலத்தில் பெருக வளர்ந்து நாலுகாற்றின் மயங்கின் நாதமில்லையாதலால் இங் ஙனம் மயங்காத நிலத்தில் இளமையும் நீண்ட வயதுமின்றி ஒருபுருஷ ஆயுள்கழிந்த பெரியமரத்தை வெட்டி வட்டவடிவ மாகச்செய்து அதனை நிழலிலே ஆறவைத்துத் திருகுதல், பிளத்தல், உடைந்து போதல் முதலிய செய்கைகளை யறிந்து, ஓராண்டு சென்றபின் இலக்கண வகையால் நீளம் 20 விரலாக வும் சுற்றளவு நாலரை விரலாகவும் நறுக்கிக் கடைசியில்

நெல்லரிசியில் ஓர் பாதியளவு கடைந்து வெண்கலப் பூணால் இடமுகத்தை யடைத்து வலது முகத்தை வெளியாகவிட்டு இலக்கணப்படி மூன்பு இரண்டுவிரல் நீக்கி முதல் வாய்விட்டு, இதற்கு ஏழங்குலம் விட்டுக் கடைசியிலும் இரண்டங்குலம் விட்டு இடைநின்ற ஒன்பது விரலில் ஒருவிரல் அகலம் இடையுள்ள எட்டுத் துளையிட்டு இவற்றுள் ஒன்றை 'முத்திரை' என்று விலக்கி மற்றையேழிலும் இடக்கைப் பெருவிரலும் சிறுவிரலும் நீக்கி மற்றைய மூன்று விரலும் வலக்கையிற் பெருவிரல் நீக்கி மற்றைய நான்கு விரலும் ஆகிய ஏழுவிரலாலும், ச, ரி, க, ம, ப, த, நி என்னும் ஏழெழுத்துக்களினாற் பிறக்கின்ற சட்சமம், இடபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிடாதம் என்னும் ஏழிசையின் வழியே பண்கள் பிறக்க ஊதுகின்ற குழலும், வண்ணக் கூறுபாட்டையும் தாளக் கூறுபாட்டையும் பாலை நிலையினையும் பண் நிலையினையும் நிலைப்படுத்திக் காட்டுந்தன்மையும், பண்ணும் இசையும் ஆகிய இவற்றைப்பாடும் கண்டமும், சல்லென்ற ஓசையினையுடைய 'சல்லிகை'யும், காடி கத்துவதைப் போன்ற ஓசையினையுடைய 'கரடிகை'யும், பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், திமிலை, குடமுழா, தக்கை, கணப்பறை, தமருகம், தண்ணுமை, தடாரி, அந்தரி, முழவு, சந்திரவளையம், மொந்தை, முரசு, கண்விடுதூம்பு, நிசாளம், துடுமை, சிறுபறை, அடக்கம், தருணிசசம், விரலேறு, பாகம், உபாங்கம், நாழிகைப்பறை, துடி, பெரும்பறை முதலிய தோலால் செய்யப்பட்ட கருவிகளும், அகக்கூத்துப் புறக்கூத்துப் பதினொரு ஆடல் என்று கூறப்படும் ஆடலுடனும் இவற்றின் உருக்களை இசை கொள்ளும்படியும் சுவை பொருந்தும்படியும் சேர்க்க வல்லனாகி, செந்துறை வெண்டுறை என்ற இருவகைப் பாடல்களுக்கும் உரிமைப் பொருளாய் அமைந்த இயக்கம் நான்கினையும் அமைத்து, தேச பாஷைகளாகிய இயற்சொல்,

திரிசொல், திசைச்சொல், வடசொல் என்ற சொற்கள் இசை பூணும்படிச் செய்து, இயற்புலவன் நினைவும் நாடகப் புலவன் ஈடும் அதன் மேல்வரும் வரவும் இவற்றின் பொருட்டு வரும் பாடங்களும் இலக்கண முறைப்படி வகுக்கவும் விரிக்கவும் வல்ல இசையாசிரியனும்,

(கவிஞன் இலக்கணம்)

இவ்வுலகத்துள் வடக்கும் தெற்கும் குடக்கும் குணக்கும், வேங்கடம், குமரி, கடல் எனத் தமிழ் அறிஞர்களால் எல்லை கூறப்பட்ட அமிழ்தினும் இனிய தமிழ் நாட்டாரறிய முத்தமிழ் முழுவதினும் வல்லவனாகி, அகம் என்னும் * வேத்தியல் புறம் என்னும் § பொதுவியல் என்று நல்லோர் நாட்டிய நன்னூல் முறையினை நன்றாய்த் தெரிந்து, அதன்வழி நின்று இசைப்புலவன் இசைத்துவைத்த பண்ணின் தன்மையினை முதலும், முறையும், முடிவும், நிறையும், குறையும், கிழமையும், வலிவும், மெலிவும், சமனும், வரையவரையும், நீர்மையும் ஆகிய பதினொரு பாகுபாட்டால் உணர்ந்து, உணர்ந்த வண்ணம் தாளநிலையில் பொருந்தும்படி வைத்துத் தன் கவியினிடத்தே தோன்றும்படி வைக்க வல்லவனாகிப், பகைவரால் செய்யப்படுகின்ற வசைக் கவிகளின் இயல்பையறிந்து அவை தோற்றுதபடி வசையில்லாத மொழிகளால் நாடகக் கவிகளை நன்றாகச்செய்ய வல்லமை வாய்ந்த நன்னூற் புலவனும்,

(† தண்ணுமையோன் இலக்கணம்)

எல்லாக் கூத்துக்களும், பண்ணல் முதலிய எல்லாப் பாடல்களும், அவைகளின் இயல்பும், நரம்பால் உரைக்கப்

---

* வேத்தியல் - அரசர்க்கு ஆடுங் கூத்து.

§ பொதுவியல் - எல்லார்க்கும் ஒப்ப ஆடுங்கூத்து.

† தண்ணுமை - மத்தளம்.

பட்ட பதினோராயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற் றொன்றாக வகுத்த இசைகளும், வடமொழி யெழுத்து நீங்க மற்றைய எழுத்துக்களால் ஆக்கப்பட்ட வாக்கியக் கூறுபாடு களும், எல்லாப் பண்களும், பண்களின் திறமும், இருவகைத் தாள விகற்பங்களும், எழுவகைத் தூக்குகளும், இவற்றிற் குரிய குற்றங்களும், இயற்சொல் முதலிய *நால்வகைச் சொற் களும் ஆகிய ஒன்பதையும் இலக்கண முறைப்படி நன்றாக வுணர்ந்து, ஒரோர் உருவை இரட்டிக்கிரட்டி சேர்த்தவிடத்து நெகிழாதபடி நிரம்ப நிறுத்தவும் அவ்விடத்து வேறுபடும் பாகவுருவான வழியை நிற்குமானம் நிறுத்திக் கழியுமானம் கழிக்கவும் வல்லனாய், யாழ்ப்பாடலும் குழல் இசையும் கண் டப் பாடலும் இயைந்து நடக்கின்றவற்றைக் கேட்போர் செவிகள் ஆனந்தங்கொள்ளத் தண்ணுமைக் கருவியைக் குறிப் பறிந்து சொவாசித்து, மற்றைக் கருவிகளின் குறைநிரப்புத லும், மிகுதியை யடக்குதலும், ஆக்குமிடத்தும் அடக்கு மிடத்தும் தோன்றுமற் செய்தலும், செய்யுமிடத்துக் கைத் தொழில் அழகுபெறச் செய்துகாட்டலும் ஆகிய வன்மை பொருந்திய தண்ணுமையை வாசிக்கும் ஆசிரியனும்,

(குழலோன் இலக்கணம்)

நூல்களில் சொன்ன முறைப்படி †சித்திரப் புணர்ப்பு, ‡வஞ்சனைப்புணர்ப்பென்ற இருவகையினையும் குற்றமில்லாமல்

---

* நால்வகைச்சொல் - இயற்சொல், திரிசொல், வடசொல், திசைச்சொல்.

† சித்திரப் புணர்ப்பு - இசைகொள்ளும் எழுத்துகள் மேல் வல்லொற்று வந்தவழி மெல்லொற்றுபோலப் பண்ணை நிறுத்தல்.

‡ வஞ்சனைப் புணர்ப்பு - இசைகொள்ளாத எழுத்துகளின் மேல் வல்லொற்று வந்தவழி மெல்லொற்றுப் போல நிகழ்ந்து நிறுத்தல்.

உணர்ந்து, பாடலாசிரியனை ஒத்த அறிவுடையவனாகிக் "குழலில் விரல்வைத்து ஊதுந்துளைகளில் சுட்டுவிரல் முதலாகவிட்டுப்பிடிப்பது அவரோகண மாதலாலும்" இவ்விருவகையினையுணர்ந்து, நூற்றுமூன்று பண்ணின் தன்மைகளையும் தம் நிலை குலையாமல் காட்ட வல்லனாகி, இசைநூல் வழக்காலே பாடும் அறிவினை யுடையவனாய், பண்ணுதல் அமைந்த தண்ணுமையின் வழியை யறிந்து அதனுடன் பொருந்துமிடத்தில் பொருந்திப் பண்களை யாழ்மேல் வைத்து அதன் வழிமேல் இசையாசிரியன் இசைத்த பாட்டின் இயல்பைச் சுரம்குறைவுபடாமல் நிறுத்தி அப்பண்ணிற்கு அயலே கலவாமல் நோக்கி அவைகட்குண்டாகிய அழகெல்லாம் காட்டிப் பண்ணிலக்கணம் பதினொன்றையும் நிரம்ப வைத்து," முதனடை, வாரம், கூடை, திரள் என்று சொல்லப்படும் நான்கனுள் "முதனடை மிகவும் தாழ்ந்த செலவினை யுடையதாதலாலும், கடைசியிலுள்ள 'திரள்' மிக முடுகிய செலவினை யுடையதாதலாலும், இவைகளை விட்டு இடைப்பட்ட 'வாரம்' சொல்லொழுக்கமும் இசை யொழுக்கமும் உடையதாதலாலும், 'கூடை' சொற் செறிவும் இசைச் செறிவும் உடையதாதலாலும்" சிறப்பைக் கருதி இவ்விரண்டனுள் வாரப்பாடலை அளவு நிரம்ப நிறுத்த வல்லனாய், பாடலினிடத்துச் சொன்னீர்மைகளின் எழுத்துக்கள் சிதையாமல் எழுத்தெழுத்தாக இசைக்கும் குழலாசிரியனும்,

(யாழாசிரியன் இலக்கணம்)

ஆயப்பாலை, சதுரப்பாலை, வட்டப்பாலை, திரிகோணப்பாலை என்னும் நான்கனுள், ஆயப்பாலையாய்நின்ற பதினான்கு கோவை பொலிந்து செப்பமுடையதாய், பெண்டிர்க் குரிய தானமுடைய பாடலின் இயல்பமைந்த சிறப்பினால் செம்பாலை, படுமலைப்பாலை, செவ்வழிப்பாலை, அரும்பாலை, கொடிப்

பாலை, விளரிப்பாலை, மேற்செம்பாலை யென்னும் எழுவகைப் பாலையினையும், இணைநரம்பு தொடுத்து நிறுத்திக் காட்டல் காரணமாக வட்டப்பாலையின் முடிவுத் தானமாய் வலித்த நிலைமையின் நின்ற 'தாரத்'தின் இரண்டு மாத்திரையுள் ஒரு மாத்திரையையும், இப்பாலையின் முதல் தானமாய் மெலிந்து நிற்கும் 'குரல்' நரம்பில் நான்கு மாத்திரையில் இரண்டு மாத்திரையையும், தாரநரம்பில் அந்தரக்கோவில் கைக்கிளை யாக நிறுத்த, அத்தாரம் கைக்கிளையாகவும், அத்தாரத்தின் ஒழிந்த ஒரு மாத்திரையையும், பண்ணை விளரியிலே கூட்ட, அவ்விளரி துத்தமாக இப்படிப் பன்னிருமுறை திரிக்கப் பன் னிருபாலையும் பிறந்து, உரு தொண்ணூற்றொன்றும் சேரப் பண்கள் நூற்றுமூன்றாக, இவைகளைப் பெண்டிர்க்குரிய தான மாகிய பதினன்கு கோவையில் பொருந்தும்படி இலக்கண நூலில் தவறாது வலிவும் மெலிவும் சமனும் என்னும் தாள நிலையினையுடைய இசைக் கூறுபாடுகளுக் கெல்லாம் நரம்பு அடைவு கெடாமலும், பண்ணீர்மை குன்றாமலும் புணர்க்க வல்லவனாய், அப் புணர்ப்பிற்கு அமைந்த எழுத்துக்களால் இசைசெய்ய வல்ல யாழாசிரியனும் ஆகிய இவர்களோடும்,

(அரங்கின் இலக்கணம்)

யாவராலும் மதிக்கப்பட்ட பொற்புடைய சிற்ப நூலா சிரியனால் வகுக்கப்பட்ட நல்ல இலக்கணங்களில் தவறாதவகை அரங்கு செய்தற்கு ஒருவழியாவது : தெய்வத்தானமும் அந் தணர் இருக்கையும் காவும் உடையதாய், கூபமும் குளமும் பொருந்தியதாய், சுரபுன்னையும் சண்பகமும்போல நறுநாற்ற முடைய மண்ணுமுடையதாய், திண்ணிதாய், மதுரமுடைத் தாய், என்பும் உமியும் கல்லும் பரலும் சேர்ந்தநிலம் உவர்த் தரை ஈரத்தரை பொல்லாச் சாம்பற்றரை பொடித்தரை

ஓடத்தரை என்ற குற்றங்கள் ஒழிந்து ஊரின் நடுவண் உள்ளதாய், தேரோடும் வீதியின் எதிர்முகமாக நிலத்தை வகுத்துக்கொண்டு, பொதியமலை முதலான புண்ணிய மலைகளில் நெடிதாகி நீண்டு வளர்ந்த மூங்கிலில் கண்ணெடுகண் ஒரு சாண் அளவு வளர்ந்திருப்பதைப் பார்த்து, நூல்களில் சொல்லியபடி நல்ல அரங்குகட்ட உத்தமன்கைப் * பெருவிரல் இருபத்துநான்கு கொண்டது ஒரு முழமாக வைத்து நறுக்கி அதனையளக்குங் கோலாகக்கொண்டு அக்கோலால் ஏழுகோல் அகலமும் எண்கோல் நீளமும் ஒருகோல் உயரமும் உள்ளதாய்க்கட்டி, தூணின்மீது வைத்த உத்திரப் பலகைக்கும் அரங்கினிடத்து அகலத்துக்கிடப்பட்ட பலகைக்கும் இடைப்பட்ட நிலம் நான்கு கோலாக உயரங்கொண்டு, இவ்வளவுக்குத் தக்கபடி புகவும் புறப்படவுமான இரண்டு வாயில்களையுடையதாகச் செய்யப்பட்ட அரங்கினிடத்து, மேனிலத்தில் யாவரும் புகழ்ந்து வணங்குமாறு வச்சிரதேகன், வச்சிரதந்தன், வருணன், இரத்தகேசுவரன் என்னும் நான்கு வருணப் பூதங்களை யெழுதிவைத்து, தூண்களின் நிழல் சபை முதலிய இடங்களின்மீது படாதவாறு மாட்சிமைபெற மணிவிளக்கை நிறுத்தி, இடத்தூணின் நிலையிடத்து † ஒருமுக எழினியும், இரண்டு வலத்தூண் நிலையிடத்துப் ‡ பொருமுக எழினியும் மேலே § கரந்துவரல் எழினியும் செயப்பாட்டுடனே வகுத்து, சித்திரம் பொருந்திய மேற்கட்டியினிடத்துச் சந்திரன், குரு,

* பெருவிரல் - அணு எட்டுக்கொண்டது தேர்த்துகள். இது எட்டுக்கொண்டது எள், இது எட்டுக்கொண்டது நெல், நெல் எட்டுக்கொண்டது பெருவிரல்.

† ஒருமுக எழினி – இராச சபையில் இடுந்திரை.

‡ பொருமுக எழினி – அரங்கில் இடுந்திரை.

§ கரந்துவரல் எழினி – கோலம் மறைத்துவரும் இடத்து இடுவது. எழினி – திரை.

அங்காரகன் என்னும் வெண்ணீர்மை, பொன்னீர்மை, செந்நீர்மை என்னும் புகழ்ச்சியைத் தமக்குரிமையாகக்கொண்ட முத்துமாலைகள்சரியும் தூக்கும், தாமமும் நாற்றிப், புதுமையுற்று விருப்புற நோக்குமாறு சமைத்த அரிய தொழில் பொருந்திய அரங்கின்கண்,

(தலைக்கோலின் இலக்கணம்)

பெரும் புகழ்பெற்ற அரசர்கள் தம் பகைவரிடத்தில் போர்புரிந்து அவர்களைப் புறங்காட்டி யோடும்படிச் செய்து அவ்வெற்றியினால் பெற்ற அழகிய வெண் கொற்றக் குடையினது காம்பைத் தலைக்கோலாகக் கொண்டு அதன் கணுக்கள் தோறும் நவரத்தினங்களைப் பதித்து இடைப்பட்ட இடத்தைச் * சாம்பூநதம் என்னும் பொன் தகட்டை மாறுபடக் கட்டி யதனை தேவேந்திரன் மகன் சயந்தனாக நினைத்து மந்திர விதியால் வழிபட்டுப் பூசித்து அரசன் கோவிலில் காப்பு அமைந்து இருத்திப் புண்ணிய நதிகளின் நீரைப் பொற்குடத்து முகந்துவந்து நீராட்டி மாலைசூட்டி இடபம், சிங்கம், துலாம், கற்கடகம், விருச்சிகம், மிதுனம் என்னும் இராசிகள் பூராடம், கார்த்திகை, பூரம், பரணி, ரேவதி, திருவாதிரை, அவிட்டம், சித்திரை, விசாகம், மகம் என்னும் நக்ஷத்திரங்கள் இவைகளில் நன்னாள் கண்டு அந்நாளில் பொன்னாற் செய்த பூணையும் பொற்பட்டத்தினையும் அணிந்த பட்டவர்த்தனம் என்னும் யானையின் கையில் வாழ்த்துடனே கொடுத்து †மும்முரசுகளும் பொம்மென விம்மப் பல வாத்தியங்களின் இன்னிசை யொலிக்க அரசன் மந்திரி முதலாயினோர் கூடவா

---

* நால்வகைப் பொன்னுள் ஒன்று. அவையாவன:—ஆடகம், கிளிச்சிறை, சாதரூபம், சாம்பூநதம்.

† மும்முரசு – வீரமுரசு, வெற்றிமுரசு, கொடைமுரசு.

யானையுடன் சென்று வீதியின் இடத்துத் தேரின் மீதுள்ள கவிஞன் கையில் தலைக்கோலைக் கொடுப்பித்து ஊர்வலமாகச் சுற்றிவந்து அரங்கின்கண் புகுந்து தலைக்கோலை யெதிர்முக மாக வைத்தனர். பின்னர்,

(மாதவி அரங்கிற் புகுந்து ஆடுகின்ற முறை)

அரசர் முதலியோர் யாவரும் தத்தம் வரிசைக்கேற்ற படி அமர்ந்திருக்க, இடக்கை முதலிய கருவியாளர்கள் தாம் தாம் நிற்க வேண்டிய இடத்தில் முறையாய் நிற்க, நாடக அரங்கில் மாதவி வலக்காலை முன்வைத்து ஏறிப் பொருமுக எழினிக்கு நிலையிடமான வலப்பக்கத் தூணிடத்தே சேர்ந்து நிற்க, அம்முறைப்படியே *தோரிய மடந்தையரும் ஒருமுக எழினிக்கு நிலையிடமாயுள்ள இடப்பக்கத் தூணிற் சென்று நன்மை யுண்டாகவும் தீமை நீங்கவும் தெய்வப் பாடல் இரண் டனையும் பாட, அப்பாடலின் இறுதியிலிருந்து மற்றைய கருவிகள் எல்லாம் இசைத்தன. அவ்விசையில், யாழ், மிடறு குழல்வழியும், மத்தளம் யாழின் வழியும், குடமுழா மத்த ளத்தின் வழியும், இடக்கை முழாவின் வழியும், † குயிலுவக் கருவிகள் அனைத்தும் 'பருந்தும் நிழலும்போல' இடக்கை வழிநிற்ப, ஒரு தாளத்திற்கு இரண்டு பற்றாகப் பஞ்சதாளப் பிரபந்தமாகக் கட்டப்பட்ட தேசியொத்தை (ஒரு தாளத் திற்கு இரண்டு பற்றாக பஞ்ச தாரணத்திற்குப் பத்தும், தீர்வு ஒன்றும் ஆக) பதினொரு பற்றாலே தேசிக் கூத்தை யாடி முடித்து, நன்னூல் வகுத்த நாடக முறையில் தவறாமல் இவ்வொத்தை யாடிமுடிந்த பின்பு, மங்கலப் பண்ணாய் நரம் படைவும் உடைத்தா யிருக்கின்ற பாலைப் பண்ணை அளவு

* தோரிய மடந்தையர் — ஆடிப்பாடித் தேர்ச்சிபெற்ற மகளிர்.

† குயிலுவக் கருவிகள் — மற்றைய இசைக் கருவிகள்.

கெடாதபடி ஆளத்தியிலே வைத்து, அதன்மேல் மங்கலச் சொல்லையுடைய * நான்கு உறுப்புக்களினின்றும் குறைவில்லாத உருவுக்குச் சொற்படுத்தியும் இசைப்படுத்தியும், உரு அறிந்து பாட்டும் கொட்டும் கூத்தும் நிகழ்த்தி, அதனை மூன்றொத்துடைய மட்டத் தாளத்திலே எடுத்து, ஓர் ஒத்துடைய ஏகதாளத்திலே முடித்து, அழகிய மண்டல நிலையால் ஒற்றித்து ஒத்தல், இரட்டித்து ஒத்தல் என்கிற தேசிக்கூத்தெல்லாம் ஆடி முடித்துப் பஞ்சதாளப் பிரபந்தமாகக் கட்டப்பட்ட வடுகில் ஒத்தையும் தேசியில் ஒத்தைக் காட்டினாற்போல இரட்டிக்கிரட்டியாக ஆடி முன் சொல்லிவந்த தேசிபோல் வடுகும், மட்டத்தாள முதலாக ஏகதாளம் அந்தமாக வைசாக நிலையிலே ஆடி முடித்துப் 'பொன்னுலியன்ற பூங்கொடி' ஒன்று நடிப்பதை யொப்பத் தாண்டவம், நிருத்தம், நாட்டியம் என்னும் மூன்றனுள் புற நடனமாகிய நாட்டியத்தை அபிநயித்துப் பாவனைதோன்ற நூல்களில் சொன்ன முறை தவறாது பதினன்கு விலக்குறுப்பின் நெறியறிந்து ஆடிக்காட்டினள். இங்ஙனம் மாதவியானவள் தன் பாட்டுக்கும் அழகுக்கும் ஏற்ற முறையில் தவறாமல் தன் வரிசைக்குத் தக்கபடி தலைக்கோல் பெயர் பெற்றுத் தலையரங்கேறினள். அரசனாகிய கரிகாற் பெருவளவனும் மகிழ்ந்து அவளைப் புகழ்ந்து முறைப்படி "ஆயிரம் கழஞ்சு பொன் பரிசத்துக்கும் எண் கழஞ்சு பொன் மெய்ப் போகத்துக்கும்" ஆக ஆயிரத்தெண் கழஞ்சு பொன் கொடுத்து 'இதுவே நினக்கு ஒரு நாளைப் பரிசமாகும்' எனத் தந்து ஒரு மாலையும் இட்டனன். அன்றுதொட்டு அதுவே அவளுக்குப் பரிசமாக நிச்சயிக்கப்பட்டது. பின் மாதவியின் தாய் ஒரு கூனியின்பால் அம்மாலையினைக் கொடுத்து "இம்மாலை ஆயிரத்தெட்டு கழஞ்சு

* நான்கு உறுப்பாவன :—உக்கிரம், துருவை, ஆபோகம், பிரகலை.

பொன் பெறும்; அப்பொன்னைக் கொடுத்து இம்மாலையை வாங்கிச் சூடுகின்றவரே நமது பூங்கொடி மாதவிக்குக் கணவராவர்; ஆகலின் இதனைக் கொண்டு நம்பியர்கள் வாழும் பெருந் தெருவிற்குச் சென்று விற்று வருவாய்" என்றனுப்பினள். அக்கூனியும் அப்பெருந் தெருவிற் கொண்டுசெல்ல, அதனைக் கண்ட கோவலன் அம்மாலையைப் பொன்கொடுத்து வாங்கி அக்கூனியுடனே அம்மாதவியின் மனையிற் புகுந்து அவளொடு உறைந்து கலந்து கலந்த அப்பொழுதே அயர்ந்து மயங்கி அவள் அழகின் வயப்பட்டுத் தன் கற்புக்கரசியாகிய கண்ணகியையும் மறந்து தன் வீட்டையும் விரும்பாது அம்மாதவியின் வீட்டையே விரும்பி அவளிடமே வாழ்வான் ஆயினன்.



4. அந்திமாலையின் சிறப்பு.

கடலை ஆடையாகவுடைய நிலமடந்தை என்னும் பெண் ணனவள், விரிந்த கதிர்களைப் பரப்பிப் பரந்த உலகத்தை ஒற்றைச் சக்கரத்தால் ஆண்ட சூரியனும் விரிந்த விண்ணி னிடத்துத் தண்ணிலவை வீசும் பங்கமில்லாத் திங்களுமாகிய தன் கணவரைக் காணது எவ்விடத்துள்ளாரோ எனத் திசை களாகிய தன் முகங்கள் நான்கும் பசப்பூர, மலர்களாகிய கண்களில் நீர்வார, உடல்நடுங்கி மனஞ்சுழல்கின்ற காலத்தில், "தம்முடைய கடமையை யுணர்ந்து அரசனை யடைந்து தம் தம் கடமைகளை யொழுங்காகச் செலுத்தும் குடிகள் துன்ப மடைய, அம்மன்னன் இல்லாத காலமுணர்ந்து நிலமெல்லாம் கெடும்படி புதுவதாக வந்து புகுந்த குறுநில மன்னரைப் போல" கொழுநனைப்பிரிந்த மகளிர் துன்பமுறவும், கொழுந ரைப் புணர்ந்திருக்கின்ற மகளிர் தருக்கி மகிழ்ந்து இன்ப முறவும், * கோவலர், முல்லைப் பண்ணை வேய்ங் குழலிலே ஊதவும், வண்டுகள், பெண்கள் † குழலிலே வளர்கின்ற முல்லை மலரிலே வாய்வைத்தூதவும், அரும்புகளினிடத்துப் பொருந்தியிருக்கும் நறுமணத்தைச் ‡ சுரும்புகள் உண்ணுத படி தென்றல் காற்றுகிய சிறுவன் அவைகளையோட்டி § மறு கெல்லாந் தூற்றவும், வளையிணையுடைய மகளிர்கள் விளக்கு களை ஏந்தியெடுக்கவும், அமழூதூரின்கண்ணே ¶ மாலையென் னும் குறுநில மன்னன் வந்து தங்கினன். பின்னர் சிறிது பொழுதிற் கெல்லாம், பருவத்தால் இளையோன் ஆயினும் பகைவரை யடக்கியாள வல்லவனும், போர்செய்யுந் தொழி லிற் சிறந்தவனும், கருணையை யுடையவனும், வலியிலும்

---

* கோவலர் – இடையர்.

† குழல் – தலைமயிர்.

‡ சுரும்புகள் – வண்டுகள்.

§ மறுகு – வீதி.

¶ மாலை – மாலைக்காலம்.

ஆண்மையினும் ஒப்புயர்வற்று விளங்குபவனும், மறு இல்லாதவனும் ஆகிய பாண்டியர் குலத்தில் முதலில் தோன்றுவதனால், அம்மாலைப் பொழுதில் செவ்வானத்தின்கண் வெண்பிறைதோன்றி, இன்னலைத்தரும் மாலையாகிய குறுநில மன்னனை யழித்து ஓட்டித் தன் அரசியலினின்றும் தவறாது, வெள்ளிய பால்போன்ற ஒள்ளிய கதிர்களாகிய சீர்த்தியினைத் திசையளவு செல்லுமாறு பரப்பி நாட்டை வாட்டங்கெட ஆள எழுந்தனன். வெண்மையினையுடைய விளக்கங்கள் எங்கும் விளங்கின. அவ்விளக்கத்தின்கண் மனையில் வளர்கின்ற மல்லிகை முல்லையுடன் பல்வகைப் பூக்களும் மல்கியிருக்கும் பள்ளியிடத்தில், கோவலனும் மாதவியும் ஆவலுடன்சென்று அழகாக வீற்றிருந்த பின்னர், *நிலவினது பயனைக் கொள்ளுதற் கிடமாகிய நிலாமுற்றத்தின்கண் மாதவி தன் அல்குல் தடத்தின் துகில்மேல் சூழ்ந்த பவளக் கோவையாகிய மேகலை ஒலிக்கா நிற்கத், தன் காதலனுக்கு ஒருகால் கலவியையும் மறுகால் †புலவியையும் மாறிமாறி யளித்து, அன்பு மிகுந்த நெஞ்சத்தோடு எதிரேற்று இரண்டுடல் ஓருடலாய் முயங்கிப் பின்பு அம்முயக்கத்தால் குலைந்திருந்த ஒப்பனையைப் பின்னும் விருப்பம் விளைக்குங் கோலமாகத் திருத்திக்கொண்டனள். அன்றியும், யவனதேசத்துக் ‡கண்டு சர்க்கரையுடன் கீழ்த் திசையிடத்துக் காரகில்கட்டை முதலியவற்றால் புகைக்கும் புகையினைவிட்டு, வடக்கேயுள்ள இயமலையிடத்துப் பிறந்த சிலையில் தென்திசையுள்ள பொதியமலையிற் பிறந்த சந்தனக் கட்டையால் அரைத்த சந்தனமும், தாமரையின் இளங்

---

* நிலவினது பயனைக் கொள்ளுதலாவது புணர்ச்சியின் மகிழ்தல்.

† புலவி — புணர்ச்சியில்வரும் சிறுபிணக்கு, அதாவது ஊடல்.

‡ கண்டு சர்க்கரை — வாசனைப் பொருளோடு புகைக்கும் பொருள்.

தளிரினையும் அதன் மலரினையும் கண்டார்க்கு விருப்பத்தைத் தருகின்ற குவளை மலரினையும் கழுநீர் மலரினையும் பச்சிலையோடு கலந்துகட்டிய படலைமாலையும் முத்துவடமும் சுந்தரச் சுண்ணத்தோடு சிந்திக் கலந்துகிடந்த பூஞ்சேக்கையின்கண் புணர்ந்த உபகரணப் புணர்ச்சியின் இறுதியில், மந்தமாருதத்தால் மயக்கந்தீர்ந்து தன் காதன் மிகுதியால் மயங்கினவளாய்த் தனது ஆவிபோன்ற கொழுநர் மார்பிடத்தே காவிபோன்ற கண்களைப் பொருந்த வைத்து இன்பத் துயில் கொண்டனள்.

கற்புக் கரசியாகிய கண்ணகியோ, சிலம்புகள் அவள் சிற்றடியில் தம்மை யணியும் சிறப்பைப் பெறாது ஒழியவும், மேகலை, அல்குலி னிடத்தில் தன்னை யணியும் சிறப்பைப் பெறாது ஒழியவும், சந்திரனையொத்த முகம் தன்னை யணியும் சிறப்பைப்பெறாது சிறுவியர்ப் பிரியவும், கயல்போன்ற சிவந்த கண்கள் தம்மை யணியும் சிறப்பை அஞ்சனம் பெறாது மறக்கவும், வளைந்த நெற்றி தன்னையணியும் சிறப்பைப் பெறாது திலகம் இழக்கவும், தன்னைக் கூடுவதனால் பெறுகின்ற முத்துப் போன்ற வெள்ளிய மகிழ்ச்சி நகையினைக் கோவலன் பெறாது இழக்கவும், மேகம்போன்ற இருண்டகூந்தல் தன்னை யணிந்தால் பெறும் மணதனை புனுகு நெய் முதலிய பொருள்கள் பெறாது மறக்கவும், முலைத்தடத்தில் குங்குமம் எழுதாளாய் * மங்கல அணியே அன்றிப் பிறிதொரு அணியை யணியாளாய் வளைவாகிய தோடு முதலியவைகளைப் பூணாது வடிந்து தாழ்ந்த காதினை யுடையவளாய்ச் செயலற்ற மனமுடையவளாய் வருந்தியிருந்தனள்.

---

* மங்கல அணி - திருமாங்கிலியம், அதாவது தாலி.

இக்கண்ணகி யன்றியும், கணவனைப் பிரிந்த மாதர்கள் துன்பமடைவதனால், ஊதுகின்ற கொல்லனது உலைத்துருத்தியின் மூக்குப்போல நெருப்பெழப் பெருமூச்சு விட்டவர்களாய்த், தம் செருக்கடங்கி வேனிற் பருவத்திற் குரியதான நிலாமுற்றத்தினை யடையாது ஒழிந்து கூதிர்ப் பருவத்திற் குரிய இடைநிலத்து ஒடுங்கி ஆங்குத் தென்றலும் நிலவும் புகாமல் சாளரங்களை யடைத்துக்கொண்டு, * மலையமலையின் நலம்பெறு சந்தனமும் அழகிய முத்தும் பரந்த முலைத்தடத்தின்கண் அடையப் பெறாது வருந்த, பூம்பள்ளியி னிடத்துப் பொருந்தாது துன்பமடைய "சேவலொடு புணர்ந்த அன்னப்பேடு அப்புணர்ச்சியால் உருகி யுதிர்த்த வயிற்றின் மயிரைப் பரப்பிய பலவகைப் பள்ளியின்மீது தம் கொழுநரது மார்பிடத்தே தூங்குகின்ற இன்பத் துயிலைப் பெறாது முன்பு தம் கணவரோடு கூடிப் பிணங்கிய காலத்து இடைநின்ற † குமிழை யெறிந்து கடைநின்ற ‡ குண்டலத்தைத் துறந்து பெருமையும் வலிமையுமுடைய கணவரது கலங்கா மனம் கலங்கி நிலைதடுமாற தம் கடைக்கண் சிவந்து குறுக்கிட்டுப் பிறழும் நெடிய கண்ணின்கண் முன்போல் துன்பக் கண்ணீரைச் சொரிய இருந்தனர்.

அன்னமாகிய மென்னடையினையும் மணமும் தேனும் மருவிய தாமரையாகிய வாயினையும் கருமணலாகிய கூந்தலினையுமுடைய பொய்கை என்னும் பெண்ணானவள், வண்டுகளாகிய பாடகர்கள் பாலைப்பண் ஐந்தனுள் புறநீர்மை என்னும் திறத்தால் பள்ளியெழுச்சி பாட, அழகு பொருந்திய

---

* மலையமலை - பொதியமலை.

† குமிழ், மூக்கிற்கு உவமை. அதாவது மூக்களவும், காதளவும், நீண்ட கண்கள் என்றபடி.

‡ குண்டலம் - காதில் அணிவது.

குவளையாகிய கண்கள் விழிப்ப, புள்ளொலியாகிய முரசத்தோடு புள்ளிகள் பொருந்திய கோழியும் முட்கள் பொருந்திய சங்கும் ஒலிக்க, கடல்போன்ற ஊரைத் துயில் எழுப்பி (பிரிந்தார்க்கும் புணர்ந்தார்க்கும் தூங்காமை காமனால் வருதலால் துயில் எழுப்பி என்றபடி) இருளானது விட்டுநீங்கும் விடியற்காலம் அளவும், அரை யிருளிலும் ஓர் யாமத்திலும் அரை யாமத்திலும் ஒரு கணப்பொழுதிலும் தூங்கானாய், மலர் அம்புகளோடு கரும்பு வில்லையேந்தி மீனக்கொடியையுடைய மன்மதன் திரிந்துவருவதால், நகரம் காவலில் மிகவும் சிறந்து விளங்கியது.

5. *இந்திரவிழா.

கடலாகிய ஆடையையும், இமயம் பொதியமாகிய தனங்களையும், ஆறாகிய முத்துவடத்தையும், மாரியாகிய கூந்தலையும் உடைய மண்மகள், தன் கொழுநனது பிரிவாற்றாமையினால் பசந்து நடுங்கி இருளாகிய போர்வையால் மூடப்பட்டுத் துன்புற்றுக்கொண் டிருக்குங்காலத்து, அவ்விருளாகிய போர்வையினைத் தன் கதிர்களாகிய கைகளால் நீக்கி, உதய மால்வரையின் உச்சியில் சூரியன் தோன்றினன்.

இங்ஙனம் சூரியன் உதிக்க, நிலாமுற்றமும் அணிகலம் வைக்கப்பட்ட பண்ட சாலையும், மானின் கண்கள் போல் கோணமாகச் செய்யப்பட்ட சாளரங்கள் வைத்த மாளிகையிடங்களும், புகார்முகப் பக்கங்களில் தம்மைக் காண்போர் கண்களின் பார்வையை மேற்போகாமல் தடுக்கும் சோனகர் இருப்பிடங்களும், மரக்கலங்களால் தரப்பட்ட செல்வத்தின் பொருட்டுத் தாம் பிறந்த இடத்தை விட்டுவந்த கடலோட்டிகள் பலரும் ஒரு நாட்டாரைப் போலக்கலந்து நெருங்கியிருக்கும் இடங்களும், "தொய்யிற் குழம்பு முதலியனவும் பூசுஞ் சுண்ணமும் நறுமணமும் உள்ள சாந்துக் கூட்டும், விடுபூ 'தொடைப்பூ காட்டுப்பூ' என்னும் மூவகைப் பூக்களும், வாசனைப் புகையும் கலந்த மணமும்" ஆகிய இவைகளை விற்றுத் திரிகின்றவர்களது வீதியும், பட்டுநூலாலும் எலிமயிராலும் பருத்தி நூலாலும் நுண்ணிய தொழில்களை ஊசியால் கட்டுகின்ற அச்சுக்கட்டிகளென்னும் பட்டுச்சாலியர்கள் வாழும் இடங்களும், சந்தனமும் அகிலும் பட்டும் பவளமும்

* இந்திரவிழா - இந்திரனுக்குத் திருவிழா எடுத்தல்.

முத்தும் மற்ற மணிவகைகளும் பொன்னுமாகிய இவற்றைப் பொன்னினாற் செய்த அணிகளோடு கணக்கிடுவோர் கரை காணாத வளம்பொருந்திய மறுகும், பலவாகப் பிரிக்கப்பட்ட முதிரை முதலிய பண்டத்தோடு நெல் புல் வரகு தினை சாமை இறுங்கு தோரை இராகி எனப்பட்ட எண்வகைத் தானியங்களையும் குவித்துவைத்து விற்கும் கடை வீதியும், பிட்டுவாணிகரும் அப்பவாணிகரும் கள்ளை விற்கும் வலைச்சிய ரும் மீனை விற்கும் பரதவரும் வெள்ளுப்பை விற்கும் உமண ரும் வெற்றிலை இடுவாரும் பஞ்சவாசங்களை விற்பாரும் ஆட் டிறைச்சி விற்பாரும் ஆகிய இவர்கள் நெருங்கிய இருப்பிடங் களும், வெண்கலக் கன்னாரும் செப்புக் கொட்டிகளும் மரம் வெட்டுந் தச்சரும் வலிய கையினையுடைய கொல்லரும் பார்க் கின்றவர்களது கண்களினிடத்தே தமது நுண்ணிய தொழிலை நிறுத்தவல்ல சித்திரக்காரர்களும் சுதையாற் செய்யுந் தொழி லில் தேர்ந்த சிற்பாசாரிகளும் பொன்செய் தட்டாரும் இரத் தினத் தட்டாரும் தையற்காரரும் உறைக்காரரும் சீரை * கிடை என்பவைகளால் படம் புட்பம் வாடாமாலை பொய்க் கொண்டை முதலிய தொழில்களைத் தம் கைவன்மையால் நன்மையாகச் செய்து காட்டும் கைத்தொழிலை யுடையவர் களும் † துளைக் கருவியாலும் ‡ நரம்புக் கருவியாலும் குரல் முதலாயுள்ள எழிசையினையும் "ச, ரி, க, ம, ப, த, நி" என் னும் ஏழெழுத்துக்களையும் குற்றமில்லாமல் இசைத்துக் காட் டும் குழலர் பாணர் முதலிய இசைக்காரரும் ஆகிய இவர்கள் வாழ்கின்ற இடங்களும், ஒழுக்கத்தில் சிறியாராய்ச் சிறு தொழிலைப் பிறர்க்குச்செய்து அதனால்வரும் பொருளை யுண் ணும் தொழிலாளரது இடங்களும் பொருந்தி யிருக்கும்

---

* கிடை – நெட்டி. ‡ நரம்புக்கருவி – யாழ்.

† துளைக்கருவி – வேய்ங்குழல்.

§ மருவூர்ப்பாக்கம் என்னும் இடத்துள், முற்கூறிய யவனர் முதல் பரணர் ஈறாகவுள்ள அனைவரும் ஒத்து விளங்கினர். மற்றும், அரசப் பெருந் தெருவும், தேரோடுந் தெருவும், கடைத் தெருவும், பெருங்குடியிற் பிறந்த வணிக மக்களது மாடமாளிகை நிறைந்துள்ள தெருவும், மறையோர் வீதியும், காணியாளரும் உழவரும் மருத்துவ நூலில் வல்லவரும் சோதிட நூல் வல்லவரும் ஆகிய இவர்கள் வாழும் வீதியும், அழகிய முத்துக் கோப்பாரும் சங்கை யறுப்பாரும் வாழ்கின்ற அகன்ற வீதியும், நின்றேத்துவார் இருந்தேத்துவார் வைதாளி யாடுவார் அரசனுக்குச் சென்ற நாழிகைக்குக் கவி சொல்லும் நாழிகைக் கணக்கர் கொண்ட கோலத்தாலும் கூத்தாலும் நலத்தைப் பெறுகின்ற சாந்திக் கூத்தர் களத் தாடுங் கூத்தியர் அகக் கூத்தாடும் பதியிலார் அன்றைப் பொழுதிற்குரிய பரிசத்தைப் பெறும் பூவிலை மடந்தையர் ஏவலைச் செய்யும் சிலதியர் தோற்கருவி யிசைப்பார் விழாக் காலங்களில் பலவிதமாகக் கொட்டுவார் கழைக்கூத்தர் ஆகிய இவர்கள் தம் தம் இனந்தெரிய வாழ்கின்ற இடமும், மிகுந்த வேகமுடைய குதிரையைச் செலுத்தும் அசுவ வாதியர் யானைப்பாகர் தேர்ப்பாகர் காலாட்படைத் தலைவர் ஆகிய இவர்கள் அரசனது கோவிலைச் சுற்றியிருக்கும் இடமும் ஆகிய இவைகள் பெருமையும், பெரியோர்களும் பொருந்தி யிருக்கின்ற பாடல்பெற்ற * பட்டினப்பாக்கம் என்னுமிடத்தில் நெருங்கியிருந்தன.

இம்மருவூர்ப்பாக்கம் பட்டினப்பாக்கம் என்று இரண்டாகப் பகுக்கப்பட்ட ஊர்க்கு நடுவில் உள்ள நிலமானது, இரு பெருவேந்தர் தம்முள் மாறுபட்டுப் போரைக் கருதி

§ காவிரிப்பூம்பட்டினத்துப் புறநகர்.

* காவிரிப்பூம்பட்டினம் உள்நகர்.

வந்து தங்கியிருந்த பாசறை யிடங்கட்கு இடையில் உள்ள போர்க்களத்தைப் போன்றிருந்தது. அதற்கு 'நாளங்காடி' என்று பெயர். அது எத்தன்மையதென்றால், வரிசை வரிசையாக நெருங்கி யிருக்கின்ற சோலையின் மரங்களை தூணாக வைத்துக் கட்டப்பட்ட கடைகளையும், கொடுப்போர் கொள்வோரது இடையறாத ஓசையையும் உடையது. அந்நாளங்காடியிடத்தில் ஒருபூதத்தின் பீடிகையொன்று அமைந்திருந்தது. அப்பூதம் எது என்றால் "வெற்றி வேலினையுடைய முசுகுந்த மன்னனது துன்பத்தைப் போக்குவாயாக" எனத் தேவேந்திரன் கட்டளையிட, அக்கட்டளையினைச் சிரமேற்கொண்டு தேவர் உலகிலிருந்தும் வந்தது. அது அந்நாள்முதல் அங்குப் பலிகொண்டு காத்துவருகின்றது. இவ்வாறு அப்பூதம் அமர்ந்திருக்கும் நாளங்காடிப் பீடிகையினிடத்து, சித்திரை மாதத்துச் சித்திரை நட்சத்திரத்தில் நிறைமதி சேர்ந்ததாகத் திருவிழாக் கொண்டாடினர். அந்நாளில் எல்லாரும் காதலிக்கப்படும் மாதர் கோலத்தினையுடைய மறக்குடிப் பெண்டிர்கள், அப்பீடிகையினிடத்துப் புழுக்கலையும் எள்ளுருண்டையையும் நிணச் சோற்றினையும் பூவினையும் புகையினையும் கள்ளினையும் பொங்கற் சோற்றினையும் சொரிந்து," எம் மன்னனுடைய நாடுமுழுவதும் பசியும் பிணியும் பகையும் நீங்கி, மழையும் வளமும் சுரக்கக் கடவதாக" என வாழ்த்தி, இருகையினையும் முடக்கி ஒற்றியாடும் துணங்கைக் கூத்தும், கைகோத்தாடும் குரவைக் கூத்தும் ஆடிப் பெயர்ந்தனர்.

மருவூர்ப்பாக்கத்தின் மறங்கொண்ட வீரரும் பட்டினப் பாக்கத்தின் படைகள்கொண்ட வீரரும், அக்காலத்துப் பூதத்துக்கு யாம் யாம் பலியிடுவோம் எனத் தம்முள் முனைந்து சென்றனர்.

இவ்வாறு சென்ற வீரர்கள் கல்லை வீசுங்கவணையுடைய வர்களாய், கேடகத்தோடு வேலை யேந்தினவர்களாய், ஆரவாரஞ்செய்து, "சுடுதலைப்போலுங் கண்களையுடைய தமது கரிய தலையானது வெற்றியினையுடைய கரிகாற் பெருவளவன் சயம்பெறுவானாக எனப் பேசும்படி" அந்தத் தலையை நல்ல பலிப்பீடிகையின்கண்ணே அரிந்துவைத்து, முரசவாத்தியங்கள் ஒலிக்கநின்று, பலியையூட்டினர். இது இவ்வாறாக,

கரிகாலன் என்பான், தமிழ் நாட்டெல்லையுள் மேற்கும் தெற்குந் தன்னோடு எதிர்த்துப் போர்செய்யும் அரசரைப் பெறாது, போரிலே பேராசை யுடையானாய், பெருந்திசையாகிய வடதிசையில் போர்செய்யும் மன்னரைப் பெறலாம் எனக்கருதி, ஆண்டுச் செல்லுதற்கு விரும்பி, வாளையும் குடையையும் நன்னாள் கொண்டு எடுத்து "இத்திசையிலாயினும் என்தோள் பகைவரைப் பெறுவதாக" எனத் தன் வழிபடு கடவுளை மனத்தால் வணங்கி யத்திசையை நோக்கிச் சென்றனன். அங்ஙனம் சென்ற அந்நாளில் இமையவர் வாழும் இமய மலையானது குறுக்கே நின்று பகைவரைப் போலத் தடுக்க மனஞ் சலித்து மீள்கின்றவன், "மேலும் மேலும் செல்லமுயலும் எனது விருப்பம் பின்னடையுமாறு இம்மலை பகையாய் குறுக்கே நின்று என்னை விலக்கிவிட்டதே" என முனிந்து, அதனைப் புறங்காண்பதற்கும், அதற்கு வடபாலுந் தன் ஆணை செல்லுவதற்கும் தான் சாத்தனது அருளால் பெற்ற செண்டாலடித்து அடக்கித், தனது புலிக்கொடியை நிறுத்தித் திரும்புகையில், கடலை அரணாகவுடைய வச்சிர நாட்டு மன்னன் திறைப் பொருளாகக் கொடுத்த முத்தின் பந்தரும், வாட்போரில் வல்லவனாகிய மகதநாட்டு மன்னன் முதலில் போர்செய்து புறங்கொடுத்துப் பின்பணிந்து தந்த பட்டி மண்டபமும், அவந்தி நாட்டு வேந்தன் உவந்தனனாய்த் தந்த அழகிய வாயில் தோரணமும் ஆகிய இவைகள்

பொன்னினாலும் மணியினாலும் செய்யப்பட்டன வாயினும் கம்மியரால் செய்யப்படாதன வாகும்; ஆனால் இவைகள் யாரால் செய்யப்பட்டன என்றால், இவைகளைக் கொடுத்த அரசர்களது முன்னோர், ஒரோர் காலத்திற்செய்த உதவிக் காக மயன் என்னுந் தெய்வத்தச்சனால் செய்துகொடுக்கப் பட்டனவாகும்; இவைகள் ஒன்றோடொன்று சேரக்கூடாத தூரத்திலுள்ள நாட்டிற் குரியவை யாயினும், இவன் ஆணை யால் ஓரிடத்தில் ஒருசேரக் கூட்டப்பட்டனவாகிய மண் டபத்தும்; இலக்கங்களும் பெயரும் எழுதப்பட்ட பல பொதிகளையுடைய பண்ட சாலை வாயிலும் வலிமையுள்ள தாழாகிய காவலும் காப்போரது காவலும் நீங்கினதாகி, இந்நாட்டிலுள்ளார் தம் பெருஞ் செல்வத்தால் களவினைச் செய்யாராகலின், இவ்வரசன் 'திறமுணராது அந்நிய நாட்டி னின்றும் களவு செய்ய வருவாராயின் அவர்கள் திருடிய பொருளை அவர்கள் கழுத்து வலிக்கத் தலைமீதேற்றி ஊரைச் சுற்றிவைக்குமே யல்லாது கொண்டு போகுமாறு செய்யா தாதலால், களவினைக் கனவில் நினைத்தாலும் நடுங்கவைக்கும் வலிமையமைந்த வெள்ளிடை மன்றமும்; கூனர், குறளர், ஊமர், செவிடர், தொழுநோயால் அழுகும் மெய்யினை யுடை யார் ஆகிய இவர்கள் சென்று முழுகின பொழுதே நல்ல மேனியை அடைவாராகலின் அனைவரும்வந்து வலஞ்செய்து தொழுது நீராடிநீங்கும் பொய்கையையுடைய இலஞ்சி மன்ற மும்; வஞ்சனையாய் சிலர் மருந்தூட்ட உண்டு மயக்கமாகிய பித்தேறினவரும், நஞ்சையுண்டு நடுக்கங்கொண்டு இடுக்கண் பெற்றவரும், விடம்பொருந்திய பாம்பால் கடியுண்டோரும், பேயால் பீடிக்கப் பட்டாரும் ஆகிய இவர்கள் ஒருமுறை சுற்றி வந்தாலும் அத்துன்பம் நீங்குதற்குக் காரணமாகிய ஒளிகொண்ட நெடிய கல்நிற்கும் மன்றமும்; தம்மைப் பிறர்

நம்பும் பொருட்டுத் தவவேடங் கொண்டு, அத்தவத்திற்கு இழுக்கானவற்றைக்கொண்டு ஒழுகும் பொய் வேடத்தாரும், தம்மைக் கற்புடையாளெனக் கணவன் நம்புமாறு நடித்துப் பொய்யொழுக்கத்தில் மறைந்து நின்று தம் மனஞ் சென்றவாறு ஒழுகும் பெண்டிரும், தம் அரசனைக் கீழ்மையாக எண்ணும் அமைச்சரும், தம் மனையாளைத் தனியே விட்டுப் பிறர் மனையாளை விரும்பிச் செல்லுந் துச்சாரிகளும், தந் நெஞ்சறிந்ததை மறைத்துப் பொய்ச் சான்று கூறுகின்றவரும், கண்டபோது புகழ்ந்து அவர் மறைந்தபோது பழி தூற்றுவோரும் ஆகிய இவர்கள், "என் கையிற் கொண்ட பாசத்தில் அகபப்டக் கடவர்" என, அவ்வூர் நாற்காவத எல்லையும் எட்டும்படித் தன் வலிய குரலால் கூறிப் பின் அவ்வழி யொழுகுவாரைத் தன்பாசங் கட்டிவர, அவரை நிலத்தில் தேய்த்துக் கொன்று உண்ணுகின்ற பூதம் நிற்கின்ற பூத சதுக்கமும்; அரசர்களது செங்கோலானது சிறிது வழுவினும் அறவழியிலிருந்து வழக்குத் தீர்க்கும் பெரியோர்கள் நடுநிலைமை தவறி ஒரு சார்புபற்றிக் கூறினும், இத்தை நாவாற் கூறாது கண்ணால் அழுது நின்று கூறுகின்ற பாவை மன்றமும் ஆகிய இவ்வகை மன்றங்களிலும் பலியை யிட்டனர்.

இவ்வாறாக பலியை யிட்டு, வச்சிரக் கோட்டத்துள்ள மணமுரசை கச்சையினை யணிந்த யானையினது பிடரியின் மேல் ஏற்றி, வெண்மையான ஐராவதம் நிற்குங் கோயிலுள் சென்று விழாவின் முதலையும் முடிவையுஞ் சாற்றி, இந்திரன் தங்கிய செருக்கினையுடைய கற்பகம் நிற்கும் கோவிலின் முன்னர் சென்று * அட்ட மங்கலத்தோடு அதனுள் இருக்கும் ஐராவதக் கொடியை விண்ணுலகளாவ எடுத்துத் தூக்கினர்.

* அட்டமங்கலமாவன :—சாமரம், நிறைகுடம், கண்ணாடி, தோட்டி, முரசு, விளக்கு, கொடி, இணைக்கயல் என்பன.

தூக்கிய கொடியை, மரகதத்தோடு வயிரம் இழைத்த பவளத்தாலாகிய திரண்ட கால்கள் நிறுத்திய பசிய பொன்னாலாகிய திண்ணைகளையுடைய மாளிகையின் வாயில் இடங்கள்தோறும் கொம்பினையும் முத்து மாலையினையும் அட்ட மங்கலங்களையும் நிலைபெறச் செய்த வாசிகை வடிவாகச் செய்யப்பட்ட மகர தோரணங்கள் பொருந்திய வீதியின்கண், பொன்னாலாகிய பூரண கும்பத்தையும், முளைப்பாலிகையையும் பாவைகளால் தாங்கப்பெற்ற விளக்கினையும் பொன்னாலாகிய கொடியையும் கவரியையும் சுண்ணப் பொடியையும் பொருந்தும்படி செய்து பலியிட்ட அப்பொழுதே † ஐந்து கூட்டத்தாரும் ‡ எண் பேராயம் என்னும் எண்வகைக் கூட்டத்தாரும் அரசகுமாரரும் வணிக குமாரரும் குதிரையின் மீதும் யானையின் மீதும் தேரின் மீதும் ஏறி யொன்றுபடத் திரண்டு, காவிரியினது சங்கமத் துறையினிடத்துள்ள நறுமண நீரைப் பொற்குடத்தில் கொண்டு வந்து மண்ணுலகம் விண்ணுலகமாய் மயங்கவும், விண்ணுலகத்தார் "நமது துறக்கத்தினும் இது சிறப்புடையது" என அதிசயிக்கவும், "எம்மன்னனாகிய கரிகாற் பெருவளவன் வெற்றி பெறுவானாக" என வாழ்த்தி, விண்ணவர் தலைவனாகிய இந்திரனைத் திருமஞ்சன நீர் ஆட்டினர்.

பின்பு, மற்றைத் தேவர்கள்போலப் பிறவாத் திருமேனியையுடைய இறையோன் கோவிலும், ஆறு முகங்களையும் சிவந்த நிறத்தினையும் உடைய முருகவேள் கோவிலும், வளை

---

† ஐந்து கூட்டத்தார் :—அமைச்சர், புரோகிதர், சேனாபதியர், தூதுவர், சாரணர் இவர்கட்கு 'ஐம்பெருங்குழு' எனவும் பெயர். இவர்கள் இந்திய சட்ட சபையில் இருப்பவர்களைப் போன்றவர்.

‡ எண்பேராயம் :—கரணத்தியலவர், கரும விதிகள், கனகச் சுற்றம், கடைகாப்பாளர், நகரமாந்தர், நளிபடைத்தலைவர், யானை வீரர், குதிரைவீரர் இவர்கள் சென்னை சட்ட சபையில் இருப்பவர்களைப் போன்றவர்கள்.

போன்ற வெள்ளை நிறத்தையுடைய பல தேவர் கோவிலும், நீலமணி போன்ற நிறத்தினையுடைய திருமால் கோவிலும், முத்துமாலையணிந்த வெண்கொற்றக் குடையினையுடைய வாசவன் கோவிலும் ஆகிய இக் கோவில்களில் வேதங்களின் முறைப்படி ஒருபால் ஓமங்கள் நடந்தன.

பசுக்கள் எண்மரும் திவாகரர் பன்னிருவரும் உருத்திரர் பதினொருவரும் மருத்துவர் இருவரும் ஆகிய நால்வகைத் தேவர்களும், ஆகாசர் நாகர் சித்தர் காந்தருவர் விஞ்சையர் பூசகர் தாரகை போக பூமியர் கிம்புருடர் சுரர் அசுரர் பூதம் முனி தேவர் கருடர் இராக்கதர் இயக்கர் சாரணர் என்னும் பதினெண் வகைப்பட்ட கணங்களும் என வகுத்து வைக்கப் பட்ட வேறு வேறான கடவுளரது விழவுகள் ஒரு பக்கம் சிறந்தன.

அருகர் பள்ளியும், புத்தர் பள்ளியும், அறம் போதிக்கும் இடமும், சீகோவிலும், புண்ணியத்தானமும் ஆகிய இவைகளில் எல்லாம் புராணம் படித்தலும் தர்மச் செய்கையுமாகச் சிறந்தது. பகைவரான மன்னருடைய கால் விலங்கை நீக்க வேந்தனது அருளானது ஒரு பக்கம் சிறந்தது. குழலும் யாழும் தோலும் கண்டமும் ஆகிய இவற்றால் இசைக்கவல்ல இசையாளர்களாலும் அறிவதற்கு அருமையான இசைகள் பிறிதொருபக்கம் சிறந்தன. இவ்விதம் பலவிதமாகக் கங்குலும் பகலும் ஓயாது நடந்தமையினால் முழவினது ஒலியடங்காது குறுந் தெருக்களும் நெடுந் தேர் வீதிகளும் விழாவால் களிப்பை யடைந்தன.

இவ்விதம் இன்பமிக்க அகன்ற ஊரினிடத்து அழகிய மாதவியோடு, முல்லை மல்லிகை இருவாட்சி குவளை செங்கழுநீர் முதலிய பூக்கள் நிறைந்த மாலையாலே பொலிவு பெற்று, காமத்தாற் களித்து மகிழ்ச்சி யெய்தி, நறுமணம் பொருந்திய

பொழிலினிடத்துப் புணர்ச்சியை விரும்பி, நாளங்காடியிடத்தில் பூக்கள் விற்கும் இடங்களிலுள்ள புதிய மணத்தினுள் புகுந்து, அகிற்புகையையும் சாந்தையும் அழகு வாய்ப்பச் சிறக்கப் பூசி, நகைத்து விளையாடும் மகளிர் கூட்டத்தாருடனே காமக்குறிப்பாகிய மகிழ்ச்சி மொழிகளை இடைவிடாது பேசி, காமுகரோடும் பாணரோடும் திரிகின்ற கோவலனைப் போல,

இசையினைப் பாடும் வண்டினோடும் இளவேனிலோடும் மந்தமாருதமானது வந்து மறுகினிடத்து மெல்ல உலாவிக் கொண்டிருந்தது. இம்மாதிரியான மறுகினிடத்து, "சந்திரன் அரவாகிய பகைக்கு அஞ்சி ஆண்டுத் திரியாது மேகத்தைச் சுமந்து களங்கமாகிய முயலினை யொழித்து இரு பக்கங்களிலும் இரண்டு மீனையும் இடையே ஒரு குமிழ மலரையுங் கொண்டு 'வேற்றுருவங்கொண்டு நடித்த பாண்டவர்போல,' உள்வரிக் கோலங்கொண்டு இங்கு திரிகின்றனனோ! மன்மதன், இறைவன் விழியால் எரிந்த தனது உடலைப் பெறுதற்கு சந்திரனது அமிர்தகலையின் நுவலையை உண்டுவளர்ந்த மின்னற்கொடியானது இங்கு வருதலும் உண்டோ? இவ்வளம்பொருந்திய நகரத்தின்கண், கரிகாற்பெருவளவனுக்குத் தன் அளவிறந்த வளத்தைக் காட்டுதற்குத் திருமகள் புகுந்தாள் என்று இலவமலரையும் முல்லைநம்பையும் இரண்டு கருங் குவளையையும் குமிழ மலரையும் பூத்து வேற்றுருக் கொண்டு தனது துணையைத் தேடித் தாமரையானது திரிதலும் உண்டோ! பல்லுயிர்களையும் கொன்று ஒருவாயாற் பருகும் அங்காந்த வாயினையுடைய கூற்று "தான் ஆணுருவோடு திரிந்து பல்லுயிர்களையும் கொன்றால் அரசனது ஆணையை மறுத்ததாகும்" என்று அஞ்சி, மறைந்து நின்று உயிரைப் பருக விரும்பித் தன்வடிவத்தை மறைத்து ஒளி பொருந்திய முகத்தையும் யாழிசை போன்ற மொழியினையும்

பெண் வடிவத்தையும் கொண்டு இவ்வீதியின்கண் திரியுந் தன்மை யுண்டாயிற்றே!"

என, ஊடலால் கூடாத பொது மகளிரைப் புகழ்ந்து கூறிப் புலவியைத் தீர்த்துப் புணர்ந்து, அம்மகளிரின் மார்பின் மீதுள்ள தொய்யில் முதலிய குறிகள் தமது மார்பிலே தோன்றத் தம் மனையிற் புகுந்தனர். இவ்வாறு புகுந்த கணவரோடு பிணக்கங்கொள்ளாது வழிபாட்டோடு புணர்ந்த அருந்ததி போலும் கற்புடைய மகளிர், பின் ஊடல்கொள்ள அதனைக் கண்ட ஆடவர், "சல்லியகரணி சமனியகரணி சந்தானகரணி மிருதசஞ்சீவினி என்னும் மருந்தினைத் தரும் இந்நிலம் இவ்வூடல் தீர்க்கும் மருந்து ஒன்றைத் தர வல்லதோ" என்று கூறிச் செயலற்று நடுங்கினர். இவ்வாறு நடுக்கங்கொண்ட விழாவின் நடுநாளில் தீர்த்த தினத்தின் முந்தின தினத்தில், தேனைப் பிலிற்றுதலால் நின்று நடுங்கும் கழுநீரைப்போல் கணவனைப் பொருந்தப் பெறாத கண்ணகியின் கருங்கண்ணும், கோவலனைக் கூடிக்களிக்கின்ற மாதவியினுடைய செங்கண்ணும், காதலை மறைத்து அழுகைக் கண்ணீரையும் உவகைக் கண்ணீரையுஞ் சொரிந்தன. பின்னும் அக்கண்கள் கண்ணகிக்குக் கணவனது கூட்டத்தையும் மாதவிக்குக் காதலனது பிரிவையும் உணர்த்த இடமும் வலமும் துடித்தன.

6. கடலாடுதலும் கோவலன் பிரிவும்

ஒள்ளிய வெள்ளிமலையினிடத்துள்ள அகன்று உயர்ந்த ஆலமரத்தினிடத்து, தேன் ஒழுகுகின்ற பூக்களை யுடைய தோர் சோலையின்பால், கரிய கயல் போன்ற கண்களையுடைய தன் மனையாளோடு காமக் கடவுளுக்கு ஆண்டு தோறும் விழாவினை விரும்பிச் செய்யும் விச்சாதர வீரன் ஒருவன், "தென் திசையிலுள்ள ஒரு நகரில் இந்திரன் திருவிழாவிற்கு நன்னாள் கொண்டு கொடி யெடுக்கும் நாள் இந்நாள்தான்" என்று தன் மனைவிக்குக்கூறி * "முசுகுந்தச் சக்கரவர்த்தி யின் துன்பத்தைப் போக்கிய பூதமானது இந்திரனது ஏவலால் அந்நகரில் இருந்து அவ்வூரார் இடும் பலியை யுண்ணும் இடத்தையும் யாம் காணலாம்! முன் அசுரர்களால் வந்த இடர் நீங்க அமராவதியைக் காத்த கரிகாற் பெருவளவனது முன்னோர், அப்போரினால் பெற்றுத் தந்த § ஐவகைப்பட்ட மன்றங்களையும் காணலாம்! நாரத முனிவனால் சாபம் பெற்று பூமியிற் பிறந்த ஊர்வசியின் வழிப்பிறந்தவளாகிய மாதவி யினது ஆடலையும் பாடலையும் காணலாம்! பவளம் போலும் சிவந்த வாயினையும் உடுக்கை போலும் இடையினையும் உடைய வளே! நாமும் அமரர் தலைவனும் இந்திரனை வணங்கலாம்!" என்று கூறித் தன் மனைவியோடு புறப்பட்டனன்.

இவ்வாறு புறப்பட்டவன் கொடுமுடியினையுடைய இமய மலையினையும், வளவிய நீரினையுடைய கங்கை நதியினையும் அவந்தி நாட்டினையும் விந்த மலையின்கண் உள்ள காட்டினை

---

* இவன் சரித்திரம் முந்தின கதையில் சொல்லப்பட்டது.

§ ஐவகை மன்றம் :- வெள்ளிடை மன்றம், இலஞ்சிமன்றம், கல் மன்றம், பூதசதுக்கம், பாவை மன்றம் இவை முன்பு விரிவாய்க் கூறப்பட்டது.

யும் வேங்கட மலையினையும் நிலந்தாங்க மாட்டாத விளைவினை யுடைய காவிரி நாட்டினையும் தன் மனைவிக்கு முறையே காட்டிச் சென்றனன். அங்கங்கே தங்கித் தங்கிப் பின் சோலை சூழ்ந்த காவிரிப்பூம் பட்டினத்தை யடைந்து, அங்குள்ள வற்றையும் தன் மனைவிக்கு ஒவ்வொன்றாகக் காட்டித் தொழுது தேவர்கோன் மகிழும் விழாவினைக் கண்டனன். இங்ஙனம் காண்பவன் திருமாலைப் பாடும் தேவ பாணியும், * வருணப் பூதரைப் பாடும் நால்வகைத் தேவபாணியும், பல்லுயிர்களை யும் தன் கலையினால் காக்கும் சந்திரனையும் பாடினன்.

பின்பு, பிரமன் முதலிய தேவர்கள் வேண்டவும், வடவையைத் தன் தலையிலே உடைய திருமாலாகிய அம்பு தனது ஏவல் வழி நிற்கவும், திரிபுரம் எரிந்து நீறாக, பைரவியாடிய பைரவி யரங்கமாகிய சுடுகாட்டில், உமையவள் ஒரு பக்க லிருந்து தாளங்களைச் செலுத்த, எல்லாத் தேவரினும் உயர்ந்த இறைவன் கை கொட்டி நின்றாடிய †'கொடுகொட்டி' ஆடலும் நான்கு வேதங்களாகிய குதிரைகளைப் பூட்டி கூர்முள் பிடித்துத் தேர்முன்னின்ற திசைமுகன் காண, அவன் பிரிவால் வருந்தியதைக் கருதிப் பாரதிவடிவாய் வெண்ணீறு அணிந்து இறைவன் நின்றாடிய பெரிய பாண்டரங்கம் என்னும் திருக் கூத்தும், கஞ்சனது வஞ்சத்தால் வந்த யானையினது கொம்பை முறித்ததற்காக அஞ்சனவண்ணன் நின்றாடிய அல்லியத்

---

* வருணப் பூதரைப் பாடும் தேவபாணி :- அந்தணர் வேள்வியோடு அருமறை முற்றுக! வேந்தன் வேள்வியோடு யாண்டுபல வாழ்க! வணிகர் இருநெறி நீள்நிதி தழைக்க! பதினெண் கூலமும் உழவர்க்குமிகுக! அரங்கியற் கூத்தும் நிரம்பி வினை முடிக! வாழ்க நெடுமுடி!

† திரிபுரம் எரிய, அதனைக்கண்டு இரங்காது கைகொட்டி யாடுதலால், அக் கொடுமை நோக்கிக் 'கொடு கொட்டி' எனப் பட்டது.

தொகுதி என்னும் கூத்தும், வாணாசூரனை வெல்லுதற்கு மல்லனாய்ச்சென்று அறைகூவி எதிர்த்து அவனுடலை நெரித்துத் தொலைத்த மல்லாடலும், கரிய கடலின் நடுவில் நின்ற சூரனது வேற்றுருவாகிய வஞ்சனையைக் கடந்த முருகக்கடவுள் அக்கடலின் அலையாகிய அரங்கில் நின்று ஆடிய துடிகொட்டியென்னும் துடிக் கூத்தும், அசுரர்கள் போரிற்கு ஆற்றாது படைக்கலங்களைப் போட்டுவிட்டு வருந்த, முற்கூறிய முருகக் கடவுள் அவ்வசுரர் முன்பு தன்னுடைய குடையைச் சாய்த்து அதுவே ஒருமுக எழினியாகக் கொண்டு ஆடிய குடைக் கூத்தும், காமன் மகனாகிய அநிருத்திரனைத் தன் மகள் உழை காரணமாக வாணாசூரன் சிறைவைக்க, கண்ணன் அவனது சோநகரத்தின் வீதியின்கண் சென்று பஞ்சலோகத்தாலும் மண்ணாலும் இயற்றப்பட்ட குடங்கொண்டு ஆடிய குடக்கூத்தும். விகாரம் வீரியம் நுகருந்தன்மை பத்திமுதலிய ஆண்மைத் தன்மையினின்று வேறுபட்டு, முலை முதலிய உறுப்புகளையுடைய பெண்மைக் கோலத்தோடு தன் மகனை வாணனது சிறையில் இருந்து மீட்க மன்மதன் ஆடிய பேடிக் கூத்தும், பிறரை வருத்தும் அசுரர்கள் துர்க்கையோடு போர் புரிந்து முடியாமல் வஞ்சனையால் வெல்லக்கருதி பாம்பு தேள் முதலிய வடிவங் கொண்டு வர, இக்கடுந் தொழிலைப் பொறாத துர்க்கை அவர் வஞ்சத்தை யுணர்ந்து அவைகளைக் கலக்கிக் கொல்வதற்கு மரக்கால் கொண்டு ஆடிய மரக்கால் கூத்தும், அசுரர்கள் கொண்ட போர்க் கோலம் நீங்கி மோகங் கொள்ளுதற்குக் கொல்லியம் பாவை வடிவமாய் திருமகள் ஆடிய பாவைக் கூத்தும், வாணனது நகரின் வடக்கு வாயிலில் உள்ள வயலில் நின்று இந்திராணி ஆடிய கடையக் கூத்தும் ஆகிய இவைகளை அவரவர் ஆபரணங்களோடும் கொள்கையோடும் தாளத்தோடும் ஆடிப் பாடுவதையும் பெண்ணே! நீ காண்பாயாக.

அன்றியும் அரும்பெறற்காதலி! மதுமலர் பொருந்திய சோலை யின்கண் நின்னோடு இருந்து யான் கூறிய, ஊர்வசியின் மரபில் பிறந்த மாதவி இவள்தான்! நீ காண்பாய்!" என்று தன் மனைவிக்குக் காட்டித் தானும் கண்டு மகிழ்ச்சி யடைந்தனன்.

அந்தரத்துள்ள தேவர்கள், "மானிடர் கண்டால் பொறாமை கொள்வர்" என வேற்றுருவங் கொண்டு வந்து காணத் தகுந்த இந்திர விழாவும், ஆடலும், அவ்வாடலுக் கமைந்த பாடலும் கோலமும் முடிவு பெற்றன. இவ்விதம் முடிவு பெறுதலால் "இனிக் காட்சி யொழிந்ததே" என வெறுப்போடு இருந்த கோவலன் மகிழ, மா கடுக்காய் தான்றி நெல்லி கருங்காலி நாவல் ஆல் அரசு அத்தி இத்தி என்னும் பத்து வகைப்பட்ட துவராலும், கோட்டம் துருசம் தகரம் அகில் ஆரம் என்னும் ஐந்து வகைப்பட்ட வாசனையாலும், இலவங்கம் பச்சிலை கச்சோலம் ஏலம் நாகணம் கோட்டம் நாகம் மதாவரிசி தக்கோலம் நன்னாரி வெண்கோட்டம் கத்தூரி வேரி விலாமிச்சம் கண்டில்வெண்ணை கடுக்காய் நெல்லி தான்றி துத்தம் மரேணுகம் மாஞ்சி சயிலேகம் புனுகு புன்னைத்தாது பூஞ்சாளம் தமாலம் வகுளம் பதுமுகம் நுண்ணேலம் கொடுவேரி புலிநகம் வண்ணக்கச்சு ஆகிய முப்பத்திரண்டு ஓமாலிகையாலும், ஊறிக்காயப்பட்ட நல்ல நீரால் மணங்கமழும் கரிய கூந்தலை நீராட்டி, புகையால் உலர்த்தி, *கொண்டை சுருள் குழல் பனிச்சை முடி என்னும் ஐந்து வகையால் வகுத்துக் கத்தூரிக் குழம்பினை யூட்டியும்; செம்பஞ்சுக் குழம்பை யூட்டிய சிற்றடியிலுள்ள அழகு மிக்க மெல்லிய விரல்களில் நல்ல மகரவாய் மோதிரம் பீலி முதலிய

---

* கொண்டை, பக்கத்தில் முடித்தல்; சுருள், பின்னே செருகுதல்; குழல், சுருட்டி முடித்தல்; பனிச்சை, பின்னி விடுதல்; முடி, உச்சியில் முடித்தல்.

அணிகளை அணிந்தும்; பாதசாலம் சிலம்பு பாடகம் சதங்கை காற்சரி ஆகிய இவைகளைக் கால்களுக்குப் பொருந்த அணிந்தும்; குறங்குசெறி என்னும் அணியினைத் திரண்ட தொடையில் அணிந்தும்; விளங்கிய முத்தக்கோவை யினையும், முப்பத்திரண்டு கோவையுள்ள விரிசிகை யினையும், இழகிய நீலச்சாதர் உடையின்மேல் முறையாக உடுத்தும்; விருப்பத்தைச் செய்கின்ற மாணிக்க வளையோடு, பொற் சங்கிலியால் பிணித்த களங்கமில்லாத முத்தாலாகிய தோள்வளையினைத் தோளுக்கணிந்தும்; முகப்பிற் கட்டிய மாணிக்கத் தோடு, பத்தி பத்தியாக வயிரங்கள் பதித்த சித்திரத் தொழிலினை யுடைய சூடகத்தையும், செம் பொன்னாற் செய்த வளையையும், சரியையும், சங்கவளை வெள்ளிவளையையும், பவள வளையையும் அழகிய மயிரையுடைய முன் கைக்குப் பொருந்த அணிந்தும்; வாளைமீனினது அங்காந்த வாயைப் போன்ற வளைந்த நெளி மோதிரத்தையும், சிவந்த ஒளியினையுடைய மாணிக்க மோதிரத்தையும், வயிரம் இழைத்த மரகதப் பூட்டுள்ள மோதிரத்தையும், காந்தள் மலர் போன்ற கை விரல்களில் அணிந்தும்; வீரச்சங்கிலி, நுண்ணிய சங்கிலி, நாணுகிய சவடி, சரப்பளி முதலாகிய இவற்றை முத்தாரத்தோடு அழகிய கழுத்தினிடத்தில் அணிந்தும்; சங்கிலி முதல் ஆரம் இறுதியாவுள்ள அணிகளுக்கெல்லாம் தலை ஒன்றாய், கோக்குவாய் தொடங்கிக் களங்கமில்லாத பல மணிகளால் தூக்கமாகச் செய்யப்பட்ட பின்றாலியால் பிடரியை மறைத்தும்; இந்திர நீலத்தால் இடையிடை பயில, முகப்பில் கட்டிய வயிரங்களால் அழகு பெற்ற குதம்பையை அழகிய காதின்கண் அணிந்தும்; சீதேவியார் என்னும் திருக் கோலத்தோடு வலம்புரிச் சங்கின் கடையும், பூரப்பாளையும், தென் பல்லி வட பல்லியும் ஆகிய இவை தம்மில் தொடர்ந்து ஒன்றான தலைக்கோலம் என்னும் அணியை கூந்தலுக்கு அழகுபெற அணிந்தும்; கூடலையும் பின்பு ஊடலையும்

அக்கோவலனுக்கு அளித்துப் பெருமையோடு படுக்கை யமைந்த பள்ளியிடத்தே பொருந்தி யிருந்தனள்.

இவ்விதம் இன்புற்றிருந்த மாதவி, கொடியெடுத்த நாள் முதல் இருபத்து எட்டு நாளும் விழா நடந்து பின்னுளில் கொடியிறங்கி விழாவாற்றுப்படுத்திய நாளில் முழுமதி வந்ததாக கடற்கரைக்கண் நீராடுதற்கு விரைந்து செல்லும் மக்களோடு தானும் செல்ல விரும்பி, தாழை புன்னை முதலியவைகள் நிறைந்துள்ள கானலாகிய நெய்தல் நிலத்திலுள்ள இளஞ்சோலையில் கடல் விளையாட்டுள் வெற்றி தோல்வியினைக் காணும் பொருட்டுக் கோவலனை வேண்டினள். அவனும் உடன்பட்டனன். உடனே பொய்கைகளில் உள்ள தாமரைப் பூக்களாகிய படுக்கையில் படுத்திருந்த பறவைகள் நித்திரை தெளிந்து வாய்விட்டுப் புலம்பவும், கோழிகள் கூவி விடியலைத் தெரிவிக்கவும், நெருங்கிய இருளினைச் சந்திரனது வெள்ளிய ஒளி ஓட்டவும், தன் வேண்டுகோளுக்கு உடன்பட்ட மாலையையுடைய கோவலனோடு, அணியவேண்டிய மதாணி முதலிய அணிகளை யணிந்துகொண்டு புறப்பட, மேகம் போன்ற கொடையினையுடைய கோவலன் கோவேறு கழுதையின் மேல் ஏறத் தானும் கொல்லாப் பண்டி யென்னும் விமானத்தின் மேல் ஏறினள்.

இங்ஙனம் ஏறிய இருவரும், கோடி யென்னும் கணக்கின் மேல் பலகோடியை அடுக்கப்பட்ட நிதிக் குவியலையுடைய மாடங்கள் நிறைந்த வீதிகள் பொருந்திய கடைத்தெருவின் கண் புகுந்து மலர் வரிசை போல அழகிய பணிப்பெண்கள் விளக்கையும் மணி விளக்கையும் எடுத்து மலரையும் அறுகையும் நெல்லையும் மங்கலமாகச் சிந்தித் தத்தமது ஆபரணங்கள் ஒன்றோடு ஒன்று தாக்கி யொலிக்க, இரு பக்கங்களிலும் திரிந்து செல்லும் திருமகளுக் கிருப்பிடமாகிய அக் கடைக்

தெருவைக் கழிந்து, கடலினது வளமாகிய முத்து பவளம் சங்கு முதலியவற்றை யடைந்திருத்தலால் உயர்ச்சி பெற்ற நகர வீதியின் நடுவே சென்று, மரக்கலங் காரணமாகப் பல தேயத்தாரும் ஒரு தேயத்தாரைப்போல் கலந்து வாழும் அலைகளையுடைய கடற்கரைக்கண் புகுந்து, அலைகளால் கொழிக்கப்பட்ட வெண்மணற் பரப்பில் பல தானியங்களையும் குவித்து வைத்து "இன்ன சரக்கு இங்கு இருக்கின்றது" எனக் கொடிகளால் காட்டும் சோலைகளின் வழியே சென்று நெய்தலங் கானலை யடைந்தனர். அங்கு தொய்யில் எழுதும் வண்ணமும் சுண்ணமும் சந்தனமும் மலரும் பணிகாரவர்க்கங்களும் ஆகிய இவற்றை விற்பார் வைத்திருக்கும் விளக்குகளும், தொழிலில் வல்ல பணித்தட்டார் பணி செய்யும் இடங்களில் வைத்த விளக்குகளும், பிட்டு வாணிகர் வைத்த விளக்குகளும், அப்ப வாணிகர் குடத்தண்டில் அகலால் வைத்த விளக்குகளும், பல பண்டங்களையும் விற்கும் மிலேச்சப் பெண்கள் வைத்த விளக்குகளும், நிற்கும் நாடு இன்னதென உணராது ஓடும் மரக்கலங்களை யழைக்கும் கலங்கரை விளக்கும், மீன்களைப் பிளக்கும் பரதவர்கள் அதன் திமிலில் வைத்த விளக்குகளும், பாஷைகள் வேறுபட்ட தேயத்திலுள்ளார் மற்றத் துறைகட்குப் போகாமல் கால்நாட்டி அதன்மீது மண்ணையிட்டு எறிக்கும் தீநாறு என்னும் விளக்குகளும், பண்டசாலையைக் காப்போரிட்ட விளக்குகளும், நுண்ணிய தொழில் செய்யும் கம்மியர் வைத்த விளக்குகளும் ஆகிய இவைகள் கணக்கிடுவதற்கு அரியனவாகப் பொருந்தியிருந்தன. இவைகளையெல்லாம் பார்த்த இருவரும் இளஞ்சோலைக்குட் புகுந்த பின்னர், அங்குள்ள விளையாட்டுப் பெண்களோடு பூங்கொடி போல்பவளாகிய மாதவியும் விளையாடச் சென்றடைந்தனள்.

மலைகள் ஈந்த பல பண்டங்களும் கடல் தந்த பல பண்டங்களும் இடங்கள் தோறும் வரிசை வரிசையாகக் குவித்

திருந்தன. மரக்கலங்கள் நிற்கின்ற துறைமுகங்களில், அரச குமாரர்களும் அவரது பத்தினிமார்களும், வணிக குமாரரும் 'அவரது பெண்களும்' பாடும் கண்டத்தையுடைய பெண்களும், கூட்டம் கூட்டமாகக் குலவியிருந்தனர். இவர்களது ஆரவாரம், "விண்ணுலகிற் சென்ற பெரும் புகழையுடைய கரிகாற் பெருவளவன் புதுப்புனல் விழவு கொண்டாடுந் தலைநாளைப் போலப்" புனலாடும் இடங்களில் பெருமையாகத் தோன்றுநிற்க, கடலின் கரையைக் குத்தியிடிக்கும் காவிரி பாயும் புகார் என்னும் காவிரிப்பூம்பட்டினம் எங்கும், நால்வகை வருணத்தோர்களும் இடமில்லாமல் நெருங்கியிருக்கும் ஆரவாரமும் ஒன்றுசேர்ந்து ஒலித்தது. கடலின் புலால் நாற்றத்தைக் கெடுத்த தாழைகள் சூழ்ந்த புன்னைமரத்தின் நீழலையுடைய வெண் மணற்பரப்பில் திரைகளைச் சூழக்கட்டி மேற்கூடுங் கட்டிய, யானைக் கொம்பால் கடைந்த கால்களையுடைய அமளியின்மேல் மாதவியானவள் வயந்த மாலையின் கையிலிருந்த யாழை வாங்கிக்கொண்டு கோவலனோடும் ஒருசேர வீற்றிருந்தனள்.

அதுபோது, மாதவியானவள் உறையின் உள்ளிருந்த 'மணக் கோலத்தை யுடைய பெண்களைப் போல' அழகு வாய்ப்ப, மலர்மாலையணிந்துள்ள வீணையைக் கையிலெடுத்து, "இணை கிளை பகை நட்பு ஆகிய நரம்புகள் பெயருந்தன்மை மாத்திரை யறிந்து வீக்குதலும், வீக்கின நரம்பை அகம் புறம் ஆகிய விரல்களால் காணம்செய்து தடவிப் பார்த்தலும், ஆரோகண அவரோகண வகையால் இசையைத் தெரிதலும், சுருதியேற்றலும், ஆளத்தியிலே நிரம்பப் பாடுதலும், பாட நினைத்த வண்ணத்தில் சந்தத்தை விடுதலும், வண்ணத்திற் செய்த பாடல்களை இன்பமாகப் பாடுதலும், குடகச் செலவு துள்ளல் செலவு பாடுதலும், இசைநூலில் நிறுத்திய 'எட்டு

வகையால் இசையினை எழுப்பிப் பண்ணின் வகையால் வருத்தம் நீங்க, மரகத வயிரங்கள் பொருந்திய வளையலை யணிந்த காந்தள் மலர்போன்ற மெல்லிய விரல்கள், வண்டின் கூட்டம் போல நரம்பின்மேல் செல்ல, எடுத்தலும படுத்தலும் நலிதலும் கும்பித்தலும், முறையோடு உருட்டல் தெருட்டல் எள்ளல் பட்டடை என இசையோர் கூறிய எட்டுவகைப் பண்ணில் பொருந்தி, குற்றத்தை நீக்கி, ஏவலன் போலக் கட்டளையிட்ட வழியில் நிற்கக் கடவதாக" எனத் தன் கையிலிருந்த வீணையைக் கோவலன் கையில் நீட்டினள். அவனும் அதனை வாங்கி மாதவியின் மனம் மகிழ்ச்சி யடையுமாறு காவிரியைக் கருதிய சிறப்புக்களையும் கடலின்கண் கானல் வரிப்பாட்டையும் பாடத் தொடங்கினன்.

* வரிப்பாட்டு.

திங்கள்மாலைவெண்குடையான்சென்னிச்செங்கோலதுஓச்சிக்
கங்கைதன்னைப்புணர்ந்தாலும்புலவாய்வாழிகாவேரி
கங்கைதன்னைப்புணர்ந்தாலும்புலவாதொழிதல்கயற்கண்ணாய்
மங்கைமாதர்பெருங்கற்பென்றுஅறிந்தேன்வாழிகாவேரி, 1

மன்னுமாலைவெண்குடையான்வளையாச்செங்கோலதுஓச்சிக்
கன்னிதன்னைப்புணர்ந்தாலும்புலவாய்வாழிகாவேரி
கன்னிதன்னைப்புணர்ந்தாலும்புலவாதொழிதல்கயற்கண்ணாய்
மன்னுமாதர்பெருங்கற்பென்றறிந்தேன்வாழிகாவேரி. 2

பொழில்தரும் நறுமலரே புதுமணம் விரிமணலே
பழுதறு திருமொழியே பணையிள வனமுலையே
முழுமதி புரைமுகமே முரிபுருவ வில்லிணையே
எழுதரு மின்னிடையே எனையிடர் செய்தவையே. 3

---

* இப்பாட்டுகளுக் கெல்லாம் அர்த்தம் கடைசியில் சேர்க்கப்பட்டுள்ளது.

திரைவிரி தருதுறையே திருமணல் விரியிடமே
விரைவிரி தருமலரே மிடைதரு பொழில் இடமே
மருவிரி புரிகுழலே மதிபுரை திருமுகமே
இருகயல் இணைவிழியே எனையிடர் செய்தவையே. 4

பவள உலக்கை கையால் பற்றித்
தவள முத்தங் குறுவாள் செங்கண்
தவள முத்தங் குறுவாள் செங்கண்
குவளை யல்ல கொடிய கொடிய. 5

சொல்மட வன்னம் சொல்நடை யொவ்வா
ஊர்நீர் ஓதம் மூழ்கித் திரிவாள்முன்
சொல்மட வன்னம் சொல்நடை யொவ்வா. 6

இவ்வாறு கோவலன் பாடிய பாட்டைக் கேட்ட நெடிய கண்களையுடைய மாதவியானவள், "இவன் பாட்டுக்கள் களவுப் புணர்ச்சியில் தலைமகன் கூறியது போன்றிருக்கின்றது; அன்றியும் 'இவன் நம்மீது அன்பிலன்; வேறு ஓர் குறிப்பு இவன் உள்ளத்தே உண்டுபோலும்; இவன் குணம் வேறுபட்டான்;" எனப் பிணங்கி அப்பிணக்கத்தை வெளிப்படுத்தாமல், இணக்கத்தை விரும்பியவள் போல் நடித்து, அவன் கையிலுள்ள வீணையை வாங்கித் தான் வேறு குறிப்பில்லாதவள் ஆயினும் அவன் வேறு குறிப்புடையவன் போலப் பாடியதனால் தானும் வேறு குறிப்புடையவள் போல, அக்கானல் வரிப்பாட்டை நெய்தல்நிலக் கடவுளாகிய வருணன் அதிசயிக்க உலகத்தாரும் மனங்களிப்பத் தன் கண்டத்தின் இசையினையும் அவ்வீணையோடு மிகப் பொருத்தி வாசிக்கத் தொடங்கினள்.

மருங்குவண்டு சிறந்தார்ப்ப மணிப்பூஆடை யதுபோர்த்துக்
கருங்கயற்கண் விழித்து ஒல்கி நடந்தாய் வாழிகாவேரி
கருங்கயற்கண் விழித்து ஒல்கி நடந்ததெல்லாம் நின்கணவன்
அறிந்து செங்கோல் வளையாமை யறிந்தேன் வாழிகாவேரி. 7

பூவார்சோலை மயிலாலப் புனப்பூங் குயில்கள் இசைபாடக்
காமர் மாலை யருகசைய நடந்தாய் வாழிகாவேரி
காமர் மாலை யருகசைய நடந்ததெல்லாம் நின்கணவன்
நாம வேலின் திறங்கண்டே யறிந்தேன் வாழிகாவேரி. 8

தம்முடைய தண்ணளியுந் தாமுந்தம் மான்தேரும்
எம்மை நினையாது விட்டாரே விட்டகல்க
அம்மென் இணர அடம்புகாள் அன்னங்காள்
எம்மை மறந்தாரை யாம் மறக்க மாட்டேமால். 9

நேர்ந்த நம் காதலர் நேமி நெடுந்திண் தேர்
ஊர்ந்த வழிசிதைய ஊர்ந்தாயால் ஓதமே
ஊர்ந்த வழிசிதைய ஊர்ந்தாய்மற் றெம்மோடும்
தீர்ந்தார் போல் தீர்ந்திலையால் வாழிகடல் ஓதமே.
பூந்தண் பொழிலே புணர்ந்தாடும் அன்னமே
ஈர்ந்தண் துறையே இது தகாது என்னீரே. 10

கானல் வேலிக் கழிவாய் வந்து
நீநில் கென்றே நின்றார் ஒருவர்
நீநில் கென்றே நின்றார் அவரெம்
மானேர் நோக்கம் மறப்பார் அல்லர். 11

அன்னந் துணையோடு ஆடக் கண்டு
நென்னல் நோக்கி நின்றார் ஒருவர்
நென்னல் நோக்கி நின்றார் அவரென்
நெடுங்கண் விட்டுப் போவார் அல்லர். 12

அடையல் குருகே அடையல் எம் கானல்
அடையல் குருகே அடையல் எம் கானல்
உடைதிரை நீர்ச் சேர்ப்பற்கு உறுநோய் உரையாய்
அடையல் குருகே அடையல் எம் கானல். 13

பையுள் நோய்கூரப் பகல் செய்வான் போய்வீழ
வையமோ கண்புதைய வந்தாய் மருள்மாலை
மாலைநீ யாயின் மணந்தார் அவராயின்
ஞாலமோ நல்கூர்ந்தது வாழிநீ மாலை. 14

என இவ்வாறாக மாதவி பாடக் கோவலன் கேட்டு, "யான் கானல் வரிப்பாட்டைப் பாடினேன்; இவளும் அப்படிப் பாடாமல், என்னைத் தவிர வேறு ஒருவன்மேல் மனம் வைத்துப் பல பொய்களைக் கூட்டி உண்மை போலக் கூறும் வஞ்சனை யுடையாளாய் யாழிசையின்கண் வைத்துப் பாடினாள்" என்று தனது ஊழ்வினை வந்து முதிர்ந்ததினால் சந்திரன் போலும் முகத்தினையுடைய மாதவியை விட்டவனாய் அவளிடம் ஒன்றும் பேசாமல் ஏவலாளர் தன்னோடு சூழ்ந்துவரத் தனியே கோவலன் சென்றுவிட்டனன். பின்பு கோவலனைப் பிரிந்ததால் ஆசை வார்த்தைகளைப் பேசும் தோழிகள் கூட்டத்தில் சந்தோஷ ஆரவாரம் அடங்கியது. மாதவியும் செயலற்ற மனத்தை யுடையவளாய்க் கொல்லா வண்டியேறி, வெறுப்போடு, சூரியன் அத்தகிரியில் செல்லத் தானும் தன் மனையிற் புகுந்தனள்.

7. வேனிற்போதில் மாதவி வருந்தல்

வடக்கே திருவேங்கட மலையும் தெற்கே குமரிக் கடலும் கிழக்கும் மேற்கும் கடலுமே நான்கு எல்லையாகக் கூறப்படும் தமிழ் நாட்டின் தமிழ் வேந்தரது நாட்டினுள், மாடங்கள் நிறைந்த மதுரையும், பெருமை நிறைந்த * உறந்தையும், மங்கல ஓசைமிகுந்த † வஞ்சியும், ஒலிக்கும் நீர்சூழ்ந்த ‡ புகாரும் ஆகிய இந்நான்கு நகரிற்கும் அரசனாய், தன் தென்றலாகிய தேர் பாண்டியன் காவலும், குதிரையாகிய § கிள்ளைச் சோழன் காவலும், அந்தியாகிய யானை சேரன் காவலுமாகத் தானுந் தன் மகளிராகிய சேனையுடன் வீற்றிருந்த மன்மதனாகிய அரசனுக்கு, மகிழ்ச்சியைத் தரும் துணைவனாகிய இளவேனில் என்னும் அரசன் வந்துவிட்டனன் எனப் பொதியமலையிற் பிறந்த தென்றலாகிய தூதுவன் வண்டுகளாகிய சின்னம் ஊதியின் மூலமாகக் கூறினன். ஆகலின், அச்சின்னமூதி காமன் சேனையாய் உள்ள பெண்கள் எல்லாரும் அக்காலத்துக்கு ஏற்றவைகளை உடுத்தி முடிக்க வேண்டியவைகளை முடித்துப் பூசவேண்டியவைகளைப் பூசிக் கோலங் கொள்ளுங்கள்" என்று கூற, கானலின்கண் கோவலன் ஊடுதலால் தனியளாய்த் தன் மனையிற் சென்ற கரிய மலர்போலுங் கண்களையுடைய மாதவி, விண்ணுலகளவு உயர்ந்திருக்கின்ற மேல் நிலையின் ஒரு பக்கமாகிய நிலாமுற்றத்தில் ஏறினள்.

இவ்வாறு ஏறிய மாதவி, கடலில் பிறந்த முத்தம், பொதியமலையில் பிறந்த சந்தனம் ஆகிய இவைகளை யணிந்து, கோவை கலங்காத மரபினையுடைய யாழைக் கையில் எடுத்து மயங்கி மதுரமான கீதம்பாடத் தொடங்கினள். தொடங்கிய மாதவியானவள் பதுமுகம், முற்கட்டிதம், ஒப்படி, இருக்கை,

---

* உறந்தை — உறையூர். † வஞ்சி — கருவூர்.

‡ புகார் — காவிரிப்பூம்பட்டினம், § கிள்ளை — கிளி.

சம்புடம், அயமுகம், சுவத்திகம், மண்டிலம், ஏகபாதம் ஆகிய ஒன்பது வகையுள் முதலில் உள்ள நல்ல பதுமாசனத்தை யுடையவளாய், தனக்கு நாயகன் இல்லாமையால் தியாதநாயக னாக மனத்தால் நோக்கி, எதிர்முகமாயிருந்து வலக்கையை யாழினது பதாகைக் கோட்டின் மேல்வைத்து இடதுகையி லுள்ள நான்கு விரல்களால் *மாடகத்தைத் தழுவி இசை வழிப்படாது இசைத்தலும், மாத்திரை கடந்து ஒலித்தலும், நரம்பைச் சிதற உந்துதலும், பகையாகிய ஆறுவது நரம்பின் இசையிற் குன்றித் தன்னோசை மழுங்கலும் ஆகிய பகை நரம்பு நான்கும் புகாமல் நீக்கும் பேரறிவால் கடைப்பிடித்து உணர்ந்து சமகோட யாழைக்கொண்டு மருதப்பண்ணை வாசித் தலில் மயங்கினள்.

இவ்வாறு பாடி மயங்கியவள், கோவலனைப் பிரிதலால் நிறம் வேறுபட்ட மேனியை உடையவளாய், மலர் அம்புக ளால் உலகை முழுவதையும் தன்னடிக் கீழ்ப்படுத்தி ஆண்ட காமராசன் ஆணையால், உலகமெல்லாம் தொழுது இறைஞ்சு கின்ற திருமுகம் ஒன்றைக் கோவலனுக்கு அனுப்ப எண்ணி, சண்பகம் குருக்கத்தி பச்சிலை இருவாட்சி வெண்பூ செங் கழுநீர் முதலியவற்றால் நெருங்கத் தொடுத்திருக்கும் மாலை யின் நடுவில் உள்ள தாழைப்பூவின் வெண்மையான இதழில் அதற்கு அயலில் தொடுத்திருந்த சிறு சண்பகப் பூவினது அரும்பை எழுத்தாணியாகக்கொண்டு செவ்விய செம்பஞ்சுக் குழம்பில் தோய்த்து,

"மன்னுயிர் எல்லாம் மகிழ்துணை புணர்க்கும்
இன்இள வேனில் இளவர சாளன்
அந்திப் போதகத்து அரும்பிடர்த் தோன்றிய
திங்கள் செல்வனும் செவ்வியன் அல்லன்

* மாடகம் — முறுக்காணி.

புணர்ந்த மாக்கள் பொழுதிடைப் படுப்பினும்
தணந்த மாக்கள் தந்துணை மறப்பினும்
நறும்பூ வாளியின் நல்லுயிர் கோடல்
இறும்பூ தன்று இஃதறிந் தீமின்."

எனத் தன் நிலையினை 'அறுபத்துநான்கு கலைகளும் வணங்கிப் புகழ்ந்து நடக்கப் பண்களும் திறங்களும் புறங்கூற, யாழ் போன்ற மழலைச் சொல்லோடு சொல்லுதற் கரியதாய்ச் சுட்டுருக்கும் காமத்தினை, அப்பாசுரத்தைப் பேசிப்பேசி எழுதி, மாலைக் காலத்தில் தன் தோழியாகிய வயந்தமாலையை வரவழைத்து அத்திருமுகத்தினை அவள்பால் தந்து "தோழி! இத்திருமுகத்தில் எழுதியிருக்கும் பொருள்கள் எல்லாவற்றையும் கோவலர்க்கு ஏற்கும்படிச் சொல்லி இப்பொழுதே கூட்டிக்கொண்டு வருவாயாக" எனச் சொல்லியனுப்பினள்.

வயந்தமாலையும் அத்திருமுகத்தைக் கொண்டு சென்று கடை வீதியின்கண் கோவலனைக் கண்டு கொடுத்தனள். அதனைப்பெற்ற கோவலனும் வயந்தமாலையைப் பார்த்துப் பின்வருமாறு கூறலாயினன்.

சிறிய வில்லையும் குமிழ மலரையும் கோவைக் கனியையும் தனக்கு உறுப்பாகக்கொண்டு, திலகத்தையும் கூந்தலையும் குண்டலத்தையும் உடைய அழகிய முகத்தில் மதர்த்த நோக்கத்தோடு என்மேல் காதல் உடையாள்போல் தோன்றி, முதலில் என் எதிர்முகமாக நின்று அவள் நடித்த நடனமும்; கூந்தலைச் சுமந்து அமிர்த கிரணத்தை வீசும் முகத்தில் கண்கள் உலாவித்திரிய, விருப்பத்தைச் செய்கின்ற அழகோடே பாகுபொருந்திய பவளம் போன்ற வாயினைத் திறந்து இளஞ் சங்குபெற்ற முத்துப் போன்ற பற்களின் நலத்தைக் காட்டி, வருக என வந்து போக எனப் போகிய அவளது காண்வரி

என்னுங் கோலமும்; யான் பிரிந்த காலத்தில் அந்திமாலை வந்ததற்காகப் பிரிவாற்றாது வருந்தி இரங்கி, என் சிந்தை நோயாகிய வறுமையைத் தானறிந்து, வேல்போன்ற கண்களையுடைய அவள், கிளியை ஒத்த சொல்லையும் அன்னத்தை யொத்த நடையையும் மயில்போலும் சாயலையும் மறைத்துக் கொண்டவளாகித் தோழிமாருடைய கோலத்தைக் கொண்டு தனித்து வந்துநின்று நடித்த *உள்வரிக் கோலம் என்னும் நடிப்பும்; ஆபரணங்களை யணியவும் பொறாத இடையை யுடையவள் சிலம்புகள் வாய்விட்டு ஒலிக்க, மேகலை வாய்விட்டழ, என்மேல் காதல் உடையாள்போல வந்து நோக்கும் நோக்கத்தோடு, தன்னைப் பிரிதலால் தன்மை வேறுபட்ட என் சிறுமையினையறிந்தும் என்னுடன் அணையாது புறம்பே நின்று நடித்த புறவரி என்னும் நடிப்பும்; நல்ல நெற்றியினை யுடையவள் மாலையும் கூந்தலும் ஒப்பில்லாத முத்துவடமும் அழகிய தனங்களும் மின்னல் போன்ற இடையினை வருத்தப் புறவாயிலில் வந்துநின்று, தோழியர் மறுமொழி சொல்லப் புணர்ச்சியை விரும்பிய கலவிநிமித்தம் யான் சொல்லியனுப்பிய வார்த்தைகளை வேறு அர்த்தமாகக்கொண்டு, யான் பிணங்கிச் சொன்னதாக நினைத்துத் தானும் பிணங்கிப் போவதுபோல் நடித்துப்போன கிளர்வரிக்கோலம் என்னும் நடிப்பும்; நான் பிரிந்திருந்த பொழுதில் தான் ஆற்றாமல் வருந்தினவளாக நடித்து, எனது உறவினர்க்குத் தன் துயரத்தைத் தேடித் தேடிக் கூறிய தேர்ச்சிவரி என்னும் நடிப்பும்; அன்றியும், வண்டுகள் விரும்பும் கூந்தலை யுடையவள் மாலைக் காலத்தில் மயங்கிக் கண்டார் எவரிடத்திலும் தன் விரகத்தைச்சொல்லி நடித்த காட்சிவரியும்; அவள் நாடக மகள் ஆதலால் இவ்வாறு நடித்தல் இயல்பல்லவா? ஏ வயந்தமாலை! ஆதலால் அவள் படுக்கை எனக்கு இனி அருமையானது"; என்று கோவலன் மறுத்துவிட்டனன்.

இவ்வாறு மாதவியின் திருமுகத்தை கோவலன் மறுக்க வருத்தங் கொண்ட மனத்தை யுடையவளாகிய வயந்தமாலை யாகிய கூனியும் மாதவியினிடம் விரைந்து சென்று உற்றதை உரைத்துவிட்டனள். அதனைக் கேட்ட மாதவியும் வயந்த மாலையை நோக்கி "இம்மாலைக் காலத்தில் வாரார் ஆயினும் காலைப் பொழுதிலேனும் வருவர்! காணலாம்!" என்று செயலற்ற மனத்தோடு தானிருந்த பூம்படுக்கையின்கண்ணே வீழ்ந்து விரகத்தாலும் தலைவனைப்பிரிந்த துயரத்தாலும் கண்களின் இமை பொருந்தாது வருந்திக்கிடந்தனள்.

8. *கண்ணகியின் கனவு.

காவிரிப்பூம் பட்டினத்தில் உள்ள பெண்கள் எல்லாம் தங்கள் தங்கள் மனைகளில் சூரியன் மறைந்த மாலைக்காலத்தே நெல்லோடு மலரைத்தூவி இல்லுறை தெய்வத்தை வணங்கி மாணிக்க விளக்கோடு மற்றைய விளக்கையும் எடுத்தனர். பின்பு, அன்றையதினம் இரவில் தம் கொழுநரது மார்பைத் தம் தனங்கள் அழுந்தத் தழுவுவதற்கு ஏற்ற நொய்தான ஆடை முதலியவைகளை அணிந்து கோலங்கொண்டனர்.

முன்னோர் நாள், மாலதி என்னும் பார்ப்பனி ஒருவள் தன் மாற்றாள் குழந்தைக்குத் தன் முலையில் சுரந்த பாலைச் சங்காலூட்ட அப்பால் விக்கிக்கொண்டு அக்குழந்தை யிறக்க, அம்மாலதி யென்பவள் "அந்தோ! பார்ப்பானும் மனைவியும் என்மேல் அடாப்பழிகூறி வருத்துவரே!" என மனம்வருந்தி அப்பிள்ளையைக் கையின்கண் எடுத்துக்கொண்டு தேவர்தரு நிற்குங் கோயிலும் ஐராவதம் நிற்குங் கோயிலும் அழகிய பல தேவர் கோயிலும் சூரியன் கோயிலும் கைலாயம் நிற்குங்கோயிலும் முருகவேள் கோயிலும் வச்சிராயுதம் நிற்குங் கோயிலும் சாதவாகனன் கோயிலும் அருகன் கோயிலும் சந்திரன் கோயிலும் ஆகிய இக்கோயில்களில் புகுந்து, "தேவிர்காள்! எனது நோயினைத் தீர்ப்பீராக" என இரந்து வேண்டினள். வேண்டியும் ஒருவரும் தீர்க்காமையால் அக்கோயில்களை விட்டுநீங்கி சாத்தரிடத்தைச் சார்ந்து வரங்கிடந்தனள். † சுடுகாட்டுக்

* கண்ணகியின் கனவும் கோவலன் சேர்க்கையும்.

† சுடுகாட்டுக் கோட்டம் — சக்கரவாளக் கோட்டம். இதன் விவரத்தை மணிமேகலையில் காண்க.

கோட்டத்தில் குழியில் இடும் பிணத்தைத் தின்னும் இடாகினிப் பேயானது, பிறரைப் பழிக்கும் ஒரு பெண் வடிவு கொண்டு இருளிற்சென்று வரங்கிடந்தவளை நோக்கி, "இளங்கொடி போல்வாய்! குற்றமில்லாய்! யான் சொல்வதைக் கேள். முற்பிறப்பில் நல்ல தவஞ் செய்யாதவர்க்குத் தேவர் வரங்கொடார். இது பொய்மொழி யன்று. மெய்ம்மொழியே யாகும். ஆகையால் நின் கையிலுள்ள பிணமாகிய குழவியை என் கையில் கொடுப்பாய்" எனத் தன் கையில் வாங்கிக் கொண்டு அக்குழவிப் பிணத்தை விழுங்கிவிட்டனள். பின்பு இடிகுரல் கேட்ட மயில்போல் வருந்தியழுகின்ற மாலதியை நோக்கி அச்சாத்தான், தாயே! நீ செல்கின்ற வழியின் முன்னர் இருக்கின்ற சோலையின் நிழலில் உயிரோடு கிடக்கின்ற நின் குழவியினைக் காண்பாயாக!" எனக் கூறிவிட்டுத் தான் அக்குழவியாக அவ்விடத்துச் சென்று கிடந்தனன். அம்மாயக் குழவியைக்கண்ட மாலதி, "குழந்தாய்! அழாதே!" எனச் சந்தேகமில்லாமல் தன் குழவி யெனவே எடுத்துத் தன் வயிற்றில் அணைத்துக் கொண்டே சென்று மாற்றாள் கையில் கொடுத்தனள். பின்னர் அக்குழவியாகிய சாத்தனும், அவ்வந்தணனுக்குப் பிள்ளையாய் சௌளம், உபநயனம் முதலியன கொண்டு மறையினையும் அவற்றின் பொருள்களையும் கற்றுக் கற்ற அத்துறையில் நின்று, பிரமச்சாரி விரதம் பூண்டு தந்தை தாயார் இறந்த பின்பு அவர்கட்குச் செய்ய வேண்டிய நீர்க்கடன் முதலியவற்றை முடித்து, மாலதியுள்ளிட்ட தன் தாயத்தார்களிடம் வழக்கில் வென்று, தேவந்தி யென்பவளை மணம் புரிந்து எட்டாண்டு அவளோடு கூடி வாழ்ந்தனன். இவ்வாறு வாழ்ந்துவரும் நாட்களில் ஓர்நாள், தேவந்தியின் இடத்துத் தன் உண்மையான உருவத்தைக் காட்டி, "எனது கோவிலுக்கு நீ வருவாயாக!" எனச்

சொல்லி பிறர்க் கெல்லாம் "யான் தீர்த்தத் துறை படியப் போகின்றேன்" எனச் சொல்லிவிட்டுச் சென்றுவிட்டனன். பின்பு தேவந்தி தன் கணவனாகிய அச்சாத்தனது கோயிலி னுட்சென்று, புகலாக "ஏ தெய்வமே! என் மனத்தைப் பிணித்த கணவன் என்னை விட்டகன்று தீர்த்தத் துறை படியச் சென்றனன்; அவனை மீண்டும் என்மீது அன்புடை யனாகும்படி திருத்தி அழைத்துத் தருவாயாக!" என ஒரு பெயரிட்டுக்கொண்டு அக்கோயிலை நாள்தோறும் வழிபட்டுக் கொண்டிருந்தனள்.

இவ்வாறாய தேவந்தி "கண்ணகி தன் கணவனைப் பிரிந்து இன்னல் உறுகின்றாள்" என மனத் துயர்கொண்டு, ஒருநாள் சாத்தனது கோயிலை அடைந்து "இக்கண்ணகி விரைவில் தன் கணவனைப் பெறுவாளாக!" என அறுகை யும் சிறு பூளைப் பூவையும் நெல்லொடு தூவி வழிபட்டுவிட்டுக் கண்ணகியின்பாற் சென்று அவளுக்கு உற்ற தோழியாய் இருந்து, "ஏ கண்ணகி! நீ நின் கணவனை விரைவில் பெறு வாயாக!" எனக் கூறினள்.

கண்ணகியும், "தேவந்தீ! நீ கூறுகிறபடி ஒரு சமயம் பெறுவேனாயினும் என் மனம் சந்தேகப்படுகின்றது; என்ன வென்றால், நேற்றிரவில் யான் கண்ட கனவின்கண், என் கணவன் என் கையைப் பற்றிக்கொள்ள யாங்கள் இருவரும் ஒரு பெரிய நகரில் புகுந்தோம்; அந்நகரில், எங்கட்குப் பொருந்தாததாகிய ஒரு வார்த்தையை அவ்வூரார் இடுதேள் இடுமாறுபோல இட்டனர்; அவ்வார்த்தையால் என் கணவர் கோவலர்க்கு ஒரு தீங்குற்றது எனப் பிறர் சொல்ல யான் கேட்டேன்; கேட்டவுடன் மனம்பொறாது அந்நகரத்து அர சன் முன்பு செல்லாத யான் சென்றேன்; வழக்கு உரையாத யான் வழக்குத் தொடுத்தேன்; அவ்வூருக்கு அவ்வரசனோடு

ஒரு தீங்கும் உண்டாயிற்று ; ஆயினும் அது * தீக்கனவு ஆத லால் நின்பால் கூறேன் ; இவ்வாறு தீவினையுற்ற பெரியாளோடு யான் அடைந்த † நல்வரலாறுகளைக் கேட்பாயாயின் நினக்கு நகைப்பைத் தரும்" என்று கூறினள்.

இதனைக் கேட்ட தேவந்தி "ஏ கண்ணகி! பொற்றொடி-நங்காய்! நீ கண்ட கனவால் வருந்த வேண்டாம்; அது தீக் கனவன்று; நின் கணவனால் நீ வெறுக்கப் பட்டவளுமல்ல; முற்பிறவியில் கணவன்பொருட்டு நீ செய்த விரதத்தில் தவறினாய் போலும்; ஆகலின் அத்தீங்கும் இக்கனவின் தீங்கும் கெட, காவிரியாறானது கடலோடு கலக்கும் சங்கமுகத்தின் பக்கத்தில் உள்ள நெய்தற் பூக்கள் நிறைந்த கானலின்கண், சோமகுண்டம் சூரியகுண்டம் என்னும் இரண்டு தடாகங்கள் இருக்கின்றன; அவற்றில் சென்று நீராடி மன்மதனுடைய ஆலயஞ் சென்று அவனை வழிபடு கடவுளாகக் கொண்டு வணங்கி வருவோம்; அவ்வாறு செய்வோர் இவ்வுலகத்துத் தன் கணவனொடு பிரிவின்றி இன்பம் அனுபவித்திருந்து மறுமையில் போகபூமியிலும் போய்ப்பிறந்து இன்பம் அனுபவிப்பர்; ஆதலால் நாமும் அவ்வாறு செய்வோம்;" எனக் கூறினள். இவைகளைக் கேட்ட கண்ணகி, "தேவந்தீ! ‡ கணவன் இருக்கத் துறைபடிந்து பிறிதொரு தெய்வத்தை வணங்குதல் எங்கள் நற்குலத்திற்கு இயல்பன்று; நாங்கள்

---

* தீக்கனவாவது - தனத்தைத் திருகி யெறிதல்.

† நல்வரலாறாவது - இருவரும் சுவர்க்கம் புகுதல்.

‡ சாமெனில் சாதல் நோதல் தன்னவன் தணந்தகாலைப் பூமனும் புனைத லின்றிப் பொற்புடன் புலம்பி வைகிக், காமனை யென்றுஞ் சொல்லார். கணவற் கைதொழுது வாழ்வார். தேமலர்த் திருவோ டொப்பர் சேர்ந்தவன் செல்லல் தீர்ப்பர் என்றது சிந்தாமணி.

கொண்ட கணவனையே குலதெய்வமாக வணங்குவோம்;" என்று மறுத்துக் கூறிவிட்டனள்.

இவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டு இருக்க, ஏவல் தொழில் செய்யும் இளம்பெண் ஒருவள் ஓடிவந்து, "அம்மா! நமது கோவலனார் வந்து நமது கடைவாயிலில் நிற்கின்றார்; அன்றியும், அவரது வருகையினைப் பார்த்தால் நம்மை வெகு காலம் காப்பவர்போல் வருகின்றார்" என்றாள். கொடிபோன்ற இடையையுடைய பெண்கள் எல்லாம் மங்கலமாக விளக்குகளைக் காட்டிக் கோலங்கொள்ள கோவலனும் படுக்கையாக அமைந்திருக்கின்ற சயனத்தில் சென்று சேர்ந்தான். சேர்ந்தவன் தன் மனைவி கண்ணகியின் மேனி வாட்டத்தினைக் கண்டு, "அந்தோ! பொய்யை மெய்யாகக்கொண்டு ஒழுகும் மாதவிபால் கூடி யாடினமையால் தொன்று தொட்டு நல்லொழுக்கத்தால் நமது முன்னோர் தேடிவைத்த பொருட்செல்வமெல்லாம் தொலைந்ததே! தொலைந்த வறுமையால் எனக்கு நாணம் உண்டாகிறதே!" எனக்கூறி வருந்தினன். கோவலன் இவ்வாறு கூறக் கேட்ட கண்ணகி, "ஓகோ! இவரிடம் மாதவிக்குக் கொடுக்கப் பொருள் குறைந்துவிட்டது போலும்! அதனால்தான் வாட்டத்தோடு இவ்வாறு கூறுகின்றனர்" எனத் தனக்குள் சந்தேகங் கொண்டு, ஒளி பொருந்திய தன் முகத்தில் நலஞ்சிறந்த புன்னகையைக் காட்டி, "எனது இன்னுயிர் ஒப்பீர்! என்பால் இன்னும் இரண்டு சிலம்புகள் உள. அவற்றைக் கொள்ளுங்கள்" என்று கூறினள். அச்சிலம்பைப் பெற்ற கோவலனும், "அணியிழாய்! யான் சொல்வதைக் கேட்பாயாக! இச்சிலம்பை யான் வாணிப முதலாகக் கொண்டு யான் அழித்த பொருள் முழுவதையும் தேடிச்

சேர்க்கத் துணிந்துள்ளேன். 'அதுவும் எங்கே யெனின், விரிந்த புகழையுடைய மாடங்கள் நிறைந்த மதுரை என்னும் நகரிடத்தில் ஆகும். ஆகையால் இங்குநின்று இப்பொழுதே என்னோடு எழுவாயாக!" என முற்பிறவியில் தான்செய்த தீவினை தன்னையிழுத்தலால் அதன் வழிநின்று கண்ணகியை அழைத்துக்கொண்டு விடிவதற்கு முன்பே புறப்பட்டனன்.

9. சோழநாடும் கவுந்தியடிகளும்

உலகத்திற்குக் கண்ணாகிய சூரியன் தோன்றி விளங்காத விடியற் காலத்தில் நட்சத்திரங்களோடு விளங்கிக்கொண்டிருந்த சந்திரன் நீங்க, வைகாசிமாதம் இருபத்தொன்பதில் செவ்வாய்க்கிழமையும் கேட்டை நக்ஷத்திரமுங் கூடிய நாச யோகத்தில் நிறைமதி பதினான்காம் பட்சத்துக் கடையிருளில், முன் செய்த தீவினை தன் உள்ளத்தைச் செலுத்தக் கோவலன் கண்ணகியோடு அவள் வளர்த்த ஆட்டுக்கடாவும் கவரிமானும் அன்னமும் திரிகின்ற, தாழ்பொருந்திய கதவினையுடைய இடை கழியினைக் கடந்து, அரவணையின்மீது அறிதுயில் கொண்டிருக்கின்ற மணிவண்ணனாகிய திருமாலினது கோயிலை வலமாகச் சுற்றி நீங்கி, ஐந்து கிளைகளையும் பசிய இலைகளையும் உடைய அரச மரத்தின் நிழலில் எழுந்தருளியிருக்கிற புத்ததேவன் அருளிய பிடவாகமத்தை ஆகாயசாரிகள் மறைவாக இருந்து கூறி, அதன் பொருளை யாவர்க்கும் கேட்குமாறு விளக்கிக் கொண்டிருக்கின்ற இந்திரன் மனத்தால் நிருமிக்கப்பட்ட இந்திரவிகாரம் என்னும் ஏழு விகாரங்களையும் முறையாய்க் கழிந்து சென்று, புலால் உணவை நீக்கிப் பொய்யாமை என்னும் விரதம்பூண்டு அழுக்காறு அவா வெகுளி என்னுங் குற்றங்களை விட்டுத் தருமநூல் முதலியவற்றையுணர்ந்து ஐம்புலனையும் அடக்கி உண்மையையுணர்ந்த பெரியோர்கள் திரண்ட சீகோயில், அருகர், சித்தர், உபாத்தியாயர், ஆசிரியர், சாதுக்கள் ஆகிய பஞ்ச பரமேட்டிகள் நிலைபெற்ற அருகத்தானமாகிய ஐந்து சந்தியும்கூடி மயங்கியிருக்கின்ற பெரிய மன்றினிடத்துப் பொற்பூவையுடைய அசோக மரத்தினது நிழலில், அபிடேக விழாவிலும் நீண்ட தேர்விழாவிலும் 'ஆகாயசாரிகள் வரத்தகும்' என்று சாவகர் எல்லாம்

ஒருங்கு கூடியிட்ட சந்திரகாந்தக் கல்லாலாகிய சிலாவட்ட மாகிய இவைகளைத் தொழுது வலங்கொண்டனர். பின்பு மலையினிடத்துத் தலையினையுடைய ஒரு பெரிய ஆறுபோன்றிருக்கின்ற, உலகில் உள்ளார் போக்கு வரவு செய்வதற்கு அமைந்த ஊர்வாயிலை அக்காலத்துப் போவாரோடுங் கலந்து போய், மன்னவன் கரிகாற் பெருவளவனுக்கு விருப்பத்தைச் செய்யும் தென்றல் காற்று வீசுகின்ற பலமரங்கள் நெருங்கிய அரசற்கு உரிய காவற் சோலையாகிய வயந்தச் சோலையின் மதிற்புறத்தே சென்று அடைந்தனர்.

பின்பு, பிறர் முகம் பார்க்காமல் சென்று காலையில் நீராடுவார் புதுப்புனல் ஆடுவதற்கு அமைந்திருக்கின்ற இரு பக்கங்களிலும் சோலை சூழ்ந்த பெரிய வீதியை உடைய காவிரித் துறையினையுங் கழிந்து, மேற்றிசையை நோக்கிச் சென்று, நீர்வளம் நிறைந்த காவிரியினது வடகரையிலுள்ள சோலைகளைக் கடந்து, கவுந்தியடிகள் இருக்கும் பள்ளிக்குப் பக்கத்தேயுள்ள சோலைக்கருகில் செல்லும்போது, கண்ணகி கொடிபோன்ற இடையோடு பாதமும் வருந்தப் பெருமூச்சு விட்டு முற்றாத மழலைச் சொல்லாலே பற்கள் விளங்கத் தன் கணவன் கோவலனைப் பார்த்து "மதுரை யென்னும் பழய நகரம் யாது?" என வினவினள். கோவலனும், கண்ணகியைப் பார்த்து "மணம் பொருந்திய கூந்தலை யுடையாய்! நீ கேட்ட மதுரை, நமது நாட்டுக்குமேல் * ஆறைங்காதம் அணிமையில் இருக்கிறது" என்று கூறி நகைத்து, அவளோடுஞ் சென்று தவப்பெண்ணாகிய கவுந்தியடிகளைக் கண்டு வணங்கினன்.

---

* ஆறைங்காதம் - 30 காதம், கண்ணகிக்கு மலைப்புத் தோன்றாமல் இவ்வாறு கூறினன்.

கவுந்தியடிகள், தன்னைத் தொழுத இருவரையும் பார்த்து வடிவும் குடிப்பிறப்பும் ஒழுக்கமும் ஆகமத்தில் கூறிய விரதந் தப்பாமையுமாகிய இவைகளை யெல்லாம் உடைய நீங்கள் தீவினையாளரைப்போல் உங்கள் இடத்தைவிட்டு இங்கு வருவதற்குக் காரணம் என்ன?" என்று கேட்டனர். அதற்குக் கோவலன், "உறுதவத்தீர்! இவ்வினவிற்கு விடை யாங்கள் கூறுவது ஒன்றும் இல்லை; ஆயினும் யாங்கள் கொண்ட எண்ணம் ஒன்றுண்டு; என்னவென்றால், மதுரையம் பதியிற் சென்று நினைத்த பொருளைத் தேடும் விருப்பமுடையேம்" என்று கூறினன். கவுந்தியடிகள், "அவ்வாறு நினது கருத்தாயின் சிலம்பையணிந்த சிற்றடியை யுடைய இப்பெண், பருக்கைக் கற்கள் நிறைந்த காட்டுவழியில் நடக்க முடியுமா? இவள் அதற்கேற்ற தன்மையள் அல்லள்; ஆயினும் ஊழ்வினை என்ன செய்யுமோ! இதனை யார்தான் அறிய வல்லார்? நினது குடிப்பிறப்புக்கும் இவளை உடன் அழைத்துக்கொண்டு செல்லுதல் முறையன்று; இனிப் போகவேண்டாம் என்று யான் கூறினும் நீங்கள் நிற்கமாட்டீர்கள்; ஆனால் நானும் பாவச்சொற்களை நீக்கிய குற்றமற்ற பொருட் பயனையுடைய ஆகமநூலைக் கேட்டுக் கேட்டபடியே அருகக் கடவுளை வணங்குதற்குத் தெற்கேயுள்ள தமிழ் நாடாகிய மதுரைக்குச் செல்ல முன்னமே எண்ணங்கொண்டு இருந்தேன்; ஆதலால் யானும் வருகின்றேன்; நீங்களும் வாருங்கள்" என்று கூறினர்.

இதனைக் கேட்ட கோவலன் மகிழ்ந்து கவுந்தியடிகளைக் கையால் தொழுது நாவால் ஏத்தி, "அடிகளே! தாங்கள் இவ்வாறு அருள் செய்வீர்களாயின், இவ்வளைபொருந்திய தோளையுடைய கண்ணகியின் துயரை இப்பொழுதே போக்கினேன் ஆவேன்" என்றனன். உடனே கவுந்தியடிகளும்

மகிழ்ந்து, "கோவல! யாம் போவதனால் இவ்வழியிடத்துப் பல துன்பங்கள் உண்டாகும்; அவற்றை நீ யறியாய்; யான் சொல்வதைக் கேள்.

வெயிலினது ஒளியினைக் கண்ணால் பார்க்கவும் பொறாத மெல்லியலையுடைய கண்ணகியைக் கொண்டு இச்சோலையின் வழியே யாம் செல்லுவோமாயின், அவ்விடத்து வள்ளிக் கிழங்கைத் தோண்டிய குழிகளைச் சண்பகப்பூக்கள் பொய்க் குழியாக மறைத்து, அவைகளை யறிந்து செல்லாத மக்களுக்குத் துன்பத்தைச் செய்தாலும் செய்யும்; அன்றியும் அப் பூக்களால் மறைக்கப்பட்ட குழிகளைக் கவனித்து நிலத்தை நோக்கிச் சென்றால், முற்றிப் பழுத்துத் தேன் ஒழுகும் பலாப்பழங்கள் கிளைகளிலிருந்து பகைபோல முட்டினாலும் முட்டும்; ஆனால் அவ்வழியை விட்டு வெள்ளிடை வழியே போவோம் என்றால், மஞ்சளும் இஞ்சியும் தம்முள் மயங்கிக் கிடக்கின்ற பாத்திகள் தோறும் பலாக்கனியின் விதைகள் பருக்கைக் கற்களைப்போல இவள் கால்களை யுறுத்தும். அவ் விதம் சோலையும் தோட்டமும் ஆகிய கரை வழியை விட்டு விட்டு வயல் வழியே போகலாம் என்றால், அவ்வழியிலுள்ள தாமரைப் பூக்கள் நிறைந்த குளங்களில் துள்ளுகின்ற மீனாகிய இரையினைத் தேடும் நீர்நாயைக் கண்டாலும், அந்நீர்நாய்க்குப் பயந்து வாளைமீன்கள் வயல்களில் குறுக்கே பாயக் கண்டாலும் இப்பெண் மனதில் நடுக்கங் கொள்வாள். * அன்றியும் அவ்வழியில் கரும்பல்லாது வேறு காடுகள் இல்லாமையால் அக்கரும்புகளில் வைத்த பெரிய தேன்கூடுகள் அழிந்து ஒழுகுகின்ற தேனானது தன்பால் மொய்க்கும் வண்டுகளோடு பொய்கை நீரில்போய்க் கலக்கும். அதனை யறியாமல் தணியாத நீர்வேட்கையால் தன் குடங்கையால் அந்நீரை முகந்து

---

* இதனால் 'கள் மறுத்தல்' சொல்லப்படுகின்றது.

குடிக்கவும் கூடும். இக்கள்ளைக் குடித்தல் நமது சாத்திரத்தால் வெறுக்கப்பட்டதாகும். மற்றும் * களை பறிப்போர் பறித்துக் கரையின் மேல் போட்ட குவளை மலருடனே, பொறியையும் வரியையுமுடைய வண்டினங்கள் மதுமயக்கத்தால் கலந்துகிடக்கும்; அவைகளை நீங்கள் வழிவரும் வருத்தத்தால் மயங்கி, வெறும்பூவென நினைத்து அவற்றின்மேல் அடிவைக்கவும் கூடும்; இது கொலை புரியுந் தன்மையதாகும். நீரையுடைய வாய்க்காலினது கரைவழியே போகலாம் என்றாலோ, அந்நீரிலுள்ள நண்டும் நத்தையும் வெளிவந்து உலாவும். நீங்கள் விரைவாக அடியிட்டு நடக்கும் நடையால் அவைகளை யறியாது மிதித்துத் துன்பஞ் செய்தலுங் கூடும். அதனால் நமக்கு வரும் கொலைப் பாவமோ அதிகம். இது ஒன்றாலும் நீக்க முடியாதது. அன்றியும் மறுமையில் நாம் அடையுந் துன்பமோ அளவிட்டுச் சொல்லமுடியாது. ஆகையால் இங்குக் கூறிய வயலும் வாய்க்காலும் ஆங்குக் கூறிய சோலையும் தோட்டமும் அல்லது வேறு வழியும் இல்லை. கோவல! நீ உன்னால் விரும்பப்பட்ட கண்ணகியோடு அவ்வவ் விடங்களில் உள்ளவற்றைக் குறிப்பால் அறிந்து, அப்பாவங்கள் உண்டாகாமல் பாதுகாத்துக் கொள்வாயாக" எனக் கூறினர்.

இவ்வாறு கூறிய கவுந்தியடிகள் பிச்சைப் பாத்திரத்தையும் கோவணத்தையும் தோளின் மீது கொண்டு, கையில் மயிற் பீலியையும் ஏந்தி, ‡ 'பஞ்ச மந்திரமே நமக்கு வழித்துணையாகுக' எனக் கூறிச் செல்ல, அவரோடு கோவலனும் கண்ணகியும் சென்றனர்.

---

* இதனால் 'கொலை மறுத்தல்' சொல்லப்படுகின்றது.

‡ பஞ்ச மந்திரம் :—அ, கி, ஆ, உ, சா என்பன. ந, ச, உ, வ, ₹ என்றுங் கூறுவர், இது சமண சமய வழக்கு.

சனியானது, இடபம் சிங்கம் மீனம் இவற்றோடு மாறு பட்டாலும், ஆகாயத்தில் * தூமக்கோள் தோன்றினாலும், வெள்ளி தென்திசையில் சென்றாலும், குடக மலையின் உச்சியில் இடியோடு கூடிய மேகம் மழையைப் பெய்யாதிராது. அவ்வாறு பெய்வதால் அக்குடக மலையிற் பிறந்த பலவித பண்டத்தோடு உருட்டிக்கொண்டு வருகின்ற மிக்க வேகத்தினையுடைய காவிரி நதியின் புது வெள்ள நீரானது, மதகு தாங்கும் பலகையின்மீது எழுந்து குதிக்கும் நீர் ஒலியே அல்லாது பண்றிப் பத்தர் போன்ற நீர் இறைக்குங் கருவி, பூட்டும் பொறி, ஏற்றம், இறைகூடை ஆகிய இவைகளின் ஒலியினை யடையாத கழனியில் பாய, அதனால் வளம் பெற்ற செங்நெல்லும் கரும்புஞ் சூழ்ந்த நீர் நிலையில் உண்டாகிய தாமரைக் காட்டைக் கண்டனர். அங்கு சம்பங் கோழி, நாரை, அன்னம், கொக்கு, கானங் கோழி, நீர்க் காக்கை, உள்ளான், குளுவை, கணந்துட்புள், பெரு நாரை ஆகிய இவைகள் எல்லாம் போரில் வல்ல இரண்டு அரசர்கள் போர் செய்யும் இடம்போல் பல வேறு வகையாக ஒலிக்கும் ஓசையும், உழவரால் உழப்படாத குழம்பிய சேற்றில் புகுந்து அழுந்திய எருமைகள் நெற்புரிக் கூட்டில் தம் தினவுதீர முதுகைத் தேய்க்க, அதிலிருந்து சரிந்துவிழும் பலவகை நெல்லுகள், கவரித் தொங்கலைப்போல் விளைந்து கிடக்கின்ற செந்நெற் கதிரில் சொரிய, அதனைக் கண்டு † பறையர் பள்ளர் உழவர் முதலானவர்கள் ஒன்றுகூடி ஒலிக்கும் ஒலியும், களைகளாகிய கழுநீர் முதலிய மலர்களைப் பிடுங்கி யெறிந்து, முடியின்கண் உள்ள நாற்றைப் பிரித்து நட்டு, ஒருவர்மேல் ஒருவர் களிப்போடு சேற்றை இறைத்துக்கொள்ள, அச்சேறு தோளிலும் மார்பிலும் படிய, அக்கோலத்தோடு அழகு

---

* தூமக் கோள் - வால் நட்சத்திரம்.

† இவர் இக்காலத்து ஆதித்திராவிடர் எனப் பெயர் பெறுவர்.

பெறத் தோன்றும் கள்ளையுண்டு மயங்கிய கண்களையும் சிறிய சொல்லையுமுடைய பள்ளப் பெண்கள், தம் இசையில் புதுமை யுண்டாகப் பாடும் பாட்டும், செந்நெற் கதிரோடு அறுகையும் குவளை மலரையும் கலந்துகட்டிய மாலையினை மேழியில் சூட்டிப் பூமியை இரண்டாகப் பிளப்பவர் போலப் பொன்னேர் கட்டி நின்றோர் அவ்வேரைப் பாடும் மங்கலப் பாட்டும், நெல்லையரிந்து போர் குவித்தோர் அதனைக் கடாக்களையிட்டு மிதிக்கவைத்துப் பாடுகின்ற முகவைப் பாட்டும், தடாரி கொட்டுவோர் அடிக்கும் ஒலியும், அதனைக் கேட்போர் மகிழும் ஒலியும் ஆகிய இவைகளை யெல்லாம் கேட்டு மகிழ்ந்தவர்களாய் வழி நடந்து வரும் துன்பத்தை எண்ணாதவராகிச் சென்றனர்.

இங்ஙனமாகச் செல்வோர், புலியைத் தன்னிடத்திலே எழுதப்பெற்ற கொடிகட்டிய தேரினையுடைய கரிகாற் பெருவளவனது வெற்றியுடனே, மேகஞ்சூழ்ந்த மலையைப்போல அந்தணர்களால் வளர்க்கப்பட்ட யாகசாலையின் புகையினால் சூழப்பட்ட மாடங்கள் நிறைந்த மறையோர் வாழும் இடங்களும், யாசிக்கும் யாசகரையும் சுற்றத்தாரையும் உலகினைப் பாதுகாக்கும் அரசனது வெற்றியினையும் தமது உழுதொழிலால் தாங்குவோராகிய கங்கையின் புத்திரராகிய வேளாண் மக்களது ஊர்களும், ஆலைப்பாலைக் காய்ச்சுவதனால் உண்டாகும் புகையானது மேகத்தைப்போல் சூழ்ந்திருக்கும் ஊர்களும் ஆகிய இவைகளையுங் கண்டு, இடைப்பட்ட காடுகளையுந் தாண்டி நடந்து, நாள் ஒன்றுக்குக் காதவழி தூரத்திற்கு மேல் நடக்க மாட்டாதவராய்ப் பலநாள் தங்கித்தங்கிச் சென்றனர். இவ்வாறு நடக்கும் நாட்களில் ஒருநாள் காவிரி யாற்றின் இடையிலுள்ள அரங்கத்தின் எதிராக மூங்கில் முள்களால் வளைக்கப்பட்ட வேலியினையுடைய சோலையில்,

தேவர்கள் வாழ்வதற்குத் தகுந்த ஒருபக்கத்தில் பட்டினப் பாக்கத்து மன்றத்தில், அசோக மரத்தின் நீழலில் உலக நோன்பிகள் ஒன்று சேர்ந்து இட்ட சிலாதலத்தின் மேலே யிருந்து பெருமகனால் செய்யப்பட்ட சகசாதிசயம், கர்மக்ஷயாதிசயம், தெய்வீகாதிசயம் என்னும் மூன்று தப்பாத ஆகமத்தின் உண்மையால் தரும ஒழுக்கத்தை யாவருக்கும் அருளிச் செய்யும் சாரணர், அப்பட்டினப் பாக்கத்தை விட்டு நீங்கிவந்து இவர்கட்கு முன்பு தோன்றினர். அவரைக் கண்டவுடன் கோவலன், "முன் செய்த பழவினை வேரோடு அறுக" எனக் கவுந்தியடிகளோடு சென்று வணங்கி அவர் திருவடியில் தன் முடிபட வீழ்ந்தனன். இவ்வாறு வீழ்ந்தவர் தம்பால் வந்த காரணத்தை "முற்பிறப்பினையும் அறியும் அறிவாகிய அவதி ஞானத்தால்" அச்சாரணர் அறிந்தாராயினும் விருப்பும் வெறுப்பும் அற்றவராகிய வீராதலால், இவருக்குப் பின்வருந் துன்பத்திற்கு வருத்தங் கொள்ளாதவராய் மிக்க சிறப்பினையுடைய கவுந்தியடிகளைப் பார்த்துப் பின்வருமாறு கூறலாயினர்.

"கவுந்தியே! உண்பிக்க வந்து நிற்கின்ற தீவினை யாவராலும் ஒழிக்க ஒழியாது; இதனை நீ பாராய்! விளைநிலத்தில் இட்ட வித்தைப்போல் நல்வினைப் பயனானது எதிர்வந்து ஊட்டுங் காலத்தும் ஒழிக்க முடியாது. வேகமாகிய காற்றையுடைய வெளியிடத்தில் வைத்த விளக்கைப்போல உடலோடு கூடிநின்ற உயிர்கள் ஒருசேரக் கூடிநில்லா. மாய்ந்துவிடும். ஆதலால்,

"அறிவன்! அறவோன்! அறிவுவரம் பிகந்தோன்!
செறிவன்! சினேந்திரன்! சித்தன்! பகவன்!
தரும முதல்வன்! தலைவன்! தருமன்!
பொருளன்! புனிதன்! புராணன்! புலவன்!

சினவரன்! தேவன்! சிவகதி நாயகன்!
பரமன்! குணவதன்! பரத்தில் ஒளியோன்!
தத்துவன்! சாதுவன்! சாரணன்! காரணன்!
சித்தன்! பெரியவன்! செம்மல்! திகழ் ஒளி!
இறைவன்! குரவன்! இயல்குணன்! எங்கோன்!
குறைவில் புகழோன்! குணப்பெருங் கோமான்!
சங்கரன்! ஈசன்! சயம்பு! சதுமுகன்!
அங்கம் பயந்தோன்! அருகன்! அருண்முனி!
பண்ணவன்! எண்குணன்! பாத்தில் பழம் பொருள்!
விண்ணவன்! வேத முதல்வன்! விளங்கொளி!"

ஆகிய இந்நாமங்களை யுடையோனால் ஓதப்பட்ட ஆகமமாகிய விளக்கினது ஒளியினைப் பெற்றுக் கரையேறின் அல்லது யாவரும் பிறவியாகிய சிறையினின்றும் நீங்கமாட்டார்கள்" எனக் கூறினர்.

இவ்வாய்மொழியைக் கேட்ட கவுந்தியடிகள், கைகளைத் தலைமேல் குவித்துக்கொண்டு, "காம வெகுளி மயக்கமாகிய முக்குற்றங்களையும் கெடுத்தவனால் ஓதப்பட்ட ஞானபாதமாகிய திருமொழியைக் கேட்பதற்கு என் செவிகள் திறக்குமே அன்றிப் பிறிதொன்றற்கும் திறப்பன அல்ல! என் நாவும் காமனை வென்றவனது ஆயிரத்தெட்டுத் திருநாமங்களையே கூறுமே யல்லாது வேறொன்றையும் கூறாது! எனது கண்களும், ஐவகை இந்திரியங்களையும் வென்றவனுடைய அடிகளைக் காணுமே யல்லாது வேறொரு தேவரின் அடிகளைக் காணா! எனது யாக்கையோ அருளால் அறத்தைப் பூண்டோனுடைய திருமேனி பொருட்டுப் பூமியில் படியுமே யல்லாது வேறொன்றற்கும் படியாது! எனது கைகள் இருடிகட்கு அறத்தைக் கூறும் அறிவன் பொருட்டுத் தலைமேற் குவியுமே யல்லாது மற்றைத் தேவர் பொருட்டுக் குவியா!

என் தலையின் உச்சியும், பூவின்மீது நடந்த தாமரை போன்ற திருவடியாகிய அணியை யன்றிப் பிறிதொரு அணியையும் அணியப்பெறுது! என் மனமும், முடிவில்லாத இன்பத்தை யுடைய இறைவன் அருளிச்செய்த ஆகமமொழியை யல்லாது வேறொரு மொழியையும் உருவேற ஓதாது" என்று அவனது புகழைக் கூறினர். இதனைக் கேட்ட அச்சாரணர், அச்சிலாதலத்திலிருந்து ஒரு முழ உயரம் உயர எழுந்து, "கவுந்திக்குப் பிறப்பைத் தரும் பந்தம் நீங்குவதாக" எனக் கூறி அந்தர வழியாக விரைந்து சென்றனர். அவ்வாறு செல்லும் சாரணரை நோக்கித் தொழுது "பாசபந்தங்கள் நீங்குவதாக" எனப் பணிந்து அவ்விடத்தைவிட்டு நீங்கினர்.

பின்பு, மூவரும் காவிரியாற்றைப் பள்ளியோடத்தின் மீது ஏறிக்கடந்து, தென்கரை யடைந்து அங்குள்ள சோலையின் இடத்துத் தங்கினர். அப்போது ஓர் குமரன், புதிய பரத்தைத் தொழிலையுடைய மிகக் காமங்கொண்ட ஒருபெண்ணோடு கூடி அவர்கள் இருந்த சோலையின் பக்கமாகச் சென்றனன். செல்பவன், கண்ணகியும் கோவலனும் தனியே இருப்பதைக் கண்டு, "இவர்கள் காமனும் இரதியும் போல ஒத்து இருக்கின்றனர்; இவர்கள் எங்கிருந்து இங்கு வந்தார்களோ தெரியவில்லை; கேட்டு அறியலாம்" என நினைத்துக் கவுந்தியடிகளின்பாற் சென்று "நுண்ணிய தவத்தையுடைய அடிகளே! உம்மோடுகூடி இவ்வழி வந்திருக்கின்ற இவர்கள் யாவர்?" என்று வினவ, கவுந்தியடிகளும் "இவர்கள் எம் மக்கள் ஆவர்; நீவிர் கூறிய காமனும் இரதியும் அல்லர்; மனித யாக்கையர்; வழிவரும் வருத்தத்தால் மிகவும் வருந்தினர்; நீவிர் அவர்கள் பக்கம் போகாது போவீர்களாக" என்றனர். உடனே அக்காம தூர்த்தன் "எல்லா நூல்களையுங்கற்று அவைகளின் பயனையும் அறிந்த தவத்தையுடையீர்! ஒரு வயிற்றில் பிறந்தவர் கணவனும் மனைவியுமாகக் கூடி

வாழக் கடவர் என்று நீர் கற்ற நூலில் சொல்லப்பட்டிருக்கின்றதா? அவ்வாறு இருந்தால் நீவிர் சொல்லுக!" எனக் கேட்டனன்.

இத் தீமொழியைக் கேட்ட கவுந்தியடிகள் செவியைப் புதைத்துக்கொண்டு "என் புத்திரியாகிய கண்ணகியை இவர்கள் இவ்வாறாக நிந்தித்தனரே! அதனால் இவர்கள் தொடக்கு முள்ளையுடைய காட்டில்திரியும் நரியாகக் கடவர்" என நினைத்தனர். இவ்வடிகள் நினைத்த சாபத்தால் அவர்களும் நரியாயினர். பின்பு, கவுந்தியடிகள் மனத்தால் இட்ட சாபம் ஆதலால் நடந்ததை அறியாதவர்களாகிய கண்ணகியும் கோவலனும் அந்நரியினது ஒலியினைக் கேட்டு நடுநடுங்கித் தம் பொருட்டு உண்டாயதென்று உணர்ந்து,

2. "நெறியின் நீங்கியோர் நீரல கூறினும்
அறியாமை யென்று அறிதல் வேண்டும்."

எனத் தம்முள் நினைத்துக்கொண்டு கவுந்தியடிகளைப் பார்த்து "உமது திருமுன் தீவினையால் பிழை செய்தவர்க்குச் சாபம் நீங்கி உய்யுங் காலத்தை யருளிச் செய்யவேண்டும்" என வேண்டிக் கொண்டனர். அடிகளும் "ஐம்பொறிகளாலும் துன்பம் உண்டாகும் என்பதை அறிந்து கூறாமையால், இவ் விழிந்த பிறப்பைப் பெற்ற இவர்கள், உறையூரில் மதிற்புறத்திலேயுள்ள காவற்காட்டில் பன்னிரண்டு மாதம் திரிந்த பின்பு முன்னைய உருவத்தை இவ்விடத்திலேயே பெறக் கடவராக!" எனச் சாபவிடை செய்தருளினர்.

பின்பு தவத்தால் மிக்க கவுந்தியடிகளும் கண்ணகியும் கோவலனும், முறம்போலும் செவியினையுடைய யானையை முற்காலத்து ஒருகோழி போரில் தொலைத்ததனால் கோழியூர் என்னும் பெயரைப் பெற்ற உறையூரின்கண்ணே விருப்பத்தோடு சென்று புகுந்தனர்.

10. பாலைநிலமும் கண்ணகியும்.

கவுந்தியடிகளும் கண்ணகியும் கோவலனும் உறையூரின்கண் தங்கி மறுநாள் அசோகினது நிழலில் மூன்று சந்திரனை அடுக்கினாற் போன்ற அழகிய முக்குடையின் கீழ், இளஞ்சூரியனைக் காட்டிலும் ஒளிசிறந்து விளங்கும் அருகக்கடவுளைக் கவுந்தியடிகள் வணங்கி, அப்பள்ளி யிடத்துள்ள முனிவர்க்கெல்லாம் முன் திருவரங்கத்துச் சோலையில் சாரணர் தமக்குக் கூறிய இனிமையான மொழிகளை யெல்லாம் மொழிந்தனர். பின்பு அன்றைப் பொழுதில் சைனரின் இல்லறத்தாராகிய சாவகர்கள் வாழ்கின்ற இடத்தில் மூவரும் தங்கினர். அன்று விடியற்காலையில் ஒரு சாமமிருக்க எழுந்து தெற்குப் பக்கத்தே செல்ல விரும்பி அவ்வுறையூரை விட்டு நீங்கிச் சென்றனர். செல்லும்போது, சிறிதுதூரம் சென்றவுடன் கிழக்குத் திக்கில் சூரியன் விளக்கமாகத் தோன்ற அப்பொழுது வளப்பம் பொருந்திய நீர்நிறைந்த மருதநிலமும் வாவியுஞ் சூழ்ந்த ஒரு இளமரச் சோலையில் நுழைந்து அங்கிருந்த ஒரு மண்டபத்தில் தங்கினர். "அப்பொழுது மன்னர் யாவரினுஞ் சிறந்த எம் மன்னன் வாழ்வானாக! ஊழிதோறூழி இவ்வுலகை இவனே காப்பானாக! *முன் ஒரு காலத்துப் பாண்டியன் 'உக்கிரவன்மன்' என்பவன், கடலினது ஆழத்தைத் தன் காலால் உணர்த்தி உலகத்தில் உள்ள அரசர்க்கெல்லாங் காட்டி வேலை யெறிந்து வற்றச் செய்ய, அதனைப் பொறுக்காது பின் ஒருகாலத்தில் அக்கடலானது அவன் நாட்டின் தென்பக்கத்திலுள்ள பஃறுளியாற்றுடனே பல பக்க மலைகளையுடைய குமரிக் கோட்டையும் தன்பால் கொண்டு ஒளிக்க, உடனே அவன் வடக்கின்கண் உள்ள கங்கையாற்றினையும் இமயமலையினையும் கைக்கொண்டு

ஆண்டு மீண்டும் தென்திசையை ஆண்ட பாண்டியன் வாழ்வானாக! சந்திரகுலம் விளங்க ஆயிரங் கண்களையுடைய இந்திரனது மார்பிடத்தே பெருமையாகப் பூண்டுகொண்ட வளையையெறிந்தானென்று மேகங்களெல்லாம் ஒன்றுகூடி தனது நாட்டில் மழையைப் பொழியாது ஒழிய, அதனைக் கண்டு மிக்கவளஞ் சுரக்கும்படி அம்மேகங்களை விலங்கிட்டுச் சிறைப் படுத்தியாண்ட மன்னவன் வாழ்வானாக!" எனப் பாண்டியனை வாழ்த்தி ஒரு அந்தணன் வந்து அங்கு இருந்தனன். அவ்வாறு வந்திருந்த அவ்வந்தணனை நோக்கிக் கோவலன் "ஐய! நீர் யார்? உமது ஊர் யாது? என்ன காரணத்திற்காக இங்கு வந்தீர்?" என வினவினன். உடனே அவ்வந்தணன் தான் வந்த வரலாற்றைப் பின்வருமாறு சொல்லத் தொடங்கினான்.

"பொன் மலைமீது நீலமேகமானது படிந்திருப்பதைப் போல, படம் விரித்து எழுந்த ஆயிரந் தலைகளையுடைய பாம்பணையின்மீது தேவர்கள் பலரும் தொழுதேத்த, திரைகள் விரிந்த காவிரியாற்றின் † இடைக்குறையிலே திருமகளோடு யோகநித்திரை செய்கின்ற திருமாலினது காட்சியையும், நீர் அருவியினையுடைய திருவேங்கட மலையின் உச்சியின்கண் சூரியனையும் சந்திரனையும் இருபக்கங் கொண்டு இடைப்பட்ட இடத்தில் 'நீலமேகம் மின்னலாகிய புதுப்புடவையை உடுத்தி வானவில்லாகிய அணிகளைப் பூண்டு நின்றாற்போலப்' பகைவரை வருத்தும் சக்கரத்தையும் சங்கையும் தாமரைக் கையினிடத்து வலத்திலும் இடத்திலும் ஏந்திக் கொண்டு அழகு வளரும் ஆரத்தினை மார்பிற்பூண்டு பொன்னாற் செய்த

---

* இச்சரித்திரங்களை யெல்லாம் திருவிளையாடற் புராணத்தில் விரிவாகக் காணலாம்.

† இங்குக் கூறியது திருவரங்கம்.

ஆடையை இடையிலே உடுத்தி, திருவருள் பொருந்திய திருக்கண் மலரோடு நின்ற கோலத்தைக் கொண்டிருக்கின்ற நெடியோனது காட்சியையும் காட்டுவாயாக! என என் கண்கள் என் உள்ளத்தைத் எழுப்பினதினால் இங்கு வந்தேன். யானோ குடகமலைப் பக்கத்துள்ள மாங்காட்டில் வாழ்வேன். பாண்டியனுடைய நாட்டின் சிறப்பினையும், கொடை கருணை முதலிய குணங்களையும் கேட்டதோடு அல்லாமல் கண்குளிரக் கண்டேன்; ஆதலால் அவனது புகழை வாழ்த்தி வந்திருந்தேன். இதுதான் எனது வரவாகும்" என்று கூறினன்.

இதனைக் கேட்ட கோவலன் அகமகிழ்ந்து அம்மறையோனைப் பார்த்து "ஐய! மதுரைக்குச் செல்லத் தகுந்த செவ்வையான வழியை எங்கட்குக் கூறுவாயாக!" எனக் கேட்க, அவ்வந்தணனும் பின்வருமாறு கூறத்தொடங்கினன்.

"ஐய! நல்ல அமைச்சரோடு நாடி முறை செய்யாது அரசனுங் கொடுங்கோலனாக, அதனால் நல்லரசியலை யிழந்து வருந்தும் குடிகள் வாழும் நிலம்போல, சூரியனாகிய வன் வேனிலாகிய அமைச்சனோடும் வெம்மை கொள்ளுதலினால், முல்லை குறிஞ்சி என்னும் இருநிலமும் தமது இயற்கை வளங்கெட்டுச் சேர்ந்தோரை வாட்டுகின்ற பாலைநிலமாக மாறத்தகுந்த இக்காலத்தில் நீவிர் மனைவியோடும் வந்துவிட்டீர்! ஆயினும் பாறையும் மண்மலையும் மயக்கமான வழியும் பெய்த் தோராகிய கானலும் முறையாகக் கிடக்கின்ற இந்தப் பெரிய பாலைச் சுரத்து வழியைக் கடந்துவிட்டால், கொடும்பாளூர் கொடுங்குளம் என்னும் இரண்டு ஊர்க்கும் பொதுவாகிய ஏரியானது தோன்றும். அவ்வேரியினது கரையின்மீதே நடந்து சென்றால், பிறைச்சந்திரனை முடியிலணிந்த இறைவனது கையில் உள்ள சூலாயுதம் போன்ற மூன்று அரியவழி பிரிந்து தோன்

றும். அவ்வழியில் வலது பக்கம் பிரியும் வழியைக் கொண்டு செல்வீராயின்,

"அலர்தலை மராமும் உலறுதலை யோமையும்
பொறியரை உழிஞ்சிலும் புன்முளி மூங்கிலும்
வரிமரற் றிரங்கிய கரிபுறக் கிடக்கையும்
நீர்நசைஇ வேட்கையின் மான்நின்று விளிக்கும்
கானமும் எயினர் கடமுங் கடந்தால்
ஐவன வெண்ணெலும் அறைக்கட் கரும்பும்
கொய்பூந் தினையும் கொழும்புன வரகும்
காயமும் மஞ்சளும் ஆய்கொடிக் கவலையும்
வாழையும் கமுகும் தாழ்குலைத் தெங்கும்
மாவும் பலாவும் சூழுடுத் தோங்கிய
தென்னவன் சிறுமலை திகழ்ந்து தோன்றும்".

இவ்வாறு விளங்குகின்ற சிறுமலையை வலப்பக்கத்தே வைத்து இடப்பக்கத்து வழியாகச் செல்ல மதுரையை அடையலாம்.

இதை யன்றி முற்கூறிய மூன்று வழிகளுள் வலது பக்கத்து வழியை விட்டுவிட்டு இடப் பக்கத்து வழியைக் கொண்டு செல்வீராயின், சிறகுகளையுடைய வண்டுகள் செவ்வழிப் பண்ணைப் பாடும் குளத்தோடும் வயலோடும் குளிர்ந்த பூஞ்சோலையோடும் அருஞ்சுரங்கள் பலவும் முறையாகக் கிடக்கின்ற காட்டு வழியையும் கடக்கவேண்டும். அப்படிக் கடந்தால், திருமால்குன்றம் என்னும் அழகர் திருமலை தோன்றும். அவ்விடத்து மயக்கத்தைத் தரும் குகைவழி யொன்றுண்டு. அக்குகைக்கு உள்ளே தேவர்களும் வணங்கத் தகுந்த புண்ணிய சரவணம், பவகாரணி, இட்டசித்தி யென்னும் மூன்று பொய்கைகள் இருக்கின்றன. அவற்றுள் புண்ணிய சரவணமென்னும் பொய்கையில் நீராடுவீர்களாயின், இந்திரனல்

செய்யப்பட்ட ஐந்திரவியாகரணம் என்னும் இலக்கணத்தை உணர்வீர்கள். பவகாரணி யென்னும் பொய்கையில் நீராடு வீர்களாயின் பழம்பிறப்பை உணர்வீர்கள். இட்டசித்தி யென்னும் பொய்கையில் நீராடுவீர்களாயின் நினைத்தன வெல்லாம் அடைவீர்கள். அவ்விதமான குகையின் உள்ளே செல்ல விரும்புவீர்களாயின் அம்மலையி னிடத்துள்ள பெரி யோன் திருவடிகளைக் கையால் தொழுது மனத்தால் நினைத்து வாயால் துதித்து மும்முறை வலஞ் செய்தால், பாதாள கங் கைக்கு மேலுள்ள இடம் பிளவுபடும்படிப் பாயும் சிலம்பாறு என்னும் ஆற்றின் கரையிலுள்ள கோங்கமரத்தின் நிழலில் பொற்கொடி போலவும் மேகம் போலவும் ஐந்து வகையான கூந்தலையும், வளையல் அணிந்த தோளையுமுடைய 'பெண் இயக்கி' ஒருவள் தோன்றுவாள். அவள் உங்களைப் பார்த்து "இப் பிறப்பிற்கு இன்பமாகிய புகழும், மறு பிறப்பிற்கு இன்பமாகிய புண்ணியமும், இவை யிரண்டும் ஒழிந்து எக் காலத்தும் அழிவில்லாது ஒன்றாயிருக்கும இன்ப மோட்ச மும் ஆகிய பொருள்கள் யாவை? அவற்றைக் கூறுங்கள்! யானோ இவ்வடிமலையில் வாழ்பவள்! வரோத்தமை என் னும் பெயருடையேன்! யான் கேட்கும் கேள்விகட்கு யார் விடை கூறுகின்றாரோ அவர்க்கு எத்தொழிலையும் செய்ய யான் உரியேன்! ஆதலால், நீங்கள் கூறுங்கள்! கூறுவீர் களாயின், உங்கட்கு இப்பொழுதே இக்குகையின் வாயிற் கதவைத் திறந்து தருவேன்!" என்று கூறுவாள்! அக் கேள்விக்கு நீங்கள் விடை கூறிவிட்டால் கதவைத் திறந்து ஒருவழி காட்டுவாள். அவ்வழியில் நீண்ட வாயில்கள் பல வுண்டு. அவைகளைக் கடந்து சென்றால் இரட்டைக் கதவை யுடைய ஒரு வாயில் இருக்கும். அதனுள் நுழைந்து மேலா கச் சென்றால் பாவை போன்ற பெண் ஒருத்தி தோன்றி, உங்களை முடிவில்லாத இன்பம் என்பது யாது? அதனை

உரைப்பீராயின் விரும்பிய பொருளைப் பெறுவீர்!" என்று கூறுவாள். மற்றும் அவள் கேட்பதற்கு நீங்கள் ஒன்றுஞ் சொல்லாவிட்டால் உங்களை ஒரு துன்பமும் செய்யாள். உங்களை, நீங்கள் செல்லவேண்டிய வழியில் போக்குவாள். நீங்கள் அவள் கேட்டதற்குத் தகுந்த பதில் கூறிவிட்டாலோ, முற்கூறிய மூன்று பொய்கைகளின் கரையில் உங்களை யழைத்துக் கொண்டுபோய்க் காட்டுவாள். ஓதவும் உணரவும் அரிய பஞ்சாக்கரம் என்னும் ஐந் தெழுத்தினையும், அட்டாக்கரம் என்னும் எட்டெழுத்தினையும் மனத்தில் நினைத்து வாயால் துதித்து அப் பொய்கையில் நீராடுவீர்களாயின் வேண்டிய பலனை யடைவீர்கள். அவை தவத்தைச் செய்தோர்க்கும் காணுவதற்கரிய பயனைத்தரும் மாபினையுடையவை. நீங்கள் அப்பொய்கையின் பயனை விரும்பாவிடின், அவற்றை நினையாமல் அம்மலைமீது நின்ற இறைவனுடைய தாமரை மலர் போன்ற திருவடிகளை நினையுங்கள். நினைத்தால், உடனே கருடனை எழுதிய கொடித்தண்டு நிற்கும் இடத்தைக் காண்பீர்கள். அதனைக் கண்டவுடன் அவன் திருவடி உங்களை யேற்றுக்கொண்டு உங்களுடைய பிறவித் துன்பத்தைக் கெடுத்துவிடும். ஆதலால் அதனைக் காணுவதால் பரமபதத்திற்குச் செல்லுதல் மெய்யே யென்று இன்பம் அடைந்து பெருமை பொருந்திய மதுரைக்குச் செல்லுங்கள். இவைதாம் நீங்கள் கண்கூடாகக் காணத் தகுந்த குகையின் தன்மைகள்.

இவ்விரண்டு வழியையும் விட்டு இடைப்பட்ட வழியில் செல்லுவீர்களாயின் அது செம்மையான வழிதான். அவ்வழியில் உள்ள சோலையையும் சோலை சூழ்ந்த ஊர்களையும் ஊர்களையடுத்த காடுகளையும் கடந்தால், அங்கு வழியில் துன்பத்தைச் செய்யும் தெய்வம் ஒன்று உண்டு. ஆயினும் அத் தெய்வம் அவ்வழிப் போவாரை யாதொன்றும் செய்யாது.

பின் என்ன செய்யும் என்றால், வழிப் போவாரைப் போகாமல் தடுக்கும். அதனைத் தப்பிச் சென்றால் பெருவழி தோன்றும். அவ்வழியே மதுரைக்குச் செல்லலாம். காலமாகின்றது நீங்களும் செல்லுங்கள். யானுஞ் சென்று நிலங்கடந்த நெடுமுடி அண்ணலைத் தொழுகின்றேன்" என்று கூறினன்.

இவ்வாறு கூறிய மறையோன் மொழிகளைக் கேட்டுக் கொண்டிருந்த கவுந்தியடிகள் அம் மறையவனைப் பார்த்துப் பின்வருமாறு கூறினர்

"நான்மறையாள! எங்களுடைய அருகக்கடவுள் அருளிச் செய்த பரம ஆகமங்களில், இந்திரனால் தோற்றுவிக்கப்பட்ட வியாகரணம் இருக்கின்றது. அதனை நீ பார்த்தாய் இல்லைபோலும்! அதுவும் 'இருக்க நின் புண்ணியசரவணப் பொய்கையை யாங்கள் அடைய வேண்டியதில்லை. அன்றியும் முற்பிறவியில் புரிந்த வினைப்பயனை இப்பிறவியில் அனுபவிப்பதை நீ யறியாயோ? ஆதலால் நின் பவகாரணிப் பொய்கையில் யாங்கள் நீராட வேண்டியதில்லை. மற்றும், வாய்மை கொல்லாமை என்னும் இரண்டினையும் தவறாது காப்பாற்றுவார்க்குக் கைகூடாத பொருளும் உண்டோ? ஒன்றுமில்லை. ஆதலால் நின் இட்டசித்திப் பொய்கையில் யாங்கள் இறங்க வேண்டுவதில்லை. இவைகளை எல்லாம் நாங்கள் பெறுவதற்கு இலேசாய வழியிருப்பதால் குகைக்குள் புக வேண்டுவதில்லை. நீ விரும்பிவந்த தெய்வத்தைக் காண்பதற்குச் சென்று அடிபணிவாய். நாங்களும் எங்கட்குப் பொருத்தமான வழியிலே செல்லுகின்றோம்" என்று கூறிவிட்டுக் கோவலனுடனே அன்று ஒரு ஊரில் தங்கிவிட்டனர்.

பின்பு அவ்வூரைவிட்டுத் தங்கித் தங்கிச் செல்லும் நாட்களில் ஓர்நாள், கண்ணகியும் கவுந்தியடிகளும் வழிநடந்து

வந்த வருத்தத்தால் ஒரு பக்கத்தில் தங்கியிருக்க, கோவலன் முற்கூறிய இடைவழியின் கிளைவழியே சென்று ஒரு குளக் கரையை யடைந்து தண்ணீர் குடிக்கும் வேட்கையோடு படித் துறையின் பக்கத்தே நின்றனன். அச்சமயத்தில் முன்பு அம்மறையோன் கூறிய வனதெய்வமானது காதல் மிகுதி யோடு கோவலனைக் கூடக்கருதி, "இவன் மாதவியின் மேல் வைத்த விருப்பத்தால் நம் மீதும் அன்பு கொள்ளுவான்" எனக் கருதி, அம்மாதவியின் தோழியாகிய வயந்தமாலையின் வடிவுகொண்டு காற்றால் அலைக்கப்பட்ட கொடியைப் போலச் சென்று அவனுடைய திருவடிகளில் வீழ்ந்து பொய்க் கண் ணீரைவிட்டு, "ஐய! மாதவியானவள் என்னைப் பார்த்து, 'அடியே! நான் திருமுகம் எழுதி யனுப்பியதில் ஒரு குற்ற மும் இல்லை; நீ வாயாற் கூறிய வார்த்தைகளில் தவறிவிட் டாய்; அதனால்தான் அக்கோவலன் கொடுமை செய்தான்' என்று கூறி என் முன்னால் மயங்கி வீழ்ந்தாள். அன்றியும் கற்றவரும் நற்றவரும் 'காமமானது மனத்தைக் கெடுத்து விடும்' என்று நினைத்தே கனவினும் கருதாது கைவிட்ட இப் பொதுமகளிருடைய தொழில் கடையான தொழில் என்று வெறுத்துக், கண்ணீர் தன் தனங்களின்மீது சொட்ட முத்துமாலையையும் அறுத்து எறிந்துவிட்டு என்னையுந் துரத்தி விட்டாள். ஆதலால் நானும், நீங்கள் மதுரை நோக்கிப் போகின்றீர்கள் என வழியில் எதிர்ப்பட்டவர்களால் கேள் விப்பட்டு, வணிகக் கூட்டத்தாருடன் சேர்ந்து தனியாகத் துன்பப்பட்டேன். இங்கு நின்னைக் கண்டேன். இனி நீயரு ளியபடி செய்யும் மனமுடையேன்" என்றது.

இவ்வாறு வனதேவதை கூறக் கேட்ட கோவலன் "முன்பு மதியை மயக்குந் தெய்வம் இவ்வழிய காட்டில் உண்டென அம்மறையோன் கூறியது உண்மையே போலும்.

அதுதான் இது" என்று நினைதது, அந்தரி மந்திரத்தை வாயினால் துதித்தனன். உடனே அவ்வன தேவதை யஞ்சி, "ஐய! யான் இவ்வனத்தில் திரிகின்ற இயக்கியாவேன்; நின்பால் காதல் உண்டானமையால் இவ்வாறு மயக்கஞ் செய்தேன்" எனத் தன் உண்மையைக் கூறி, மற்றும், "ஐய! நீர் நின் மனைவிக்கும் கவுந்தியடிகட்கும் இவ்விஷயத்தைக் கூறாது இருப்பீராக! ஏனென்றால், கற்புடையவரும் துறவுடையவரும் ஆகையால் என்னைச் சபித்துவிடுவார்கள்; ஆதலால் கூறாதிருப்பீராக" என வேண்டிக்கொண்டு தன் இருக்கை சென்றுவிட்டது.

அத்தெய்வம் சென்ற பின்பு, கோவலன் தாமரைப் பூக்கள் நிறைந்த அக்குளத்தினது நீரை மொண்டு சென்று நீர் வேட்கையால் வருத்தம் அடைந்த தனது மனைவியின் வருத்தத்தினைத் தீர்த்துக் கவுந்தியடிகட்கும் கொடுத்தனன். பிறகு அம்மூவரும் சூரியன் தனது முழுவெயிலையும் வீசத் தொடங்கி விட்டதனால் பாலைநிலம் போன்ற காட்டின் வழிச் செல்ல மயங்கி, அக்காட்டின் இடத்துள்ள குராவும் வெண் கடம்பும் கோங்கும் வேங்கையும் பொருந்திய சோலையின் இடத்துப் போவோர் வருவோர்களது பொருளையே விரும்பி வில்லையும் அம்பையும் கையில் ஏந்திக் கூற்றம்போல் சென்று, அக்காட்டு வழியிலே வேட்டுவர்கள் எதிர்க்க அவர்கட்கு வெற்றியினைக் கொடுத்து, அவ்வெற்றி காரணமாக அவர்களால் இடப்படும் பலியைப் பார்த்துக்கொண்டு இருக்கும் நெற்றிக் கண்ணையுடைய குமரியும், தேவர்கள் வணங்கும் பாவையும் சுவர்க்க நாட்டையுடைய செல்வியுமாகிய ஐயைக் கோட்டத்துள் சென்று தங்கினர்.

11. *வேடர்மகள் சாலினியாடல்.

கண்ணகி கோவலன் கவுந்தியடிகள் மூவரும் ஐயைக் கோட்டத்துள் நுழைய கண்ணகியும் சூரியனது வெயிலால் பாலைநிலம் போன்றிருக்கும் காட்டு வழியில் செல்ல நடுக்க முற்றுத் துன்பமடைந்து காலில் கொப்புளங் கொண்டதனல் தத்திய நடையோடும் பெருமூச்சு விட்டனள். ஆதலால் அவர்கள் அதற்குமேல் செல்லாமல் வழிநடந்த துன்பந்தீர அக்கோட்டத்துள் ஒருவரும் புகாத ஒரு பக்கத்தில் தங்கி யிருந்தனர். பிறகு அம்பைக் கையிலேந்திய மறவர் குடி யிற் பிறந்த சாலினி யென்பவள் அவ்வூர்க்கு நடுவிலுள்ள மன்றத்தில் தெய்வம் ஏறப்பெற்று, மெய்ம்மயிர் சிலிர்த்துக் கைகளை வீசிக்கொண்டு அக்காட்டிலுள்ள மறவர் அனைவரும் அதிசயிக்க அடியெடுத்து வைத்து ஆடத் தொடங்கினள். அவ்வாறு ஆடுபவள், அம்மறையவர்களைப் பார்த்துப் பின் வருமாறு கூறலாயினள். "ஏ மறவர்காள்! முன்பு நீங்கள் சொல்லியபடி உங்கள் பலிக் கடன்களைக் கொடாமையினுல் மன்றுகள் பாழ்பட்டன; பகைவருடைய ஊர்களில் ஆனிரை கள் மிகுந்தன; மறக்குடியில் பிறந்த எயினருக்கும் தங்கள் தொழிலாகிய போவார் வருவாரை வருத்திக் கொள்ளையடிக் கும் தொழிலால் உண்டாகும் வளம் குறைய, அவர்களும் அறஞ்செய்யும் குடிகளைப் போலச் சினங்குறைந்து செருக் கடங்கி விட்டனர்; ஆதலால், உங்கள் கடனுகிய உயிர்ப் பலியை நீங்கள் கொடுத்தால் அல்லது கலை வாகனத்தை யுடைய குமரியானவள் உங்களுக்கு வெற்றியைக் கொடுக்க மாட்டாள்; களவையே தொழிலாகக் கொண்டுவாழும் உங்க ளுடைய சுற்றத்தார் மதுவுண்டு செருக்கும் இல்வாழ்க்கையை

* வேடர்மகள் சாலினி கொற்றவை யுருக்கொண்டு ஆடல்,

நீங்கள் விரும்புவீர்களாயின், செல்விக்குக் கொடுக்க வேண்டிய உங்கள் பலிக் கடன்களைக் கொடுத்துவிடுங்கள் எனத் தன் தெய்வ வாக்கால் கூறினள்.

உடனே அம்மறவர்கள் தமது மறக்குடியிற் பிறந்த அப் பெண்ணை அவளது கூந்தலைச் சடையாகக் கட்டி, அம்முடியில் பொன்னால் செய்த பாம்பின் குட்டியைச் சுற்றி, பன்றியினது கொம்பைப் பறித்து அதனை வெண்மையான பிறைச் சந்திரனாகச் சாத்தி, புலியினது பற்களை வெள்ளிய நிரைத் தாலியாகக் கட்டி, அப்புலியினது கோடும் புள்ளியுமுடைய தோலை மேலே மேகலையாக உடுத்தி, வயிரம் பொருந்திய வில்லை வளைத்து அவள் கையிற் கொடுத்து, முறுக்குண்ட கொம்புகளையுடைய கலையின்மீது அவளை யிருத்தி, பாவை கிளி கானக்கோழி மயில் பந்து கழங்கு இவைகளைக் கொண்டு வந்து முன்வைத்துச் சேவித்து ஏத்தித் துதித்தனர். பின்பு ஏவல் வேலையைச் செய்யும் எயிற்றியர்கள், வண்ணம், சுண்ணம், சந்தனம், அவரை, துவரை, எட்சோறு, நிணச்சோறு, பூ, புகை, வாசனைப் பொருள் ஆகிய இவைகளை யேந்திக் கொண்டு பின்வர, வழிபறிக்குங்கால் கொட்டுகின்ற பறையும் சூறை கொள்ளுங்கால் ஊதுகின்ற சின்னமும் துத்தரிக் கொம்பும் எறிமணியுமாகிய இவை ஒலிக்க, அவ்வணங்கின் முன்னே நிறுத்தினர். பின் உயிர்ப் பலியைக் கொள்ளும் பலிபீடத்தைத் தொழுது கலையூர்தியையுடைய குமரியை ஏத்தினர். அப்போது அத்தெய்வத் தன்மையுடைய சாலினி யென்பாள், சிறிய அடிகள் வருந்தவந்து கணவனுடனிருக்கும் கண்ணகியைக் காட்டி, "இங்கிருக்கின்ற இவள் கொங்க நாட்டினை யாளும் செல்வி! குடநாட்டினை யாளுங் குமரி! பைந்தமிழ் நாட்டினை யாளும் பாவை! இவள் இவ்வாறு ஆவதற்கு முற்பிறவியில் தவத்தைச்செய்த தவக்கொழுந்து! முழுமாணிக்கம்

போன்ற உயர்வுபெற்ற பெண்ணுருக் கொண்ட திருமணி!" எனப் புகழ்ந்து கூறினள்.

இவ்வாறு கூறியதைக் கேட்ட கண்ணகி மயங்கி, 'இவள் தெய்வ மயக்கத்தால் கூறினள் போலும்' என நாணித் தன் கணவனுக்குப் பின்னே மறைந்து அவளையிகழ்ந்து புன்னகையோடு நின்றனள்.

பின்னர், மதியை யணிந்த தலையையும், நெற்றியைத் திறந்து விழித்த இமையா நாட்டத்தினையும், பவளம்போன்ற வாயினையும், முத்துப் போன்ற நகையினையும், கரிய கண்டத்தையும் உடையவள்! வாசுகியை நாணாகப்பூட்டி மேருமலையை வில்லாக வளைத்தவள்! நஞ்சைப் பொருந்திய பாம்புக் கச்சாற் கட்டிய தனத்தை யுடையாள்! வன்மையுடைய கையில் சூலத்தை யேந்தினவள்! சிங்கத்தை யுரித்து அதன் தோலை மேகலையாகக் கட்டி, யானையை யுரித்து அதன் தோலை உத்தரீயமாக விட்டவள்! இடக்காலில் சிலம்பும் வலக்காலில் வீரக் கழலும் கட்டிய அடிகளையுடைய வெற்றி பொருந்திய கொற்றவள்! உடலுக்குத் தலைவேறான வடிவையும் திரண்ட தோளையும் உடைய மகிடாசூரனது தலையை யறுத்து அதன் மீதேறி நின்ற தையல்! தேவரும் முனிவரும் வணங்கப்பெறும் அமரி! குமரி! சமரி! சூலி! நீலி! மாலுக்குத் தங்கை! வெய்ய மழுவைக் கையிலுடைய சயமகள்! திருமகள்! பாயுங் கலையை யுடைய பாவை! ஆயும் * கலையையுடைய பாவை! அழகிய கலன்கள் அணிந்த பாவையாகிய மாலும் அயனுந் தொழத் தோன்றிய கன்னிக் கோலத்தினையுடைய அக்குமரியும், "இச் சாலினி கொண்ட கோலம் வாய்ப்புடையது" என்று அருளினள். பின்பு எயினர்,

---

* கலை- சாத்திரங்கள்.

"செம்பொன் வேங்கை சொரிந்தன சேயிதழ்க்
கொம்பர் நல்லில வங்கள் குவிந்தன
பொங்கர் வெண்பொரி சிந்தின புன்சினம்
திங்கள் வாழ்சடை யான்திரு முன்றிலே. 1

பாய்கலைப் பாவை யணிகொண்டு நின்றஇவ்
ஆய்தொடி நல்லாள் தவமென்னை கொல்லோ
ஆய்தொடி நல்லாள் பிறந்த குடிப்பிறந்த
வெய்வில் எயினர் குலனே குலனும். 2

சங்கமும் சக்கரமும் தாமரைக் கையேந்திச்
செங்கண் அரிமான் சினவிடைமேல் நின்றுயால்
கங்கை முடிக்கணிந்த கண்ணுதலோன் பார்த்து
மங்கை யுருவாய் மறையேத்த வேநிற்பாய். 3

கயமலர் உண்கண்ணாய் காணாய்நின் ஐயர்
அயல்ஊர் அலற எறிந்தநல் ஆனிரைகள்
நயனின் மொழியின் நரைமுது தாடி
எயினர் எயிற்றியர் முன்றில் நிறைந்தன. 4

துண்ணென் துடியோடு துஞ்சூர் எறிதரு
கண்ணில் எயினர் இடுகடன் உண்குவாய்
விண்ணோர் அமுதுண்டும் சாவல் ஒருவரும்
உண்ணாத நஞ்சுண்டு இருந்தருள் செய்குவாய்." 5

எனப் புகழ்ந்து "எயினராகிய யாங்கள் இடும் பலியை

உண்பாயாக! பிரமன் பின்னோனாகிய *குறுமுனி வாழ்கின்ற சந்தனம் அகில் முதலிய மரங்கள் பொருந்திய பொதியமலைத் தலைவனாகிய வெற்றியை விரும்பும் பாண்டியன் வெட்சியைச் சூடி வெற்றி பெறுவானாக!" எனக் கூறித் தம் பலியை ஊட்டினர்.

---

* குறுமுனி - அகத்தியமுனி.

12. மதுரையை அடைதல்.

முற்கூறிய வேடர்மகள் சாலினியினது கூத்து முடிந்தவுடன், கோவலன், கவுந்தியடிகளின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, "இக்கண்ணகி சூரியனது வெயில் தன்மீது படப் பொறுக்க மாட்டாள்; அல்லாமலும் இவள் சிறிய அடியும் பருக்கைக் கற்களையுடைய பாலைவழியில் படியாது; குஞ்சித்துக் குஞ்சித்து நடக்கின்றனள்; பாண்டியன் ஆணையால் காக்கப்படும் நாடென்று திசையெங்கும் இசை பரந்திருத்தலால், எதிர்த்தாரைக் கொல்லும் கரடியும் புற்றினைத் தோண்டாது; வரிகளையுடைய புலியும் மான் இனத்தோடு மாறுபடாது; மற்றும் இரையினைத் தேடும் பாம்புகளும் தம்மை வருத்தியவர்களையும் துன்பஞ் செய்யா; ஆயினும் இவ்வெயில் ஒன்றுமே வருத்தித் துன்பத்தைச் செய்யும். ஆதலால் அவ்வாறு வருத்தும் பகற் காலத்தைவிடப் பல்லுயிர்க்கும் அருள் செய்யும் சந்திரன் விளங்கும் இராக்காலத்தில் நாம் நடந்து செல்வோமாயின் ஒரு குற்றமும் வராது" என்று கூறினன்.

கவுந்தியடிகளும் 'அது உண்மையே' என உடன்பட்டனர். பின்பு 'கொடுங்கோல் வேந்தனுடைய குடிகள் அவன் போங்காலத்தையும் செங்கோல் வேந்தன் வருங்காலத்தையும் பார்த்திருப்பது போல' சூரியன் மறையும் சமயத்தையும் சந்திரன் உதயமாகும் சமயத்தையும் பார்த்துக்கொண்டிருந்தனர். இவ்வாறு இருந்தவர்க்கு முன்னே பாண்டியன் குலத்திற்கு முதல்வனாகிய திங்களஞ் செல்வன் மீன் கூட்டங்களோடுமே குளிர்ந்த கிரணங்களைப் பரப்பிக்கொண்டு மலையமலையிலே தோன்றி மதுரைநகரிலே வளர்ந்து புலவர் நாவிலே பூத்து நிலைபெற்ற தென்றல் காற்றோடு தன்னுடைய வெள்ளிய கதிரை, இதுவரையும் கணவனோடு புணர்ச்சி யின்பம்

பெருதிருக்கின்ற கண்ணகியின்மீது வீசினன். அப்பொழுது கோவலன் அரிய வழியிடைத் துன்பங் கொண்ட கண்ணகியைப் பார்த்து, "காதலி! இவ்விரவில் நாம் செல்கின்ற வழியில் புலி வாய்விட்டுக் கத்தும்; ஆந்தை சத்தும்; கரடிகள் உறுமும்; இவைகட்குப் பயப்படாமல் செல்வாயாக" என்று கூறிக் கண்ணகிக்குத் தூக்கம் வராமலும், நடப்பதால் களைப் புண்டாகாமலும் அவளுடைய வளையல் பொருந்திய கைகளைத் தன் தோளின்மீது அவளுக்கு ஆதரவாக வைத்துக்கொண்டு, கவுந்தியடிகள் கூறிக்கொண்டு வருகின்ற தரும மொழிகளைக் கேட்டுக் கடப்பதற்கு அருமையான வழியை மெள்ள மெள்ள கடந்து சென்றனர். அச்சமயம் காட்டுக்கோழிச் சேவல்கள் கரிந்து கிடக்கின்ற மூங்கிற் காட்டிலே விடியற்காலம் ஆவதைக் கூவிக் காட்டின. அக்காலையில் நாவால் மறைநூலை நவிலாது இன்பத்தைத் தரும் பாட்டைப் பாடிக்கொண்டிருக்கும் *நூலணி மார்பர் வசிக்கின்ற ஒரு ஊரை யடைந்து, "இப்பார்ப்பார் ஒழுக்கந் தவறினவர் ஆதலால் இவ்வூரில் தங்குதல் நமது சாவக நோன்பிற்குத் தக்கதன்று" என்று ஊர்க்குப் பக்கத்திலுள்ள கோயிற் பக்கத்தில் தங்கினர்.

பின்பு கோவலன், கவுந்தியடிகளுடனே கண்ணகியையும் அங்கு இருக்கும்படிச் செய்துவிட்டுத், தான் அங்கிருந்த வேலியினைச் சிறிது பிரித்து நீக்கிக் காலைக்கடன் கழித்தற்குச் சென்று அங்குள்ள ஒரு நீர்நிலையில் தங்கினன். நின்ற கோவலன், தான் தன்னந் தனியே காதலியோடு கானகத்தில் வந்ததை நினைத்து வருந்திப் பெருமூச்சுவிட்டு உள் வெதும்பிக் கலங்கிக் கண்ணீர் விட்டுக்கொண்டு இருந்தனன். இவ்வாறு துன்பப் பட்டுக்கொண்டு இருந்தவனைக் கண்ட கௌசிகன் என்னும் அந்தணன், 'இவன் கோவலன் தானோ'

---

* நூலணி மார்பர் - அந்தணர்.

னச் சந்தேகங்கொண்டு, அச்சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்
ளப் பசிய இலைகளையுடைய குருக்கத்திச் செடியின் நிழலிற்
சென்று, ஏ *மாதவியே! கோவலனது பிரிவிற்குச் சகியாது
காமத்தீயால் துன்பத்தை யடைந்து அவனைப்பெறாது வருந்தி
கின்ற மாதவியைப் போல, நீயும் இளவேனில் காலம் நீங்க
அதனைப் பொறாது முதுவேனிற் காலத்து வெயிலால் துன்
புற்று அலரைப் பெறாது வளைந்து வருந்திக்கொண்டு இருக்
கின்றாயே! இது 'மாதவி' என்னும் பெயர் வாசிக்காகவா?”
எனக் கூறினன். இதனைக் கேட்ட கோவலன், அக்கௌசி
கனைப் பார்த்து, “ஐய! நீர் கூறிய வார்த்தைக்கு அர்த்தம்
என்ன?” என்று கேட்டனன். உடனே கௌசிகன், “இவன்
கோவலனே” எனத் தன் மனதில் உறுதிகொண்டு, அவன்
பக்கத்தில் சென்று தான் வந்த காரியத்தைச் சொல்லத்
தொடங்கினன்.

“ஐய! நின் தாயும் தந்தையும், 'அரிய இரத்தினத்தை
யிழந்த நாகம்போல' அழகும் ஒளியும் இழந்து ஒடுங்கினர்.
நினது சுற்றத்தார் 'உயிரை யிழந்த உடல்போலச்' செயல்
இன்றித் துன்பக் கடலில் வீழ்ந்திருக்கின்றனர். மற்றும்
நின் தந்தை, தன் ஏவலாளரை யனுப்பி எங்கும் தேடும்படிக்
கும் செய்தனர். 'முன் ஒரு காலத்தில் எவ்வளவு சிறிய
தொழிலா யிருந்தாலும் தந்தையிட்ட கட்டளையே செய்தல்
கடமை யெனக்கொண்டு தன் அரசைத் துறந்து அடைதற்
கருமையான காட்டிற் சென்றடைந்த இராமனது பிரிவினால்
அயோத்தியில் இருந்தார் யாவரும் மயங்கி யிருந்தாற்போல'
நின் புகாரில் உள்ளார் யாவரும் மயங்கிக்கொண்டு இருக்கின்
றனர். தன்னுடைய திருமுகத்தின் பாசுரத்தை யொப்புக்
கொள்ளாது மறுத்து நீ கூறியதை வயந்தமாலையினிடத்தில்

* மாதவி யென்பது குருக்கத்திக்கும் ஒரு பெயர் உண்டு.

கேட்ட மாதவி, மேனி பசந்தவளாய் நின்னையே நினைவிற் கொண்டு துன்புற்றுத் தன் இடைநிலை மாடத்தில் நான்காம் நிலத்திலேறிப் படுக்கையில் வீழ்ந்து மயங்கிக்கொண்டு இருந்தனள். இவ்வாறு அவள் படுந் துன்பத்தை யான் கேள்விப்பட்டு அவளிடம் சென்றேன். சென்ற என்னைப் பார்த்து அம் மாதவி, "ஐய! நின்னடிகளில் வீழ்கின்றேன்; என் கையால் எழுதிய இவ்வோலையை என் கண்மணி போன்ற காதலனாகிய கோவலர்க்குக் காட்டி என் துயரையும் கூறி அழைத்துவந்து என் துன்பத்தை நீக்குவாயாக!" என வேண்டிக்கொண்டு அவ்வோலையையும் என் கையில் கொடுத்தனள். நானும் அவ்வோலையை வாங்கிக்கொண்டு நின்னை எங்கும் தேடியும் காணாது கடைசியாக இங்கு நின்னைக் கண்டேன். அவள் தந்த ஓலையும் இதுதான். இதனைக் காண்பாய்!" என அவ்வோலையை நீட்டினன். கோவலனும் அதனை வாங்கித் தான் அவளொடும் இருந்து பிரிந்த காலத்தில் அவள் எந்த வாசனைப் பொருளைத் தன் தலையில் தடவியிருந்தாளோ அவ்வாசனையையே உடைய தலைமயிரை அவ்வோலையின் மேல் ஒற்றியிருப்பதையும் கண்டு பிரித்துப் பார்த்தனன். அதனுள் பின் வருமாறு எழுதியிருந்தது.

"காதல! தேவரீர் திருவடிகளை திக்குநோக்கித் தண்டம் பண்ணினேன்! எனது வாசகங்களைத் திருவுள்ளத்தில் கொண்டருள்க! குற்றந் தீர்ந்த நல்ல காட்சியை யுடைய உயர்ந்த மணவாள! உமது தாய் தந்தையர்களின் குற்றேவல்களைச் செய்யாது ஒழிந்து போனதன்றியும், நற்குலத்திற் பிறந்த உத்தமக் கற்பினையுடைய மனைவி கண்ணகியுடனே இரவில் இந்நகரை விட்டு நீங்கிச் செல்வதற்கு உண்டாகிய குற்றம் யாது? என் மனம் அக்காரணத்தை அறியாது யான் செய்த தவறேயென வருந்திக் கொண்டிருக்கின்றது! அவ்வாறே என் குற்றமாய் இருந்தாலும், 'பெண்கள் சொல்

பேதமையான சொல்' என்று பொறுக்கத் திருவுளம் பற்ற வேண்டும்! இது அல்லாமலும் இப்பொழுது எனக்கு உண்டாகிய துன்பமோ நன்றல்ல! அதனைப் போக்குதல் வேண்டும்! உமக்கு ஒரு புகழும் குறையாது! போற்றுவீராக!"

இவ்வாறு எழுதியிருந்ததைப் பார்த்து அதன் பொருள் எல்லாம் உணர்ந்து மனம்வருந்தி, "இவள் குற்றமற்றவளே! இது நம்மாற் செய்யப்பட்ட குற்றமேயாகும்! அன்றியும் எனது தீவினையும் ஆகும்!" எனத் தனக்குள் நினைந்து, "இவ்வோலை நமது தந்தைக்குப் பொருத்தமாகும்" என்று உணர்ந்து, கௌசிகனைப் பார்த்து, "ஐய! எமது பெற்றோர் இடத்திற் சென்று அவர்களுடைய திருவடிகளை யாம் வணங்கியதாகக் கூறி இவ்வோலையையும் காட்டி நீரும் எம்பொருட்டாக அவர்கள் கொண்ட நடுக்கத்தையும் துன்பத்தையும் விரைவிற் சென்று மாற்றுவீராக!" என அவ்வோலையையும் கொடுத்து அனுப்பிவிட்டனன்.

பின்பு கோவலன், குற்றமற்ற கற்பினையுடைய மனைவி கண்ணகியுடன் இருந்த கவுந்தியடிகளை யடைந்தனன். அங்கிருந்து துர்க்கா தேவியினது போர்க்கோலத்தைப் பாடும் பாணரோடு தானும் ஒருவனாகக் கலந்து பண்களைப் பாடிய பின்பு, அவர்களைப் பார்த்து "இங்கிருந்து இன்னும் மதுரை எவ்வளவு காதம் இருக்கும்" எனக் கோவலன் கேட்டனன். அவர்களும், "ஐய! அகிற்சாந்து சந்தனக்குழம்பு குங்குமக் குழம்பு கஸ்தூரிக்குழம்பு ஆகிய மணங்கமழும் சேற்றினைக் கலந்து, கழுநீர் சண்பகம் குருக்கத்தி மல்லிகை முல்லையாகிய இம்மலர்கள் கலந்திருக்கின்ற அணையிலே பொருந்தி, சமையல் இடங்களில் உண்டாகிய தாளிப்பின் புகையும், அப்பவாணிகர் அங்காடி யிடத்தில் அப்பம் சுடுகின்ற புகையும், மைந்தரும் மகளிரும் தங்கள் மயிர்க்கும் துகிற்கும் மாலை முதலியவற்றிற்கும் புகைத்த அகிற்புகையும், யாகசாலைப் புகையும் ஆகிய

இவைகளை யளாவி, இந்திரனால் பூட்டப்பட்ட ஆரத்தை யுடைய பாண்டியன் கோயிலில் உள்ள மணமெல்லாம் தன் மீது சமழும்படித் தோன்றி, சங்கப் புலவர்களுடைய செந் நாவினாலே புகழப்பட்ட சிறப்பினையுடைய மதுரைத் தென்ற லானது, பொதியமலைத் தென்றலைத் தோற்கச் செய்து வீசு கின்றதை நீர் பார்ப்பீராக! ஆதலால், அப்பாண்டியனுடைய மூதூராகிய மதுரை மிக்க தூரம் அன்று! மற்றும் அங்கு யார் சென்றாலும் தடுப்பார் ஒருவரும் இல்லை!'' என்று கூறினர்.

அவர்கள் வார்த்தையைக் கேட்ட கோவலன், அன்று அங்கு தங்கிவிட்டு முன்போல் கவுந்தியடிகளுடன் இரவில் செல்லத் தொடங்கினன். இவ்வாறு சென்ற மூவர்களும், அழித்தல் தொழிலையுடைய கடவுளது கோயிலினிடத்தும் மன்னவன் கோயிலினிடத்தும் ஒலிக்கின்ற காலை முரசமாகிய பல வாத்தியங்களின் ஒலியும, அந்தணர்கள் சுருதி குறையா மல் ஓதுகின்ற நான்கு வேதங்களின் ஒலியும், தவசிகள் கூறு கின்ற வேதங்களின் ஒலியும், வேந்தனால் சிறப்புப் பெற்ற வீரர்களது முரச வொலியும், பகைவர்களிடத்துப் போரில் வென்று கொண்டுவந்த யானைகளினது முழக்கமும், காட்டிற் புதிதாகப் பிடித்துக் கொண்டுவந்த யானைகளின் முழக்கமும், புரவிகள் போரை நினைந்து கனைக்கும் ஓதையும், மல்லர்கள் விடியற் காலையில் மருத நிலத்தில் கொட்டும் கிணைப் பறை யோசையும் ஆகிய இவைகள் எல்லாம் ஒன்றுகூடிக் கடல் போல் முழங்கக் கேட்டு, மதுரை சமீபித்ததாக நினைத்து, வழிநடையில் பட்ட வருத்தத்தை யெல்லாம் ஒருவாறு விட் டனர். பின்பு சிறிதுதூரம் சென்றவுடன், குரவும் மகிழும் கோங்கும் வேங்கையும் வெண் கடம்பும் சுரபுன்னையும் மஞ் சாடியும் மருதும் செருந்தியும் சண்பகமும் பாதிரியும் ஆகிய மலர்களே ஆடையாகவும், குருக்கத்தியும் செம் முல்லையும்

முசுட்டையும் மோசிமல்லிகையும் வெள்ளை நறுந்தாளியும் வெட்பாலையும் மூங்கிலும், இவற்றிற் படர்ந்த பெருங்கையாலும் குட்டிப்பிடவமும் இருவாட்சியும் ஆகிய இவைகளை மேகலையாகவும், அகன்று பொலிவுபெற்ற கோங்கு வேங்கையென்னும் மலர்களினது சுண்ணம் ஆடப்பெற்ற மணற்குன்றாகிய தனங்களையும், முருக்கிதழாகிய செவ்வாயினையும், அருவிநீரில் ஓடிவருகின்ற முல்லையாகிய நகையினையும், ஓடியாடித் திரிகின்ற கயலாகிய கண்களையும், அலைகள் அரித்த கருமணலாகிய கூந்தலினையும், உலகைப் பாதுகாக்கும் ஒழுக்கத்தையும், புலவர் நாவிற் பொருந்திய புகழையும், தன்னைச் சேர்ந்தவர்க்கு இன்பம் தருதலின் திருமகளினது தன்மையையும் உடைய பாண்டியன் குலக்கொடியாயுள்ள வையையென்னும் பெண்ணைக் கண்டனர். அவ்வையையென்னும் பெண்ணும், "கண்ணகிக்குப் பின்னால் வருகின்ற துன்பங்களைத் தான் முன்னால் அறிந்துகொண்டவள் போல", நல்ல பூவாகிய ஆடையால் மேலே போர்த்துக்கொண்டு, "தனது கண்ணீரை வெளியில் காட்டினால் இவர்கள் வருந்துவார்கள்" என்று கருதித் தன் கண்ணீரை அப்பூவாடைக்குள் மறைத்துக் கொண்டனள். இதனைப் பார்த்த கோவலனும் கண்ணகியும் "இவ்வையையாறு பூவால் மறைந்து இருத்தலால், இது புனல் ஆறு அன்று; பூவாறாகும்" எனத் தொழுது, குதிரைமுக ஓடம் யானைமுக ஓடம் சிங்கமுக ஓடம் என்னும் இவற்றிலேறிப் பலரும் கடந்து செல்லும் துறையிற் போகாமல், அதன் பக்கத்தே உள்ள மரப்புணையிலே கவுந்தியடிகளுடன் ஏறிக் கடந்து சென்று, தென் கரையில் உள்ள ஒரு சோலையில் யாவரும் செல்லாத ஓரிடத்தில் தங்கினர்.

பின்பு, "தேவர்கள் வாழும் இம்மதுரையை வலமாகச் சுற்றிச் சென்றால் மிகவும் புண்ணியமாம்" என்று எண்ணி

அகழியின் புறத்திலேயே சுற்றிவந்தனர். அப்போது குவளையும் ஆம்பலும் கமலமும், இக் கண்ணகியும் கோவலனும் பின்னால் தனித்தனியாக அடையப் போகின்ற துன்பத்தையறிந்து கண்ணீர் விட்டழுது நடுக்கங் கொள்வதைப் போல வண்டுகள் ஒலிக்கத் தேனொழுகக் காற்றில் ஆடிக்கொண்டு இருந்தன. மதிலில் பொருந்தி யிருக்கும் கொடிகள், இவர்களைப் பார்த்து, நீங்கள் இந்நகர்க்கு வாராது ஒழிவீர்களாக” எனக் கைகாட்டி மறுப்பதுபோல ஆடிக்கொண்டிருந்தன. இவைகளை யெல்லாம் கண்டு, நீர்வாழ் புட்கள் நெருங்கி யிருக்கின்ற ஏரியும் பண்ணையும் கழனியும் சோலையும் தெங்கும் கமுகும் வாழையும் தண்ணீர்ப் பந்தர்களும் ஆகிய இவைகளையுங் கண்டு, அம்மதுரையின் மதிற் புறத்திலுள்ள அறத்தைச் செய்யும் தபோதனர் அன்றிப் பிறர் சேரப்படாத முனிவர்கள் வாழும் இடத்தில் தங்கினர்.

13. மதுரையின் வனப்பு.

புறஞ்சேரியின் சோலையிலுள்ள பறவைகள் எல்லாம் துயில் எழுந்து ஆரவாரிக்க, பொய்கையில் உள்ள தாமரை மலர்களை மலர்விக்கும் சூரியனானவன், பகைவரது தலைகள் நடுக்கங்கொள்ள வாளைக் கையிலேந்திய பாண்டியனது ஊராகிய மதுரையைத் துயில் எழுப்பினன். உமையவள் தனது கண்ணைப் புதைத்தபொழுது நெற்றியில் புறப்பட்ட கண்ணையுடைய இறைவனது கோவிலும், கலப்பையை ஆயுதமாகவுடைய பலதேவரது கோவிலும், கோழிக் கொடியையுடைய முருகவேள் கோவிலும், அறமும் அதன் துறையும் விளங்குதற்குக் காரணமாகிய அறவோர்களின் இருப்பிடங்களும், மறத்துறை விளங்கிய மன்னவனது கோவிலும் ஆகிய இவ்விடங்களில் காலையில் முழங்கும் முரச வாத்தியங்கள் முழங்கின. அப்போது கோவலன், தனியான இடத்தில் தியானத்தோடு இருந்த கவுந்தியடிகளிடத்தில் சென்று தொழுது, "தவத்தினை யுடையீர்! சிறிதும் தவஞ் செய்திராத யான் ஒழுக்கந் தவறினவர்களைப் போல, மலர் போன்ற மென்மையான மேனியையுடைய என் மனைவி நடுங்கித் துயரம் அடையும்படி, முன்பு கனவிலும் நினைத்திராத இத்தேசத்திலே சிறுமையுற்று வந்தேன். ஆகையால், அடிகளே! இந்நகரில் உள்ள வணிகரிடத்தில் யான் சென்று என் தன்மையினைக் கூறி வருமளவும், இவள் தங்கள் திருவடிகளாகிய காவலையுடையாளாகி ஒரு குற்றமும் இல்லாமல் இருக்க அருள் புரிவீராக" என்று கைகுவித்து வேண்டினன்.

இதனைக்கேட்ட கவுந்தியடிகள் 'சுற்றத்தாரையும் தந்தையையும் செல்வத்தையும் விட்டுக் காதலியோடும் தனித்துவந்து துயரம் அடைந்த கோவல! முற்பிறப்பில் மிகுதியாக நல்வினை செய்த நீ, அதனைவிட்டுச் சிறிது தீவினையும் செய்து

இருத்தல் வேண்டும்.' எவ்வுயிர்க்கும் யாவரும் தீங்கு செய்வதை ஒழியுங்கள்; அவ்விதம் ஒழிக்காவிட்டால், அதனால் வருந் தீவினை பெருந்துன்பத்தை யூட்டும்' என்று அறங்களை யுணர்ந்த பெரியோர்கள், நாவாகிய *கடிப்பால் வாயாகிய பறையை அறைந்து கூறினும், பாபிகள் அதனைக் கொள்ளாராகிப் பின் தீவினை வந்து துன்பத்தை யூட்டுங்கால் மிகவும் வருந்தித் திண்டாடுவர்; கற்கப் படுவனவற்றைக் கற்று அவற்றின் பயனை யுணர்ந்த பெரியோர் தீவினையினால் வருந் துன்பத்திற்கு வருத்தங் கொள்ளார். இது நாம் செய்ய வந்ததெனவே கொள்ளுவர். மற்றும், பெண்களைப் புணர்வதற்கு முயற்சி செய்வதால் வருகின்ற துன்பமும், புணர்ந்த பின்பு பிரிவதால் வருகின்ற துன்பமும், இவ்விரண்டும் இன்றிக் காலந் தாழ்த்தலால் அநங்கன் செய்கின்ற துன்பமும் என முழுவதும் துன்பமேயாம். இனிப் பொருளைச் சேகரிப்பதற்கு முயற்சி செய்வதால் வருகின்ற துன்பமும், இவ்விரண்டும் இல்லாது வறுமையால் வருகின்ற துன்பமும் என முழுவதும் துன்பமேயாம். இவ்விருவகைத் துன்பங்களும் மகளிரைப் புணர்ந்து மயங்கினவர்க்கே உண்டாவதன்றிப் பற்றில்லாத தனி வாழ்க்கையையுடைய பெரியோர்களுக்கு உண்டாவதில்லை. முனிவர்களால் நீக்கப்பட்ட இவ்விருவகைக் காமமே துணையாக வருகின்ற துன்பக் கடலில் முன்பு அழுந்தித் துயர் அடைந்தோர் கணக்கற்றவர் இருக்கின்றனர். நீ மட்டும் புதிதல்ல. அவர்களுள் தேவரில் ஒருவரையும் மனிதருள் ஒருவரையுங் கூறுகின்றேன் கேள். 'தன் தந்தை கட்டளையின்படி மனைவியோடும் காட்டிற் சென்று, பின் அவள் தன்னைப்பிரிய, அதனால் பெருந்துன்பம் அடைந்தவன், வேத முதல்வனாகிய நான்முகனைப் பெற்ற திருமால் அன்றோ? இதனை நீ யறிந்தாய் இல்லையோ? உலகமெல்லாம் அறியுமே!

---

* கடிப்பு - பறையடிக்கும் குறுந்தடி.

இது புராண கதை யல்லவா? அன்றியும் நளன், முன்பு புட்கரனேடு சூதாடி நாடு நகரங்களை யிழந்து, தன் மனைவி தமயந்தியோடு காட்டை யடைந்தவன், வேறொரு பொருள் மேல் கொண்ட விருப்பத்தால் அவளைப் பிரிந்தான் அல்லன்; அவளும் சிறுமை பெற்றவளும் அல்ல; இவ்வாறாகவும் காட்டிடத்துப் பாதியிருளில் அவளைத் தூக்கத்தில் விட்டு நீங்கியது முன்செய்த தீவினையே யன்றி அம் மடந்தையினது குற்றம் எனச் சொல்லுவதற்கு வேறு காரணம் உண்டோ? உண்டாயின் நீ சொல்! ஆதலால் நீ துன்பத்தை யடைந்தாலும் அவர்களில் வேறுபட்ட நன்மையை உடையவன் ஆவாய்! அது எப்படி யென்றால், நீ நின் காதலியைப் பிரியாது வாழும் வாழ்க்கையினைப் பெற்றிருக்கின்றா யன்றோ! இனி நீ இவ்வாறு வருந்தாமல், இப்பாண்டியனது கூடல் நகருக்குள் சென்று, நின்னை விருந்தாக எதிர் கொள்வாரைத் தெரிந்து திரும்பி வருவாயாக” என்று கூறினர்.

உடனே கோவலன், கண்ணகியை கவுந்தியடிகள்பால் விட்டு, யானைக் கூட்டங்கள் போக்கு வரத்துச் செய்கின்ற சுருங்கையை உடைய வீதியைக் கழிந்து சென்று, மதில் வாயிலைக் காத்துக்கொண்டு இருக்கும் வாளையுடைய யவனர், ‘புதியன்’ என்று சந்தேகங் கொள்ளாமல் உள்ளே புகுந்து, ஆயிரங் கண்களையுடைய இந்திரனது மணிக்கலம் வைத்த பணிப் பெட்டகத்தைத் திறந்து வைத்தாற் போலிருக்கும் மதில் வட்டத்தையுடைய நகரினுள் புகுந்தவன்,

வடுவில்லாத சிறப்பினையும், அரசரும் விரும்பும் மனையினையும், அம்மனையில் வாழும் வாழ்க்கையையும், வேத்தியல் பொதுவியல் என்னும் இருவகைக் கூத்தின் தாளங்கள் தவறாமல் ஆடும் ஆடலையும், வரிக் கூத்துக்களையும் தாளங்களையும்

தூக்குகளையும் இவைகளோடு கூடியொலிக்கும் தோற்கருவிகளையும் உணர்ந்து, நால்வகைப்பட்ட அபிநயத்திலும் எழுவகைப்பட்ட எழுத்திலும் பொருந்தும்படி தலைக்கோற் பட்டத்தையும் பெற்று அறிவையும் அடைந்த வாரப்பாட்டைப் பாடும் கற்று வல்ல பெண்களும், தலைப்பாட்டைப் பாடும் கூத்தியும், இடைப்பாட்டைப் பாடும் கூத்தியும், ஒன்றுமுதல் ஆயிரத்தெண் கழஞ்சுபொன் ஈறாக நாடோறும் பரிசம்பெறும் வழக்கத்தில் தவறாது பெற்று, புதியோர் ஆயினும் 'மலர்தோறும் சென்று தேனையுண்டு வெறும்பூவை விட்டுவிடும் வண்டுபோல' ஒருவர் இடத்திலும் நிலைத்திராது கூடி அறுபத்து நான்கு கலைகளாலும் இன்பம் அளிக்க வல்ல கணவர் இல்லார் வாழ்கின்ற வீதிகளும்; அங்காடி வீதிகளும், *கொல்லாப் பண்டியும், தேர் வட்டையும், அழகிய தேர் மொட்டும், கவசமும், மணிகள் அழுத்திய அங்குசங்களும், தோற் கைத்தளமும், அரைப் பட்டிகையும், கட்டுக் குழியமும், வெள்ளிய சாமரமும், பன்றிப் படமும், தோற்படமும், சானமாகிய படமும், குத்துக் கோல்களும், செம்பாற் செய்தனவும், கஞ்சத்தால் செய்தனவும், புதுமையாக முடிவனவும், மாலையின் வடிவமாகப் புனைவனவும், ஆனைக்கோடு முதலியவற்றைக் கடையும் கருவிகளும், அகிற் புகைக்கு உரியனவும், மயிர்ச் சாந்துக்கு உரியனவும், பூவால் புனையும் மாலை வகைகளும் ஆகிய இவைகளில் மயங்கி, அரசரும் விரும்பிக் காணும் வளத்தையும் அழகையும் உடையதாகி விளங்குகின்ற பெரிய கடைத் தெருவும்; பெரியோர்கள் கூறுகின்ற குற்றம் பன்னிரண்டில் காகபாதம், களங்கம், விந்து, ஏகை எனப்பட்ட நான்கு குற்றங்களும் இல்லாமல் பசுமை பொருந்திய ஒளிபரந்த மரகத மணியும், பதுமராகம் நீலகந்தி குருவிந்தம் சோவாங்கமாகிய நால்வகை மாணிக்க மணியும், பூசத்தினது

* கொல்லாப் பண்டி - பல்லக்கு, விமானம்.

உருவினை யொத்த புருடராக மணியும், சூரியனது ஒளியையும் தேன் துளியையும் போன்ற வயிடூரிய மணியும், இருள் தெளிந்தது போன்ற நீலமணி வகையும், மஞ்சளும் சிவப்பும் கலந்ததைப் போன்ற கோமேதக மணியும், ஒன்றில் தோன்றிப் பல்வகைப்பட்ட மாணிக்கம் புருடராகம் நீலம் கோமேதகம் வயிடூரியம் என்பவைகளைப் போல ஒளியைவிடும் மணிகளும், சந்திரன் வெள்ளி அங்காரகன் போன்ற வெண்ணீர்மை செந்நீர்மை யுடைய உருண்டையான முத்துக்களும், துளைபடுதல் கல்லிடுக்கில் பட்டு வளைந்து இருத்தல் முறுக்குண்டு இருத்தல் முதலிய குற்றங்களில்லாத கொடிப் பவளங்களும் ஆகிய இவைகளை வணிகர்கள் கூடி விற்கின்ற இரத்தினக் கடைத்தெருவும்; சாதரூபம் கிளிச்சிறை ஆடகம் சாம்பூநதம் என்னும் நால்வகைப் பொன்னையும் விற்கும் வணிகர், வாங்க வருகின்றவர்கட்குச் சந்தேகந் தோன்றாதபடி "இவ்விடத்து இன்ன பொருள் இருக்கின்றது" எனக் காட்டுவதற்குரிய கொடிகளைக் கட்டி விற்கின்ற பொற்கடைகளும், நுண்ணிய பருத்தி நூலாலும் எலி மயிராலும் பட்டு நூலாலும் நெய்யப்பட்ட ஆடைகளை விற்கும் கடைகளும், துலாக் கோலையும் மரக்காலையும் கொண்டு தரகு செய்வோர் தடுமாறும்படி, எக்காலமும் எங்கும் மிளகுப் பொதியுடனே பாக்கையும் கூலத்தையும விற்கின்ற கடைகளும், அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் என்ற நான்கு வகையோரும் வாழ்கின்ற தெருக்களும்; முச்சந்தியும், நாற்சந்தியும், கோயில் அங்காடியும், பல பெரிய மன்றிடங்களும், தேர் வீதிகளும் ஆகிய இவ்விடங்களில் சூரியனது வெயில் தெரியாது மறைத்துக்கொண்டு இருக்கின்ற கொடிகள் நெருங்கிய பந்தரின் நிழலிலே கோவலன் திரிந்து கண்டு மகிழ்ச்சி யடைந்து திரும்பி வந்து கவுந்தியடிகளை யடைந்தான்.

14. மாதரியும் * கண்ணகியும்.

தண்ணளியோடு உலகைக் காப்பாற்றும் பாண்டியனது புகழமைந்த மதுரையின் அழகனைத்தையும் தான் கண்டுவந்த வதைக் கோவலன் கவுந்தியடிகளிடத்தில் புகழ்ந்து கூறினன். அப்போது காவிரிப்பூம் பட்டினத்துக்கு நான்கு நாழிகை தூரத்தில் தென் மேற்கே உள்ள தலைச்செங்காடு என்னும் ஊரில் வாழ்பவனாகிய மாடலன் என்னும் அந்தணன், அகத்திய முனிவன் வாழ்கின்ற பொதிய மலையை வலங்கொண்டு குமரியாற்றில் தீர்த்தமாடித் தன் ஊர்க்குத் திரும்புகின்றவன் வழிநடந்து வந்த வருத்தத்தால் அத்துயரம் நீங்க, கவுந்தியடிகள் தங்கியிருந்த பள்ளியிடத்தே வந்து சேர்ந்தனன். அவ்வாறு வந்த அம்மாடலனைக் கோவலன் கண்டு வணங்க, அவ்வந்தணனும், "நீவிர் இவ்வாறு வருதற்குக் காரணம என்ன?" எனக் கேட்டவன், கோவலனுடைய குணங்களை யெல்லாம் பின்வருமாறு புகழ்வானாயினன்.

"கரிகால் சோழனது தலைவரிசை பெற்ற மாதவியாகிய மடந்தை, மென்மையை அடையக் கூடிய ஒரு பெண் குழந்தையை நின்பாற்பெற்ற அப்பொழுது, பத்துநாளும் சென்ற பிறகு அம்மாதவியின் தாய் சித்திராபதி முதலியோர் உம்மிடத்தில்அக்குழந்தைக்கு நல்ல மங்கல மொழியான பெயரை இடும்படிக் கேட்க, நீர் அப்பொழுது, "எமது குலத்தில் முன்பு ஒருவன் கடலில் செல்லுங்கால் மரக்கலம் உடைபட்டு விட்டது; அவன் புண்ணியஞ் செய்தவன் ஆகையால் ஒரு துன்பமும் அடையாமல் கடலில் நீந்திக்கொண்டு இருக்குங்கால்

---

* மாதரி என்னும் இடைச்சியிடம் கண்ணகியை அடைக்கலமாக்குதல்.

ஒருதெய்வந் தோன்றி 'இத்தீவில் உள்ளவரை அரக்கர் வதை செய்யாமல் இந்திரன் ஏவலால் காத்துக்கொண்டு இருக்கின்றேன்; நின் துயரைக் கண்டு நீக்குவதற்கு வந்தேன்; இனி அஞ்சாதே; என் பெயர் மணிமேகலா தெய்வம்; என்றல் அன்றியும், நின் புண்ணிய பிருதியால் இக்கடலினின்றும் எழுவாயாக' எனச் சொல்லித் தன் மந்திரத்தால் அவனை எடுத்து ஓரிடத்தில் துன்பம் இல்லாமல் விட்டு விட்டது; அந்த (எங்கள்) குலதெய்வத்தின் பெயரை இக்குழந்தைக்கு இடுவீராக" என்று சொன்னீர். அக்கணிகையர் எல்லாருங் கூடி அந்நாளில் அரசரையும் நகரையும் வாழ்த்தி அக்குழந்தைக்கு 'மணிமேகலை' எனப் பெயரிட்டனர். நீரும் அப்பொழுது பொன்மாரி பொழிந்தீர். அப்பொழுது மோட்சத்தைத் தரும் ஞானத்தைப் பெற்ற ஒரு அந்தணன், தன் மூப்பால் உடல் வளைந்து நடை தளர்ந்து தான் பிடித்த ஊன்று கோலையே காலாக ஊன்றி நடந்து உம்பால் தானங்கொள்ளுதற்கு வந்தனன். அங்ஙனம் வருகின்ற வழியில் மதயானையொன்று அவ்வந்தணனைத் தன் கையில் பிடித்துக்கொள்ள, நீர் அச்சமயம் சென்று சத்தம் போட்டு அவ்வியானையினது கையில் இருக்கின்ற அந்தணனை நீக்கி, நீர் புகுந்த அளவில் உம்மைக் கையால் வளைக்க, நீர் அக்கையினின்றும் நீங்கிக் கொம்பின் வழியாய் ஏறிக் காதைப் பிடித்து அதன் பிடரின் மீது இருந்து அதன் மதத்தை அடக்கினீர் அன்றோ! அவ்வாறு செய்த கருணை வீரனல்லவா நீர்?

மற்றும் ஒரு பார்ப்பனத்தி, தான் வளர்த்த கீரிப்பிள்ளையொன்று தன் பிள்ளையைக் காத்திருக்க, அச்சமயம் ஒரு பாம்பு அக்குழவியைக் கொல்ல வர, அதனை அக்கீரிப்பிள்ளை கொன்று, கொன்ற இரத்த வாயுடனே தன் எதிரே வர, அதனைத் "தன் பிள்ளையைக் கொன்றதாம்" என நினைத்துத்

தன் கையிலிருந்த மணியால் அடிக்க அது இறந்துவிட்டது; இதனைக் கண்ட அவள் கொழுநன், வடதிசையை நோக்கிக் கங்கை யாடப் போகின்றவனை அவளும் பின் தொடர்ந்து செல்ல. அதனைப் பொறாது அவன், "ஏ பெண்ணே! நின்னோடு இனி இல்லறஞ் செய்ய முடியாது; நீ இவ்வேட்டில் எழுதியிருக்கின்ற வாசகத்துக்குத் தகுந்த பொருளை அறியும் மனிதர்கள் இடத்தே கொடுப்பாயாக!" என வடமொழி வாசகம் எழுதிய ஒரு ஏட்டைக் கொடுத்து விட்டுச் சென்று விட்டனன். அப்பார்ப்பனத்தியும் அவ்வேட்டைக் கொண்டு தெருக்களில் "இதன் பொருளைக் கூறி என் துன்பத்தைப் போக்குவார் உளரோ?" எனக் கூறிக்கொண்டு செல்ல, நீர் அவ் வடமொழியாளை அழைத்து, "நீ யடைந்த துன்பம் யாது?" எனக் கேட்டீர். அவளும், தான்செய்த தொழிலையும் அதனால் கணவன் பிரிந்த செய்தியையும், அவனைக் காணாது தானடையும் துயரத்தையும் கூறி ஏட்டினையும் காட்டினள். நீரும் அவ்வேட்டினைப் பார்த்து, "நீ பயப்படாதே! நின் துயரை யான் நீக்குகின்றேன்" எனக் கூறி, அப்பொழுதே உமது கைப்பொருளைக் கொண்டு தருமாசனத்தர் உரைத்த விதிப்படி அக்கொலைப் பாவம் நீங்குவதற்குரிய தானத்தைச் செய்து, அவளது துன்பத்தையும் நீக்கிக் காட்டுவழிச் சென்ற கணவனையும் வரவழைத்து அவளொடுங் கூட்டி, அவர்கட்கு வேண்டிய பொருளையுங் கொடுத்து யாகத்தையும் செய்வித்தீர். இவ்விதம் செய்த செல்வன் அன்றோ நீவிர்?

ஒரு பத்தினி பொய்யான பழியடைய அறிவில்லாத ஒருவன் அவள் கணவன்பால் பொய்ச் சாட்சி கூற, இவ்வகையோரைக் கொன்று உண்ணுகின்ற பூதத்தினுடைய பாசக்கயிற்றில் அவன் அகப்பட்டு வருந்த, அதனைக் கண்ட நீர் மனம் பொறாது அப்பாசத்தினுள் நுழைந்துகொண்டு,

"ஏ பூதநாதனே! நினக்கு உணவாக என்னுயிரைக் கொண்டு இவன் உயிரை விட்டுவிடுவாய்!" என்று கூற, அதற்கு அப் பூதம் இக்கீழ் மகனுடைய உயிர்க்குப் பதிலாக உன்னுடைய நல்லுயிரைக் கொண்டு மேலான வழியை இழந்து போகும் முறைமை என்னிடத்தில் இல்லை" என மறுத்துக் கூறி அவனைப் புடைத்து உமக்கு முன்னாலேயே அது கொன்று தின்ன, உடனே நீர் பெருந்துன்பம் அடைந்து, அவனது உற்றார் உறவினர்களை உமது சுற்றத்தாரைப் போல நினைத்துப் பல்லாண்டு அன்புகொண்டு அவர்களைக் காப்பாற்றினீர்! இவ்விதம் காப்பாற்றிய இல்லறத்தோர் தலைவனல்லவா நீவிர்?

யான் அறிய நீர் இப்பிறவியிற் செய்தது எல்லாம் நல் வினையே. ஆயினும் இம்மாணிக்கக் கொழுந்தாகிய கண்ணகி யுடன் தனிமையாக வந்து இவ்வாறு துன்புறுவது முற்பிறவி யிற் செய்த தீவினை தானோ! யாதோ?" என அம்மாடலன் கேட்டனன். இவ்வாறுகேட்ட அம்மாடலனுக்குக் கோவலன் பின்வருமாறு கூறத் தொடங்கினன். "ஐய! இப் பாண்டிய னுடைய நகரில் ஒரு கீழ்மகனால் இக்கண்ணகி நடுங்கித் துய ரத்தை யடைய, யான் கட்டிய ஆடை பிறரால் கொள்ளப் பட்டுக் கொம்பினையுடைய கிடாவின்மேல் ஏறவும், பின் இவ ளோடு பற்றற்றோர் அடையும் பெரும்பேற்றை யான் அடைய வும், மன்மதன் தான் மலரம்புகளை வெறுநிலத்தே எறிந்து செயலற்று ஏங்கும்படி போதிக் கடவுளிடத்தில் மணிமே கலையை மாதவி யளிக்கவும், இன்று விடியற் காலத்தே கனவு கண்டேன். அதுவும் * கடை சாமத்திற்கண்டேன். ஆதலால் உடனே பலிக்கும் போலும்" என்றனன்.

---

*படைத்தமுற் சாமமோ ராண்டிற் பலிக்கும் பகரிரண்டே,
கிடைத்தபிற் சாமம் மிகுதிங்கள் எட்டிற் கிடைக்கு மென்றும்
இடைப்பட்ட சாமமோர் மூன்றினில் திங்களோர் மூன்றென்பவால்
கடைப்பட்ட சாமமும் நாள்பத்துளே பலன் கைபெறுமே.

என்றது கனவு நூல்.

பின்பு, கவுந்தியடிகளும் மாடலனும் கோவலனைப் பார்த்து "துறவறத்தான் இவ்விடத்தில் இருப்பது பொருந்துமே அல்லாது மற்றவர்க்குப் பொருந்தாது; ஆதலால், சூரியன் மறைவதற்கு முன்பே நீ நின் காதலியுடன் மதுரை நகருக்குள் செல்லுவாயாக" என்று கூறினர்.

இவ்வாறு கூறிக்கொண்டிருக்கும் பொழுது ஆயர்குலத்துப் பிறந்த 'மாதரி' என்னும் பெயரையுடைய முதுமகள், பால்சோறு கொண்டுபோய் 'இயக்கி' யென்னும் தெய்வத்துக்கு வைத்து வழிபட்டுத் திரும்புகின்றவள், இப்பள்ளியின் உள்வந்து கவுந்தியடிகளைக் கண்டு திருவடிகளில் வீழ்ந்து தொழுதனள். கவுந்தியடிகளும், "பசுவைக் காத்து அப்பசுவின் பாலைப் பலர்க்கும் அளிக்கும் இந்த இடையருடைய இல்வாழ்க்கையில் ஒரு குற்றமும் இல்லை; அன்றியும், நமது சொற்படியே நடக்கின்றவள்; ஆதலால் கொடுமையும் உண்டாகாது; அல்லாமலும் முதுமகள்; பொறுமைக் குணமில்லாதவள்; ஆகையால் இம்மாதரியின் இடத்தே இம்மடந்தை கண்ணகியை இன்றைக்கு அடைக்கலமாக வைப்பதனால் ஒருதீங்கும் உண்டாகாது" எனத் தம் மனத்தில் எண்ணிக் கொண்டு, அம்மாதரியைப் பார்த்துக் கூறத் தொடங்கினர்.

"ஏ மாதரி! யான் கூறுவதைக் கேள். இம்மடந்தையின் கணவனுடைய தந்தை பெயரைக் கேட்பாராயின், இவ்வூரிலுள்ள வணிகர் பெறுதற்கரிய பெரும் பொருளைப் பெற்றவர்போல் எதிர் கொண்டு அழைத்துச் சென்று நல் விருந்தாகத் தமது மனையிடத்தில் இம்மடந்தையோடு வைத்துக்கொள்வர். அவ்விதம் இவர்கள் செல்லுமளவும் நின்பால் இப்பெண்ணை யான் அடைக்கலமாகத் தந்தேன். ஆதலால் இந்நங்கைக்கு ஆயமகளிரும் செவிலித்தாயரும் நற்றாயும் நீயே ஆவாய். இவளுடைய கால்களை இதற்கு முன்பு மண்மகளும்

கண்டறியாள். காதலன் துயரைத் தன் துயரெனக் கருதும் பூங்கொடி போல்வாள். அன்றியும்,

"இந்துணை மகளிர்க்கு இன்றி யமையாக்
கற்புக்கடம் பூண்டஇத் தெய்வம் அல்லது
பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலமால்!
வானம் பொய்யாது வளம்பிழைப்பு அறியாது
நீள்நில வேந்தன் கொற்றஞ் சிதையாது
பத்தினிப் பெண்டிர் இருந்த நாடு."

என்று பெரியோர்கள் சொல்லும் நல் லுரைகளைக் கேட்டிருப்பாய். மற்றும் தவத்தையுடையோர் அடைக்கலமாகக் கொடுத்த பொருள் அப்பொழுது சிறிதாய் இருப்பினும், பின்பு பேரின்பத்தைத் தரும். காவிரிப்பூம் பட்டினத்துள் பிண்டிமரத்தின் நிழலில், சாவகர் அனைவரும் ஒருங்கு கூடியிட்ட சிலாதலத்தின் மேலிருந்து தருமத்தைக் கூறிக்கொண்டிருக்கும் சாரணர் முன்பாக, ஒளிவிட்டு அழகைத் தரும் திருமேனியை உடையவனாய், பொற்பூணை உடையவனாய், மக்கள் கண்ணிற்குத் தோற்றாத தேவர் பலரும் தொழத் தகுந்த தேவ வடிவை உடையவனாய் ஒருவன் ஒரு பக்கத்தில் கருங்குரங்கின் கையைப் போன்ற கையைக் கொண்டு வந்து நின்றனன். அவனைக் கண்டவுடன், அச்சிலாதலத்தின் கீழிருந்து தருமங் கேட்டுக் கொண்டிருந்த சாவகர் அனைவரும் எழுந்திருந்து, தமக்குத் தருமத்தைக் கூறும் சாரணரைத் தொழுது, "இவன் இங்கு இவ்வாறு வருவதற்குக் காரணம் என்ன?" எனக் கேட்டனர். அப்போது அச்சாரணர் பின் வருமாறு கூறுவாராயினர்.

எட்டிப்பூ பட்டத்தையுடைய சாயலன் என்னும் வணிகனுடைய, உண்ணா விரதத்தையுடைய பலரும் வந்து புகும்

வீட்டில், அவன் மனைவி ஒரு பெரிய தவமுதல்வனைக் கண்டு தன் வினை நீங்க' எதிர்கொண்டு அழைத்தபோது, அவ் ஊரா ரால் துரத்தப்பட்டு உணவும் பெறாது துன்பத்தை யடைந்த ஒரு கருங் குரங்கு, பயத்தோடு அங்கு ஒதுங்கி உள்ளே புகுந்து அம் மாதவ முதல்வனை வணங்கி, அவன் உண்டு மீந்த அன்னத்தையும் அவன் கைகழுவிய நீரையும் அருந்திப் பெரும் பசிதீர்ந்து அம்முதல்வனை நோக்கியது. அந்நோக் கத்தைக் கண்ட அம்முதல்வனும் மனமகிழ்ந்து அப்பெண் ணைப் பார்த்து "நீ நின் குழந்தைகளுள் ஒன்றாக இதனைப் பாவித்துக் காப்பாயாக!" என அடைக்கலந் தந்தனன். அவ ளும் அம்முதல்வனது வார்த்தையைத் தட்டாது காப்பாற்றி வரும்போது அக்குரங்கு இறந்து விட்டது. உடனே அக் குரங்குக்குத் தன் செல்வத்தில் உண்டான ஒரு பங்கு திர வியத்தை "இக்குரங்கினது தீயபிறப்பு ஒழியக் கடவதாக" எனத் தானஞ்செய்தனள். அத்தானத்தின் பலனாலே மத்திம தேசத்து வாரணவாசி என்னும் நகரில் 'உத்தர கௌத்தன்' என்னும் அரசனுக்கு மகனாய்த் தோன்றி, அழகோடும் மெய் யுணர்வோடும் மிக்கதான சூரனாய் விளங்கியது. பின்பு அவ னும் பலவகைப்பட்ட தானங்களைச் செய்து, அந்த அரசு உரிமையிலே முப்பத்திரண்டு ஆண்டு அரசு புரிந்து தெய்வ யாக்கையைப் பெற்றனன். அவ்வாறு தான்பெற்ற பெருமை யெல்லாம் தன்னைக் காப்பாற்றியவளது தானத்தால் உண் டான பயன் என்பதை உட்கொண்டு, முற்பிறப்பில் தான் அடைந்திருந்த கருங்குரங்கினது சிறிய கையினை ஒருபக்கத் திற்கொண்டு, "சாயலன் மனைவி செய்த தானத்தால் இந்த வடிவு ஆயினேன்" என்பதைச் சாவக நோன்பிகட்கெல்லாம் காட்டி அறிவுண்டாக்கவே இத்தேவ குமாரன் இங்கு வந்து தோன்றினன்" என உரைத்தனர்.

இவ்வாறு சாரணர் கூறிய நன்மொழியைத் தெய்வ வாக்கியமாகக் கொண்டு அறத்தின் வழிநின்று, அவ்வூரிலுள்ள அருந்தவர்களும் சாவகர்களும் முட்டாத பேரின்பத்தையுடைய வீட்டுலகத்தைப் பெற்றார்கள். ஆதலால் இப்போது யான் கூறிவந்த அடைக்கலத்தின் பயனை நீ உணர்ந்திருப்பாயாயின், இக்கண்ணகியை அழைத்துக்கொண்டு பொழுது போவதற்குள் காலந்தாழாமல் செல்வாயாக" என்று கவுந்தியடிகள் கூறினர்.

இதனைக் கேட்ட மாதரியும் மனமகிழ்ந்து கவுந்தியடிகளை வணங்கி, "வளர்ந்த அழகிய இளமையான தனங்களையும், மூங்கிலை வாங்கும் தோளினையும், முளைபோன்ற பற்களையும், சிறிய பருவத்தே பெரிய அறிவினையும் உடைய கண்ணகியைக் கோவலனோடு அழைத்துக்கொண்டு, சூரியன் மறையுங் காலமாகிய மாலைப் பொழுதில், கன்றைத் தேடிப் பசுக் கூட்டங்கள் முழக்கிக்கொண்டு வர, ஆட்டு மறியையும் கோடரியையும் உறிகட்டிய காவடியைத் தோளிலுமுடைய இடையருடனே பால் சுமந்து வரும் இடைச்சியரில் சிலர் இவளது அழகைக்கண்டு மகிழ்ந்து பின்னால் சூழ்ந்துவரச் சென்றனள்.

சென்றவள், காவற்காடும், அகழியும், தானே வளைந்து எய்யும் யந்திர வில்லும், நாங்கு போலிருந்து சேர்ந்தாரைக் கொல்லும் பொறியும், கல்லையுமிழுங் கவணும், சேர்ந்தாரைக் கொல்லக் காய்ந்து இரைக்கின்ற நெய்யும், செம்பினது உருக்கும், கல்லை வைத்திருக்கும் கூடையும், தூண்டில் வடிவாகச் செய்துவைத்துக் கிடங்கு நீங்கி மதிலைப் பற்றுவாரைக் கோத்திழுக்கும் கருவியும், கழுத்தில் போட்டு முறுக்குஞ் சங்கிலியும், ஆண்தலைப் பறவை வடிவாகப் பண்ணிப் பறக்கவிட்ட உச்சியைக்கொத்தி மூளையைக் கடிக்கும் பொறி வரிசைகளும், கிடங்கில் ஏறினால் மறியத் தள்ளும் இருப்புக் கவையும், கழுக்

கோலும், அப்புக் கட்டும், ஏவறைகளும், கைக்கு எட்டாத விட்டமும், மதிலைப் பிடிப்பவர்களைக் கையில் குத்தும் ஊசியும், பகைவர்மேற் சென்று சண்ணைக் கொத்தும் சிச்சிலிப் பொறியும், மதிலில் ஏறுகின்றவர் உடலைக் கிழிக்கும் பன்றிப் பொறியும், பேய் வடிவாகச் செய்த பொறியும், சகவிற் குவியலாக உள் வாயிற் படியிலே வீழ்த்திய மரங்களும், கணைய மரமும், விட்டேறும் சிறுசவளமும், வேலும், தள்ளிவெட்டி களிற்றுப் பொறி, விழுங்கும் பாம்பு கழுகுப் பொறி, புலிப் பொறி, குடப் பாம்பு, சகட்டுப் பொறி, ஆட்டுப் பொறி, அரிநூற் பொறி முதலியனவும், குருவித் தலைகளும் ஆகிய இவைகள் நிறைந்து விளங்கும் வெற்றிபொருந்திய கொடியை யுடைய மதில் வாயிலைக் கடந்து தன் வீட்டிற் புகுந்தனள்.

வீட்டிற்குச் சென்றவுடன், கவுந்தியடிகள்பால் அடைக்கலமாகப் பெற்ற கண்ணகியினிடம் மகிழ்ந்து, அவளை மோர் விற்கும் ஆயச்சியரோடு இடையர் குடியிருக்கும் வீட்டில் வைக்காமல், அழகு பொருந்திய காவணமுடைய சிறிய புது மனையின் இடத்தில் பொருந்தி யிருக்கும்படிச் செய்தனள். பின்பு சில ஆய்ச்சியருடன் கண்ணகியைப் புதிய நீரால் மஞ்சனமாட்டி, “அம்மே! இயற்கை யழகொடு எங்கள் மனைக்கு வந்த உனக்கு, நின்னடித் தொழிலை நீ கூறியபடி செய்ய யாரும் இல்லையென்று எண்ணேல்; என் மகள் ‘ஐயை’ என்பாளே நினது குற்றேவல் செய்பவள்; யானும் நின்னை அருமையாகப் பெற்ற பொன்னே போலக் காப்பாற்றுவேன்; இனி நீ ஒன்றுக்கும் கவலைப்படாது இருப்பாயாக!” எனச் சொல்லித் தொழுது, “கவுந்தியடிகள் உங்களை ஒரு தீங்கும் இல்லாமல் காப்பாற்றி அழைத்து வந்து இங்கு என்பால் கூட்டினர்; நின் கொழுநர்க்கு இவ்விடத்தில் யாதேனும் மனக்கவலை யுண்டா?” எனக் கூறிவிட்டுத் தன் மகளையும்

மற்றைப் பெண்களையும் பார்த்து, கோவலனுர் சாவக நோன்புடையவர் ஆதலால், நல்ல அடிசில் சமைப்பதற்கு நல்ல புதுப் பாத்திரங்களை விரைவில் கொண்டுவந்து கொடுப்பீர்களாக" எனக் கட்டளை யிட்டனள். உடனே, ஐயை முதலான இடைக்குலப் பெண்கள், மாதரி கூறியபடி நல்ல பாத்திரங்களோடு பலாக் கனியும் பலாக்காயும் வெள்ளரிக்காயும் கொம்மட்டிக்காயும் மாதுளங்காயும் வாழைக்காயும் மாங்கனியும் செந்நெல் அரிசியும் பாலும் நெய்யும் ஆகிய இவற்றைக் கொண்டுவந்து கொடுத்தனள்.

இவ்வாறு கொடுத்த பலவகையான காய்களைக் கண்ணகி கண்சிவப்ப அரிவாளால் துண்டுகள் செய்தனள். அச்சமயம் அவள் திருமுகம் சிவந்தது; கண்கள் சிவந்தன. காரணம் இதற்குமுன் அத்தொழில் செய்து பழக்கம் இல்லாமையே. இதனைக் கண்ட ஐயை வைக்கோலால் அடுப்பில் எரிமூட்ட, உடனே கண்ணகி தன்னறிவின் நன்மையால் பல பக்குவமாகச் சமைத்தனள். பின் கோவலன் வந்தவுடன் தாலப் புல்லினது வெண்மையான இதழ்களாலே முடைந்த தடுக்கு ஒன்றில் அவனை யமரச்செய்து, தன் மலர்போன்ற கைகளில் புதுக்கலத்தில் நீர்கொண்டு அவனது இணையடி மலர்களைக் கழுவித் தொழுது, "தமக்குப் பின்னுல் வருகின்ற துயரைக் கண்டு மயக்கமடைந்த மண்ணக மடந்தையினது மயக்கத்தைத் தீர்ப்பாள் போலத்" தன் கையால் குளிர்ந்த நீரைப் பூமியின்மீது தெளித்துத் தடவி மண்டலமாக இட்டுப், பின் குறு வாழையினது குருத்தை விரித்துப் போட்டு, அதில் அமுதைப் பெய்து ,கணவர்க்கு இன்னமுது ஊட்டினள். ஓதவும் உணரவும் அரிய வேதத்தில் வணிகர்க்கு விதித்த முறைப்படி, வாய்ப்பூச்சு பலியிடுதல் முதலியன வெல்லாம் கழிந்தபிறகு கோவலன் உண்ணத் தொடங்கினன்.

அச்சமயம் மறைவில் நின்று பார்த்துக்கொண்டு இருந்த ஐயையும் மாதரியும், "மதுரையில் இவ்வாயர் பாடியில் யாம் பெற்ற அமுதுண்கிற நம்பி, அந்த மதுரையில் ஆயர்பாடியில் அசோதை பெற்ற அந்த நல்லமுதுண்ட காயாம்பூப் போன்ற நிறத்தை யுடையோனாகிய கண்ணனோ! இந் நம்பியினது துயரைத் தீர்த்த இந்நங்கையும், காளிந்தி யாற்றில் நீலமணி வண்ணனது துயரைத் தீர்த்த பின்னைப் பிராட்டி யென்னும் விளக்கோ!" என மகிழ்ந்து புகழ்ந்து, "இவர்கள் அழகும் நமது கண்களுக்குள் அடங்கா" எனக் கூறிக்கொண்டு இருந்தனர். இங்ஙனம் இவர்கள் புகழ கோவலன் இன்னமுது உண்டனன்.

பின்பு, கண்ணகி தன் கணவனுக்கு அழகிய வெற்றிலைச் சுருளோடு *பிளவையுங் கொடுத்தனள். இவ்வாறு கொடுத்து நின்ற கண்ணகியைக் கோவலன் பக்கத்தில் அழைத்து, "நாம் எயினர் வாழ்கின்ற பாலைவனத்தில் வந்ததற்கு இரங்கி, நின் காலடி அருமையான வழியில் நடப்பதற்கு வன்மையுடையதோ எனவும் மயங்கி, நம்முடைய பெற்றோர் எவ்வளவு துன்பம் அடைகின்றார்களோ? நாம் இப்போது இங்கு வந்தது கனவோ? அன்றி நனவு தானோ? நனவாகுமாயின், முன்செய்த தீவினை தானோ! என் மனம் கலங்குகின்றமையால் ஒன்றையும் உணர முடியாதவன் ஆயினேனே! வீணரோடும் தூர்த்தரோடும் கூடிப் பிறரைப் புறங்கூறும் கூட்டத்தினது சிரிப்புக்குள் மயங்கிப் பாவமான மார்க்கத்தில் பொருந்தி நல்ல ஒழுக்கத்தைக் கெடுத்த எனக்கு இனி நற்கதி யுண்டாகுமா? அன்றியும், பெற்றோர்க்குச் செய்யவேண்டிய கடமையிலும் பிழைத்து விட்டேனே! நினக்கும் சிறுமை செய்தேன்! இவ்வொழுக்கம் குற்றம் என்பதைச் சிறிதும் கருதினேன் இல்லை! யான் இவ்வாறு இருந்தும், 'என்னோடு

* பிளவை - பாக்கு.

மதுரைக்கு எழுந்திரு' என்று அழைத்தவுடனே 'அது முறையன்று' என மறுக்காது என்னோடு சம்மதப்பட்டு எழுந்தாயே!" என இரங்கிக் கூறினான்.

இதனைக் கேட்ட கண்ணகி,

"அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை"

தங்களது தாய் தந்தையர் கண்டு, நீர் என்பால் இல்லாமை யால் உண்டாகிய வறுமையை யான் மறைத்துக் காட்ட, அவர்கள் அது தெரிந்து, தம் மனத்தில் கொண்ட அருளும் அன்பும் பொருந்திய மொழிகளாலே என்னுடைய பொறு மையைப் பாராட்டினர். அதுபோது பொய்நகை கொண் டேன். அதனைக் கண்டு, யான் எனது மனதில் கொண்ட வருத்தத்தையும் கவலையையும் வெளியிட்டு, வாய் திறந்து சொல்லுவதுபோல இருந்ததென்று அவர்கள் வருந்தினர். ஆதலால் தாங்கள் என்னைக் காப்பாற்றாது விட்டீர்களாயினும், தங்கள் வார்த்தையைச் சிறிதும் மீறாத வாழ்க்கையை உடையேன் ஆகையால், யான் தங்களுடன் வர உடன்பட் டேன்" என்றனள்.

இதனைக் கேட்ட கோவலன், "தாய் தந்தையர் குற் றேவல் மகளிர் செவிலித் தாயார் சேவிக்குந் தோழியர் முத லியோரை நீங்கி, நாணம் மடம் நல்லோர் ஏத்தும் அழகு கற்பு முதலியவற்றையே துணையாகக் கொண்டு, அறிவற்ற என்னோடு வந்து எனது தனிமையைத் தீர்த்த

"பொன்னே! கொடியே! புனைபூங் கோதாய்!
நாணின் பாவாய்! நீள்நில விளக்கே!
கற்பின் கொழுந்தே! பொற்பின் செல்வி!"

யான் நினது காற்சிலம்பில் ஒன்றைக் கொண்டு இந்நகருக்குள் சென்று விற்று வருகின்றேன்; யான் விற்று வருமளவும், 'நாம் தனிமையாய் இருக்கின்றோமே' என நீ வருந்தாது இருப்பாயாக" எனக் கூறிவிட்டுத் தன் காதலியின் மெய்யைத் தழுவி, அவள் அருகில் ஒருவரும் இல்லாமல் தனியே இருப்பதற்கு வெதும்பிக் கண்கள் நீர் ததும்ப, இக்கண்ணீரை இவள் கண்டால் மிகவும் வருந்துவள்' என்று வெளிக்காட்டாமல் அடக்கிக்கொண்டு வீட்டை விட்டு நீங்கி அத்தெருவின் வழியே சென்றனன்.

15. கோவலன் கொலையுண்டல்.

கோவலன், மாதரி வீட்டைவிட்டு நீங்கித் தெருவிற் செல்லும்போது காளைமாடு ஒன்று எதிர்த்துப் பாயவந்தது, அச்சகுனத்தை 'இடையர் குலத்தவரன்றித் தன் குலத்தவர் பார்க்கும் சகுனம் அன்று' எனக் கொள்வான் ஆயினன். அவ்வீதியின் நடுவே நீளச் சென்று மன்றங்களை யெல்லாங் கடந்து தனித் தெருவின் வழியாய்ப் போய்க் கடைத் தெருவிற் புகுந்தனன்.

அப்போது, உருக்குத் தட்டாரும் தொழிலில் தேர்ந்த பணித்தட்டாரும் ஆகிய நூற்றுவர் தன்பின் தொடர்ந்துவர, அரச வரிசையாகிய சட்டையுடனே கையிற்பிடித்த பிரம்பையும் கொண்டு ஒதுங்கி நடந்து தன் எதிரே வந்த 'பொற் கொல்லனைக்' கோவலன் கண்டனன். கண்டு, "இவன் பாண்டியனால் நன்கு மதிக்கப்பட்டவன் போலும்" எனக் கருதிப் பக்கத்தில் சென்று, "ஐய! பொற் கொல்லரே! நீர் அரசன் தேவி காலில் அணியக் கூடிய சிலம்பு ஒன்றை விலைமதிக்க வல்லவரா?" எனக் கேட்டனன். அதற்குப் பொற் கொல்லன், "ஐய! அரசன் தேவி அடிகளில் அணியும் அணிகளை விலை மதித்தற்கு யான் அறியாவிட்டாலும், அரசனது கிரீடம் முதலியவற்றைச் செய்ய வல்லவன் யான்!" என யமதூதனாக வந்தவன் போலக் கூறினான். உடனே கோவலன் யாவராலும் புகழ்தற்கொத்த சிலம்பினைக் கட்டி வைத்திருக்கின்ற மூட்டையை அவிழ்த்துச் சிலம்பினை எடுத்துத் தந்தனன். பொற்கொல்லனும் அதனை அகமகிழ்ந்து வாங்கி, தலையான மாணிக்கத்தோடு வயிரத்தையும் வரிசையாக அழுத்தியிருக்கின்ற குழிகளையுடைய கிளிச்சிறை யென்னும் செம்பொன்னாற் செய்த சித்திரத் தொழிலையுடைய அச்சிலம்பினது அருமையான தொழில்களை யெல்லாம் பார்த்து,

பொய் சொல்லுவதையே தொழிலாகக் கொண்ட தன்னெஞ்சம் * இடுவந்தி கூறுதலை நினைக்கத் தன் கண்களால் உற்றுக் கவனித்தான்.

பின்பு, கோவலனைப் பார்த்து, "ஐய! அரசன் தேவி பெருந்தேவிக்கே அல்லது இப் பெருவிலைச் சிலம்பு வேறு ஒருவராலும் வாங்க முடியாது ஆதலால், யான் இதனை அரசன்பாற் சென்று காட்டி மீண்டு வருமளவும் என் புன் குடிசிலுக்குப் பக்கத்தேயுள்ள இடத்தில் நீர் சற்று இரும்" என்று கூறினன்; கோவலனும் அவ்விடத்திற்குச் சென்று தங்கியிருந்தனன்.

பொற்கொல்லன் தனக்குள், "யான் முன்பு வஞ்சனையாகக் கவர்ந்துகொண்ட சிலம்பு என்னிடத்தில் இருக்கிறது! எனைப் பலருங் காண அரசருக்கு வெளிப்படும் முன்பு, வேறொரு தேயத்திலிருந்து வந்த இப்புதியவன்மேல் அப் பழியை யேற்றி, என்மீது சந்தேகம் உண்டாகாமல் செய்து கொள்வேன்" என்று நினைத்துக்கொண்டே வெளியில் விடானுய்ச் சென்றனன்.

அக்காலையில், "நாடக மகளிருடைய ஆடலும் அழகும் பாடலும் யாழிசையும் நம் காவலனுடைய மனத்தை விரும்பும்படிச் செய்தன" என்று ஊடினவளாய், வருத்தத்தைச் செய்யும் தலைவலி யென்று பொய்ச் சாக்கிட்டுக் கொண்டு, நற்குலப் பிறப்பினையுடைய கோப்பெருந் தேவி யென்னும் அரசி அரசனோடு பொருந்தாது, தன் அரண்மனையில் உள்ள அந்தப்புரம் சென்று புகுந்தனள். அதனால் அரசன் காம பரவசனாய் மந்திரிக் கூட்டத்தில் இருந்து பிரிந்து, அரிபரந்த

* இடுவந்தி கூறுதல் - குற்றம் இல்லாதவன்மேல் குற்றத்தை யேற்றுதல்.

கண்களையுடைய தாதிப் பெண்களுடனே கோப்பெருந் தேவி யிருந்த அந்தப்புரத்தை நோக்கிச் சென்றனன். அச்சமயத் தில், காலையுடைய வாயிலி னிடத்துப் பொற் கொல்லன் சென்று அரசனைக் கண்டு வீழ்ந்து தாழ்ந்து எழுந்து பின் வருமாறு கூறத் தொடங்கினன்.

"அரசே! கன்னக்கோலும் களவுக்கோலும் இல்லாமல் தூக்கத்தைச் செய்யும் மந்திரமே தன் திருட்டுக்குத் துணை யாகக் கொண்டுவந்து, வாயில் காவலரையும் மந்திரத்தால் நித்திரை கொள்ளும்படிச் செய்து, நமது அரண்மனையிலுள்ள சிலம்பை அபகரித்துச்சென்ற கள்வன் இவ்வூர் காவலருடைய கண்களையும் மறைத்து அடியேனுடைய புன் குடிசிலுக்குப் பக்கத்தே இருக்கின்றனன்" என்று கூறினன். இதனைக் கேட்ட வேப்ப மாலையையுடைய பாண்டியன், காவலாளரை அழைப்பித்து, "எனது மனைவியின் காற் சிலம்பு இவன் கூறும் கள்வன் கையில் இருந்தால், அவனைக் கொல்ல அச் சிலம்போடு அவனை யிங்குக் கொண்டு வாருங்கள்" என்று சொல்லக் கருதியவன், ஊழ்வினைப் பயனால் சிறிதும் சிந்தி யாமல் தேவியானவள் தன்னோடு கூடாது செல்லத் தானும் தோழிமார்களோடு காமபரவசனாய் அந்தப்புரத்தை நோக்கிச் சென்றவன் ஆகையால், "அவனைக் கொன்று இவள் ஊடல் தீர்க்க அச்சிலம்பினைக் கொணர்வீர்களாக!" எனக் கட்டளை யிட்டனன்.

அரசனது கட்டளையைப் பெற்ற காவலாளர்களோடு பொற்கொல்லன், "நாம் எண்ணிய எண்ணம் முடிந்து விட்டது" எனக் கருதிக்கொண்டே தீவினையாகிய வலைக்குள்ளே அகப்பட்டிருக்கும் கோவலனைச் சென்றடைந்தனன்.

அங்கு அமர்ந்திருந்த கோவலனைப் பார்த்துப் பொற் கொல்லன், "ஐய! இவர் அரசன் கட்டளையால் சிலம்பு காண

வந்துள்ளார். அதனைக் காட்டுவீராக!" என்று கூறிக்கேட்டு அதனை வாங்கி, அதன் தொழிலின் அருமையெல்லாம் காட்டுவான் போலச் சென்று, அக்காவலர்களைத் தனியே அழைத்துச் சென்று காட்டி, அரண்மனையில் இருக்கின்ற ஒற்றைச் சிலம்போடு பொருந்தியிருக்கும்படிப் பொய் கூறினன். அக்காவலாளர்களோ, கோவலனைக் கண்டவுடன் மனம் வேறுபட்டுப் பொற்கொல்லனைப் பார்த்து, "ஐய! இவனைப் பார்த்தால், இவனது உடலின் பார்வையாலும் முகத்தோற்றத்தாலும் இவன் இருக்கின்ற முறைமையாலும் கள்வன் என்று சொல்லப் படுவதற் கில்லை. அன்றியும், இவன் சொல்லப் படுபவனும் அல்லன்" என்று கூறினர். பொற்கொல்லனோ, அக்காவலாளர்களைப் பார்த்து நகைத்து இகழ்ந்து "களவு நூலிலுள்ள நுட்பங்களை யெல்லாம் நீங்கள் உணர்ந்திருக்க மாட்டீர்கள்! யான் கூறுகின்றேன்! கேட்பீர்களாக!" என்று கூறத் தொடங்கினன்.

களவின் தன்மை.

மந்திரம், தெய்வம், மருந்து, நிமித்தம், தந்திரம், இடம், கருவி, காலம் என்னும் எட்டையும் பலவகையாகக் கொண்டு களவு செய்வர் கள்வர்கள். ஆகையால் இவனைக் கொல்லாமல் இவன் மருந்தினால் மயங்கித் தவறு செய்வீர்களானால் நீங்கள் தண்டத்தையே அடைவீர்கள். இக்கள்வர்கள், தாம் கற்ற மந்திரத்தை நாவினால் உச்சரிப்பார்களாயின் தேவ குமாரரைப் போல வடிவு கொள்ளுவார்; நாம் அவரைக் காணமாட்டோம்.

மற்றும், தாங்கள் வணங்கும் தெய்வத்தை எப்பொழுதும் தங்கட்கு முன்னிற்கும்படி மனத்தினால் நினைப்பார்களாயின், அவர்கள் தங்கள் கையில் கவர்ந்துகொண்ட பொருளை நமக்குத் தோன்றும்படிக் காட்டியும் மறைந்து தப்பிவிடுவர்.

பின்னும், இவர்கள் மந்தால் நம்மை மயக்குவார்களாயின், நாம் இருந்த இடத்தை விட்டு நகரவும் முடியுமா?

இன்னும்- தாம் கொண்ட நிமித்தம் வாய்க்கப் பெற்றால் அல்லது பெறுதற்கரிய பெரும்பொருள் வரினும் களவிற்குச் செல்லமாட்டார்! அன்றியும், களவுநூலிற் கூறியிருக்கின்ற படி தொழில்களை யறிந்து சிந்தித்துச் செய்வார்களானால், தாங்கள் மண்ணுலகத்தில் இருந்தாலும் விண்ணுலகத்தில் உள்ள இந்திரனது மார்பில் அணிந்துள்ள ஆபரணத்தை யடைய விரும்பின் அதனையும் அடைவர்!

மற்றும், இப்பொருளைக் கொள்ளுவதற்கு இவ்விடமே தகுந்த இடமென்று இவர்கள் எண்ணித் துணிவார்களானால், அவ்விடத்தில் அவர்களைக் காண வல்லவர் யார்?

இன்னும் இவர்கள், களவு செய்யுங் காலம் இதுதான் என எண்ணிப் பொருளைக் கைப்பற்றுவாராயின், எவ்வளவு வலிமையுள்ளாராயினும் தடுக்க முடியுமா?

தவிறவும் இவர்கள், கருவிகளைக் கொண்டு பொருளைக் கைப்பற்றுவாராகுல், இவ்வுலகில் கண்கொண்டு காண்பவர் யார்? ஆதலால் இவர்கட்கு இரவென்றும் பகலென்றுமில்லை. இவர்களின் திருட்டுத் தனத்தை நாம் கேட்போமானால், நம்மால் புகழ்ந்து சொல்லவும் முடியாது. அன்றியும், இப் பாண்டியன் தம்பியினிடத்தில் முன்பு ஒரு சமயம் நடந்ததைச் சொல்லுகின்றேன் கேட்பீர்களாக!

ஒரு கள்வன் தூதுவன் வேடங்கொண்டு வந்து வாயிலில் பகற்பொழுதெல்லாம் இருந்து, இராத்திரியில் பெண்ணுருக்கொண்டு உள்ளே நுழைந்து விளக்குநிழலில் மறைந்து சென்று பள்ளியறையில் பயமின்றிப் புகுந்து மறைந்திருந்து

நெடுஞ்செழியன் இளங்கோ தூங்கும் சமயம் பார்த்து, அவனது மார்பில் பிரகாசம்விட்டு விளங்கிக் கொண்டிருந்த வயிரம் பொருந்திய ஆரத்தை அதிக விரைவாகக் கழற்றினன். உடனே அவ்வேந்தன் நித்திரை தெளிந்து தன் தோளைப் பார்த்தான். ஆரத்தைக் காணாமல் தன் உடைவாளை உருவினன். அச்சமயம் அந்தக் கள்வன், அவ்வாளின் உறையைக் கையிலே கொண்டு, அவ்வேந்தன் வாளால் குத்துந்தோறும் தன் கையில் இருக்கின்ற உறையிலே நுழையும்படிச் செய்து கொண்டு வந்தான்; வேந்தனும் திடுக்கிட்டு மனந்தளராமல் வாளை யெறிந்துவிட்டு மற்போர் செய்யத் தொடங்கினன்; அங்குநின்ற கள்வன், உடனே ஒரு தூணைத் தானாகக் காட்டி விட்டுத் தான் கற்ற மந்திரத்தால் மறைந்து விட்டனன். அவ்வாறு மறைந்த கள்வனை இவ்வுலகில் கண்டாருண்டா?" எனப் பொற் கொல்லன் சொல்லிக் கொண்டு இருக்கும் பொழுது அக்காவலாளர்களுள் ஒருவன் பின் வருமாறு கூறலாயினன்.

முன்பு ஒரு நாளில் ஒரு கள்வன், பூமியைப் பெயர்க்கும் உளியைக் கையில் கொண்டு, நீல ஆடையை உடுத்தி, பல கலன்களைக் கவர விருப்பங் கொண்டு, சாற்காலத்தின் நடுச் சாமத்தில் ஊரெல்லாம் நித்திரை செய்த பிறகு வந்தனன். யானும் என் உறையிலிருந்த வாளைக் கையில் வாங்கினேன். யான் வாங்கிய வாளை அவன் பிடுங்கிக் கொண்டனன். பிறகு என் வாளையும் அவனையும் எங்கும் தேடிப் பார்த்தேன். காணக் கூடவில்லை. ஆகையால் இக்கள்வரது செய்கை யாவராலும் காண்பதற்கு அரியது. இவனை நாம் வெட்டாது விட்டு விட்டால் அரசன் நம்மைத் தண்டிப்பான். இனி நாம்செய்ய வேண்டியவற்றைத் துணிந்து சொல்லுங்கள்" என்றான்.

இவ்வாறு பொற்கொல்லனும் மற்றவனும் கூற, அறிவில்லாத கொலையஞ்சாத ஒருவன், தன் கையிலே உள்ள வாளால் கோவலனை வெட்டிவிட்டனன். * * * * * உடனே துணிபட்ட முண்டத்திலிருந்து இரத்தம் பாவியெங்கும் ஓடிற்று! பாண்டியனுடைய செங்கோல் கொடுங்கோலாகக், கோவலன் தான் முன் செய்த தீவினையால் வெட்டுப்பட்டு இறந்துவிட்டனன். * * * * * * * * *

“நண்ணும் இருவினையும் நண்ணுமின்கள் நல்லறமே
கண்ணகி தன்கேள்வன் காரணத்தால்—மண்ணில்
வளையாத செங்கோல் வளைந்ததே பண்டை
விளைவாகி வந்த வினை”.

16. ஆய்ச்சியர் * குரவைக்கூத்து.

இடையர் குலத்திற் பிறந்த மாதரி யென்பாள் தன் மகள் ஐயையுடன், "சேர சோழர் மற்றுமுள்ள குறுநில மன்னர் முதலியோர் எல்லாம் தன் ஏவல்வழிகேட்டு நடக்கத் தன் ஆணையால் நில முழுவதையும் ஆண்ட பாண்டியனது அரண்மனையில் பள்ளி யெழுச்சி முரசம் இயம்பும்; ஆகையால் நமக்கு இன்று காலையில் நெய் அளக்கும் முறைமையாகும்" என நினைந்து, குடம் கயிறும் மத்தும் கொண்டு தயிர்த் தாழி இருக்கும் இடத்தை யடைந்தனள். அங்கு சென்றவள் உடனே தன் மகளைப் பார்த்து "நாம் உறையிட்ட தாழிகளில் பால் தோயாதிருக்கிறது! அல்லாமலும் நம்முடைய பசுக் கொட்டிலில் கட்டியிருக்கின்ற காளைகள், கண்களில் நீரைச் சொரிந்து கொண்டிருக்கின்றன! இதனால் நமக்கு ஏதாவது ஒரு உற்பாதம் உண்டாகும் போலும்" என்று கூறினள். முதல்நாள் வெண்ணெயை உருக வைக்கும்படி தன் மகளிடத்தில் கூறினள். அதுவும் உருகவில்லை! ஆட்டுக் குட்டிகளும் துள்ளி விளையாடா வாயின! பசுக் கூட்டங்களும் துன்பிக் கத்தி நடுக்கங் கொண்டிருந்தன! பசுக்களின் கழுத்திற் கட்டியிருந்த மணிகள் எல்லாம் தாமே அறுந்து விழுந்தன! இவைகளை யெல்லாம் கண்ட மாதரி, "நமக்குக் கட்டாயம் ஏதாவது தீங்கு உண்டாகும்! இக்காரணங்கள் எல்லாம் கேட்டிற்குக் கருப்பமாகும்!" என்று கூறி, இவைகளைக் கொண்டு நடுக்கங் கொண்ட தன் மகள் ஐயையைப் பார்த்து, "பெண்ணே! பயப்படாதே! முன்பு ஆயர்பாடியில் ஒரு மன்றத்தின்கண், மாயவன் தன் தமையனோடு ஆடிய பாலசரித நாடகங்கள் பலவுள. அவைகளுள்,

* குரவைக் கூத்து - கை கோர்த்து ஆடல்.

வேல் போலும் நெடிய கண்களையுடைய பின்னைப் பிராட்டியோடு அழகிய குரவை நாடகத்தை, மண்ணக மாதர்க்கெல்லாம் அணிகலமாகிய இக்கண்ணகியும் கண்டு விரும்ப யாம் ஆடலாம்; அவ்வாறு ஆடுதல் இக்கன்றுகளும் இப்பசுக்களும் பிணி நீங்கும்" என்று கூறிவிட்டு, ஏழு பெண்களைச் சேர்த்துக் கொண்டு தான் பின்னையாக நின்று பாடிக் கை கோத்து ஆடுகின்றவள்,

"கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்
இன்று நம்மானுள் வருமேல் அவன்வாயில்
கொன்றையம் தீங்குழல் கேளாமோ தோழீ. 1

கொல்லையெம் சாரல் குருந்தொசித்த மாயவன்
எல்லை நம்ஆனுள் வருமேல் அவன்வாயில்
முல்லையம் தீங்குழல் கேளாமோ தோழீ. 2

கோவா மலையாரம் கோத்த கடலாரம்
தேவர்கோன் பூணாரம் தென்னர்கோன் மார்பினவே
தேவர்கோன் பூணாரம் பூண்டான் செழுந்துவரைக்
கோகுல மேய்த்துக் குருந்தொசித்தான் என்பரால். 3

வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கிக்
கடல்வண்ணன் பண்டொருநாள் கடல்வயிறு கலக்கினையே
கலக்கினகை யசோதையார் கடைகயிற்றால் கட்டுண்கை
மலர்க்கமல உந்தியாய் மாயமோ மருட்கைத்தே. 4

திரண்டமரர் தொழுதேத்தும் திருமால்நின் செங்கமல
இரண்டடியால் மூவுலகும் இருள்தீர நடந்தனையே
நடந்தவடி பஞ்சவர்க்குத் தூதாக நடந்தவடி
மடங்கலாய் மாறட்டோய் மாயமோ மருட்கைத்தே. 5

மூவுலகும் ஈரடியால் முறைநிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியோடுங் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கைக் கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே. 6

பெரியவனை மாயவனைப் பேருலகம் எல்லாம்
விரிகமல உந்தியுடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியும் கையும் கனிவாயும் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார்தம் கண்ணென்ன கண்ணே. 7

மடந்தாழும் நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றத்
தொடர்ந்து ஆரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே
நாராய ணாஎன்னா நாவென்ன நாவே. 8

என்று இவ்வாறாகப் பாடி யாடி "நம்மால் ஏத்தப்பட்ட தெய்வம் நம் ஆனிரை யிடத்து உண்டாகிய பிணியைத் தீர்ப்பதாக! இடியைப் படையாக வுடைய இந்திரனது முடியை உடைத்த வளையைக் கையிற்கொண்ட பாண்டியனுடைய முரசம், பகைவர் பயங்கொள்ள என்நாளும் முழங்குவதாக!" எனச் சொல்லி வாழ்த்திக் குரவைக் கூத்தை முடித்தனள்.

கண்ணகி துயரம்.

குரவைக் கூத்து முடிந்தவுடன் அனைவரும் நீராடிப் பூக்கள் முதலியவற்றைத் தூவித் திருமால் அடியை ஏத்து தற்கு வையை யாற்றிற்குச் சென்றனர். சென்றவர்களுள் ஒருவள், நகரத்தினுள் நடந்ததொரு விஷயத்தைக் கேள்விப் பட்டுப் பதைபதைத்து விரைந்து கூறுவதற்கு ஓடிவந்தனள். வந்தவளும் கண்ணகியி னிடத்தில் கூறாமல், நீராடி நின்ற மற்ற மகளிரிடத்தில் இரகசியமாய்க் கூறி, அவர்களோடு தானும் பெருமூச்சு விட்டுச் சரியாத நடுக்கங்கொண்டு கண் ணீர்விட்டு வெளிப்பட வாயாற்கூறவும் நாவெழாது மயங்கிக் கொண்டிருந்தனள். அப்போது கண்ணகி இவைகளை யெல் லாங் கண்டு சந்தேகங் கொண்டு "தோழீ! என் காதலன் இன்னும் வரக் காணேன்! காணாமையால் என் நெஞ்சம் கலங்கி வருத்தங் கொள்கின்றது! கொல்லன் உலையிலூதும் துருத்தியின் மூக்கைவிட நெருப்பெழ மூச்சும் வருகின்றது! இவைகள் இப்படி யிருக்க, என்னை நோக்கி இவ்வாய்ச்சியர் கள் குறிப்பாற் கூறுவது யாதோ அறிகிலேன்!

"தஞ்சமோ தோழீ தலைவன் வரக்காணேன்
வஞ்சமோ உண்டு மயங்குமென் னெஞ்சன்றே
வஞ்சமோ உண்டு மயங்கும்என் னெஞ்சாயின்
எஞ்சிலார் சொன்னது எவன்வாழி யோதோழீ.

என்று துக்கித்துக் கொண்டிருந்தனள். இதனைக் கண்ட ஐயை, கண்ணகி படுந் துன்பத்தைப் பொறுக்க மாட்டாது, "அம்மே! அரசன் விரும்பிச் செல்கின்ற அந்தப்புரத்தில் உள்ள அழகிய சிலம்பைத் திருடிய கள்வன் என்று நின் கணவர் கோவலனாரை, வேலையுடைய கொலையாளர் *கொலை

* கொன்றுவிட்டார் என்று கூறினால் இவள் உயிரை மாய்த் துக் கொள்வாள் என்று பரியாயமாக மறைத்துக் கொலை செய்ய எண்ணிவிட்டனர் எனக் கூறினள்.

செய்ய எண்ணி விட்டனராம்" என்று கூறினள். இதனைக் கேட்ட கண்ணகி,

"பொங்கி யெழுந்தாள்! விழுந்தாள்! பொழிகதிர்த்
திங்கள் முகிலோடும் சேணிலங் கொண்டென்னச்
செங்கண் சிவப்ப அழுதாள்! தன்கேள்வனை
எங்கணு! என்னு இனைந்தேங்கி மாழ்துவாள்." 2

அந்தோ! தம்முடைய கணவர் நெருப்பின் மூழ்க, அவ ரொடும் அதனிடத்தில் அப்பொழுதே மூழ்காமல் கைமை நோன்பை நோற்றுத் துன்பத்தை யடையும் உயவல் பெண் களைப் போல, மக்கள் எல்லாம் பழிதூற்றப் பாண்டியன் தவறுதலைச் செய்ய, கணவனை யிழந்து உயிரோடு இருந்து அழுகின்றவள் யான் ஒருத்தி தானோ?

கணவனை யிழந்து நீர்த் துறைகள் பலவற் றுள்ளும் புகுந்து நீராடித் துன்பம் அடைந்திருக்கும் மகளிரைப்போல செங்கோலையுடைய பாண்டியன் தவறைச் செய்ய, அதனைப் பார்த்துக் கொண்டிருக்கின்ற அறக் கடவுளாகிய அறிவற் றவனே! அவ்வாறு வருத்தமுற்று இரங்குகின்றவள் யான் ஒருத்தி தானோ? நீ கூறுவாய்.

"தம்முறு பெருங்கணவன் தழல்எரி யகமூழ்க
கைம்மைகூர் துறைமூழ்குங் கவலைய மகளிரைப்போல்
செம்மையின் இகந்தகோல் தென்னவன் தவறிழைப்ப
இம்மையும் இசையொரீஇ இணைந்தேங்கி யழிவலோ." 3

என்று நைந்து நைந்து அழுது, "ஏ ஆயமாதர்காள்! நீங்கள் அனைவரும் கேளுங்கள்! ஏ கதிர்ச்செல்வனே! கடல்சூழ்ந்த இவ்வுலகத்தில் நீயறியாத பொருள் ஒன்றும் இல்லை! ஆகை யால் நீயறிய என் கணவன் கள்வனு?" எனக் கேட்டனள்.

அதுபோது "நின் கணவன் கள்வன் அல்லன்! அவனைக் கள்வன் என்ற இவ்வூரை விரைவில் தீயுண்ணும்!" எனக் கதிர்ச் செல்வன் அசரீரியாய் நின்று கூறினன்.

உடனே கண்ணகி, தன் காலில் இருக்கும் மற்றய சிலம்பு ஒன்றைக் கையில் ஏந்திக்கொண்டு அவ்வாயர்பாடியிலிருந்து புறப்பட்டு ஊர்க்குள்ளே சென்றனள். அவ்வாறு செல்பவள் அங்குள்ள கற்புடைய மகளிரைப் பார்த்து, "முறையில்லாத அரசன் இருக்கின்ற ஊரில் இருந்துவாழும் கற்புடைப் பெண்டிர்காள்! இச்சிலம்பு என் கணவன் விற்கக் கொண்டுபோன சிலம்பின் மற்றைச் சிலம்பு! நீங்கள் அனைவரும் காணுங்கள்! யானோ உலகில் யாவரும் படாத துயரம் பட்டேன்! ஒருவர் உறாத துயரம் உற்றேன்! உறுகின்ற யான் மரண வேதனைபோல உற்றேன்! இவ்வாறு துன்பம் அடைபவளாகிய யான் கூறும் மற்றொன்றையும் கேளுங்கள்! என் கணவனோ கள்வனல்லன்! யான் ஒரு வணிகன் மனைவி! என் கால் சிலம்புகளுள் ஒன்றின் விலையைக் கொடுத்து வாங்க முடியாது, அதனைக் கைக்கொள்ளுங் காரணமாக என் கணவனைக் கள்வன் என்று ஒரு சாக்கிட்டுக் கொன்றுவிட்டனர்! இது என்னே அநியாயம்! இது என்னே ஆச்சரியம்! இது என்னே ஆச்சரியம்! தம் கணவரையே விரும்பும் கற்பையுடைய காரிகையார் முன்னே, என்னுடைய கணவனை முன்போல யான் காண்பேனோ? யான் காண்பேனாயின் இது ஒரு புதுமையன்றோ? என் கணவனைக் கண்டால் அவன் வாயாற்கூறும் நல்ல வார்த்தைகளைக் கேட்பேனோ? கேட்பேனானால் இது எனக்கு ஒரு உறுதியாம்! அவ்வாறு கேட்காமல் போவேனேயானால் என்னைக் 'கள்வன் மனைவி' யென்று இகழுங்கள்! உங்களை யெல்லாம் இகழ்ந்த என்னை மறுத்துக் கூறி யிகழுங்கள்! இது உங்கட்கு ஒரு உறுதி!" என்று

கூறி வருத்தம் அடைந்து சகிக்க முடியாது நின்று அழு கின்ற கண்ணகியைக் கண்டு, மதுரையில் உள்ள எல்லாரும் ஆற்ற முடியாதவர்களாய்த் தாங்களும் துன்பம் அடைந்து அழுது மயங்கிப் பின்வருமாறு கூறலாயினர்.

"சாகுமளவும் நீங்காத துன்பத்தை இப்பெண்ணிற்கு உண்டாக்கிய காரணத்தால், ஒரு நாளும் வளையாத அரச னுடைய செங்கோல் வளைந்துவிட்டது! இனிமேல் என்ன விளையுமோ! மன்னர்க்கு மன்னனும், மதிபோன்ற குடை யையும் நெடிய வாளையும் உடையவனும் ஆகிய பாண்டிய னுடைய அரசியலோ அழிந்தது! இதனால் என்ன உண் டாகுமோ! உலகத்தவர்க்கு இன்பத்தையும் பகைவர்க்குத் துன்பத்தையும் செய்கின்ற வேலை யுடைய பாண்டியனது கருணையைச் செய்கின்ற குடையானது வெம்மையினை விளைத்தது! யாது மேல் உண்டாகுமோ! செம்பொன்னா லாகிய சிலம்பு ஒன்றைக் கையில் ஏந்திக்கொண்டு நம்மை யெல்லாம் கெடுத்தற் பொருட்டுப் புதுமையையுடைய பெரிய தெய்வம் ஒன்று இங்கு வந்தது போலும்! இதனால் இவ் வூர்க்கு யாது நேருமோ! செவ்வரி பரந்த மையுண்ட கண் களையுடைய இவள், விம்மிவிம்மி வாய்விட்டு அலறுகின்றனள்! தெய்வம் ஏறினவள்போல் இருக்கின்றாள்! நமக்கெல்லாம் என்ன துன்பம் நேருமோ, என இவ்வாறு பற்பல மாதர்க ளும் பற்பல வகையாற் கூறிக், கண்ணகி படுந்துன்பத்திற்குப் பெரிதும் வருந்தி, மன்னனது செய்கைக்கு ஏங்கி, செங்கோல் தவறிய அரசனையும் பழி தூற்றினர், சிலர், கோவலன் வெட்டுப்பட்டுக் கிடக்கும் இடத்தைக் கண்ணகிக்குக் காட் டினர். கண்டனள் கண்ணகி! விண்டனள் வாயை! ஓவென் றலறினள்! பூமியின்மீது புரண்டனள்! கடகட வென்று உருண்டனள்! மீண்டும் எழுந்தனள்! மயங்கி வீழ்ந்தனள்!

தியங்கிப் பார்த்தனள்! உடல் வேர்த்தனள்! கண்ணீர் விட்டனள்! கணவனைத் தொட்டனள்! துன்பப் பட்டனள்! அவ்வூரில் எங்கு பார்த்தாலும் அன்றைய மாலை முழுவதும் அழுகைக் குரலாகவே இருந்தது.

காலைப்பொழுதில் ஆயர்பாடியில் கணவனைத் தழுவிய கண்ணகி, தழுவியதற்குப் பதிலாக அவன் மாலையை வாங்கித் தன் தலையின்மீது அணிந்து கொண்டவள், மாலைப் பொழுதில் அவனுடைய உடலிலிருந்து ஒழுகும் இரத்தம் எல்லாம் தன்னை நனைக்க, அவன் தன்னைக் காணாத துன்பத்தையே தான் கண்டனள்! கண்டு அவன்மீது விழுந்தனள்! விழுந்து புரண்டனள்! புரண்டு உருண்டனள்! உருண்டு அழுதனள்! அழுது விழுந்தனள்! விழுந்து தொழுதனள்! தொழுது ஐயோ என்று அரற்றினள்! அரற்றிப் பின் வருமாறு கூறலாயினள்?

"என்னுடைய தனிமையான துன்பத்தைக் கண்டும், இவள் துன்பத்தை யடைகின்றாளே" என நினைக்கின்றீர் இல்லையே! சந்தனதிகளால் ஆட்டப்பட்ட உம்முடைய திருமேனி புழுதியிற் படிந்து கிடக்கலாமா! மன்னனால் செய்யப்பட்ட இக்கொலைத் தொழில், 'இன்ன காரணத்தால்தான் முடிந்தது' என அறியாத எனக்கு, 'முற்பிறப்பில் செய்த தீவினைதான்' என்று இந்நாட்டில் சொல்லுவார்களா? துணையாக ஒருவரும் இல்லாத இம்மாலைக் காலத்தில் துன்பத்தை யடைகின்ற என் கண்ணின் முன்பே, மாலையின் வரிசையால் மறைக்கப்படுகின்ற உம்முடைய திருமார்பு வெறு நிலத்தே மண்ணில் மூழ்கிக் கிடக்கலாமா! பூமியில் உள்ளோர் பழி தூற்றப் பாண்டியன் தவறாக எண்ண, அவனால் வெட்டுவித்த தீவினை யென்று இந்நாட்டில் சொல்வார்களா! கண்களில் நீரைச் சொரிவதற்குக் காரணமாகிய தீவினைப் பயனையுடைய

என் கண் முன்பே, இரத்தத்தைக் கக்கிக்கொண்டு புழுதி யாடிக் கிடக்கலாமா? மண்ணில் உள்ளோர் பழிதூற்ற மன்னவன் தவறிழைக்க வந்த தீவினை யென்று நாட்டில் சொல்லார்களோ!

“ பெண்டிரும் உண்டுகோல் பெண்டிரும் உண்டுகோல்
கொண்ட கொழுநர் உறுகுறை தாங்குறூஉம்
பெண்டிரும் உண்டுகோல் பெண்டிரும் உண்டுகோல். 4

சான்றோரும் உண்டுகோல் சான்றோரும் உண்டுகோல்
ஈன்ற குழவி எடுத்து வளர்க்குறூஉம்
சான்றோரும் உண்டுகோல் சான்றோரும் உண்டுகோல். 5

தெய்வமும் உண்டுகோல் தெய்வமும் உண்டுகோல்
வைவாளில் தப்பிய மன்னவன் கூடலில்
தெய்வமும் உண்டுகோல் தெய்வமும் உண்டுகோல். 6

என்று இவ்வாறு சொல்லி அழுகின்ற கண்ணகி, தன் கணவனுடைய அழகு பொருந்திய மார்பைத் தன் மார்போடும் பொருந்தும்படித் தழுவிக் கொண்டனள்.

உடனே, வெட்டுப்பட்ட கோவலன் உயிர் பெற்று எழுந்தனன்! எழுந்து நின்றவன் கண்ணகியைப் பார்த்து, “நிறைந்த மதிபோன்று ஒளிதங்கிய முகம் கன்றிவிட்டதே” எனத் தன் வாக்காற் சொல்லிக் கையால் அவள் கண்ணீரை மாற்றினன். பின்பு கண்ணகி, ஏங்கியழுது பூமியில் விழுந்து அவனுடைய இரு திருவடியையும் பிடித்துக்கொண்டனள்! உடனே, இவ்வுடலை விட்டுச் சுவர்க்கம் புகுவதாக எழுந்திருந்த கோவலன், “பெண்ணே! நீ இங்கே இருப்பாயாக!” எனக் கூறிவிட்டுத் தேவர் கூட்டத்துள் ஒருவனாக மறைந்துவிட்டனன்.

அப்பொழுது கண்ணகி, "அந்தோ! இவ்வாறெழுந்து நின்றது என்ன மாயமோ! இல்லாவிட்டால் பின் எதுவோ? என் மனத்தை மயக்கிய ஒரு தெய்வமோ! ஒன்றையும் உணர்ந்திலனே! எங்கு போய்த் தேடிக் கூடுவேன்! அவ்வாறு கூடுவது எளிதானாலும், என் கோபந் தணிந்தால் அல்லாமல் கூடமாட்டேன்! இக்கோபந் தணிவதற்கு, அக்கொடிய வேந்தனாகிய பாண்டியனைக் கண்டு, என் கணவனைக் கொல்வதற்கு என்ன காரணம்' எனக் கேட்பேன்!"

"என்றாள் எழுந்தாள் இடர்உற்ற தீக்கனு
நின்றாள் நினைந்தாள் நெடுங்கயற்கண் நீர்சோர
நின்றாள் நினைந்தாள் நெடுங்கயற்கண் நீர்துடையாச்
சென்றாள் அரசன் செழுங்கோயில் வாயின்முன்."

18. கண்ணகி வழக்குரைத்தல்.

'பாண்டியன் நெடுஞ்செழியன்' மனைவி 'பெருந்தேவி' என்பாள், அரசனது செங்கோலும் வெண் கொற்றக் குடையும் பூமியின்மீது விழவும், அரசனது வெற்றி பொருந்திய வாயிலின்கண் உள்ள மணியானது தானே ஆட்டுவாரின்றி யொலிக்கவும், இராக்காலத்தில் வானவில் தோன்றவும், பகற்காலத்தில் நக்ஷத்திரங்கள் வீழவும், எட்டுத் திசைகளும் அதிரவும், சூரியனை இருள் விழுங்கவும் தீக்கனவு கண்டு எழுந்திருந்து நடுங்கினவளாய், "நமக்கு ஏதாவது தீங்கு உண்டாகும் போலும்! அத்துன்பத்திற்கே இத்தீக்கனா அறிகுறியாகும். இதனை நாம் அரசன்பாற் கூற வேண்டும்" என்று எண்ணங்கொண்டு, கண்ணாடியையும் அணிகளையும் சேலையையும் பட்டையும் வெற்றிலைப் பெட்டியையும் வண்ணம் சுண்ணம் மான்மதம் சந்தனம் மாலை கவரி தூபம் முதலியவற்றையும் ஏந்திக்கொண்டு, கூனும் குறளும் ஊமையுமாகிய பெண்கள் தன்னைச் சூழ்ந்துவர, 'உலகத்தைக் காக்கும் பாண்டியன் மனைவியாம் பெருந்தேவி! வாழ்வாயாக' எனப் பலர்வாழ்த்த, ஆயப்பெண்களும் காவற்பெண்களும் அடிகளையேத்த அரசன்பாற் சென்று, தான் கண்ட கனவைக் கூறச், சிங்கம் சுமந்த பொங்கணைமீது பாண்டியன் கேட்டுக் கொண்டிருந்தனன். இவன் இப்படியிருக்க,

கண்ணகி, தன் கணவன் மறைந்த பிறகு சினந் தணியாதவளாய்ப் பாண்டியன் அரண்மனை வாயிலிற் சென்று, அங்கு வாயில் காத்துக்கொண்டு இருப்பவனைப் பார்த்து, "ஏ வாயிலோய்! அறிவில்லாத புண்ணியமற்ற நெஞ்சத்தினால் அரசநீதியில் தப்பிய அரசனுடைய வாயிலைக் காக்கும் வாயிலோய்!

கண்ணகி வழக்குரைத்தல் 131

உடனே உள்ளே அரசன்முன் சென்று, ஒருகையிற் சிலம்பு ஒன்றை யேந்தியவளாய்க் கணவனை யிழந்த பெண் ஒருத்தி வந்திருக்கின்றனள் எனச் சொல்லி வருவீராக!" என்று கூறினள். அவ்வாயில் காப்போனும் உடனே உட்சென்று "கொற்கை வேந்தே வாழி! பாண்டியன் மரபிற் பிறந்த தலைவ வாழி! செழியனே வாழி! தென்னவ வாழி! பழியில்லாத பஞ்சவ வாழி! மயிடன் தலையாகிய பீடத்தில் ஏறி யமர்ந்திருக்கின்ற மடக்கொடியாகிய வெற்றி பொருந்திய வேலையுடைய கொற்றவை அல்லள்! சப்தகன்னியரில் இளையவள் ஆகிய பிடாரி, எல்லாம் வல்ல இறைவனைத் திருநடனம் செய்யக் கண்ட பத்திரகாளி, என்று கூறலாம் என்றாலோ அவர்களும் அல்லள்! மாச்சரியத்தை யுடையவள் போலவும், கோபத்தை யுடையவள் போலவும், பொற்சிலம்பு ஒன்றை ஒருகையில் ஏந்தியவளாய், கணவனைப்பிரிந்த காரிகை ஒருத்தி நமது வாயிலில் வந்து நிற்கின்றனள்!" என்று கூறினன்.

இதனைக் கேட்ட பாண்டியன், "வாயிலோயே! நீ உடனே சென்று அம்மாதை இங்குக் கொண்டு வருவாய்" என்று கட்டளையிட, வாயில் காப்போனும் வெளியே சென்று கண்ணகியை அழைத்துக் கொண்டுபோய் பாண்டியன் முன் விட்டனன். கண்ணகி அங்கு சென்றவுடன், அவளைப் பார்த்துப் பாண்டியன், "நீர் ஒழுகுகின்ற கண்ணையுடைய பெண்ணே! நீ யார்? இங்குவந்த வரலாறு என்னை?" எனக் கேட்டனன். உடனே கண்ணகி, "ஏ ஒன்றுந் தெரியா மன்னா! யான் சொல்வதைக் கேள்! தன்னிடம் அடைக்கலம் புகுந்த புறவின் பொருட்டுத் தன் உடலைத் தந்து அதன் துன்பத்தைப் போக்கிய வள்ளன்மை யுடையவனும், தன் மகன் ஊர்ந்து சென்ற தேரினது காலில் ஒரு பசுவின் கன்று அகப்பட்டு இறக்க, அதனைப் பொறுக்காது பசுவானது அரண்மனை வாயிலின்கண் சென்று அங்குக் கட்டியுள்ள

மணியை அடித்துத் துன்பத்தைக் காட்ட, அதன் துயரைப் பார்த்து உள்ளதை யுணர்ந்து தன் மகனை வீதியில் படுக்க வைத்துத் தேர்க்காலால் உருட்டிக் கொன்று அரச நீதியைக் காப்பாற்றியவனும் ஆகிய புகழ்பெற்ற மன்னர்கள் இருந்து அரசாண்ட காவிரிப்பூம்பட்டினம் எனது ஊர். அவ்வூரில் கீர்த்தி பெற்ற செல்வம் வாய்ந்த மாசாத்துவான் என்னும் வணிகனுக்கு மகனாய்ப் பிறந்தும், சீவித்தலை விரும்பி ஊழ் வினை செலுத்த நின்னுடைய நகரின்கண் புகுந்து நின்னால் கொலைக் களத்தில் வெட்டுப்பட்ட கோவலனுடைய மனைவி யான்! என் பெயர் கண்ணகி யென்பர்!" என்று கூறினள்.

இவ்வாறு கண்ணகி சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்த பாண்டியன், "பெண்ணணங்கே! களவுத் தொழில் செய்யுங் கள்வனைக் கொல்லுதல் கடுங்கோல் அன்று! அது வேலையேந்திய செங்கோலையுடைய அரசரது கடமையாகும்!" என்றனன். உடனே கண்ணகி. "நல்வழியிற் செல்லாத கொற்கை வேந்தே! என்னுடைய காலினது சிலம்பினுள் இருக்கும் பரல்கள் மாணிக்கமாகும்!" என்றனள். அரசன் "நல்லது நீ கூறுவது உண்மையான வார்த்தையே! ஆனால் எம்முடைய சிலம்பினுள் இருக்கும் பரல்கள் முத்துக்கள் ஆகும்!" என்று கூறினன். உடனே அரசன், ஏவலாளரை விட்டு அச்சிலம்பை வரவழைத்துக் கண்ணகியின்பால் தந்தனன். அதனைப் பெற்ற கண்ணகி உடனே அச்சிலம்பை உடைத்தனள். அதனுள்ளிருந்த மாணிக்கப் பரல்கள் அரசன் முன் சிதறி விழுந்தன.

அம்மணியைக் கண்ட வுடனே அரசன் நடு நடுங்கி, "அந்தோ! பொற்கொல்லன் வார்த்தையைக் கேட்டு ஆராயாமல் பிழைசெய்து விட்டேனே! எனது செங்கோலும் கொடுங்கோல் ஆயிற்றே! யானோ அரசன்! யானே கள்வன்

ஆவேன்! இவ்வுலகத்தைக் காத்துவரும் நீதி என்றால் கெட்டு விட்டதே! என் ஆயுள் இன்றோடே ஒழியக் கடவதாக!” எனச் சிம்மாசனத்தி லிருந்து மயங்கித் திடீரென்று கீழே விழுந்து இறந்துவிட்டனன். உடனே கண்ணகி அச்சிலம்பை எடுத்துக் கோப்பெருந் தேவியின் முன் வீசி யெறிந்தாள். கோப்பெருந்தேவி நடுநடுங்கி, அம்மணி! தந்தை தாய் முதலியவர்களை இழந்தவர்க்கு அம்முறை சொல்லிப் பிறரைக் காட்டலாம்; ஆயினும் இது அவ்வாறாகக் காட்டப்படுந் தன்மையுடையது அல்லவே!” எனக் கண்ணகியின் காலில் விழுந்து வணங்கி, “எனக்கு மாங்கிலியப் பிச்சை கொடுக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டனள்.

“அல்லவை செய்தார்க்கு அறம்கூற்றம் ஆம்என்னும்
பல்லவை யோர்சொல்லும் பழுதன்றே — பொல்லா
வடுவினை யேசெய்த வயவேந்தன் தேவி
கடுவினையே செய்வதூங் காண். 1

காவி யுகுநீரும் கையில் தனிச்சிலம்பும்
ஆவி குடிபோன அவ்வடிவும் — பாவியேன்
காடெல்லாம் சூழ்ந்த கருங்குழலும் கண்டஞ்சிக்
கூடலான் கூடாயி னான். 2

மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்
கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும் — வையைக்கோன்
கண்டளவே தோற்றான்அக் காரிகைதன் சொற்செவியின்
விண்டளவே தோற்றான் உயிர். 3

19. *மதுரையை எரியூட்டுதல்.

கண்ணகி, "பாண்டியனுடைய மனைவியாகிய கோப்பெருந் தேவி! கொடு வினையாட்டியாகிய யான் ஒன்றுந் தெரியாத தன்மை யுடையேன். ஆயினும், †'காலையில் பிறருக்குத் தீங்கு செய்தவன் மாலையில் தனக்குக் கேட்டைத் தேடிக் கொள்வான்' என்பதை அறிவாயாக! அன்றியும், ‡தான் மணம்புரிந்த காலத்துச் சாக்ஷியாக நின்ற வன்னி மரத்தையும் மடைப்பள்ளியையும் பின்னால் தானிருந்த இடத்தில் தன் மாற்றாள் பொருட்டு வரவழைத்துக் காட்டிய கற்புடைய மகளும்;

தன் தோழிமார்களோடு கடற்கரைக்குச் சென்று மணற் பாவையைச் செய்துவைத்து விளையாடிக்கொண்டிருக்கையில், மற்றைய பெண்கள், "இப்பாவையே நின் கணவன்" என்று கூற, உடனே அப்பாவையை விட்டுப் பிரியாமலும், வீட்டிற்குச் சென்ற மற்றைய பெண்களோடும் போகாமலும் காத்துக் கொண்டிருந்து, தன்னுடைய கற்பின் திறத்தால் அலைகளும் அப்பாவையைக் கெடுக்காது சுற்றிக் கொண்டு வரும்படிச் செய்த பெருங் கற்பினையுடைய பெருமட மகளும்;

---

* கண்ணகி வஞ்சினம், மதுரையை எரியூட்டுதல்.

† 'முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்' என்பதும் 'பிறர்க் கின்னா முற்பகல் செய்யில் தமக்கின்னா, பிற்பகல் தாமே வரும்' என்பதும் இதனை வலியுறுத்தும்.

‡ இச்சரித்திரம் திருவிளையாடற் புராணத்திலும் கூறப்பட்டுள்ளது.

கரிகால் வளவனுடைய மகள், தன்னால் விரும்பப்பட்ட விச்சிக்கோன் என்பவனோடு கடற்கரைக்குச் சென்று விளையாட, அவ்விச்சிக்கோனை அலைகள் இழுத்துக்கொண்டு செல்ல, அதனைக் கண்டு மனம் பொறாதவளாகி அவ்வலையின் பின்னே தானும் சென்று, "மலைபோன்ற தோளையுடைய காதல!" எனத் துயரத்தோடு அழைக்க, அவள் கற்பிற்கு அஞ்சி அவ்வலையும் விச்சிக்கோனைக் கொண்டுவந்து நிறுத்திக் காட்ட, அவனை அன்புடன் தழுவிக் கொண்டுவந்த கற்பினையுடைய பொற்புடையவளும்;

தன் கணவன் பொருள் நிமித்தமாகக் கப்பலேறிக் கடல் யாத்திரை செல்ல, அவனை விட்டுப் பிரிந்திருக்க மாட்டாது தானும் கானலில் கல்லுருவமாய் நின்று, பின் அக்கடலில் தன் கணவனுடைய மரக்கலம் வருதல்கண்டு கல்லுருவத்தினை நீக்கிய கணிகையும்;

தன்னுடைய மாற்றாளுடைய குழந்தையானது தவறிக் கிணற்றில் விழுந்துவிடத் தானும் தன் குழவியையும் அக்கிணற்றில் போட்டுத் தன் கற்பின் பெருமையினால் அக்குழவிகளை யெடுத்துச்சென்ற வேல்போன்ற கண்களையுடையவளும்;

தன் கணவன் பிரிந்திருக்குங் காலத்தில் தன் அழகு பொருந்திய முகத்தை விடாமல் ஒரு விடபுருஷன் பார்க்க, அதனைப் பொறுக்காது உடனே தன் முகத்தைத் தன் கற்பின் திறத்தால் குரங்கு முகமாக்கிக் கொண்டிருந்து, பின் பிரிந்த கணவன் வரும் சமயத்தில் அக்குரங்கு முகத்தைப் போக்கி முன்பு இருந்த ஒளி பொருந்திய முகத்தைப் பெற்ற உறுதியான கற்புடைய பெண்ணும்;

வண்டல் விளையாடச் சென்ற இடத்தில் ஒருவள் தன் தோழியைப் பார்த்து, "தோழீ! யானும் ஒரு பெண்ணைப்

பெற, நீயும் ஒரு ஆணைப் பெற்றால் என் பெண்ணிற்குக் கணவன் நின்மகனே ஆவன்" எனக் கூறினள். தெய்வ சங்கற்பத்தால் அவ்வாறே தலைவிக்குப் பெண்ணும் தோழிக்கு ஆணும் பிறந்தது. அக்குழவிகள் வளர்ந்த பிறகு, தோழியானவள் ஒருநாள் தன் தலைவியைப் பார்த்து, "அம்மே! நாம் முன் வண்டல் விளையாட்டில் உறுதி செய்துகொண்டவண்ணம் நின் பெண்ணை என் மகனுக்குக் கொடுப்பாயாக!" எனக் கேட்டனள். இதனைக் கேட்ட பெண்ணின் தாயாகிய தலைவி, "நமது தோழியின் மகனுக்கா நமது ஒப்பற்ற பெண்ணைக் கொடுப்பது" என வருந்தித் தன் கணவன் பாற் கூற, இதனைக் கேட்டுக் கொண்டிருந்த அப்பெண், தானே புதிய ஆடையை உடுத்திக் கொண்டு மயிரைச் சீவி வகிர்ந்து கட்டிக் கொடுப்போரும் கொள்வோரும் இன்றித் தானே முன்னதாகத் தன் தாயின் தோழியின் வீடு சென்று தன் கணவன் எதிரில் தலைவணங்கி நின்று தன் கற்பை நிலைநாட்டினவளும்; ஆகிய

இக்கற்புடைய பொற்பமைந்த பெண்கள் எல்லாம் பிறந்த ஊரில் யானும் பிறந்தேன். யானும் ஒரு பத்தினியென்பது உண்மையேயானால் நான் சும்மா யிருக்க மாட்டேன்; அரசோடு மதுரையையும் அழித்து விடுவேன்; என்னுடைய உறுதியை நீ காண்பாய்!" என்று அப்பெருந்தேவியை விட்டு நீங்கி ஊரினுட் சென்று, "நான்மாடக் கூடலிலுள்ள மகளிர்களே! மைந்தர்களே! தேவர்களே! மாதர்களே! யான் சொல்வதைக் கேளுங்கள். என்னால் விரும்பப்பட்ட என் காதலனைத் தவறாகக் கொலை செய்த இவ்வூரை யான் எரிக்கப் போகின்றேன். என்மீது சிறிதுங் குற்றமில்லை" என்று கூறித் தன் இடத் தனத்தை வலக் கையால் திருகி, அம்மதுரையை மும்முறை வலம்வந்து ஒரு வீதியின்கண் நின்று ஆணையிட்டு நகரத்தின் மீது வீசி

எறிந்துவிட்டனள். இவ்வாறு வீசி விட்டவுடன், அக்கினிக் கடவுள் பார்ப்பனக் கோலத்தோடு கண்ணகிமுன் தோன்றி, "ஏ வீர பத்தினி! நினக்குத் தவறிழைத்த நாளில் இவ் வூரை எரிக்கும்படி முன்னமே ஓர் கட்டளையைப் பெற்றுள் ளேன். ஆதலால் இப்பொழுது யாரைவிட்டு யாரை அழிப் பது? கட்டளை இட்டருளல் வேண்டும்" எனக் கேட்க, கண்ணகி,

"பார்ப்பார் அறவோர் பசுப்பத்தினிப் பெண்டிர்
மூத்தோர் குழவி எனும் இவரைக் கைவிட்டுத்
தீத்திறத்தார் பக்கமே சேர்க!"

என்று கட்டளையிட, அப்பொழுதே அந்நகர் தீப்பற்றி மண்டி யெரியத் தலைப்பட்டது. அக்கினி தேவன் அழகிய மதுரை யம்பதியை எரிக்க, அந்நகரைக் காக்கும் காவல் தெய்வங்கள் அந்நகரை விட்டு நீங்கின. பாண்டியன் நெடுஞ் செழியன், தன் செங்கோலினது வளத்தை உலகத்தாருக்குக் காட்டச் சிம்மாசனத்தின் மீதே இறந்து கிடப்பதையும் அறியாது, ஆசான் கணக்கன் தருமாசனத்தர் வாயிலார் மந்திரவோலை யெழுதுவோர் கோயில் மக்கள் முதலியோர் மௌனமாய் இருக்க, குத்துக் கோற்காரர் குதிரைக்காரர் தேர்ப்பாகர் வளையுடைய வீரர் இவர்கள் எல்லாம் மயங்கித் துன்புற்று, அரசனுடைய வெற்றி பொருந்திய வாயிலில் தீ மண்டுவ தைக் கண்டு, உள்ளே சென்று அரசனைப் பார்த்து அத் தீயை அணைக்கத் தம்முள் விரைந்து சென்றனர். இவர்கள் இவ்வாறாக,

முத்துக்களின் ஒளியைப் போல் விளங்குகின்றவனும், வெண்டாமரை அறுகு நந்தியாவட்டம் முதலிய பூக்களைத்தலை யில் சூடியவனும், நுரை போன்ற வெண்மையான ஆடையை

உடுத்தியவனும், சந்தன முதலான வாசனைப் பொருள்களைப் பூசிய மார்பை உடையவனும், தேன் பால் சர்க்கரைக் கட்டி இவைகளோடு சேர்க்க வேண்டியவைகளைச் சேர்த்து வேக வைத்த உணவை யுடையவனும், தீர்த்தக் கரையும் தேவர் கோவிலும் வேத சாலையும் ஆகிய இடங்களில் நிற்கின்றவனும், விரிகுடை தண்டு கமண்டலம் காட்டம் தருப்பை முதலியவைகளைப் பிடித்த கையை யுடையவனும், நாவினும் மனத்தினும் நன்னூலைக் கூறிக் கொண்டிருப்பவனும் * முத்தீயை வளர்க்கும் முறைமையில் தவறாத வேத முதல்வனும், வேள்விக்கு வேண்டிய கருவியாகிய சமித்தை முதலிய கருவிகளை யுடையவனும் ஆகிய ஆதிப்பூதக் கடவுளும்;

பவளம் சூரியன் போன்ற நிறத்தை யுடையவனும்; குன்றுமணி முதலாகிய அணிகளைப் பூண்டவனும், சண்பகம் கருவிளை செங்கூதாளம் முதலியவைகளால் கட்டிய மாலையை உடையவனும், குங்குமம் முதலானவைகளை யணிந்த மார்பை யுடையவனும், செந்நிறங் கொண்ட பட்டாடை யுடையவனும், நல்ல பல்வகைச் சுவையுள்ள உணவைக் கொள்ளுபவனும், அருச்சுனனிடத்துச் சாரதியாய் நின்று தேரை ஓட்டி முரசு வெண்குடை கவரி கொடி அங்குசம் வேல் வடிகயிறு ஆகிய இவைகளைக் கையில் பிடித்தவனாய்த் துரியோதனன் முதலானவர்களை யெல்லாம் ஓட்டி வெற்றி கொண்டு செங்கோலோச்சிக் கொடுந் தொழில் உடையாரைக் கொன்று புகழைப் பெற்ற நெடியோனை ஒத்தவனுமாகிய அரசபூதக் கடவுளும்;

செம்பொன்னினது நிறம் போன்றவனும், அரசர்க்குரிய கிரீடம் தவிர மற்றைய ஆபரணங்களை அணிந்து கொண்டிருப்பவனும், வாணிக முறைப்படி உலகத்தைக் காக்க துலாக்

* முத்தீ – ஆகவனீயம், காருக பத்தியம், தக்கிணாக்கினி.

கோலைக் கையில் உடையவனும், பொன்னிறங் கொண்ட ஆடையை உடையவனும், வெட்சி தாழை ஆம்பல் நெய்தல் பூளை மருதம் முதலிய பூக்களால் ஆகிய மாலையை உடையவனும், சந்தனம் முதலான வாசனைப் பொருள்களை யணிந்த மார்பை யுடையவனும், கொள் பயிறு துவரை உளுந்து முதலியவை கலந்த உணவை உடையவனும், நெற்களம் வயல் வாணிபப் பீடிகை இவைகளைக் கொண்டவனும், மலையிலும் அலையிலும் உள்ள அருமையான பொருள்களைக் கொண்டு வந்து விருந்தினர்க்கு அளிப்பவனும், அவைகளை விலைக்கு வேண்டியவர்க்கு அளிப்பவனும், உழவுத் தொழிலை உதவுகின்ற வாழ்க்கைக்குரியவனும், இளம்பிறை சூடிய இறைவனை யொத்தவனும் ஆகிய வணிகப்பூதக் கடவுளும்;

நீலநிற மேனியை யுடையவனும், வெள்ளி முதலிய அணிகளைப் பூண்டவனும், ஒளிபொருந்திய உறுதியான ஆடையை உடையவனும், சந்தனம் காய்ந்திருக்கின்ற மார்பை யுடையவனும், கோட்டுப்பூ கொடிப்பூ நீர்ப்பூ நிலப்பூ முதலியவற்றால் கட்டிய மாலையை யுடையவனும், கம்மியரால் செய்யப்பட்ட கலப்பையை ஏந்தியவனும், பலி பெறுகின்ற பூதங்கட்கெல்லாம் தலைவனும் ஆகிய வேளாண்பூதக் கடவுளும்; ஆகிய

இந்நான்கு கடவுளரும் கூடி, “அரச நீதி தவறுமேயானால் தவறும் அந்நாளில் இந்நகரைத் தீயுண்ணும் என்பதை முன்னமே நாம் அறிந்துள்ளோம்; ஆதலால் நாமும் முறையாக விட்டுப்போவது முறையல்லவா” என்று தம்முள் கலந்துகொண்டு பெயர்ந்து விட்டனர்.

தீயானது குலவீதியும் கொடித்தேர் வீதியும் நால்வகை வருணத்தார் தெருவும் கலங்க, அறவோரிடத்தில் சேராமல் பாபச் செய்கைகளையுடைய சேரிமுதலிய இடங்களில் மண்ட,

பசுக்கள் கன்றுகள் முதலியவைகள் எல்லாம் அறத்தை யுடைய ஆயர்பாடியை அடைந்தன. யானைகளும் குதிரை களும் மதிற்புறத்துக்குச் சென்றுவிட்டன. சிறிது நேரமும் கணவனை விட்டுப் பிரியாத காம விளையாட்டை விரும்பிய காரிகையார்களும் அதனை விட்டுத், தம்மீது அணிந்துகொண் டிருக்கும் மாலை முதலியவைகள் எல்லாம் பரிந்து சிதறத், தம் குழந்தைகளோடு ஓடி மயங்கினர். வீட்டில் தூங்கிக் கொண்டிருக்கும் தாய்மார்களை எழுப்பி, அவர்களோடும் தம் குழந்தைகளோடும் ஓடுகின்ற பெண்களும், வருகின்ற விருந் தினரைக் காப்பாற்றும் இல்லறத்தில் வழுவாத பெருமனைக் கிழத்தியர் பலரும் ஒன்றுகூடி மகிழ்ச்சி யடைந்து, "ஒளி பொருந்திய ஆபரணங்களை யணிந்த மார்பினையுடைய தன் கணவனை யிழந்து, சிலம்பினால் பாண்டியனை வென்ற நங்கை யின் கொங்கையினால் உண்டாய தீ கொடிதோ? அன்று! அன்று!" எனத் தொழுது ஏத்தினர். அறுபத்துநான்கு கலைகளையும் ஒருங்கே யுணர்ந்த பண்ணியல் மடந்தையரும் நாடக மடந்தையரும் தங்கள் தங்கள் கருவிகளை யிழந்து, "இவள் எந்நாட்டாளோ? யார் மகள் கொல்லோ? இந் நாட்டின்கண் வந்து கணவனை யிழந்து ஒன்றும் உணராத மன்னனைச் சிலம்பினால் வென்று இவ்வூரையும் தீமூட்டினள்" என்று கூற, சீ பலியும் ஆரண வொலியும், செந்தீயை வளர்த் துத் தெய்வத்தை வணங்குதலும், மனையில் விளக்கேற்றுத லும், மாலை கட்டுதலும், முரசம் முழங்குதலும் ஆகிய இவை களை யெல்லாம் இழந்த பெரிய நகரின்கண், காதலனை யிழந்து அதனால் துன்புற்ற நோயோடு உளம் மிகக் கொதித்துக் கொல்லனது உலைத் துருத்திபோல் பெரு மூச்சு விட்டுக் கொண்டு வீதியினிடத்தும் சிறிய சந்தினிடத்தும் சுழன்று

சுழன்று திரிந்து கொண்டிருக்கின்ற பெரிய வீர பத்தினி யாகிய கண்ணகியின் துயரைச் சகிக்க முடியாது, மதுராபதி யென்னுந் தெய்வம் அவளுக்கு முன்வந்து தோன்றியது.

“மாமகளும் நாமகளும் மாமயிடற் செற்றுகந்த
கோமகளும் தாம்படைத்த கோற்றத்தாள் — நாம
முதிரா முலைகுறைத்தாள் முன்னரே வந்தாள்
மதுரா பதியென்னும் மாது. 2

20. கண்ணகி சுவர்க்கம் புகுதல்.

சடையையும், அச்சடைமேற் பிறையைச்சூடிய சென்னியையும், குவளைபோன்ற கண்ணையும் உடைய வெண்மையான முகத்தைப் பொருந்தியவள்—பன்றியினது கொம்புபோலும் பற்கள் விளங்கும் பவளம் போன்ற வாயையுடையவள்—ஒளிவிட்டுக் கக்குகின்ற முத்துப் போன்ற நகையை யுடையவள்—இடப்பக்கத்து நீலநிறத்தை யுடையவளாயினும் வலப்பக்கத்துப் பொன் போன்ற மேனியை யுடையவள்—இடக்கையில் தாமரை மலரை ஏந்தினும் வலக்கையால் மழு சூலம் முதலியவற்றை யேந்திக் கொண்டவள்—வலக் காலில் வீரக்கழலைக் கட்டியிருந்தாலும் இடக்காலில் சிலம்பு ஒலிக்குந் தன்மையை யுடையவள்—கொற்கைத் தலைவன், குமரித்துறைவன், பொற்கோட்டு வரம்பன், பொதியப் பொருப்பன் ஆகிய பாண்டியன் குலத்தை இரட்சிப்பதற்கு உரியவள்—ஆதலால் 'மதுராபதி தெய்வம்' என்பாள். இத்தெய்வம் வெளிப்பட்டு வந்து, வீரபத்தினியாகிய அழகிய கண்ணகிக்கு முன்னால் போக அஞ்சிப் பின்னாலேயே சென்று, "ஏ நங்காய்! என் குறையொன்று உண்டு; அதனைக் கேட்டு அருள்வாயாக! என்று கூறியது. இவ்வார்த்தையைக் கேட்ட கண்ணகி, உடனே வலது புறமாகப் பின்புறம் திரும்பி, "என் பின்னால் வருகின்ற நீ யார்? என்னுடைய துன்பத்தை நீ அறிவாயா?" எனக் கேட்டனள்.

உடனே அத்தெய்வமும், "நின்னுடைய துன்பத்தை யான் அறிவேன். பெண்ணே! இம்மதுரையிலுள்ள மதுராபதி யென்னும் தெய்வம் யான். நின்பால் ஒரு வார்த்தையைச் சொல்ல விரும்புகிறேன். நின் கணவற்கு உண்டாய

நிலைமையைப்பற்றி மிகவும் வருந்துகிறேன். ஆயினும் நின் கணவற்கு வந்த ஊழ்வினையினை யான் சொல்ல நீ கேட்பாயாக!" எனப் பின்வருவாறு சொல்லத் தொடங்கிற்று.

"இப்பெரிய மாநகரை முன்பு ஆண்ட பாண்டியர்களுள் எவரும் சிறிதும் கொடுங்கோன்மை புரிந்தார் அல்லர். மற்ற மன்னர்களால் வணங்கப்படும் தகுதியையே பெற்றிருந்தனர். அன்றியும் பிறரால் பழி தூற்றப்படும் கோலை யுடையவரும் அல்லர். * கீரந்தை என்னும் அந்தணனும் அவனது மனைவியும் அந்தரங்கமாகப் பேசிக்கொண்டு இருக்கும்போது நகர் சோதனையின் பொருட்டுச் சென்ற பாண்டியன் கதவைத் தட்ட, அதனால் அந்தணன் அஞ்ச அச்சமயம் அவன் மனைவி,

"† அரச வேலி அல்லது யாவதும்
புரைதீர் வேலி யில்லென மொழிந்து
மன்றத் திருத்திச் சென்றீர் அவ்வழி
இன்றவ் வேலி காவாதோ." 1

எனக் கூறினள். இதனைக் கேட்ட பாண்டியன் அஞ்சி நெஞ்சு நடுக்குற்று, தேவேந்திரனது பொன் முடியினை வளையால் உடைத்தெறிந்த தன் கையினை வெட்டித் தன் செங்கோலினது சிறப்பினைக் காண்பித்தனன். அக்குலத்திற் பிறந்தவன் அன்றோ இந்நெடுஞ் செழியன் என்னும் பாண்டியன். அன்றியும் பாண்டவரும் துரியோதனனுதியரும் போர் புரிந்த காலத்தில், அவர்கள் சேனைக்குச் சோறிட்டவனும், புறவின்

---

* இக்கதையை, திருவிளையாடல் பழியஞ்சின படலத்தில் உள்ள "தீமை செய்தாய் போல் செங்கை குறைத்தாய் முறையேயோ" என்ற அடியும் வலியுறுத்தும்.

† இச்சரித்திரத்தை பாட்டுக்களின் அரும்பத விளக்கத்தில் விரிவாக எழுதியிருப்பதைக் கண்டுகொள்க.

பொருட்டுத் துலாவில் புகுந்தவனும், பசுங்கன்றின் பொருட்டுத் தன் மகனைத் தேர்க் காலில் உருட்டியவனும், புகார் நகரிற்கு வேந்தனுமாகிய சோழனது நாட்டில் 'பராசரன்' என்னும் அந்தணன் ஒருவன் இருந்தான். அவன், 'இமய வரம்பன் தம்பி பல்யானைச் செல்புகழ்க் குட்டுவன்' என்னும் சேரநாட்டரசன், பாலைக் கௌதமனார்க்குச் சுவர்க்கத்தைக் கொடுத்த கொடைத்திறனைக் கேட்டுத், தானும் அச்சேரனைப் பார்க்க விரும்பி நாடும் காடும் ஊரும் கடந்து சென்று,

"ஒன்று புரிகொள்கை இருபிறப் பாளர்
முத்தீச் செல்வத்து நான்மறை முற்றி
ஐம்பெரு வேள்வியும் செய்தொழில் ஓம்பும்
அறுதொழில் அந்தணர் பெருமுறை வகுத்த
நாவலங் கொண்டு நன்னூர் ஓட்டிப்
பார்ப்பன வாகை சூடி." 2

நல்ல அணிகளைப் பெற்றுத் தன் ஊர்க்குத் திரும்பி வந்தனன்.

வரும்போது பாண்டி நாட்டிலுள்ள 'திருத்தங்காலூர்' என்னும் பதியை யடைந்தனன். அங்கு பாண்டியனை வாழ்த்திக்கொண்டு அரசமரம் நிற்கும் மன்றத்தில் தங்கினன். அப்போது அவனைச் சிறு பிள்ளைகள் பலர் சூழ்ந்து கொண்டனர். அவ்வந்தணனும் அக் குழந்தைகளைப் பார்த்து, "நீங்கள் வேதத்தை முறை வகுத்துக் கூறி விட்டு இக்கலன்களைக் கொண்டு போங்கள்" என்று கூற, அவர்களுள் 'தக்கிணாமூர்த்தி' என்னும் பையன் முறையாக மறையினையோத, அந்தணனும் மகிழ்ந்து அவனுக்கு வேண்டிய கலன்களைக் கொடுத்துவிட்டுத் தன் ஊர்க்கு வந்து விட்டனன். அச்சிறுவனும் அவ்வணிகள் பெற்றதை மற்றைய பிள்ளைகள் மனம் பொறாராகி, "இவன் திருட்டுப் பொருளை வைத்திருக்கிறான்

என்று குற்றஞ் சாட்டி, அவனது தந்தையையும் சிறை வைத்தனர். பின்பு அவ்வந்தணன் மனைவியும் தக்கிணாமூர்த்தியின் தாயுமாகிய 'கார்த்திகை' என்பவள், அழுது ஏங்கி நிலத்தில் புரண்டு மயங்கி ஓலிவென்று அலறித் துடித்தனள். இச்செய்கையைக் கண்டு 'துர்க்கை'யானவள் தன் கதவை யாவராலும் திறக்க முடியாதபடி அடைத்துக் கொண்டனள். இவ்வாறு அடைக்கப்பட்டு இருத்தலை பாண்டியன் உணர்ந்து மனந் தளர்ந்து "நம்முடைய நாட்டில் கொடுங் கோன்மையுண்டோ? கொற்றவைக்கு உற்றதுன்பம் யாது? விரைவில் அறிந்து கூறுங்கள்!" எனத் தன் பரிசனத்தாரைக் கேட்டனன். அச்சமயத்தில் அரசனது ஏவலாளர், அப்பாண்டியனைத் தொழுது, அந்தணனைச் சிறையில் அடைத்த திறனைக் கூறி, "யாங்கள் தெரியாமற் செய்த குற்றத்தைப் பொறுப்பீர்களாக" என வேண்டிக் கொண்டனர். உடனே அரசன், விளையுள் குன்ற வயலூருடன் தங்காலூரையும் விட்டுச் சிறையில் இருந்த 'கார்த்திகை'யின் கணவனாகிய அந்தணன் முன்னர் வீழ்ந்து கேட்டுக் கொண்டனன். உடனே துர்க்கையும் தன் கதவைத் திறந்து விட்டனள். ஆதலால் இந்நீதியையுடைய பாண்டியன் குற்றமுடையான் அல்லன்.

மற்றும் ஆடிமாதத்துக் கிருஷ்ணபக்கத்தில் அட்டமியில் கார்த்திகை பரணியில் இம்மதுரை தீயுண்ணவும், அரசு கெடவும் முன்னமே ஒரு வார்த்தை யுண்டு. அதன் விவரத்தைக் கூறுகின்றேன் கேள்.

அழகிய சோலைசூழ்ந்த கலிங்க நாட்டின்கண் தாயத்தார்களாகிய 'வசு, குமரன்' என்னும் இரு பெரு வேந்தர்களும் தம்முள் மாறுபட்டுப் பகைத்து, 'சிங்கபுரம்' என்னும் நகரத்தை 'வசு' என்பவனும், கபிலபுரம் என்னும் நகரதனைக்

'குமரன்' என்பவனும் அரசிருக்கையாகக் கொண்டு ஆண்டு வந்தனர். அவர்கள் இருவரும் தம்முள் நெருங்கிய போரைச் செய்கின்ற காலத்தில், ஆறு காவத தூரம் வரைக்கும் ஒருவரும் செல்ல முடியாது; அப்பேர்ப்பட்ட இடத்தில் பொருளை விரும்பிப் பலவகையான ஆபரணங்களைக் கொண்டு 'சங்கமன்' என்னும் வணிகன் தன் பத்தினியோடு ஒருவரும் அறியாமல் சென்று விற்றுக் கொண்டிருந்தனன். அப்பொழுது நின் கணவன் கோவலன், முற்பிறப்பில் 'பரதன்' எனப் பெயர்பூண்டு அரசனிடத்தில் தொழில் செய்துகொண்டிருந்தவன், அச்சங்கமன் என்னும் வணிகனைப் பிடித்து அரசன்பாற் கொண்டு சென்று, "அரசே! இவன் பகைவனது தூதுவன்!" என உணர்த்தினன். அரசனும், யாதொரு குற்றமில்லாத அவ்வணிகனைக் கொன்று விடுமாறு கட்டளையிட அரசன் ஏவலாளரும் கொன்று விட்டனர். இவ்வாறு கொல்லப்பட்ட அச்சங்கமன் மனைவி, தன் கணவன் கொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டுத் துன்பம் அடைந்து அழுது தன் உயிரை நீக்கிக் கொள்ளும் பொருட்டு ஒரு பெரிய மலையின் மீதேறி, "என் கணவனைக் கொன்றோர், நாங்கள் பட்ட துயர் படுக" எனச் சாபமிட்டுக் கீழே வீழ்ந்து இறந்தனள். அச்சாபத்தால் வந்த வினையே நின் கணவனை இவ்வாறு கொலை புரிவித்தது. மற்றும், அம்மணி! இன்னும் பதினான்கு நாளையில் நீ நின் கணவனைத் தேவ வடிவோடு காண்பாய்" எனக் கூறிவிட்டு அம்மதுரைமாதெய்வம் சென்று விட்டது.

பின்பு கண்ணகி, "கீழ் வாயில் வழியாகக் கணவனோடு வந்தேன்! மேலை வாயிலின் வழியாகத் தனியே செல்கின்றேன்" எனத் துன்பத்தோடு கூறி விட்டு, வையைக் கரை வழியே மேற்கு நோக்கிச் சென்று, மலை நாட்டையடைந்து அங்குள்ள "திருச்செங்கோடு" என்னும் தலத்திற்குச் சென்று, அங்கு மலைமீதேறி வேங்கை மரத்தின்கீழ்

பதினன்கு நாள் வரை காத்திருந்தனள். அங்கே தேவர்கள் எல்லாம் வாழ்த்த தெய்வ வடிவோடு வந்த கோவலனைக் கண்டு பெருமகிழ்ச்சி கொண்டு, அவனுடன் தெய்வ விமானத்தின்மீது ஏறிச் சுவர்க்கம் அடைந்தனள்.

"தெய்வம் தொழாஅள் கணவற் றொழுவாளைத்
தெய்வந் தொழுந்தகைமை திண்ணமால்—தெய்வமாய்
மண்ணக மாதர்க்கு அணியாய கண்ணகி
விண்ணக மாதர்க்கு விருந்து."

சுபம்! சுபம்! சுபம்!

நன்னெறி.

"பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்!
தெய்வம் தெளிமின்! தெளிந்தோர்ப் பேணுமின்!
பொய்யுரை அஞ்சுமின்! புறஞ்சொல் போற்றுமின்!
ஊன்ஊண் துறமின்! உயிர்க்கொலை நீங்குமின்!
தானம் செய்மின்! தவம்பல தாங்குமின்!
செய்ந்நன்றி கொல்லன்மின்! தீநட்பு இகழ்மின்!
பொய்க்கரி போகன்மின்! பொருண்மொழி நீங்கன்மின்!
அறவோர் அவைக்களம் அகலாது அணுகுமின்!
பிறவோர் அவைக்களம் பிழைத்துப் பெயர்மின்!

பிறர்மனை அஞ்சுமின்! பிழையுயிர் ஓம்புமின்!
அறமனை காமின்! அல்லவை கடிமின்!
கள்ளும் களவும் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்!
இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா
உளநாள் வவரயாது ஒல்லுவது ஒழியாது
செல்லும் தேஎத்துக்கு உறுதுணை தேடுமின்!
மல்லன்மா ஞாலத்து வாழ்வீர்!"



கதையில்வரும் பாட்டுக்களின் விளக்கம்.

பாட்டு. கதை **2**—பக்கம் **8, 9**.

(1) மாசு அறு பொன்னே=குற்றம் இல்லாத கண்ணுக்கு இனிமையான பொன்னை ஒப்பாய்; வலம்புரி முத்தே =வலம்புரிச் சங்கில் பிறந்த முத்தை ஒப்பாய்; காசு அறு=குற்றம் இல்லாத; விரை=வாசனை; அரும் பெறல்=பெறுவதற்கு அருமையான; உயிர் மருந்து =மிருத சஞ்சீவினி; என் கோ=என் பேனே; (அழிந்து போகின்ற உயிரை இமைப்பொழுதில் தருவதால் 'ஆருயிர் மருந்தே' என்றும், மலையினிடத்துப் பிறந்த மணி குழையாமையினாலும் இவர் குழைகின்றமையாலும் 'மலையிடைப் பிறவா மணியே' என்றும், கடலிற் பிறந்த அமுதத்துக்கு இவ்வுருவம் இல்லாமையால் 'அலையிடைப் பிறவா அமுதே' என்றும், யாழினது இசை கண்ணுக்குத் தோன்றாமையால் 'யாழிடைப் பிறவா இசையே' என்றும் புகழ்ந்து கூறினான்.)

கதை **6**—பக்கம் **47.**

(1) சந்திரனை யொத்த முத்து மாலைகள் பொருந்திய வெண் கொற்றக் குடையை உடையோனாகிய கரிகால் பெருவளவன் செங்கோல் செலுத்தி கங்கை யென்னும் பெண்ணைப் புணர்ந்தாலும், காவேரியே! நீ பிணக்கங் கொள்ளாய்! கயலாகிய கண்களையுடைய காவேரி! கங்கை என்னும் பெண்ணைப் புணர்ந்தாலும் நீ பிணங்காதிருத்தல், பெண்களின் பெருங்கற்பின் தன்மை யென்று அறிந்தேன். நீ வாழ்க!

(2) நிலைபெற்ற முத்துமாலை பொருந்திய வெண் கொற்றக் குடையை உடைய கரிகால் பெருவளவன், எல்லா நிலமும் தன்னுள் அடங்கச் செலுத்திக் குமரியைப் புணர்ந்தாலும் காவேரியே! நீ பிணக்கங் கொள்ளாய்!

பாட்டு, கயலாகிய கண்களையுடைய காவேரி! குமரி யென்னும் பெண்ணைப் புணர்ந்தாலும் நீ பிணங்காதிருத்தல், பெண்களது பெருங் கற்பின் தன்மை யென்று அறிந்தேன். நீ வாழ்க! (இவ்விரண்டும் "பிரிந்த தலைவன் தனது மனைக்கு வர, அவனோடு ஊடாது மகிழும் தலைவியைக் கண்டு பாங்கி புகழ்தல்" என்னுந் துறையில் பாடியது. 'கங்கை' வடக்கெல்லையையும், 'குமரி' தெற்கெல்லையையும் குறிக்கும். இங்குப் புணர்தலாவது ஆளுகையைக் குறிக்கும்).

(3) சோலைகள் தரும் நல்ல வாசனையையுடைய மலர்களே! மலர்கள் சிந்திக் கிடத்தலால் புதிய மணம் வீசுகின்ற மணற் குன்றுகளே! குற்றமற்ற தலைவியின் சொற்களும், சந்தனக் கோலத்தையுடைய இளமையான தனங்களும், கலை நிறைந்த சந்திரனை யொத்த முகமும், நெரித்தலினால் நிலையினின்று பிறழ்ந்த புருவமாகிய வில்லிரண்டும் ஆகிய இவைகளே, என்னைத் துன்பம் செய்த பொருள்களாம்.

பக்கம் 48.

(4) அலை விரிந்த நீர்த் துறையே! அழகிய மணல் பரந்த இடமே! வாசனையொடு மலர்கின்ற மலரே! இடமின்றி மரங்கள் நெருங்கிய சோலையே! வாசனை நீங்காத புரியை யொத்த கூந்தலும், சந்திரனை யொத்த அழகிய முகமும், இரண்டு கயல்களை யொத்த இரண்டு கண்களும் ஆகிய இவைகளே, என்னைத் துன்பம் செய்த பொருள்கள். (தலைவன் துன்புறுதல்).

(5) பவளக் கொடியாகிய உலக்கையைக் கையால் பற்றி, வெண்மையான முத்துக்களை அரிசியாகக் கொண்டு குற்றும் பரத்தியின் செவந்த கண்கள், குளிர்ச்சி இல்லாமையால் குவளை மலர் அல்ல. கொலை செய்வதால்

பாட்டு. கொடியன. ("தலைவியைப் புணர்ந்து நீங்கும் தலைவன், அவளைப் பிரிந்து விடுத்தல் அருமையால் ஆற்றானாய்த் தன் நெஞ்சிற்குச் சொல்லும்" துறைபற்றிப் பாடியது).

(6) தவழும் அலை நீரில் மூழ்கித் திரிகின்றவள் பின்னே செல்லுகின்ற புலவர்களால் உவமையாகச் சொல்லப் படுகின்ற அன்னமே! இவள் விளையாடுங் காலத்து இவள் நடை உன் நடையை யொக்கும் என்று நீ கருதுவை யாயினும், இவள் விளையாட்டு ஒழிந்து, தன்னியல்பால் செல்லுங் காலத்து இவள் நடையை உன் நடை ஒவ்வாது ஆதலால், இனிப்பின் செல்லா திருக்கக் கடவை.

பக்கம் 49.

(7) பக்கங்களில் வண்டுகளாகிய வளையல்கள் ஒலிக்க, அழகிய பூவாகிய ஆடையைப் போர்த்துக்கொண்டு, கரிய கயலாகிய கண்களை விழித்துக், காவேரியே! நீ துவண்டு நடந்தாய்! அவ்வாறு நடந்ததெல்லாம், உன் கணவனாகிய கரிகாற் பெருவளவன் செங்கோலானது வளையாமையை அறிந்தேன். நீ வாழ்க!

(8) மலர் நிறைந்த சோலையில் மயில்கள் கூத்தாட, புனத்திலுள்ள குயில்கள் இசை பாட, விருப்பந் தருகின்ற மலர்மாலை அருகிலசைய காவேரியே! நீ நடந்தாய்! நீ அவ்வாறு நடந்த தெல்லாம், நின் கணவனாகிய கரிகால் பெருவளவனுடைய அச்சத்தைத் தருகின்ற வேலின் ஒளியைக் கண்டு என்பதை அறிந்தேன். நீ வாழ்க!

(9) அழகிய மெல்லிய பூங்கொத்துக்களை உடைய அடம்பு களே! தாமும் தமது தண்ணளியும் தம்முடைய குதிரை கட்டிய தேரும், எம்மை மறவேன் என்று

பாட்டு. கூறி வந்து பின் எம்மை மறந்து பிரிந்தனராயில், மறந்து பிரியக் கடவாராக! ஆனால் எம்மை மறந்த அத்தலைவரை நாம் மறக்க மாட்டோம். ("பாங்கியோடு, தலைவனது நிலையைத் தலைவி யெடுத்துக் கூறுதல்" என்னும் துறைபற்றிப் பாடியது),

(10) மனமொத்த நமது தலைவரது நெடிய வலிமையான தேர் பூண்ட உருளானது சென்ற வழியைத் தூர்த்துக் கடல் அலையே! அதன்மேற் சென்றாய். நீ தூர்த்துத் துன்பம் உறுத்துதலால் எம்மை விட்டுப் பிரிந்த தலைவரைப் போல நீயும் நீங்காது இருக்கின்றாய். கொடியை; கடல் திரையே! நீ வாழ மாட்டாய். தண்ணிய சோலையே! பிரியாது ஆடும் அன்னங்களே! குளிர்ந்த நீர்த் துறையே! நீவிர் தண்மையும் மகிழ்ச்சியும் உடையவராய் இருந்தும்; 'இச் செய்கை தக்கது அன்று' என்று கூறி மறுக்கிலீர். ஆதலால் நீவிரும் கொடியர்.

(11) கானலை வேலியாகவுடைய கழியின்கண் வந்து என்னைப் பார்த்து "நீ நிற்கக் கடவாயாக" என்று கூறித் தாமும் நின்றார். அப்படி நின்ற அவர், எமது மான் போன்ற பார்வையினின்றும் நீங்குவார் அல்லர்.

பக்கம் **50.**

(12) நேற்று அன்னந் தனது துணையோடு விளையாட நோக்கி என்னையும் பார்த்து நின்றார் ஒருவர். அவர் எனது நெடிய கண்ணை விட்டு நீங்குவார் அல்லர். (இவ் விரண்டும், "தலைவனைப் பழித்த பாங்கிக்கு, அவனை மணம் புரிய விரும்பும் தலைவி, தலைவன் இயலைக் கூறுதல்" என்னும் துறைபற்றியது,)

(13) கானலின்கண், எம்முடைய உறவினர் அறிந்துவிட்டதால் இனி வர மாட்டோம். நாரைகளே! இங்கு

பாட்டு. வருகின்ற, கரையை யுடைக்கும் அலைகள் பொருந்திய துறையை உடைய தலைவனுக்கு, எமது பிரிவாகிய நோயைக் கூறுவீர்களாக! வாயை அடைத்துக் கொண்டு இராதிருப்பீர்களாக!

(14) மாலைப் பொழுதே! தம்மினின்று பிரிந்த தலைவர் தம்மோடு கலந்து கட்டுரைத்த அருளின் நீழலிலிருந்து மனம் வருந்தி வாழும் மகளிரது உயிர்க்கண் உள்ளாய். ஆதலால், ஆற்றுதல் இல்லாத மனதையுடைய எனது தலைவனோடு நீ நட்புடையாயே? கூறாய்!

கதை 7—பக்கம் 52.

(1) உலகில் வாழும் உயிர்களைத் தம் துணையோடு பணர்விக்கும் இனிய இளவேனில் என்பவன் இளவரசன் ஆவான். ஆதலால் அவன் ஒழுக்கத்தில் இருக்கும் படிச் செய்யான். அன்றியும், அந்திப் பொழுதின் கண் உண்டாகும் விரகத்தின்மேல் தோன்றிய சந்திரனாகிய செல்வனும் (அந்தியாகிய யானையின் பிடரியின்மீது தோன்றிய பிறை யென்றும் கூறலாம்). பிறப்பினாலேயே வளைவை உடையவன் ஆதலால், அவனும் செம்மையானவன் அல்லன். புணர்ந்தோர் சிறிது பொழுது பிணக்கத்தால் பிரியினும், பிரிந்து சென்ற தலைவர், தமது மனைவியர்க்குத் தாம் இன்ன பருவத்து வருவதாகக் கூறிய அந்தப் பருவம் தவறினாலும், மன்மதனது மலர் அம்புகளால் இன்பத்தை யடையும் உயிரைக் கொண்டு விடுதல் அவனுக்குப் புதியதன்று. இதனை நீவிர் அறிமின்.

கதை 9—பக்கம் 69.

(1) அறிவன் = எல்லாப் பொருள்களையும் அறியும் அறிவை யுடையோன்; அறவோன் = அறஞ் செய்தலையே

பாட்டு. தொழிலாக உடையோன்; அறிவு வரம்பு இகந்தோன் = யாவரும் அறியப்படும் அறிவு எல்லையைக் கடந்தோன்; செறிவன் = எல்லா உயிர்கட்கும் இதனுய் உள்ளவன்; சலியாதவன் என்றும் ஆம்; சினேந்திரன் = எண் வகைக் கன்மங்களையும் சயித்தவன்; எண் வகைக் கன்மமாவன :—ஞானவரணீயம் தரிசனவரணீயம், வேதநீயம், மோகநீயம், ஆயுஷ்யம், நாமம், கோத்திரம், அந்தராயம் என இவையாம். இவை எட்டும் காதி, அகாதி என இருவகைப்பட்டு 148 ஆக விரியும்). சித்தன் = செய்யப்படுவன வற்றைச் செய்து முடித்தவன்; கன்மங்களைக் கழுவினவன்); பகவன் = கேவல ஞானி; (கேவல ஞானம் ஐந்து ஞானத்துள்ளும் சிறந்தது. ஐந்து ஞானங்களாவன :—1. மதி ஞானம் = சுபாவ புத்தி; 2. சுருத ஞானம் = நூல் உணர்ச்சி; 3. அவதி ஞானம் = தன்னுடைய முற்பிறப்பை அறியும் அறிவு; 4. மனப்பரியய ஞானம் = தன்னுடைய முற்பிறப்பையும் பிறருடைய முற்பிறப்பையும் அறியும் அறிவு; 5. கேவல ஞானம் = திரிகால உணர்ச்சி. திரி காலமாவன :— நடந்தது, நடக்கின்றது, மேல் நடப்பது என்னும் முக்காலமாம்.) தரும முதல்வன் = தருமங்களுக்குத் தலைமையாய் உள்ளவன்; தலைவன் = எல்லா தேவர்க்கும் தலைவனாக எண்ணப் பட்டவன்; தருமன் = தருமம் தானா யுள்ளவன்; பொருளன் = உண்மைப் பொருளாய் உள்ளவன்; புனிதன் = சுத்தன்; புராணன் = பழையவன்; புலவன் = எல்லார்க்கும் அறிவாயுள்ளவன்; சினவரன் = சினத்தைக் கீழ்ப்படுத்தியவன், (சினம் = கோபம்); தேவன் = தேவர்களுக்கு ஆதியாகிய தேவன்; சிவகதி நாயகன் = வீட்டுலகிற்கு நாயகனாய் உள்ளவன், (வீட்டுலகம் = மோட்சம்); பரமன் = மேலானவன்; குணவதன் = குணத்தை

பாட் 6. யுடையவன்; பரத்தில் ஒளியோன் = மேலாய உலகிற்கு ஒளியாய் உள்ளவன்; தத்துவன் = தத்துவங்களை யுடையோன்; சாதுவன் = ஒடுங்கினவன்; சாரணன் = ஆகாசவாசி; காரணன் = காரண பூதன்; சித்தன் = எண் வகைச் சித்திகளையும் உண்டாக்கியவன்; (1. அணிமா = ஆன்மாப்போல் ஆதல், 2. மகிமா = மகத்துவமாதல், 3. கரிமா = தன்னுடல் கண்டிப்பு இல்லாமல், கண்டிப்புள்ளவற்றை உருவ வல்லவனாதல், 4. இலகிமா = இலகுத்துவம் ஆதல், 5. பிராத்தி = வேண்டுவன அடைதல், 6. பிராகாமியம் = நிறையுளன் ஆதல், 7. ஈசத்துவம் = ஆட்சியுளன் ஆதல், 8. வசித்துவம் = எல்லாம் தன் வசமாக்க வல்லவன் ஆதல்.) பெரியவன் = எல்லாவற்றாலும் பெரியவன்; செம்மல் = நாயகமூர்த்தி; திகழ் ஒளி = விளங்கும் ஒளியாய் உள்ளவன்; இறைவன் = எப்பொருளினும் தங்குகின்றவன்; குரவன் = குரு மூர்த்தியாய் உள்ளவன்; இயல்குணன் = இயல்பையே குணமாக உடையவன்; எங்கோன் = எம்முடைய சுவாமி; குறைவில் புகழோன் = நிறைந்த புகழை யுடையோன்; குணப் பெருங் கோமான் = குணங்களைச் சம்பத்தாக உடையவன்; சங்கரன் = சுகத்தைப் பண்ணுகின்றவன்; ஈசன் = ஐசுவரியவான்; சயம்பு = தானே தோன்றினவன்; சதுமுகன் = நான்கு முகங்களை உடையவன்; அங்கம் பயந்தோன் = அங்காகமத்தை யுண்டாக்கியவன்; அருகன் = பூச்சியன்; அருண்முனி = சிவபரமூர்த்தி; பண்ணவன் = கடவுள்; எண்குணன் = எட்டுக் குணங்களை யுடையோன்; பாத்தில் பழம் பொருள் = பகுத்தற்கு அரிய புராணப் பொருளாய் உள்ளவன்; விண்ணவன் = சுவர்க்க வாசி; வேத முதல்வன் = ஆகமம் மூன்றிற்கும் முதலாய் உள்ளவன்; (ஆகமம் மூன்றாவன :—1. அங்காகமம், 2. பூர்வ

பாட்டு. ஆகமம், 3. பகுசுருதி யாகமம்.) விளங்கு ஒளி— அஞ்ஞான இருள் நீங்க விளங்கும் ஒளி.

பக்கம் 72.

(2) ஒழுக்கத்திலிருந்து தவறியவர்கள், தகுதியல்லாத மொழிகளைக் கூறினாலும், அவைகளை அவர் அறியாமையால் கூறிய தல்லவா என்று, உயர்ந்தோர் தமது அறிவுடைமையால் கொள்ளல் வேண்டும்.

கதை 10—பக்கம் 76.

(1) அலர்தலை மராமும்—விரிந்த தலைகளையுடைய வெண்கடம்பும்; உலறுதலை ஓமையும்—உலர்ந்த தலைகளையுடைய ஓமை என்னும் மரமும்; பொரி அரை உழிஞ்சிலும்—பொரிந்த தாளையுடைய வாகையும்; புல்முளி மூங்கிலும்— இலையும் தண்டும் காய்ந்திருக்கின்ற மூங்கிலும்; வரிமறல் திரங்கிய கரிபுறக் கிடக்கையும்—கற்றாழை கள்ளி முதலியவைகள் நீர்வற்றிக் காய்ந்து கரிந்து கிடக்கின்ற இடங்களும்; நீர் நசை வேட்கையில் மான் நின்று விளிக்கும் காடும்—நீர்க் குடித்தலை விரும்பி மான் கூட்டங்கள் நின்றழைக்கின்ற காடும்; எயினர் கடமும்—மறவருடைய ஊரை யடுத்த வழியையும்; கடந்தால் — தாண்டினால், (அவ்விடத்தில் மலைச் சாரலில் விளையும்); ஐவன வெண்ணெலும்— அழகிய நெற் பயிரும்; அறைக்கண் கரும்பும்— முறிக்கும் பருவத்தையுடைய கரும்பும்; கொய்பூந் தினையும் — கொய்யும் பருவத்தை உடைய அழகிய தினையும்; கொழும்புனம் வரகும்—கொழுத்த புனத்தில் விளைந்த வரகும்; காயமும்—வெள் உள்ளியும்; மஞ்சளும்—ஆய் கொடி கவலையும்—அழகிய கவலைக் கொடியும்; வாழையும் கமுகும் தாழ்குலை தெங்கும் —தலை தாழ்ந்த குலையையுடைய வாழையும் கமுகும் தெங்கும்,—மாவும்—பலாவும்; சூழ் உடுத்து ஓங்கிய

பாட்டு. —ஆகிய இவை சுற்றிலும் சூழப்பட்டு ஓங்கி யிருக்கின்ற; தென்னவன்—பாண்டியனுடைய; சிறுமலை 'சிறுமலை' என்னும் பெயரையுடைய மலை; திகழ்ந்து தோன்றும்—விளங்கித் தோன்றும்.

கதை 11—பக்கம் 85.

(1) பிறையானது நீங்காது வாழ்கின்ற சடை முடியினையுடையவனுடைய அழகிய முன்றிலின் இடத்து, வேங்கை மரங்கள் பூத்துச் சொரிந்தன; நல்ல இலவங்க மரங்களின் கிளைகள் செவந்த இதழைப் பூத்துச் சொரிந்து குவித்தன; புன்கு மரங்களின் கிளைகள் வெள்ளிய பொரிகளைச் சிந்தின.

(2) பாய்கின்ற கலையூர்தியையுடைய பாவையினது கோலத்தைக் கொண்டு நின்ற, அழகிய வளையல் அணிந்த இச்சாலினி பெண்பாள், முன் செய்த தவம் எத்தவமோ? இவள் பிறந்த குடியின்கண் பிறந்த மூங்கில் வில்லையுடைய மறவர் குலமே குலமாம்.

(3) கங்கையைச் சடை முடியின்மீது அணிந்த இறைவனது இடப்பாகத்திற்கு உரிய இறைவியானவள் கொண்ட உருவாய், வேதங்கள் எல்லாம் போற்ற, அவற்றிற்கும் தோன்றாமல் நிற்கின்ற நீ, சங்கு சக்கரங்களைக் கையிலேந்திச் சிவந்த கண்களையுடைய அரிமாவாகிய கோபம் பொருந்திய விடையின் மீதே நின்றாய்; ஆகையால் இது என்ன மாயமோ?

(4) பெரிய மலர் போலும் கண்ணை யுடையாய்! நின் ஐயன்மார், அயலார் ஊர் அலறும்படிக் கைக்கொண்டு வந்த ஆனிரைகள், நயமில்லாத மொழியையும் நரைத்து நீண்ட தாடியையும் உடைய மறவரும், அவ்வாறு மூத்த எயிற்றியரும் ஆகிய இவர்கள் முன்றிலின்கண் நிறைந்தனர்; இவற்றைக் காண்பாய்.

(5) தேவர்கள் அமுதத்தை யுண்டுஞ் சாவ, ஒருவரும் உண்ணாத விடத்தை யுண்டும் சாவாதிருந்து அருள்கின்ற நீ, கேட்டார் அச்சங்கொள்ளத் துடியென்னும் பறையைக் கொட்டுதலோடே பகைவர் இறந்த பொழுதின் ஊர்க்கொலை செய்யும் கருணையில்லாத மறவர், நினக்கு இடும்பலிக் கடனாகிய இதனை உண்பாயாக.

கதை 11—பக்கம் 105.

(1) தம் கணவர்க்கு இல்லறத் துணையாகிய பெண்களுக்கு, இன்றி யமையாத கற்பைக் கடமையாகப் பூண்டு கொண்ட இப்பூங்கொடியாகிய தெய்வமே அல்லது வேறு தெய்வத்தினை யாம் கண்டோம் இல்லை; அதுவும் அல்லாமல், பத்தினிப் பெண்டிர் இருந்த நாட்டில், காலமழை பெய்தல் தவறாது; வளம் தவறாது; வேந்தருடைய வெற்றி சிதையாது; என்று நல்லோர் கூறுவர்.

பக்கம் 111.

(2) அறவோர்க்கு (சாவக நோன்பிகட்கு) அன்னம் அளித்தலும், அழகிய கருணையையுடைய அந்தணரைக் காப்பாற்றுதலும், துறந்தவர்களை எதிர்கொண்டு அழைத்தலும், பெருமையாக விருந்தினரைக் காணின் அவர்களை எதிரேற்றுக் கொள்ளுதலும் ஆகிய இவற்றை இழந்துவிட்ட என்னை;

(3) இவைகள் ஒவ்வொன்றும் கண்ணகியைப் புகழ்ந்து முன்னிலையாக விளித்தல்.

கதை 15—பக்கம் 119.

(1) பாண்டியன் முன்செய்த தீங்கின் விளைவாகிவந்த தீவினையால், மண்ணில் வளையாத செங்கோல் கண்ணகி கணவன் கோவலன் காரணமாக வளைந்து விட்டது.

பாட்டு. ஆதலால் செய்தவனை இருவினையும் அடையும் என்பதை அறிந்து உலகத்தீரே! நல்வினையே செய்வீர்களாக.

கதை 16—பக்கம் 121.

(1) தோழீ! பசுக் கூட்டங்களை மேய்க்கும் பொழுது விளாவின் கனியை உதிர்க்க வேண்டி, அவ்விடத்தில் மேய்கின்ற பசுவின் கன்றையே குறுந்தடியாகக் கொண்டு அக்கனியை உதிர்த்த மாயவன், நம் வேண்டுகோளால் பசுக் கூட்டத்து வருவான்; அவ்வாறு அவன் வந்தால் அவனுடைய கொன்றையம் குழல் ஓசையைக் கேட்கலாம்.

(2) தோழீ! நம் புனக் கொல்லையைச் சார்ந்த இடத்தில் வஞ்சனையாக வந்துநின்ற குருந்தை மரத்தை முறித்த மாயவன், நம் வேண்டுகோளால் பகற்பொழுதே இங்குள்ள பசுக் கூட்டத்து வருவன்; அவன் அவ்வாறு வந்தால், அவன் ஊதும் இனிய முல்லையங் குழல் ஓசையைக் கேட்போம்.

(3) கோக்கப்படாத தன் பொதிய மலையினிடத்து உண்டாகிய ஆரமும் (சந்தனம்), கோக்கப்படாத தன் கொற்கைக் கடலில் உண்டாகிய ஆரமும் (முத்து), இந்திரன் கோபித்து இட்ட பூணுகிய ஆரமுமாகிய இம்மூன்று வகை ஆரமும் பாண்டியன் மார்பிடத்தில் உள்ளன. அவ்வாறு பூண்டவன் யாவன் என்றால், வளவிய துவரை [illegible]டத்துப் பசுக் கூட்டத்தை மேய்த்துக் குருந்தை முறித்த மாயவன் என்று சொல்வர்.

(4) கடல் போன்ற வண்ணனே! கமல மலர் போன்ற உந்தியாய்! நீ முன்பு ஒரு நாள், வடவரையை மத்தாக நாட்டி, வாசுகி யென்னும் பாம்பைக் கடை கயிருகப்

பூட்டிப் பாற் கடலைக் கலக்குவித்தாய்! அவ்வாறு கடலைக் கலக்கிய கைகள், அசோதைப் பிராட்டியாருடைய கடை கயிற்றாலே கட்டுப்பட்டது மாயமோ?

(5) தேவர்கள் எல்லாம் திரண்டு வந்து வணங்கிப் புகழ்கின்ற திருமாலே! நரசிங்கமாய் இரணியனைக் கொன்றவனே! தேவர்களால் வணங்கப் பெறும் நினது செங்கமலம் போன்ற இரண்டு அடியாலே மூன்றுலகமும் இருள் நீங்க நடந்தாய்! அவ்வாறு இருள் நீங்க நடந்த திருவடி, பஞ்ச பாண்டவர்க்குப் பின்பு தூதாக நடந்த அடி. இது மாயமோ?

பக்கம் 122.

(6) இரண்டு அடிக்குக் குறைவு படும்படி மூவுலகையும் முடியத் தாண்டிய சேவடி சிவக்கும்படி, தம்பியோடுங் கூடக் காட்டிற்குச் சென்று, சோ என்னும் அரணமும் அவ்வரணத்தில் உள்ளாரும் போரில் தொலைந்து மடியவும், அதுவுமன்றிப் பழைய இலங்கையையும் காவலழித்த சேவகனுடைய புகழைக் கேளாத செவியும் சில செவியே; அத்திருமாலுடைய புகழைக் கேளாத செவியும் சில செவியே.

(7) எல்லாத் தேவரிலும் பெரியவனை, மாயங்களை வல்லவனை, பெரிய உலகனைத்தையும் விரிக்கின்ற கமல உந்தியையுடைய விண்ணவனைக், கண்முதல் கனி போன்ற வாய் முடிய உள்ள வெல்லாம் சிவந்த கரியவனைக் காணப் பெறாத கண்கள் என்ன கண்களோ! அவ்வாறு காணும்பொழுது இமையாது பார்த்தல் இன்றி இமைத்துப் பார்ப்பார் கண்கள் என்ன கண்களோ!

(8) மடமைபொருந்திய நெஞ்சினையுடைய கஞ்சன் (கம்சன்) செய்த வஞ்சங்களை யெல்லாம் கடந்தவனை, திசை

பாட்டு. நான்கிலுமுள்ள தேவர்கள் போற்ற, ஆரணம் (வேதம்) தொடர்ந்து முழங்கப் பஞ்ச பாண்டவர்க்காக நூற்றுவர்பால் (துரியோதனுதியர்) தூது நடந்தவனை எத்தாத நாவென்ன நாவோ! 'நாராயணு' என்று கூருத நாவென்ன நாவோ!

பக்கம் 123.

(1) தோழீ! இனி எனக்கு என்ன தஞ்சமுண்டு! இவ்வயலார் சொல்லுகின்ற இரகசியங்கள் எளிதானவையல்ல; அதற்கு ஏற்றபடி, என் தலைவனையும் வரக் காண்கின்றிலேன்; ஆதலால், ஏதாவது வஞ்சம் உண்டு போலும்; அதுவுமல்லாமல் என் நெஞ்சும் மயங்குகின்றது; இவைகள் இங்ஙனமாக, குறிப்பால் இவர்கள் சொல்லுகின்றது யாதோ என்று அறிகிலேன்.

பக்கம் 124.

(2) தனது ஆற்ருமையால் தன் வசம் அழிந்து பூமியிலிருந்தும் எழுந்து மீண்டும் விழுந்து கிடக்கின்றவள் எவ்வாறு வீழ்ந்து கிடந்தாள் என்ருல், மேகத்தோடு சந்திரன் பூமியில் வீழ்ந்ததைப் போல வீழ்ந்தாள்; விழுந்தவள் தன் கண்கள் சிவக்கும்படிக் கையால் மோதிக் கொண்டு அழுதாள்; பின்பு தன் கொழுநனை "நீ எவ்விடத்தில் இருக்கின்ருய்" என வருந்திப் பொருமி யாவுந் தோன்ரு என்று அழுதாள்.

(3) தம்மோடொத்த அன்பையுடைய தலைமை பொருந்திய கணவன், நெருப்பிடத்தில் மூழ்க, தாமும் அந்நெருப்பிடத்தே மூழ்காது, கைமை நோன்பை நோத்து, நீர்த் துறைகளில் மூழ்கும் உயவல் பெண்டிரைப் போல, செங்கோலில் இருந்து தவறிய பாண்டியன்

பாட்டு. குற்றத்தைச் செய்ய, இப்பிறப்பிலும் இப்பெயரைப் படைத்து மிகவருந்தி இங்கிருந்து அழுவாள் ஒருத்தியோ யான்.

பக்கம் 128.

(4) தொண்ட கொழுநர் = தங்களை நெஞ்சினுள் கொண்ட கணவர்; உறுமுறை = அவர் அடைந்த நோயையும் துன்பத்தையும்; தாங்குறும் பெண்டிர் = உண்மையாகத் தாங்கும் கற்புடைய மகளிர்; கொல் = சந்தேகப் பொருளைக் காட்டும்:

(5) சான்றோர் = அறிவு நிறைந்த பெரியோர்: ஈன்ற குழவி எடுத்து வளர்க்குறும் = பிள்ளைப்பேறு வளர்க்கும்.

(6) கூறிய வாளால் என் கொழுநனைக் கொன்றதால் செங்கோல் தவறிய மன்னனுடைய இக்கூடல் என்னும் மதுரையில் பெண்டிரும் சான்றோரும் தெய்வமும் உண்டோ; உளதாயின் இவ்வநியாயம் பிறவாது; ஆதலால் ஒன்றும் இல்லை.

பக்கம் 129.

(7) இவ்வாறு சொன்னவள் அங்குப் போக எழுந்தாள்; எழுந்தவள் தன் ஊரிற் கண்ட தீக்கனவை நின்று நினைந்தாள்; நினைந்தவள் கண் நீர் சோர்தலால், தான் செல்லும் வழியைக் காண்பதற்காகக் கயல் போன்ற கண்கள் சொரியும் நீரைத்துடைத்து அரசனுடைய கோயில் வாயிலில் சென்றாள்.

கதை 18—பக்கம் 133.

(1) அல்லவை = நன்னெறி அல்லாதவை; கூற்றம் = யமன்; பல் அவையோர் = பல சபையின்கண் உள்ள பல பெரியோர்; வடுவினை = குற்றம் பொருந்திய தொழில்)

பாட்டு. தேவி என்பது விளி; கடுவினையேன் = பாவ வினையேன்.

(2) காவி = நீலோற்பலம் போன்ற கண்; கூடலான் = பாண்டியன் (கூடலாகிய மதுரையை ஆள்பவன் (கூடு ஆயினேன் = உயிரில்லாத வெறுங் கூடாயினேன் (கூடு = உடல்);

(3) கையைக்கொன் = பாண்டியன்; செவியிலுண்ட அளவே = சொற்களை செவியில் கேட்ட மாத்திரத்திலே.

கதை 19—பக்கம் 137.

(1) அறவோர் = தருமம் எண்ணமுடையார்; பார்ப்பார் = நல்லொழுக்கத்தில் தவறாத அந்தணர்; மூத்தோர் = பெரியோர்; குழவி = குழந்தை; தீத்திறத்தார் = பாபச்செய்கை உடையார்.

பக்கம் 141.

(2) மாமகள் = சீதேவி; நாமகள் = சரசுவதி; கோமகள் = துர்க்கை; கொற்றத்தாள் = வெற்றியை யுடைய கண்ணகி; நாமமுலை = அச்சத்தைத் தரும் முலை; மதுராபதி = மதுரையின் தெய்வம்.

கதை 20—பக்கம் 143.

(1) அரசவேல் = அரசாகிய வேல்; புரைதீர் = குற்றமில்லாத; மன்றம் = அரணில்லாத வீடு; இன்று = இப்பொழுது; காவாதோ = காக்க மாட்டாதோ; (பாண்டியன் கையை வெட்டிக் கொண்ட கதை) கீரந்தை என்னும் அந்தணன் தன் மனைவியை நோக்கி, "யான் காசி யாத்திரை சென்று வருகின்றேன்; நாளை முதல் நமது அரசன் நின்னைப் பாது காப்பான்; பயப்படாதே;" எனத் தேற்றிக் கொண்டிருந்ததை,

பாட்டு. நகரி சோதனையின் பொருட்டு வந்த பாண்டியன் கேட்டுச்சென்று. மறுநாள்முதல் நகரி சோதனைக்கு வரும் ஒவ்வொரு தினமும், அவளுக்கு ஒரு இடையூறும் உண்டாகாதபடி காப்பாற்றி வந்தனன். சிறிது நாள் சென்றபின் யாத்திரை சென்ற கணவன் மீண்டு வந்து தன் மனைவியோடு பேசிக்கொண்டிருந்தனன். இதனை யறியாது வழக்கம் போல நகரி சோதனையின் பொருட்டுச் சென்ற பாண்டியன், அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் அரவத்தைக் கேட்டுச் சந்தேகம் கொண்டு கதவைத் தட்டினன். பின் "அவ்வொலி கணவன் ஒலியே" யெனத் தெளிந்தபின், அவ்வந்தணன், "கதவைத் தட்டியவன் சோர புருடனே" எனச் சந்தேகிக்கா வண்ணம் அவ்வீதியில் உள்ள கதவு முழுவதையும் தட்டிச் சென்றனன். மறுநாள் அவ்வீதியில் உள்ள அந்தணர் அனைவரும் ஒன்று சேர்ந்து அப்பாண்டியனிடம் சென்று முறையிட்டனர். அவர்கள் முறையினைக் கேட்ட பாண்டியன், "அந்தணர்களே உங்கட்குத் தீமை விளைத்தது இக்கரமே" எனத் தன் கரத்தைத் துணித்து விட்டனன். பின் சிவபெருமான் திருவருளால் பொற்காம் வளரப் பெற்றனன்.

பக்கம் 144.

(2) ஒன்று—முத்தி; புரி—விரும்புதல்; இரு பிறப்பாளர்—உபநயனத்துக்கு முன்னும் பின்னும் இரு பிறப்பினையுடையார் பார்ப்பார்; முத்தீ—மூன்று வகைத்தீ (ஆகவனீயம், காருகபத்தியம், தக்கிணாக்கினி); ஐம்பெரு வேள்வி—தென்புலத்தார், தெய்வம், விருந்து, உறவினர், தான் என ஐந்து வகையினரையும் காப்பாற்றுதல்; அறு தொழிலாளர்—ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்னும் ஆறு

பாட்டு. தொழிலையுடையார் ; ஓம்பும்=காப்பாற்று... =வரையறுத்துக் கட்டிய. அளவு படுத்திய ; நண்... =பகைவர் ; நாவலங் கொண்டு=தருக்கஞ் செய்து ; வாகை=வெற்றிமாலை,

(3) மண்ணக மாதர்க்கு=உலகத்திலுள்ள கற்புடைய மகளிர்க்கு ; விருந்து=கண்ணகி விருந்தாயினுள் ; (ஆதலால்), தெய்வந் தொழுகை உறுதியாம். "செல்விருந்து ஓம்பி வரு விருந்து பார்த்திருப்பார், நல்விருந்து வானத் தவர்க்கு" என்ற வள்ளுவர் வாய்ச் சொல்லும் வலியுறுத்தும்.

நன்னெறி விளக்கம்.

தெளிந்தோர்=தெய்வத்தை உணரும் ஞானத்தை யுடையவர்களை ; பேணுமின்=காப்பாற்றிச் சூழுங்கள் ; பொய்யுரை=பொய்ம்மொழிகளைக் கூறுதற்கு ; புறஞ்சொல் போற்றுமின்=புறஞ்சொல் கூறாதபடி நீக்குங்கள் ; ஊன் ஊண்=புலால் உண்ணுதலை ; துறமின்=நீக்குங்கள் ; இகழ்மின்=வெறுத்து விடுங்கள் ; பொய்க் கரி=பொய்சாட்சி கூற ; பொருண் மொழி=உண்மையான வார்த்தை ; நீங்கல்=ஒழித்து விடாதேயுங்கள் ; பிறவோர்=பாபச்செய்கை யுடையார் ; அவைக்களம்=பலர்கூடியிருக்கும் சபை ; பெயர்மின்=நீங்குங்கள் ; மனை=மனைவியை விரும்புவது ; பிழையுயிர்=இழக்கப் போகின்ற சீவன்களை ; ஓம்புமின்=காப்பாற்றுங்கள் ; அறமனை=இல்லறம் ; காமின்=விரும்புங்கள், காப்பாற்றுங்கள் ; அல்லவை=நல்லவை அல்லாதவை ; கடிமின்=வெறுத்து விடுங்கள் ; வெள்ளைக் கோட்டி=பயனில்லாத சொறகளைப் பேசிக் கொண்டு திரியும் கூட்டம் ; விரகு=தந்திரம் ; ஒல்லுவது=முடிவது ; தேஎத்து=மோக்ஷ உலகத்துக்கு ; உறு துணை=உற்ற துணை (அதாவது புண்ணியம் முதலியவை) ; மல்லல்=வளப்பம் ; ஞாலம்=பூமி ; வாழ்வீர்=வாழ்கின்ற மக்களே ! முற்கூறியவாறு செய்யுங்கள்.